

சாண்டில்யன்
நாகதேவி
லதா
வானதி பதிப்பகம்
www.cleanindians.com

முதற் பதிப்பு : டிசம்பர் 1982
இரண்டாம் பதிப்பு : மே 1984
ஏழாம் பதிப்பு : பிப்ரவரி 2000
எட்டாம் பதிப்பு : அக்டோபர் 2002
ஒன்பதாம் பதிப்பு : மே 2006
பத்தாம் பதிப்பு : பிப்ரவரி 2008

© உரிமை ஆசிரியருக்கு.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 70-00

- Title : **NAGADEVI**
- Author : SANDILYAN
- Language : Tamil
- Subject : Historical Novel
- Edition : Tenth Edition, February, 2008
- Pages : iv + 268 = 272
- Published by: **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai–600017.
  ✆ 24342810 / 24310769
  E-Mail :vanathipathippakam@vsnl.net
  Website: www.vanathi.in
- Price : **Rs. 70-00**

Printed at: Jayam Enterprises, Ch



## முன்னுரை

**சோ**ழர்களின் பேரரசை நிறுவிய ராஜராஜ சோழனும், அதை வளர்த்து விஸ்தரித்த ராஜேந்திர சோழனும் மத விஷயத்தில் கொண்டிருந்த பரந்த நோக்கத்தின் காரணமாக நாகப்பட்டினத்தில் சூடாமணி விஹாரம் என்ற பெயரில் புத்த விஹாரமொன்றைக் கட்ட ஸ்ரீவிஜயத்தின் சைலேந்திர வம்ச சக்கரவர்த்தியான ஸ்ரீமாற விஜயதுங்கவர்மனுக்கு அனுமதியும் இடமும் அளித்தனர். அந்த விஹாரத்தைப் பரிபாலிக்க மான்யமும் அளித்தனர்.

ஆனால் சைலேந்திர மன்னன் அந்த விஹாரத்தை நிர்மாணித்தது மத பக்தியாலல்ல. நாகப்பட்டினம் அந்தக் காலத்தில் கிழக்கையும் மேற்கையும் பிணைத்த ஒரே துறைமுகம். ஆகையால் தங்கள் வாணிபத்துக்கு ஒரு துறைமுகம் தேவை என்ற காரணத்தினால்தான் சைலேந்திர மன்னன் அங்கு விஹாரம் கட்டினான்.

ஸ்ரீ கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி தமது 'சோழர்கள்' என்ற நூலில் எழுதுகிறார்:

That Nagapatnam was the first Port on the mainland touched by vessels from the east bound for South India becomes clear from I-tsing's iteneraries. This must have been the reason for the foreign king constructing a Vihara there ('Chola's - by Sastry, Page, 186)

இதிலிருந்து ஸ்ரீவிஜய மன்னர்கள் நாகப்பட்டினத்தைத் தங்கள் வணிகத்துக்கு உபயோகப்படுத்தவும் ஓரளவு ஆதிக்கம் பெறவும் சூடாமணி விஹாரத்தைக் கட்டினார்கள் என்பது தெளிவாகிறது. இந்தச் சரித்திர நிகழ்ச்சியை அஸ்திவாரமாக வைத்துத்தான் 'நாகதேவி' நாவல் இயற்றப் பட்டது.

இது தவிர ஸ்ரீவிஜய மன்னர்கள் சோழப் பேரரசை இரண்டாந்தர அரசாகவும் சீனத்து சக்கரவர்த்தியிடம் துஷ்பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

இத்தகைய துரோகச் செயல்களால்தான் ராஜேந்திர சோழனும், வீர ராஜேந்திரனும் ஸ்ரீவிஜயத்தின் ஆதிக்கத்திலிருந்த கடாரத்தின்மீது படையெடுத்து ஸ்ரீவிஜயத்தையும் (சாவகம், சுமத்ரா இரண்டும் இணைந்தது) வெற்றிகொள்ள அவசியமாயிற்று.

இந்தக் கதையில் இந்தளதேவர் என்ற ஒருவரை அறிமுகப்படுத்தியிருக்கிறேன். அவர் கற்பனைப் பாத்திர மல்ல. ராஜேந்திர சோழதேவரின் அந்தரங்க அதிகாரி. வணிகர். பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவர். (Sastry's Cholas - Page - 266)

இந்தக் கதை முழுவதும் சூடாமணி விஹார நிர்மாணத்தைச் சூழ்ந்துள்ள மர்மத்தைப் பற்றியது. ராஜேந்திரன் ஏன் கடாரத்தின் மீது படையெடுத்தான் என்பதற்குக் காரணம் கற்பிப்பது. நாகதேவி, மருதி, சுத்ததத்தர் மூவரும் கற்பனைப் பாத்திரங்கள்.

இந்தக் கதை மலேசியா 'தமிழ்நேசன்' பத்திரிகையில் பிரசுரமாயிற்று. அந்தப் பத்திரிகை நிர்வாகிகளுக்கும், இதை எழுதத் தூண்டிய அன்பர் 'இலக்கியச் சிந்தனை' ப. லக்ஷ்மணன் அவர்களுக்கும், மலேசியத் தமிழர்களுக்கும், இதைப் புத்தக வடிவில் கொண்டு வரும் வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கும் நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

சாண்டில்யன்

# நாகதேவி

## 1. மூன்று தலை நாகாபரணம்

நான்கு திசை நாடுகளிலிருந்தும் நானாவித நாவாய்கள் நங்கூரம் பாய்ச்சி அலைகளில் நடனமிடும் காரணத்தால் நயனங்களுக்கு மிக இனியதும், நாலாவித சமயங்களுக்கும் இடங் கொடுத்ததால் இதயத்துக்கும் அமைதியளிப்பதும், நாகலிங்க மரங்கள் கரையோரமாகக் கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டதால் சோழ மன்னர்களின் சிவபக்திக்கு அடையாளமாக விளங்கியதும், புத்தவிஹாரமான சூடாமணி விஹாரம் முழுவதும் கட்டப்படாவிட்டாலும், முக்கால்வாசி எழும்பியதாலேயே அதன் கலைத்தன்மையின் சிறப்பை விளக்கி, கடற்கரையின் கலங்கரை விளக்கம்போல புத்த சமயத்துக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் தெரிந்ததும், அந்த விஹாரத்தால் பேரழகு பெற்றதுமான நாகையின் கடற்கரை அன்று விடியற் காலையில் இயற்கையின் பொலிவை எல்லாம் அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்ததென்றாலும், அந்த அழகு எதுவும் நாகர் குலத்தவனான உபேந்திரன் மனத்தை அணுவளவும் தொடவில்லை.

சோழர்களின் பிரபலமான துறைமுகங்களில் ஒன்றும் பூகோள சாஸ்திரியான தாலமியால் 'நிகாமா' என்று அழைக்கப்பட்டதுமான நாகப்பட்டினத்தின் ஆழ்கடலை

அடுத்த பெரிய மணற்குன்றுகளும், சற்று அந்தத் துறைமுகம் வளைந்த இடத்தின் மேட்டில் கூட்டமாக நின்ற நாகலிங்க மரங்களில் தெரிந்த சிவந்த புஷ்பங்களும், அவற்றின் நறுமணமும், பலவகை நாவாய்களிலிருந்து இறங்கிப் படகு களில் வந்துகொண்டிருந்த மாலுமிகளின் கூட்டமும், எதுவுமே அவன் உணர்ச்சிகளைத் தொட்டதாகத் தெரிய வில்லை. நாகைக் கடலின் வளைவு மேட்டிலிருந்த நாகலிங்கத் தோப்பின் முனையில் எழும்பி நின்ற ஒரு பெரிய மணற்குன்றின் உச்சியில் முழந்தாள்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த உபேந்திரன் முகம் அன்று உணர்ச்சியற்ற கல்லாயிருந்தது.

பொழுது விடிய சில நாழிகைகளுக்கு முன்பாகவே விழித்துவிட்ட நாகப்பட்டினத் துறைமுகத்தின் சிறு கடை வீதியில் அன்று வாணிபம் துவக்கப்பட்டதால் ஏற்பட்ட சப்தம்கூட அவன் காதில் விழவில்லை. எங்கும் காணப்பட்ட பரபரப்பு அவனை எந்தவிதத்திலும் பாதிக்கவும் இல்லை. வாலிபத்தின் ஆரம்ப தசையிலிருந்த நாகனான உபேந்திரன் மனத்தை ஏதோ ஒரு பெரும் சுமை அழுத்திக் கொண் டிருந்ததை மட்டும் அவ்வப்பொழுது சுருங்கி விலகிய அவன் விசால வதனக்கோடுகள் நிரூபித்தன. இந்த நிலையில் அவன் சுமார் ஒரு மாத காலமாக இருந்தபோதிலும் அவன் சோகத்துக்குக் காரணம் என்னவென்பது திட்டமாக நாகை வாசிகள் யாருக்கும் தெரியாமலே இருந்தாலும், பலர் அதை நினைத்து வருந்தவே செய்தனர்.

இந்த நிலை ஏற்பட்டது முதற்கொண்டு நாகையின் பிரமுகர்கள் பலரும், ஏன், அவனைக் கடைவீதியில் கண்ட சாதாரண மக்களுங்கூட, அவன் இதய கஷ்டத்தில் பங்கு பெற நினைத்தாலும் அவன் வாயை அடியோடு திறக்காத தாலும் யார் எதைக் கேட்டாலும் விடையளிக்காமல் விலகிச்



சென்றதாலும் 'இவனுக்கு என்னதான் குறையிருக்க முடியும்? துன்பத்தின் சுமையில் அழுந்திக் கிடக்கிறான்?' என்று எண்ணி விடை காணமுடியாததால் வியப்படையவே செய்தனர். அவர்கள் வியப்புக்குக் காரணமும் இருந்தது.

ராஜேந்திர சோழ தேவரின் மெய்க்காவலனும், அவன் உள்ளத்தைத் தனது வீரத்தால் ஆட்கொண்டவனும், மகா வீரனுமான உபேந்திரனுக்குப் பணக் குறைவோ மனக் குறைவோ இருப்பதற்கு எந்தவிதக் காரணமும் இல்லை யென்று மக்கள் திட்டமாக நம்பினார்கள். அவன் நெடிய அழகிய உருவத்தையும், கண்களின் தனிப்பட்ட கவர்ச்சி யையும் கண்ட பல மங்கையர்கள் அவனைப் பார்த்து இளநகை கூட்டினாலும், இமையைக்கூட அசைத்து அவற்றை அவன் வரவேற்காததால் சுத்த கட்டைப் பிரும்மச்சாரியென்று பலரின் நகைப்புக்கு இலக்கானாலும், உபேந்திரனுடைய கண்ணியமும் அவர்களை ஆட்கொண்ட தால் 'இவனைப் பெற்ற வயிறு பாக்கியம் செய்தது?' என்று அதே பலர் நம்பவும் அதன் விளைவாக அவனை மதிக்கவும் செய்தனர்.

இத்தனை குணங்களோடு அரசவைச் செல்வாக்கும் பெற்றிருந்த உபேந்திரன் சில நாள்களாக அவனுடைய இயற்கையான புன்னகையை இழந்து, புன்னகை பூத்த உதடு களை ஒரு கடுமை ஆட்கொண்டு, அதிகமான மௌனத் தையும் கடைப்பிடித்ததற்கு யாருக்குமே காரணம் தெரியாத தால் அவனைப்பற்றி அனுதாபப்படவே செய்தார்கள். அரசர் மெய்க்காவலனாக, நாகப்பட்டினத்தில் அரசர் இல்லாத காலத்தில் அந்த நகரத்தைக் காக்கும் படைத்தலைவ னாக, தரைப்படை அனுபவம் மட்டுமின்றிக் கடலோடும் திறமையும் பெற்றவனானதால் அரசரது வணிகக் கப்பல் களையும் கண்காணிக்கும் காப்பாளனாக, பெரும் செல்வாக்

குடனிருந்த அந்த நாக வம்சத்து வாலிபன், அன்று காலை தீர்க்க சிந்தனையுடன் நாகைத் துறைமுகத்தில் ஆடிநின்ற நாவாய்களை உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். நாவாய்களிலிருந்து வந்த மனிதர்கள் பலரையும் அவன் கண்கள் ஆராய்ந்து கொண்டிருந்தன. அந்த மணல் மேட்டு உச்சியிலிருந்து இடையிடையே அவன் தனது மடியிலிருந்த ஓர் ஓலையையும் படித்துவிட்டு மறுபடியும் அதை மடியில் சொருகிக் கொண்டான். மீண்டும் மீண்டும் எதிரே கடற்கரையை நோக்கினான்.

நாகைத் துறைமுகத்தில் அன்று ஏராளமான நாவாய்கள் நின்று கொண்டிருந்ததால் சிலவற்றுக்கு இடம் கிடைக்காமல் போகவே அவை கால்காதத்துக்கு அப்புறமே நின்று பெரும் படகுகள் மூலம் பயணிகளையும் வணிகப் பொருள்களையும் அனுப்பிக்கொண்டிருந்தன. பலதரப்பட்ட அந்தக் கப்பல்களிலிருந்து சீனரும், அராபியரும், இன்னும் பல நாட்டு மக்களும் வந்து கொண்டிருந்தும் அந்தக் கூட்டம் எதிலும் அந்த வாலிபன் கண் செலுத்தினான் இல்லை. கல்முகத் தோடுதான் உட்கார்ந்திருந்தான். ஆனால் அந்தக் கல்லையும் சிதள்களாகச் சுத்தியல் கொண்டு உடைத்தெறியும் நிகழ்ச்சியொன்று கதிரவன் செவ்விய பழம்போல் கடலிலிருந்து எழுந்தபோதுதான் நடந்தது. எழுந்த கதிரவன் சிவப்பொளியில் குளித்துக்கொண்டு தூரத்தில் பொட்டுப்போல் காணப்பட்ட கப்பலொன்று வரவரப் பெரிதாகித் தனது பெரும் பாய்களை விரித்து ஓடி வந்ததும், உபேந்திரன் உட்கார்ந்த நிலையிலிருந்து சட்டென்று எழுந்து நின்றான். அந்தக் கப்பலும் அவனைக் காணவே ஓடி வருவதுபோல் மிகத் துரிதமாக வந்து தூரத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. அதன் மீது ஆடிக்கொண்டிருந்த காஷாய வர்ணக் கொடியைச் சுற்றியிருந்த சக்கரவட்ட மரப்பலகையில் கொடியைப் பின்னணியாகக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் உருவம்

www.cleanindians.com



தூரப் பார்வைக்குக்கூட அழகாகத் தெரிந்தது. தூரப் பார்வையில் சாதாரணமாக ஆணையும் பெண்ணையும் பிரித்து எடைபோட முடியாதென்றாலும் கொடியின் முன்பு தெரிந்த பலப்பல உடல் வளைவுகளும், காலைக் காற்றில் வீசிப் பறந்த குழல் வீச்சும் நின்றது பெண்தானென்பதை சந்தேகமற தெரிவித்ததால் மணல் மேட்டு உச்சியில் நின்ற உபேந்திரனிடமிருந்து பெருமூச்சொன்று வெளிவந்தது.

தூர இருந்த கப்பலின் உச்சியில் நின்ற அந்தப் பெண் தனது கண்களை நாலா திக்கிலும் ஓடவிட்டதை அவள் தலை திரும்பியதிலிருந்தே ஊகித்த உபேந்திரன், "இவள் கண்ணிலிருந்து யாரும் எதுவும் தப்ப முடியாது" என்று முணுமுணுக்கவும் செய்தான். அந்த முணுமுணுப்பில் வெறுப்பும் கடுமையும் கலந்து கிடந்தன. அந்த முணுமுணுப்புடன் தலையைக் காரணமில்லாமல் இருபுறமும் ஆட்டிக் கொண்ட அந்த வாலிபன் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டு மணல் மேட்டிலிருந்து சரசரவென்று இறங்கி துறைமுகத்தின் ஓரத்துக்கு நடந்து அங்கிருந்த படகொன்றை அவிழ்த்துக்கொண்டு அதைத் துடுப்புகளால் தானே துழாவிக்கொண்டு தூர நின்ற மரக்கலத்தை நோக்கி அதைச் செலுத்தினான். அன்று காலை வழக்க விரோதமாக அலைகள் பெரிதாகவே வந்து கொண்டிருந்தாலும் மாலுமிகளில் சிறந்தவனான உபேந்திரன் வெகு லாகவமாக அவற்றின்மேல் படகை மிதந்தோடும்படி செய்தான். படகு அவன் கைப்பாவையென இயங்கியதால் சுமார் இரண்டரை நாழிகை நேரத்தில் அந்தப் பெரிய கப்பலின் அருகே வந்து சேர்ந்தான்.

அவனருகே நின்றது சாவகத்தீவின் பெரும் போர்க் கப்பல்களில் ஒன்று. ஆயுதம் தரித்த மாலுமிகள் அதன் தளத்தில் பெருவாரியாக உலாவிக்கொண்டிருந்தார்கள். நீள

ஈட்டிகளை ஏந்தியும், விஷந்தீட்டிய அம்புகள் கொண்ட அம்பறாத் துணிகளையும் விற்களையும் தரித்தும் உலாவிய மாலுமிகளில் ஒருவன் உபேந்திரன் படகைக் கண்டு விட்டதால் தனது வில்லில் ஒரு வாளியைப் பொருத்திக் குறி பார்த்து நின்றிருந்தான். படகு அருகில் வந்ததும் எட்டிப் பார்த்த அந்த மாலுமி கையை மேலெடுத்து ஆட்ட ஒரு நூலேணி தொங்கவிடப்பட்டது. கப்பலின் பக்கப் பலகையில் படகை அந்தக் கப்பலின் வளையமொன்றில் பிணைத்து விட்டு நூலேணியில் ஏறித் தளத்தை அடைந்த உபேந்திரனை மாலுமியொருவன் கையசைத்து, "அப்படியே நிற்கலாம்" என்று உத்தரவிட்டான். சட்டென்று தலையை மேலே தூக்கிப் பார்த்த உபேந்திரன் கருடன் கொடியருகில் நின்றிருந்த பெண் மறைந்துவிட்டதைக் கண்டதால் சிறிது சாந்தியடைந்து தனது கூரிய கண்களால் தன்னைத் தடை செய்த மாலுமியை நோக்கினான்.

பதிலுக்கு மாலுமி கையை நீட்டினான். உபேந்திரன் ஏதும் பேசாமல் மடியிலிருந்து ஓலையை எடுத்து அவனிடம் கொடுக்க அவன் சட்டென்று திரும்பிச் சென்றான், கப்பலின் இன்னொருபுறத்தை நோக்கி. அவனை மௌனமாகப் பின்தொடர்ந்த உபேந்திரன் அவனுடன் மரக்கலத்தின் கீழே ஓடிய சிறு படிகளில் இறங்கிய ஓர் அறை முகப்புக்கு வந்தான். அந்த அறையைக் காத்து நின்ற சீனன் ஒருவன் மாலுமியைக் கண்டதும் கதவை லேசாகவும் ஓசைப் படாமலும் திறக்கவே உள்ளே சென்ற மாலுமி ஒரு விநாடிக் கெல்லாம் திரும்பி வந்து உபேந்திரனை நோக்கி, "உள்ளே செல்லலாம்" என்று அறிவித்தான்.

அறைக்குள்ளே நுழைந்த உபேந்திரன் அந்த அறைக் கதவை மிக மெதுவாகச் சாத்தினான். அறையின் கோடியி லிருந்த ஒரு பஞ்சணையில் ஒருக்களித்துப் படுத்திருந்த ஒரு



பெண் அவன் காலடி ஓசை கேட்டதும் சற்றுத் திரும்பிப் பார்த்தாள். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்தாள். "எதிர்பார்த்தபடி வந்துவிட்டாய். நல்லது" என்று அதிகார தோரணையில் கூறிய அந்தப் பெண், "நான் யாரென்று புரிகிறதா உனக்கு?" என்று வினவினாள்.

உபேந்திரன் உணர்ச்சிகள் நிலை மீறி ஓடிக்கொண் டிருந்ததால் அவன் உடனடியாகப் பதில் சொல்லாமல் சில விநாடிகள் மௌனமே சாதித்தான். பிறகு மெதுவாகக் கேட்டான், "தெரிகிறது. ஏன் அழைத்தாய் என்னை?" என்று.

அவளும் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. நீண்ட நேரம் அவனை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படி அவனை நோக்கிய விழிகளில் அவாவும் வியப்பும் மாறி மாறிப் புலப்பட்டன. கடைசியாக ஏதோ தீர்மானத்துக்கு வந்த அந்தப் பெண் தனது முன்னுச்சி மயிர்களில் சொருகி யிருந்த ஒரு சிறு ஆபரணத்தைத் தொட்டுக் காட்டினாள். மூன்று தலையை உடைய நாகப்பதக்கம் அந்தக் குழல் நடுவே பளிச்சிட்டது. அந்த நாகத்தின் மூன்று தலைகளிலும் மூன்று பெரிய மாணிக்கக் கற்கள் தீயைக் கக்குவனபோல் சுடர் விட்டன.

அந்த மூன்று தலை நாகாபரணத்தையும் அவள் அதைத் தொட்டுக் காட்டிய முறையையும் கவனித்த உபேந்திரன் உணர்ச்சிப் பெருக்கால் அச்சம் கலந்த பெருமூச்சு ஒன்றை விட்டான். பிரமித்தும் நின்றான், பல விநாடிகள் அசைவற்று. அவள் செய்த சமிக்ஞையிலிருந்தே அவள் என்ன கட்டளை யிடுகிறாள் என்பது உபேந்திரனுக்குப் புலப்பட்டதால் அவன் மனதில் அச்சம் உதயமாகி அதன் விளைவாக லேசாக நடுங்கவும் செய்தான்.

www.cleanindians.com

## 2. அவள் ஓதிய மந்திரம்

மகாவீரனென்று பெயர் பெற்றவனும் அன்றுவரை அச்சமென்பதை அணுவளவும் அறியாதவனுமான உபேந்திரனின் சஞ்சலத்தையும், அச்சத்தையும் அவன் உடலில் ஓடிக் கொண்டிருந்த நடுக்கத்தையும் பார்த்த அந்தப் பெண் அவனைப் பார்த்து லேசாக நகைத்தாள். அப்படி நகைத்த அவள் உட்கார்ந்த நிலையிலிருந்து பஞ்சணைத் தலையணையில் உல்லாசமாகச் சாய்ந்தும் கொண்டாள். அப்படிச் சாய்ந்து ஒரு கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு அவனை நோக்கிய அவள் அழகு விவரணத்துக்கும் அப்பாற்பட்டதாயிருந்ததை உபேந்திரன் கவனித்தான்.

அந்த அறையிலிருந்த பல போகப் பொருள்களையும் தோற்கடிக்கக் கூடிய போகப் பொருளாய், சாதாரணமாகக் கிட்ட முடியாத தேவமங்கையாய் பஞ்சணையில் ஒருக்களித்துக் கிடந்த நிலையில் அவள் எந்த ஆண்மகனையும் நிலைகுலையச் செய்து அடிமையாக்கிக் கொள்ளும் ரதிபோல் காட்சியளித்தாள். அறை அவ்வளவு பெரியதல்லவென்றாலும், அங்கிருந்த மரச்சுவர்களிலும் தூண்களிலும் காணப்பட்ட தந்த சீப்புகள், இடையே கட்டப்பட்ட கொடியில் தொங்கிய பட்டுச் சேலைகள், ஒரு தூணின் ஆணியில் தொங்கவிடப்பட்டிருந்த முத்து நவரத்தின மாலைகள், அவள் முகம் கழுவ ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த பளிங்குக் கிண்ணம்— எல்லாமே அந்த அறையை ஒரு ராணியின் அறையாகச் செய்திருந்தன. அத்தனை பொருள்களின் அழகையும் மீறிய அழகுடன் அவள் சாய்ந்திருந்ததைக் கவனித்த உபேந்திரன் லேசாகப் பெருமூச்சே விட்டான்.



அதிக வெளுப்பில்லாமல் லேசாக மஞ்சளோடியிருந்த அவள் வழவழத்த மேனி காலத்தால் பழுப்பேறிய தந்தம் போலிருந்தது. அந்த அறையில் காற்றுக்காகப் பஞ்சணைக்கு எதிரில் மேல் தளத்தின் சாய்வில் அமைக்கப்பட்டிருந்த ஒரு துவாரத்தின் மூலம் காலை நேரத்தின் கதிரவன் கிரணங்கள் உட்புகுந்து அவள் உடலின் மஞ்சள் நிறத்துக்குப் பெரிதும் மெருகூட்டின. அவள் பிறை நுதலுக்கு மேலே அலைந்த கரிய குழல்களின் நடு வகிட்டில் பொருத்தப்பட்டிருந்த முத்தலை நாகாபரணமும் பேரொளி பெற்றுப் பிரகாசித்தது. அவள் குழல் காலையில் நாகை மணல் மேட்டிலிருந்து, அவன் எப்படிப் பார்த்தானோ அதே மாதிரியே விரிந்து கிடந்தது. அப்படி குழல் விரித்த நிலையிலும் அவள் அழகிய தோற்றம் பிரமிக்கும்படியாகவே இருந்தது. அவள் வளைந்த புருவங்களும் எடுப்பான கூரிய நாசியும், நீர் சொட்டும் ரத்தினக் கூட்டம்போலச் சிவந்த உதடுகளும், முகத்துக்குத் தக்கபடி அளவோடு அமைக்கப்பட்டிருந்த முகவாய்க் கட்டையும் கீழே தெரிந்த வெண் சங்குக் கழுத்தும் பிரமையூட்டும் வண்ணம் அமைந்திருந்தன. அந்தக் கழுத்துக்குக் கீழே உறுத்து நோக்கிய இரு தாமரை மொட்டுகள் அதிகப் பருமனின்றி அவள் மெல்லிய உடலுக்குத் தேவையானபடி அமைந்திருந்தாலும் அவள் ஒருக்களித்ததன் காரணமாக இரண்டிலொன்று தலையணையை முத்தமிட, இன்னொன்று எதிரே நின்ற சோழர் நாகைத் தலைவனை உற்றுநோக்கி மிரட்டியது.

www.cleanindians.com

அவள் கிடந்த நிலையில் அவள் நீண்ட சரீரத்திலிருந்த பல வளைவுகள் அவள் உடலின் வசீகரத்துக்கு எல்லையில்லையென்பதை எடுத்துக் காட்டின. இடது கையை அவள் தலைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்ததால் வலது கை மட்டும் அவளுக்குக் குறுக்கே தொங்கிக் கொண்டிருந்தது. அது பதிந்த இடத்துக்கு மேலே தெரிந்த சின்னஞ்

சிறு இடையும், அடுத்து லேசாய்ப் பருத்து எழுந்த அழகும் அதை அடுத்து நீண்டு கிடந்த தந்தக் கால்களும், அவள் அம்சம் ஒவ்வொன்றிலும் அழகு சுடர்விடுவதை நிருபித்தன.

அவள் அன்று மிக மெல்லிய சீனப்பட்டு ஒன்றை அணிந்திருந்ததால் அது அடிக்கடி அவள் வழவழத்த சரீரத்தி லிருந்து நழுவி விழுந்தாலும் அவள் அதைச் சரிப்படுத்திக் கொள்ள முயன்றாளில்லை. அந்தப் பட்டு இருந்த மென்மை யில் உடலின் அழகு பூராவும் தெரிந்தாலும் அதை அவள் லட்சியப்படுத்தினாள் இல்லை. அவள் இதழ்களில் புன்சிரிப்பு ஒன்று தவழ்ந்து கிடந்தது.

அவள் மோகனகரமான இத்தனை அழகிலும் கவர்ச்சி யிலும் ஒரு பயங்கரம் ஊடுருவி நின்றதைக் கவனித்தான் உபேந்திரன். அத்தனை அழகிலும் அவள் நெளிந்து கிடந்த போது ஒரு சர்ப்பம் நெளிவது போலவே காணப்பட்டதை உணர்ந்த உபேந்திரன், "இவள் நாக கன்னிகைதான். சந்தேக மில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் தன்னை அணுஅணுவாகக் கவனிப்பதையும், ஏதோ சிந்திப்பதையும் கவனித்த அந்தப் பெண்ணும் அவனைக் கூர்ந்து கவனித்தாள்.

வாலிப பருவத்தில் நல்ல உயரத்துடனிருந்த அந்த ஆண் மகனின் நெடுங்கைகள் ஒல்லியாய் இருந்தாலும் உரத்துட னிருந்ததையும், சதைப் பிடிப்பு அதிகமில்லாத உடலின் மற்ற பகுதிகளும் எஃகுபோல உறுதியுடனிருந்ததையும், அவன் நின்ற தோரணையில் அதிகாரம் செலுத்தும் ஆண்மை பொங்கி நின்றதையும் அவள் கவனிக்கவே செய்தாள். அவன் அன்று அங்கி ஏதும் அணியாமல் இடுப்பில் ஒரு வஸ்திரத்தை மட்டும் மூலைக் கச்சமாகக் கட்டிக் கொண் டிருந்ததால் அவன் தொடை உச்சியிலிருந்து பாதம் வரை கால்கள் நன்றாகத் தெரிந்தன. வீரம் சொட்டும் அவன்



வதனமும் காக்கை இறகுக்ள்போல் வெளியிடப்பட்டிருந்த கரிய குழல்களும், அவன் கழுத்தில் ஆடிய வீரச் சங்கிலியும் அவன் கம்பீரத்துக்குச் சான்று கூறின. இடுப்பில் ஒரு குறுவாளைக்கூட அவன் கொண்டு வராததை அவள் கவனித்து வியப்பும் பெருமையும் கொண்டாள். அவன் கண்களுடன் தனது கண்களையும் கலந்தாள் ஒரு விநாடி. இத்தனையிலும் அவன் வதனத்தில் ஓடிய அச்சத்தின் சாயையும் கண்டதால் மெள்ள நகைத்தாள்.

அவள் நகைப்பை அவன் பொருட்படுத்தாமலே நின்றான். ஆகையால் அவளே சொன்னாள், "சோதனை வரும்போது எந்த ஆண் மகனும் கோழைதான்" என்று.

www.cleanindians.com

அதற்கும் அவன் பதில் ஏதும் சொல்லவில்லை. அவளை வெறித்துப் பார்த்த வண்ணம் நின்றிருந்தான். அவன் சங்கட நிலையை அவளும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். "நிற்க முடியவில்லையென்றால் இப்படி வந்து உட்கார்" என்று அவள் தன் கால்களை மடித்துப் பஞ்சணை ஓரத்தில் அவனுக்கு இடம் விட்டாள்.

அவள் அழைப்பை அவன் ஏற்கவில்லை. நின்றபடியே அவளை நோக்கி, "நிற்க முடியாத அளவுக்கு அச்சமில்லை எனக்கு. தவிர அச்சமும் எனக்கு இன்று ஏற்பட்ட புது அனுபவம்" என்று கூறினான்.

அவன் சொன்னதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக அவள் தன் தலையை அசைத்தாள். "அப்படித்தானிருக்க வேண்டும். நீ மகாவீரனென்று கேள்விப்பட்டிருக்கிறேன். நாகர்களிடையே உன் பெயர் பிரசித்தி பெற்றிருக்கிறது" என்று அவளும் சொன்னாள். அதைச் சொன்னபோது அவள் குரலில் அதிகாரமில்லை; பெருமை இருந்தது, கடுமை யில்லை; கனிவிருந்தது.

மேலும் அவளே பேசினாள். "உபேந்திரா! உன் பெயரை, வீரத்தை, நீ போர்க்களங்கள் இரண்டில் புரிந்த வீரச் செயல்களை நாகர்கள் அறிவார்கள். அதனால்தான் இந்தப் புனிதப் பணிக்கு உன்னை உபயோகிக்க எனக்கு யோசனை கூறினார்கள். அதையொட்டித்தான் உனக்கு ஓலை அனுப்பினேன். அந்தப் பணியை உன் உதவியுடன் நிறைவேற்றத்தான் இங்கு வந்திருக்கிறேன், புரிகிறதா?" இப்படிப் பேசிய அந்த அழகி மீண்டும் உபேந்திரனை ஏறெடுத்து நோக்கினாள்.

உபேந்திரனும் இம்முறை அவள் கண்களைச் சிறிதும் அச்சமின்றி நோக்கினான். "புரிகிறது! ஆனால் பணி என்ன வென்பது புரியவில்லை" என்று சற்றுக் கடுமையுடன் கூறினான்.

"சகலத்தையும் சமயத்தில் புரிய வைக்கிறேன். உனக்கு வழிகாட்டவே நான் இங்கு வந்திருக்கிறேன்" என்றாள் அந்த நாக வம்சத்தவள்.

அதுவரை மிகுந்த பொறுமையைக் காட்டிய உபேந் திரன், "எனக்கு யாரும் வழிகாட்ட முடியாது. நான் எதைச் செய்ய வேண்டும், என்று உத்தரவிடவும் முடியாது. தவிர எனக்கு உத்தரவிட உனக்கு என்ன அதிகாரம்?" என்று பொறுமையை உதறி சற்றுச் சினத்தைக் காட்டினான்.

அவள் முகத்தில் இகழ்ச்சியின் சாயை படர்ந்தது. "உபேந்திரா! இதுவரை உன்னைப் புத்திசாலியென்று நினைத்தேன். நீ உன் குலத்தை மறந்துவிட்டாய். உண்மை யில் நீ நாகர் குலத்தவனா என்ற சந்தேகமும் எனக்கு உண்டாகிறது" என்று கூறிய அவள் ஒருமுறை பஞ்சணை யில் அசைந்தாள். கோபத்துடன் "உபேந்திரா! நாகனாகப் பிறந்த யாரும் எந்த நாட்டையும் சேர்ந்தவரல்லன். நாகர் குலத்துக்குத்தான் அவர்கள் சொத்து. நாகர் தலைவர் இடும்



பணியைத்தான் அவர்கள் செய்ய வேண்டும். அவர்கள் முதல் கடமை அவர்கள் குலத்துக்கு. நாடு நகரம் எல்லாமே அடுத்தபடி" என்று விளக்கிய அவள், "நாக வீரனே! உனக்கு நான் அனுப்பிய ஓலையில் என்ன கையெழுத்திட்டிருந் தேன்?" என்று வினவவும் செய்தாள்.

"நாகதேவி என்று கையெழுத்திட்டிருந்தீர்கள். அது உங்கள் பதவியா? பெயரா?" என்று உபேந்திரன் கேட்டான்.

"இரண்டும்தான். என் பெற்றோர் இட்ட பெயர் நாகதேவி. நாகர்கள் என்னைத் தலைவியாகத் தேர்ந்தெடுத்து நாகதேவி என்று அழைத்தார்கள். இப்படிப் பொருந்துவது அபூர்வம்! அதுவும் முத்தலை நாகர் சாதியில் இப்படி ஏற்படுவது மிகமிக அபூர்வம்" என்றாள் அவள்.

பதிலுக்கு அவன் தலையை மட்டும் அசைத்தான். 'நாகதேவி, நாகதேவி' என்று இருமுறை உச்சரிக்கவும் செய்தான்.

www.cleanindians.com

அவன் தன் பெயரை இருமுறை உச்சரித்ததைக் கண்ட அவள் முகத்தில் பெருமிதம் தெரிந்தது. இதழ்களில் அழகிய இளநகை கூடியது. "பெயர் அழகாக இருக்கிறதா?" என்று மெதுவான குரலில் வினவினாள் அவள்.

"அழகாகவும் இருக்கிறது! பதவிக்குத் தக்கபடியும் இருக்கிறது" என்றான் உபேந்திரன் மரியாதை நிரம்பிய குரலில். "என்ன இருந்தாலும் இவள் எங்கள் சமுதாயத் தலைவி அல்லவா?" என்று மரியாதைக்கு உள்ளூர காரணமும் கற்பித்துக் கொண்டான்.

அவன் பதிலில் கண்ட பணிவும் மரியாதையும் அவளுக்கு மிக இன்பத்தை அளித்திருக்க வேண்டும். அடுத்து அவள் மீண்டும் அழைத்தாள் அவனை, "உபேந்திரா" என்று.

"தேவி!" என்றான் அவன்.

"நீ நிலைமையைப் புரிந்துகொண்டதைப் பற்றி மகிழ்ச்சி யடைகிறேன். இனி நாமிருவரும் இணைந்து வேலை செய்வது சுலபம்" என்று குறிப்பிட்டாள் நாகதேவி.

இதற்கு அவன் பதிலேதும் சொல்லவில்லை. "ஏன் வாளாவிருக்கிறாய் உபேந்திரா?" என்று அன்பு சொட்டிய குரலில் கேட்டாள் அவள்.

"தேவி! நீங்கள் வந்த காரியத்தை இன்னும் சொல்ல வில்லை" என்றான் உபேந்திரன்.

அவள் சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினாள். பிறகு "உபேந்திரா! ஏன் நிற்கிறாய்? இப்படி வந்து என் அருகில் உட்கார்" என்று தன் உடல் முழுவதையுமே பஞ்சணையில் பின்னால் நகர்த்திக் கொண்டாள்.

"தவறு தேவி! நாகர் குலத்தார் அவர்கள் தலைவர் களுக்குச் சரிசமானமாக உட்காருவது சம்பிரதாய விரோதம்" என்று சுட்டிக் காட்டினான் உபேந்திரன்.

அவன் சொற்படி நடக்காததால் அவள் முகத்தில் சினம் லேசாகத் தெரிந்தது. "தலைவி சொற்படி நடக்காதிருப்பது சம்பிரதாயமா?" என்று வினவினாள்.

"எதுவும் உத்தரவைப் பொறுத்தது" என்ற உபேந்திரன் "தாங்கள் வந்த காரியம் என்ன? என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? சொல்லுங்கள் தேவி" என்று கேட்டான் பணிவு நிரம்பிய குரலில்.

நாகதேவி அவனை நோக்கி நகைத்தாள். "நான் பெண் என்பதால் என் அருகில் உட்கார அஞ்சுகிறாய். சரி, அப்படியே நில். நாகர்கள் கட்டளையைக் கேள்" என்று சொன்ன நாகதேவி பஞ்சணையிலிருந்து எழுந்து தரையில்



நின்றுகொண்டாள். அந்த நிலையில் அவன் செய்ய வேண்டுவதென்ன என்பதை விளக்கத் தொடங்கினாள்.

அவள் விளக்க விளக்கப் பெரும் அதிர்ச்சிக்கும் பீதிக்கும் உள்ளானான் உபேந்திரன். "துரோகம். பச்சைத் துரோகம். இதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்" என்று தரையில் காலை உதைத்து உக்கிரமாகக் கூவவும் செய்தான் சோழர் படைத்தலைவன். "உனக்குப் பைத்தியம் பிடித்திருக் கிறது. நாகர்கள் எல்லோருக்குமே பைத்தியம் பிடித்திருக் கிறது" என்றும் கூறினான்.

இந்தக் கூச்சலால் அவள் சிறிதும் மசியவில்லை. தன் உடலின் அழகுகள் அசைய அவனை நோக்கி வந்தாள். அருகில் வந்ததும் "குனி உபேந்திரா" என்று மெதுவாகச் சொன்னதுடன் நில்லாமல் அவன் குழலைப் பிடித்து முகத்தைத் தாழ்த்தி அவன் காதில் ஏதோ ஓதினாள்.

அவள் ஓதிய மந்திரம்தான் என்னவோ? உபேந்திரன் கண்கள் சுழன்றன. பிரமிப்பு அவன் இதயத்தை ஆட் கொண்டது. மீள முடியாத பாதாளத்தில் தான் தள்ளப்பட்டு விட்டதை உணர்ந்தான்.

## 3. மாயா தேவி

நாகதேவி எட்ட பஞ்சணையில் உட்கார்ந்திருந்த போதும், கட்டிலை விட்டிறங்கி நின்ற நாகர்கள் கட்டளையை விளக்கிய போதும் அவள் உடலிலிருந்து எழுந்த சுகந்தம் உபேந்திரனை ஓரளவு ஈர்த்ததென்றால், அவள் அவனருகில் வந்ததும் அந்தப் பரிமளம் அவன் உணர்ச்சிகளைப் பெரிதும் அள்ளவே செய்தது. அவள் அவன் குழலைப் பிடித்திழுத்துக் குனிய வைத்தபோதே அவள் மார்புக்கெதிரே மிக அருகே அவன் முகம் இருந்த

www.cleanindians.com

காரணத்தால் லேசாகக் கச்சை இடங்கொடுத்துத் தெரிந்த அவள் மார்பு விளிம்புகளும் இடையே ஓடிய குறுகிய பாதையும் அவன் கண்களைப் பிரமிப்பில் ஆழ்த்திய தல்லாமல், அருகாமையின் காரணமாகப் பெருகிவிட்ட பரிமள சுகந்தத்தின் முழு வேகம் அவன் சுவாசத்தின் மூலம் இதயத்திலும் சென்று உறைந்து அவனை நிதானமிழக்கும் நிலைக்குக் கொண்டு வந்ததால், அவன் மயக்கத்தில் ஆழ்ந்திருப்பான். ஆனால் அந்த மயக்கத்தை அவள் அவன் காதில் ஓதிய மந்திரம் உடைத்தெறிந்து அதிர்ச்சிக்கும் பிரமிப்புக்குமே இடங்கொடுத்தது.

அந்த பிரமிப்பின் விளைவாக அவள் பிடியிலிருந்து தனது குழலை விடுவித்துக்கொண்டு சட்டென்று பின்ன டைந்த உபேந்திரன் “நாகதேவி! நீங்கள் சொன்னதன் பொருள் உங்களுக்கு விளங்குகிறதா?” என்று கேட்டான். அந்தக் கேள்வியில் விவரிக்க இயலாத அச்சம் விரிந்து கிடந்தது.

நாகதேவி அவன் தன்னிடமிருந்து பின்னடைந்ததைக் கவனித்தாள். அவன் சொற்களில் ஒலித்த அச்சத்தையும் கவனித்தாள். எல்லாவற்றுக்கும் மேலாகத் தன் அருகாமை அவனுக்களித்த குழப்பத்தையும் கவனித்தாள். இவற்றை யெல்லாம் கவனித்ததன் விளைவாகத் தன் இதழ்களில் லேசான புன்முறுவலொன்றையும் படரவிட்டுக்கொண்டாள். “புரிகிறது உபேந்திரா! நாகதேவி புரியாமல் எதையும் சொல்வதில்லை. நான் விரும்புவதெல்லாம் நாகர்களின் பழைய ராஜ்யம். நாகர்களின் கட்டளையை உனக்கு முன்பே எடுத்து விளக்கினேன். அதற்குப் பதில் அவர்களுக்குப் பைத்தியக்காரப் பட்டத்தைச் சூட்டினாய். சுயராஜ்யம் கேட்பவர்களெல்லாம் பைத்தியக்காரர்களல்லர்” என்றும் கூறினாள் நாகதேவி புன்முறுவலின் ஊடே.



அவள் அழகிய உதடுகளில் விரிந்த மோகனப் புன்முறுவலில் சிறிதளவு விஷமும் கலந்திருப்பதை உபேந்திரன் கவனித்தான். எதற்கும் துணிந்துள்ள மிக பயங்கரமான ஒரு பெண்ணிடம் தான் சிக்கி இருப்பதை உணர்ந்தான். “நாகதேவி! சோழ ராஜ்யத்துக்குள் ஒரு சிறு ராஜ்யத்தை அமைக்க முயலுகிறாய். அது வெறும் கனவு. நனவாகக் கூடியதல்ல” என்று சுட்டிக்காட்டினான் உபேந்திரன்.

அவன் எச்சரிக்கையை அவள் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. மெல்ல நகைத்துவிட்டுத் திரும்பித் தனது கட்டிலை நோக்கி நடந்து சென்று கட்டிலில் உட்கார்ந்து அந்தக் கட்டிளங் காளையை உற்று நோக்கினாள். “உபேந்திரா! சரித்திரத்தை மறந்து பேசுகிறாய். பெரும் பெரும் கனவுகள் நனவுகளாயிருக்கின்றன. மேதைகளால் மாபெரும் வீரர்களால், சாதிக்க முடியாத காரியங்கள் உலகத்தில் எதுவும் கிடையாது. இந்தப் பெரிய பணியைச் சாதிக்க சாவகத்தின் நாகர்களில் யாரையாவது நான் அனுப்பியிருக்க முடியும். ஆனால் நானே வந்தேன் ஏன்? சரியான தலைமையில்லாத காரியங்கள் உலகத்தில் சரிவர நிறைவேறுவதில்லை. சரியான அறிவில்லாதவர்கள் பெரும் பணிகளில் ஈடுபடுவதால் பணிக்குத்தான் பாதகம். இதை நானே நேரில் சாதிப்பதென்று இங்கு வந்திருக்கிறேன். இந்தப் பணியில் நான் அறிவு! நீ ஆயுதம்! உன்னைக் கொண்டு நாகையில் நமது ஆட்சியை அமைப்போம். நாகப்பட்டினம் நாகர்களின் பழைய குடியிருப்பு. அவர்கள் இடமாதலால்தான் இதற்கு அந்தப் பெயர் வந்தது” என்று கனவில் பேசுவதுபோல் பேசினாள். இதைச் சொன்னபோது அவள் கண்களில் பெரும் கனவு விரிந்து கிடந்தது.

அது ராஜ்யக் கனவு என்பதையும் புரிந்துகொண்டான் உபேந்திரன். நாகர்களின் ஆசையை, லட்சியத்தை அவள்

www.cleanindians.com

சற்று முன்பு விளக்கியபோதும் இப்படித்தானிருந்தது அவள் தோற்றமென்பதை எண்ணிப் பார்த்தான். அவள் தான் வந்த காரணத்தை, நாகர்களின் எண்ணத்தை விளக்கிய திடத்தையும் அப்பொழுதிருந்த அவள் குரலின் உறுதியையும் நினைத்துப் பார்த்த உபேந்திரன் எண்ணமெல்லாம் எங்கோ சுழன்றன. அவள் பழகிய தோரணை, நின்ற நிலை, பேசிய உறுதி, விளக்கிய வரலாறு எல்லாம் மீண்டும் அவன் மனக்கண் முன் எழுந்து வலம் வந்தன. பழகிய சொற்கள் மீண்டும் காதுகளில் ஒலித்தன. "உபேந்திரா! நாகப்பட்டினம் நாகர்களின் பூர்வ சொத்து. அவர்கள் அதை விரும்புகிறார்கள். அதை எப்படியும் சோழனிடமிருந்து மீட்டு அங்கு நமது அரசு ஒன்றை நிறுவுவதற்கு என்னை நியமித்திருக்கிறார்கள்" என்று அவள் திட்டவட்டமாகக் கூறியது அப்பொழுதும் அவன் மனத்தைக் குழப்பிக்கொண்டிருந்தது.

அகண்ட சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியை இராஜேந்திர சோழ தேவரிடமிருந்து கைப்பற்ற முயலுவதை விடப் பெரிய பைத்தியக்காரத்தனம் உலகத்தில் ஏதுமிருக்க முடியாதென்ற காரணத்தால்தான் உபேந்திரன் முதலில் கொதித்தெழுந்தான். அந்தக் கொதிப்பை அடக்கவும் தன்னை ஓர் ஆயுதமாக்கி ராஜத் துரோகத்துக்குத் தூண்டவுமே நாகதேவி தன் காதில் அந்த மந்திரத்தை ஓதினாள் என்பதை நினைக்க அவன் மனம் அலைகடல் துரும்பென அலைந்தது திக்குத் திசை தெரியாமல்.

இத்தனைக்கும் அவள் அவன் காதில் "நாக இலச்சினை" என்ற இரண்டே வார்த்தைகளைத்தான் சொன்னாள். மந்திரம் ஓதப்பட்டது போன்ற அந்த வார்த்தைகளின் பொருள், சக்தி, அதனால் ஏற்படக் கூடிய விளைவு, விபரீதம் அனைத்தையும் உணர்ந்ததால்தான் அதிர்ச்சியுற்று நின்றான் சோழர் வீரனும் நாகையின் தலைவனுமான



உபேந்திரன். எந்த ஒருவன் உடலில் நாகர்கள் நாக இலச்சினையைப் பொறிக்கிறார்களோ, அவன் அந்த நாள் முதல் அவன் அடிமையாகிறானென்பதையும், நாக இலச்சினையைப் பெற்றவன் சுயமாக எதுவும் செய்ய முடியாதென்பதையும், நாகர்கள் கட்டளையை மீறினால் எப்படியும் அவன் உயிர் வாங்கப்படுமென்பதையும் அவன் உணர்ந்திருந்தான். உயிரைப் பற்றி என்றுமே அவன் கவலைப்பட்டதில்லையென்றாலும், தான் இந்தப் பணிக்கு உடன்படாவிட்டால் நாகைத் துறைமுகம் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொள்ளுமென்றும், சமயம் பார்த்து சோழ சக்கரவர்த்தியையும் அழிக்க நாகர்கள் தயங்கமாட்டார்களென்பதையும் உபேந்திரன் உணர்ந்திருந்ததால் பெரும் சங்கடத்துக்குள்ளானான்.

www.cleanindians.com

அவன் அப்படிக் குழம்பி நின்ற நேரத்தில் நாகதேவி அவனை அழைத்தாள். "உபேந்திரா! இப்படி வா!" என்று. அவள் அழைப்பை, மறுக்க முடியாத உபேந்திரன் கனவில் நடப்பவன்போல் அவளை நோக்கி நடந்து சென்றான். கட்டிலை அணுகியதும், "குனி உபேந்திரா" என்று கட்டளையிட்டாள். மந்திரத்தால் கட்டுண்டவன்போல் அவள் உத்தரவை ஏற்றுக் குனிந்தான். இம்முறை அவள் அவன் குழலைப் பிடித்து இழுக்கவில்லை. காதில் மந்திரமும் ஓதவில்லை. அவன் கழுத்தைத் தன் கைகளால் வளைத்துத் தன் செவ்விய இதழ்களை அவன் இதழ்களோடு பொருத்தினாள்.

சாதாரண சமயமாயிருந்தால் சொட்டும் அவள் சௌந்தர்யத்துக்கு, சௌந்தர்யத்தைச் சூழ்ந்து பரந்த பரிமள சுகந்தத்துக்கு, அதரங்களின் இன்சுவைக்கு அவன் அடிமையாயிருப்பான். ஆனால் அந்த சமயத்தில் அவள் இதழின் ஸ்பரிசம் அவனுக்கு அச்சத்தையே ஊட்டியது. ராஜத்

துரோகம் செய்வதற்கு அந்த அதரங்களை அவள் தனக்குப் பரிசாக அளிப்பதாக அவன் எண்ணினான். அதனால் ஏற்பட்ட வெறுப்பின் விளைவாக அவன் இதழ்கள் உணர்ச்சியற்றுக் கிடந்தன.

தன் அருகாமையால் முதலில் மயங்கிய உபேந்திரன் இப்பொழுது மரக்கட்டையாகிவிட்டதை நாகதேவி உணர்ந்தாள். தன் அதரங்களுக்கு எதிர் இழைப்பை அவன் உதடுகள் நல்காததற்குக் காரணமும் அவளுக்குப் புரிந்துதா னிருந்தது. ஆகவே தனது அதரங்களை மீட்டுக்கொண்டு உபேந்திரனை நோக்கிக் கேட்டாள், "உபேந்திரா! உன் உடலில் நான் நாக இலச்சினையைப் பொறிப்பது இருக்கட்டும். இப்பொழுது பொறித்தேனே அந்த இலச்சினை யின் காரணம் புரிகிறதா உனக்கு?" என்று. அத்துடன் கட்டிலிலிருந்து இறங்கி நாவாயின் மரத்தரையில் அவனுக்கு வெகு அருகாமையில் நின்றாள். "உபேந்திரா! இந்த உதடுகள் இதுவரை யாரையும் தொட்டதில்லை. நாககன்னிகைகள் ஆயுளில் ஒருவனுக்குத்தான் தங்கள் அதரங்களை அர்ப்பணிக்கிறார்கள். அந்த ஒருவன் அவள் கணவன். நாகர்களின் தலைவியான நான் எனக்குத் தலைவனாகவும் என்னை ஆள்பவனாகவும் இருக்கும் உரிமையை உனக்கு அளிக்கிறேன். உபேந்திரா! என்னருகில் வா. என்னை நாகர்களில் எத்தனையோ பேர் இன்றும் விரும்புகிறார்கள். ஸ்ரீவிஜய ராஜ்யத்தின் மன்னன் விஜயதுங்கவர்மனும் என்னை விரும்புகிறான். அவர்கள் யாரையும் நான் மதிக்க வில்லை. கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. இன்றுதான் உன்னைச் சந்தித்தேன். உன்னிடம் என் மனம் லயித்து விட்டது. நமக்குள் ஏதோ பூர்வஜன்ம பந்தம் இருக்க வேண்டும். நாம் ஏதோ பெரிய காரியங்களைச் சாதிக்க இந்த உலகத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறோம். இது எனக்கு நன்றாகப் புரிகிறது. வா என்னிடம்" என்று கூறி அவனை



மிக நெருங்கி அவன் உடலின்மீது தன் அங்க லாவண்யங்கள் படும்படி நின்றாள்.

உபேந்திரன் இரும்பு மனம் சுக்கு நூறாக உடைய லாயிற்று. அவன் உணர்ச்சிகள் சுழன்றன. அவள் நெருக்கம் அவனைத் திக்குமுக்காடச் செய்தது. சற்று முன்பு அவள் தன் குழலைப் பிடித்துத் தன்னைக் குனிய வைத்து நாக இலச்சினையைப் பற்றி பிரஸ்தாபித்த போது இருந்த ஒரு நறுமணம் தனது நாசிகளில் மீண்டும் பிரவேசிப்பதை அவன் உணர்ந்தான். ஏதோ தாழம்பூவின் வாசனை தன் உணர்ச்சி களை அள்ளிச் செல்வதை அவன் உணர்ந்தான். எதிரே நெருங்கி வந்துவிட்ட நாகதேவியின் கவர்ச்சிப் பிரதேசங்கள் மெல்ல தன்மீது அழுந்துவதையும் உராய்வதையும் உணர்ந்த உபேந்திரன் ஏதோ ஒருவித மயக்கத்துக்கும் உள்ளானான்.

www.cleanindians.com

அவள் அவன் மார்புமீது தனது தலையை மெதுவாக வைத்துப் படுத்தாள். அவள் இரு கரங்கள் வழவழவென அவன் உடலில் பாய்ந்து வளைந்து பின்புறம் சென்று அவனை இறுக்கின. அவன் கண்களுக்கெதிரே கிடந்த அவள் தலையில் ஒரே ஒரு தாழை மடல் புத்தம் புதிதாகச் சொருகப் பட்டிருந்தது. அதிலிருந்து கிளம்பிய சுகந்தம் அவனை வேறு உலகத்துக்கு இழுத்துச் சென்றது. உபேந்திரன் தனது நிலையை அடியோடு இழந்தான். அவன் கைகள் அவனையும் மீறி அந்தக் கட்டழகியை வளைத்தன. இறுக்கின. அடுத்த வினாடி நாகதேவி தரையிலிருந்து பலவந்தமாகத் தூக்கப்பட்டாள். தூக்கிய நிலையில் உபேந்திரன் தனது வலிய உதடுகளை அவள் கழுத்தில் புதைத்தான். அப்படிப் புதைத்த உதடுகளை எடுக்காமல் வெறிபிடித்தவன்போல் கட்டிலை நோக்கி நடந்தான். கட்டிலில் அவளைக் கிடத்திக் கட்டிலின் முனையில் தானும் உட்கார்ந்து அவள் அழகிய உடலை நோக்கினான்.

அவள் பருவ எழுச்சிகள் அவன் கண்களைக் குத்தி விடுவனபோல் பார்த்தன. கிடத்தப்பட்ட நிலையில் அவள் மூச்சு பெருமூச்சாக வந்ததால் இரண்டு மார்புகளும் ஏதோ சர்ப்பங்கள் சீறி எழுவதைப் போலும் மகுடிக்கு இணங்க ஆடுவது போலவும் தெரிந்தன. ஆலிலை வயிறு அடங்கிக் கிடந்தாலும், இடை சிறுத்துக் கிடந்தாலும், இடைக்குக் கீழேயுள்ள உருண்ட கால் பகுதிகள் செழித்துக் கிடந்தன. செழித்த இடங்களில் மறைந்து கிடந்த மர்மங்கள் பற்பல ஊகங்களுக்கு இடங்கொடுத்தன!

உபேந்திரன் கண்களில் என்றுமில்லாத வெறி தெரிந்தது. மல்லாந்து கிடந்த அந்த மங்கையின் அங்கலாவண்யங்களில் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு சிறப்பு இருந்ததை அவன் கவனித்தான். உண்மையிலேயே பாதாளத்திலிருந்து ஒரு நாககன்னிகை தன்னை அடைய வந்திருக்கிறாளென்ற எண்ணம் அவனுக்கு உண்டாகவே அவன் மீண்டும் குனிந்தான் அவள் கழுத்தை நோக்கி. மீண்டும் ஏதோ சுகந்தம் அவன் உணர்ச்சிகளை ஆட்கொண்டது. பழைய நறுமணமல்ல அது. புதுவகை வாசனை. அது அவன் உயிரையும் உணர்ச்சிகளையும் ஒருங்கே உறிஞ்சிவிடும் போலிருந்தது. அதற்கு அடிமைப்பட்டு ஏதும் பேசாமல் அவள் கழுத்தில் தனது முகத்தை அடைக்கலம் செய்வித்துக் கிடந்தான் உபேந்திரன். அப்பொழுது அவன் காதுக்கருகில் அவள் சொற்கள் ஒலித்தன, மிக மதுரமாக. "உபேந்திரா! நாமிருவரும் நம்மை மீறிய சக்தியால் இணைக்கப்பட்டிருக்கிறோம். உன் வலதுகையை ஏன் அப்படி என் உடலுக்குக் குறுக்கே போட்டிருக்கிறாய்? என் இடையைத் தொட்டுப் பார்" என்றாள்.

ஏதோ மந்திரத்தால் இயக்கப்பட்டவன்போல் தனது வலது கையை அவள் இடையருகில் கொண்டு போனான்



உபேந்திரன். அவன் கைகளுக்கு ஏதோ ஓர் ஆபரணம் தட்டுப்படவே அதை அவள் பட்டுச் சீலையிலிருந்து எடுத்தான்.

"அதை இப்படிக் கொடு" என்று முணுமுணுத்தாள் அவள்.

அவள் கையில் அந்த ஆபரணத்தைச் சிறிது அழுத்தியே திணித்தான் அவன். அடுத்து அவன் வலது கையை அவள் இடது கை பலமாகப் பிடித்தது. அந்தக் கையில் சுருக்கென்று ஏதோ தைத்தது தெரிந்தது உபேந்திரனுக்கு. தனது கையை மீட்டுக்கொள்ள அவன் முயலும் முன்பாகவே அவன் கையில் அந்த ஆபரணம் புதைந்து மீண்டது. எதிலிருந்து தான் தப்ப எண்ணினானோ, அது நடந்துவிட்டதைத் தெரிந்துகொண்ட உபேந்திரன் நாகதேவியின் எழில் உடலிலிருந்து எழுந்தான். கட்டிலை விட்டுத் தரையிலும் இறங்கி நின்றான். "அடி மாயக்காரி! இதற்காகவா இத்தனை ஜாலம் காட்டினாய்? இதற்காகவா சரசமாட முற்பட்டாய்? வெட்கமில்லை உனக்கு?" என்று சீறினான் கட்டிலில் கிடந்த கட்டழகியை நோக்கி. இவள் நாகதேவியல்ல; தன்னை நரகத்தில் தள்ள வந்த மாயாதேவி என்றும் உள்ளூர எண்ணினான்.

www.cleanindiaweb.com

பதிலுக்கு அவள் கலகலவென நகைத்தாள் பஞ்சணையில் கிடந்தபடி. உபேந்திரன் மனம் எரிமலையாகிக் கொண்டிருந்தது. தனது வலது கையில் துளிர்த்துக்கொண்டிருந்த மூன்று இரத்தத் துளிகளை உற்று நோக்கினான். அப்பொழுது நாகதேவியின் கையிலிருந்த ஆபரணத்தையும் பார்த்தான். தனக்கு ஆயுள் முழுவதும் அடிமைப் பதவி கிடைத்துவிட்டதை உணர்ந்ததால், "உன்னை இப்பொழுதே நான் கொன்றுவிடுவதை யார் தடுக்க முடியும்?" என்று இரைந்தான். கொல்லத் தீர்மானித்துக் கட்டிலை இரண்டு

எட்டில் அடைந்து அவள் அழகிய கழுத்தில் தனது இரு கைகளையும் வைத்து இறுக்க முற்பட்டான். அப்பொழுதும் அவள் நகைத்தாள். மும்முறை ஒரேவிதமாக நகைத்தாள். அவள் நகைப்பில் ஏதோ மந்திரம் இருந்திருக்க வேண்டும். அவன் கண்கள் திடீரென சுழன்றன. கட்டிலின் மீதிருந்த அவள் உடல்மீது அவன் உடல் தடாலென விழுந்தது. அவன் சுரணை இழந்தான்.

## 4. மருதி

உபேந்திரனுக்குச் சுரணை வந்தபோது அவன் தனக்கு மிகவும் பழக்கப்பட்ட பஞ்சணையில் படுத்துக் கிடந்ததாகத் தோன்றியதால், அதில் கண்ணை விழிக்காமலே ஒருமுறை புரண்டு படுத்தான். அப்பொழுதும் அவன் காதில் நாகதேவி யின் சிரிப்பொலி கேட்டுக் கொண்டிருந்தது. அந்த ஒலியில் எந்த மதுரமும் இல்லை; ஏதோ வெறிச் சிரிப்பு போல் இருந்தது. அவள் கண்கள் அவனை அப்பொழுதும் உற்றுப் பார்ப்பதாகத் தோன்றியதால் மிகுந்த சீற்றத்துடன் அவள் கழுத்தை மீண்டும் நெரித்துவிடும் நோக்கத்துடன் தனது கைகள் இரண்டையும் பொருத்திக்கொண்டான். ஆனால் கையில் ஏதும் கிடைக்காது போகவே தான் இருக்கும் நிலையை அறிய கை கால்களை உதறிக்கொண்டான் கண்களைத் திறக்காமலே. கைகால்களில் கட்டு ஏதுமில்லை சுதந்தரமாகவே கிடப்பதை உணர்ந்ததால், நாகதேவி தன்னை ஏதோ ஓர் அறையில் அடைத்து வைத்திருக்கிறாளென்றும் விடிந்ததும் தன்னை அவசியம் பார்த்து ராஜத்துரோகப் பணிக்குத் தூண்டுவாளென்றும் எதிர்பார்த்தான்.

ஆனால் அவன் எதிர்பார்த்தது எதுவும் நடக்கவில்லை. "ஐயா! எழுந்திருக்கிறீர்களா? சூரியன் உதித்து நான்கு



நாழிகை ஆகிவிட்டது" என்ற குரலைக் கேட்டுப் பெரும் பிரமிப்படைந்தவனாய் பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக்கொண்டு சுற்றுமுற்றும் நோக்கி, தான் தனது மாளிகை சயன அறையில் இருந்ததை உணர்ந்ததும் விழித்தான். நாற்புறமும் பார்த்து, எதிரே கையைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தவன் தனது பணி மகன் என்பதை அறிந்ததும், தனக்கு ஏற்பட்டது மகிழ்ச்சியா துன்பமா என்பதைக்கூட உபேந்திரனால் நிர்ணயிக்க முடியவில்லை.

அவன் விழிப்பதைப் பார்த்த பணிமகன், "ஐயா! என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? தாங்கள் இப்பொழுது இருப்பது தங்கள் மாளிகைதான். தாங்கள் நேற்று முழுவதும் காணா திருந்ததால் நாகை நகர அதிகாரிகூட அச்சமடைந்தார். தங்களைத் தேட பல இடங்களுக்கும் ஆட்களை அனுப்பி னார். தாங்கள் நேற்றிரவு வந்த விஷயத்தை அறிந்த பிறகு தான் சிறிது சாந்தியடைந்தார்" என்று சொன்னான்.

உபேந்திரன் சிறிது தன்னை நிதானப்படுத்திக்கொண்டு பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்தான். பிறகு தனது வலது கையை நோக்கினான். மீண்டும் அவனது பணியாள் உதவிக்கு வந்து, "அந்த முட்காயங்களைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். நள்ளிரவிலேயே மருத்துவரை அழைத்து அதற்கு மருந்து போட்டுவிட்டேன். தாங்கள் தேடிக்கொண்டு வந்த அந்த ஆபரணத்தையும் பத்திரமாக எடுத்து வைத் திருக்கிறேன்" என்று விளக்கினான்.

பணியாள் சொன்ன ஒவ்வொரு சொல்லில் இருந்தும் நடந்ததை ஓரளவு ஊகித்துக் கொண்டான் உபேந்திரன். இருப்பினும் மேற்கொண்டு விவரங்களை அறிய வினவி னான், "நான் தனியாகவா மாளிகைக்கு வந்தேன்?" என்று.

"இல்லை தனியாக வரவில்லை; நாகையின் படைத் தலைவனை, வரும் மரக்கலங்களைச் சோதனை செய்யும்

www.cleanindians.com

சுங்க மேலதிகாரியை யார் தனித்து விடுவார்கள். தாங்கள் நாகலிங்கக் காட்டில் விழுந்து கிடந்ததைப் பார்த்து நமது வீரர்கள் இருவர் தூக்கி வந்தார்கள். அதுவும் நீங்கள் அந்த ஆபரணத்தின் மீது எக்கச்சக்கமாக விழுந்து விட்டதால் அதன் மூன்று தங்க முட்கள் கையில் தைத்து உதிரத்தைக் கிளப்பியிருப்பதைப் பார்த்ததும், அதையும் எடுத்துக் கொண்டு உங்களையும் தூக்கி வந்தார்கள். எஜமான் தாங்கள் அதிகமாக மது அருந்தும் பழக்கமில்லையே, நேற்று எதற்காக அத்தனை மது அருந்தியிருந்தீர்கள் சுரணை கெட்டு விடும்படியாக?" என்று வினவியதோடு நடந்த கதையையும் விவரித்தான் பணியாள் எல்லன்.

உபேந்திரன் தீவிர சிந்தனையில் இறங்கினான். நாக தேவி மிக சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கிறா ளென்பதைப் புரிந்துகொண்டான். சுரணை கெட்ட தன்னை இரவில் அவள் ஆட்கள்தான் கொண்டு வந்து நாகலிங்கக் காட்டில் கிடத்தியிருக்க வேண்டுமென்பதையும், தான் சுரணையிழந்த சமயத்தில் சுரணை திரும்பாதிருக்க வலுக் கட்டாயமாகத் தனக்கு மதுவைப் புகட்டியிருக்கிறா ளென்பதையும் லவலேசமும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந்துகொண்டான். அப்படி தன்னைக் காட்டில் தள்ளிய போதும் தனது கை அவள் ஆபரணத்தில் படும்படியாகக் குப்புறக் கிடத்தியிருக்கிறார்களென்பதையும் உணர்ந்ததால் அவன் உள்ளத்தில் அந்தக் கொடியவளைக் கொலை செய்துவிட வேண்டுமென்ற உக்கிராகாரமான கோபமும் கொழுந்துவிட்டெரிந்தது.

இத்தனை உள்ளக் குமுறலையும் உபேந்திரன் வெளிக்குக் காட்டினான் இல்லை. சிந்தனை வசப்பட்டுத் தலையைத் தொங்கப் போட்ட வண்ணம் நீண்ட நேரம் மௌனம் சாதித்தான். பிறகு அழைத்தான் பணியாளை மெள்ள "எல்லா" என்று.



"எசமான்!" எல்ல்ன் பணிவுடன் கைகட்டி நின்றான் எதிரில்.

"நேற்றிரவு நமது வீரர்கள் என்னைத் தூக்கி வந்தபோது யாராவது உடன் வந்தார்களா?" என்று விசாரித்தான்.

"இங்கு வரவில்லை. நாகலிங்கக் காட்டு முகப்புவரை வந்ததாகக் கேள்வி" என்றான் எல்லன்.

"யார்?"

"ஒரு பெண்."

"என்னை வீரர்கள் அவர்களாகக் கண்டுபிடித்தார்களா அல்லது அந்தப் பெண் சொல்லிக் கண்டுபிடித்தார்களா?" என்று கேட்டான் உபேந்திரன்.

www.cleanindians.com

"அந்தப் பெண்தான் ஓடிவந்து துறைமுகக் காவலரை அழைத்தாளாம். நீங்கள் மயக்கமாகக் கிடப்பதாகவும் சொன்னாளாம். உங்கள் கையில் நீலம் பாய்ந்திருப்பதால் உங்களைப் பாம்பு கடித்திருக்க வேண்டும் என்று ஊகித்துச் சொன்னாளாம். நல்லவேளை அப்படியொன்றுமில்லை. வீரர்கள் பந்தம் கொண்டு பார்த்தபோது கை சாதாரண மாகவே இருந்தது. இருமுறை உங்களை அசக்கிப் பார்த்தும் நீங்கள் எழுந்திருக்காததால் நீங்கள் மதுவருந்தியதால் மயக்க மடைந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். நீங்கள் அப்படிக் கிடந்தது அவர்களுக்கே வியப்பாயிருந்தது" என்றான் எல்லன்.

மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான் உபேந்திரன். சில விநாடிகளுக்குப் பிறகு கேட்டான் பணியாளை, "எல்லா! அந்தப் பெண்ணை என்னைத் தூக்கி வந்த வீரர்களுக்குத் தெரியுமா?" என்று.

எல்லனிடமிருந்து முற்றும் எதிர்பாராத பதில் வந்தது. "நன்றாகத் தெரியும் எஜமான். போயும் போயும் யாரென்று

நினைக்கிறீர்கள்? நமது நாகர்சேரி மருதி இருக்கிறாளல்லவா அவள்தான்" என்றான் எல்லன்.

மருதி என்று ஒரு பெண்ணைப் பற்றி எல்லன் அடிக்கடி உபேந்திரனிடம் சொல்லியிருக்கிறான். அவள் சுத்த துடுக்குக்காரியென்றும், ஊர் வம்புகளை எல்லாம் விலைக்கு வாங்குகிறவளென்றும் கடிந்து பேசியிருக்கிறான். இருப்பினும் காலங்கெட்ட நேரத்தில் அந்தப் பெண் எதற்காக நாகலிங்கக் காட்டுக்கு வரவேண்டுமென்று தனக்குள் வினவிக்கொண்ட உபேந்திரன், "எல்லா! அந்தப் பெண் இருக்குமிடம் உனக்குத் தெரியுமா?" என்று வினவினான்.

"யாருக்குத்தான் தெரியாது? அவள் குடிசை தனிக் குடிசை. அவளுக்குத் துணையும் யாரும் கிடையாது. எங்கிருந்து வந்தாளென்பதும் யாருக்கும் தெரியாது. ஐந்து ஆண்டுகளாகத்தான் இங்கு வந்து குடியேறி இருக்கிறாள். நாகர் சேரிக்கே தலைவிபோல் எல்லோரையும் மிரட்டி நடத்துகிறாள். நாகலிங்கத் தோப்பு அவளுக்குத்தான் சொந்தம் போலிருக்கிறது. கோயில் குருக்களைத் தவிர வேறு யாரையும் அந்த பூக்களைப் பறிக்க விடுவதில்லை. அவளை யாராலும் அடக்க முடியவும் இல்லை" என்று விளக்கினான் எல்லன்.

"இத்தனை பிரபலமானவளைப் பற்றி ஏன் என்னிடம் இதுவரை நீ சொல்லவில்லை?" என்று வினவினான் உபேந்திரன் சற்று உஷ்ணம் துளிர்த்த குரலில்.

"எசமான்!"

"எல்லா!"

"தங்களிடம் எட்டு ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறேன்."

"ஆம் அதற்கென்ன?"



"இத்தனை நாள் நீங்கள் எந்தப் பெண்ணையும் கண்ணெடுத்துப் பார்த்ததில்லை. நாகை அரச வீதியில் புரவியில் செல்லும்போதுகூட தலைநிமிர்ந்து உப்பரிகைகளைப் பார்ப்பதில்லை."

"உப்பரிகைகளை எதற்காகப் பார்க்க வேண்டும்?"

"உங்களைப் பார்க்கும் அழகு முகங்களைப் பார்க்க" என்ற எல்லன் புன்முறுவல் செய்தான். "எசமான்! உங்கள் கண்வீச்சுக்கு எத்தனை பெண்கள் ஏங்குகிறார்கள் தெரியுமா? நீங்களோ வெறும் மரக்கட்டைபோல் இருக்கிறீர்கள். அப்படியிருக்க எந்தப் பெண்ணைப் பற்றி நான் உங்களிடம் பிரஸ்தாபிக்க முடியும்?" என்று வினவிய எல்லன், "இப்பொழுது உத்தரவு கொடுங்கள் எசமான், அந்த மருதியை இங்கு இழுத்து வருகிறேன்" என்று அறிவித்தான்.

www.cleanindians.com

உபேந்திரன் வேண்டாம் என்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான். "நாமே அந்த மருதியின் குடிசைக்குப் போவோம்" என்று உபேந்திரன் கூறிவிட்டு "எல்லா! நீராட்டத்துக்கு ஏற்பாடு செய்" என்று உத்தரவிட்டான்.

அன்று காலை அவன் நீராடிய போதும் சரி, நீராடி புத்தாடை புனைந்த போதும் சரி, முந்திய நாள் நிகழ்ச்சிகளையே நினைத்துக்கொண்டிருந்தான். நீராடி உடை புனைந்ததும் எல்லனை அழைத்துக்கொண்டு மருதியின் குடிசைக்குப் போகப் புறப்பட்டான். அந்தச் சமயத்தில் அவன் மாளிகைக்கு வெளியே இருவர் சச்சரவு செய்யும் ஓசை பலமாகக் கேட்டது. "இப்பொழுது யாரும் எசமானைப் பார்க்க முடியாது, போய் நடுப்பகலுக்கு மேல் வா" என்ற காவலனின் அதிகாரக் குரல் கேட்டது. அடுத்து 'இரு இரு ஓடாதே' என்ற காவலன் எச்சரிக்கை குரலும் யாரோ ஓடிவரும் சத்தமும் கேட்டது. சரேலென சத்தத்துடன் அந்த அறைக் கதவு திறக்கப்பட்டு ஒரு பெண் வேகமாக உள்ளே

ஓடிவந்து கதவை மூடித் தாழிட்டாள். பிறகு அங்கு எல்லன் இருப்பதைப் பார்த்து, "நீயும் வெளியே போ" என்று உத்தர விட்டாள்.

எல்லன் நகைத்தான். "போகிறேன், எஜமானே உன்னைப் பார்க்க வருவதாயிருந்தார். நல்லவேளை! நீயே வந்துவிட்டாய்" என்ற எல்லன், "எஜமான்! இவள்தான் மருதி! அடங்காப்பிடாரி" என்று கூறிவிட்டு வெளியேறி னான்.

இம்முறை அவள் கதவைத் தாழிடவில்லை. உபேந்திரன் தலை சுற்றும் போலாகிவிட்டது. தன்னெதிரே முதுகைக் கதவில் சாய்த்து நின்ற அந்தப் பெண்ணைப் பலமுறை உற்று நோக்கினான் உபேந்திரன். எதிரே நாகதேவி நின்று கொண்டிருந்தாள் சாதாரண பணிப்பெண்ணின் உடையில்.

"நாகதேவி! நீயாக வந்து என் வலையில் சிக்கிக் கொண்டாய். உன் கொட்டத்தை இன்று அடக்கிவிடுகிறேன்" என்று கூறி இரண்டு எட்டில் கதவை அடைந்து அவளை தனது இரு கைகளாலும் தூக்கிக் கட்டிலுக்குக் கொண்டு வந்து பஞ்சணையில் எறிந்தான்.

"எஜமான் என்னை விட்டுவிடுங்கள்" என்று கூவினாள் அந்தப் பெண்.

"உன் வேஷம் என்னை ஏமாற்றாதடி நச்சுப் பாம்பே" என்று சீறிய உபேந்திரன் அவளைக் கட்டிலில் அழுத்திப் பிடித்தான். அப்பொழுது கதவைத் திறக்க உள்ளே நுழைந்த எல்லன் சிலையென நின்றான் ஒரு விநாடி. மறுவிநாடி அலறினான், "எஜமான்! இது உங்களுக்கு அடுக்காது, மருதியை விட்டுவிடுங்கள்" என்று.

கட்டிலிலிருந்து திரும்பி எல்லனைப் பார்த்த உபேந்திரன், "மருதியாவது, மண்ணாங்கட்டியாவது. இவள் நாகதேவி" என்று கூவினான் கடும் சினத்துடன்.

www.chennaiindians.com



எஜமான் கூறியதை எல்லன் காதில் வாங்கவில்லை. "எஜமான்! அவள் மருதிதான். எந்த தேவியுமல்ல. இந்த ஊரில் எல்லோரும் அவளை அறிவார்கள்" என்று கெஞ்சினான் எல்லன்.

உபேந்திரன் கட்டிலில் கிடந்த பெண்ணையும் பார்த்து எல்லனையும் பார்த்தான். "நீ மருதியா?" என்றும் வினவினான் குழப்பத்துடன்.

அந்தப் பெண் கட்டிலிலிருந்து எழுந்து இறங்கி உபேந் திரனைச் சுட்டுவிடுவது போல் பார்த்தாள். "அட பதரே, உனக்கு உதவியதற்கு இதுதான் பரிசா? நீ பெண் பித்துப் பிடித்தவனென்று தெரிந்திருந்தால் நேற்று நாகலிங்கக் காட்டிலேயே சாகவிட்டிருப்பேன். இங்கு நான் வந்தேயிருக்க மாட்டேன்" என்று சீறினாள் மருதி!

உபேந்திரன் ஏதும் புரியாமல் சிலையென நின்றான். அப்பொழுதுதான் சுத்தானந்தரும் வந்தார். அந்த அறைக்குள் வந்தவர், "படைத்தலைவரே! மருதி இங்கு வந்தாளா?" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

## 5. சுத்தானந்தரின் யோக அறை

எந்த மனிதனாயிருந்தாலும் சரி, எப்பேர்ப்பட்ட மேதாவியாயிருந்தாலும் சரி, அவனைக் குழப்ப ஏதாவது ஒரு நெருக்கடியான நிலை போதும். பல நெருக்கடியான நிலைகள், ஆள் மாறாட்டக் குழப்பங்கள் ஏற்படும்போது ஒருவனுக்குப் பைத்தியம் பிடிக்கவில்லையென்றால் அவனை நாம் அவதார புருஷனாகக் கருதலாம். உபேந்திரன் அன்று காலை எத்தனையோ முறை வெறிபிடித்து நடந்து கொண்டாலும், கடைசியில் ஓரளவு நிதானத்துக்கு வந்து

விட்டதால் அவனையும் அவதார புருஷன் என்று சொல்வது தவறில்லை. இப்படி அவனை மதிப்பீடு செய்தார் புத்தத் துறவியும் சூடாமணி விஹார நிர்மாணத்தை நிர்வகித்து வந்தவருமான சுத்தானந்தர். உண்மையில் அவர் பெயர் சுத்ததத்தர். வடநாட்டவர். இமயமலையிலிருந்து அவர் வந்ததாக ஒரு வதந்தி நாகப்பட்டின வாசிகளிடம் பரவி வந்தது. ஆனால் வந்த நாள் முதல் தமிழரில் ஒரு தமிழராக அவர் பழகியதாலும், தமிழைச் சுத்தமாக உச்சரித்துப் பேசியதாலும் நாகப்பட்டினத்துக்குத் தமிழர்கள் அவரைத் தங்களில் ஒருவராகவே நினைத்தார்கள்! தீவிர சைவ மன்னனான இராஜராஜன் காலத்திலும் சரி, அவன் மகன் இராஜேந்திர சோழன் முடிசூடிய பிறகும் சரி, பௌத்த சமயத்தவரான சுத்ததத்தரை மக்கள் பெரிதும் மதித்தனர். அந்த மதிப்பின் விளைவே சுத்ததத்தரை சுத்தானந்த ராக்கியது.

மிக இனிய குணமுள்ளவரென்று பெயர் பெற்ற சுத்தானந்தர் அன்று மருதியைத் தேடிக்கொண்டு திரும்பி வேகமாக உபேந்திரனின் சயன அறைக்குள் நுழைந்தபோது அங்கிருந்த நிலைகண்டு ஒரு விநாடி பிரமித்தார். ஒரு விநாடி முகம் சுளித்தார்; ஒரு விநாடி தமது உள்ளூர ஓடிய உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டு, இதழ்களில் இன்முறுவல் கொண்டார். அந்த இன்முறுவலுடன் தமது காஷாயப் போர்வையைச் சிறிது தோள்மீது இழுத்து விட்டுக்கொண்டு, "சரிதான் மருதி! கடைசியில் நீ இங்குதான் வந்தாயா? நான் கேள்விப்பட்டது சரியாகப் போய்விட்டது" என்று கூறி மருதியை ஆராய்ந்து நோக்கினார்.

அவர் கண்கள் மட்டுமல்ல மருதியை ஆராய்ந்தது. உபேந்திரன் கண்களும் ஆராய்ந்தன. தன் கண்ணெதிரே நாகதேவியின் இரட்டைப் பிறவிபோல் ஒரு யௌவன அழகி



நிற்பதைக் கண்டான். 'அதே சந்திரமுகம், அதே அழகிய நுதல், எதையும் கவரும் சக்தியுள்ள அதே பொன்னிறமேனி, தந்தம் போன்ற வழவழத்த கன்னங்கள், வில்லைப் பழிக்கும் புருவங்கள், சிப்பி இரப்பைகளை நிலைக்க வைத்துவிட்ட பிரமையில் அச்சம் சொட்டும் கருவிழிகள், எல்லாம் நாக தேவியின் உருவம்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் உபேந்திரன். இத்தனையிலும் சில வித்தியாசங்கள் இருப்பதையும் உணர்ந்துகொண்டான் நாகைப் படைத் தலைவன். அவள் உதடுகளில் கடுமை சிறிதுமில்லை! அவள் சங்கடத்தால் வளைந்தபோது அது நாகத்தின் வளைவா யில்லை; ஏதோ பூங்கொடி பேய்க் காற்றில் அலைவதுபோல் தென்பட்டது. அந்தப் பேய்க் காற்றுதான் சற்று முன்பு அவள் நடந்துகொண்ட முறை என்பதை உபேந்திரனும் உணர்ந்து கொண்டான். தன்னால் தூக்கிப் பஞ்சணையில் எறியப் பட்டதால் கலைந்த உடையை அவள் வெகு சீக்கிரம் சரிப்படுத்திக்கொண்டபோது அவள் உடலசைவுகளில் ஒரு கண்ணியம் இருந்தது அவனுக்குப் புலப்பட்டது. அப்பொழுதுகூட அவள் ஆத்திரம் தீராததால் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றிருந்ததால், அவள் முறைத்த மார்பு எழுந்து எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தபோது, மொட்டுகள் சர்ப்ப ரீதியில் எழுந்து தாழவில்லையென்பதையும் அழகும் கண்ணியமுமே அவற்றின் அசைவில் தெரிந்ததையும் உபேந்திரன் கண்டான். அவள் நின்ற நிலையில் இரு கால் களையும் நன்றாக இணைத்து நின்றிருந்தாலும், சரேலென தனது முந்தானையை முன்புறமாக இறக்கிவிட்டதாலும், யாரும் சாதாரணமாக நெருங்க முடியாத ஓர் அழகியைத் தான் தவறாக நினைத்துவிட்டதை எண்ணி வருந்தினான் நாகையின் நாகர் தலைவனான உபேந்திரன்.

அவன் தன்னைத் துருவித் துருவிப் பார்ப்பதை அவள் ரசிக்கவில்லையென்பது சீறிய அவள் கண்களிலிருந்து

www.cleanindians.com

நன்றாகத் தெரிந்தது. "சந்தேகித்தேன், அப்பொழுதே" என்ற மருதியின் குரலிலும் அவள் சீற்றம் நன்றாகச் சுடர்விட்டது.

உபேந்திரன் கண்களை நிலத்தில் நிலைக்கவிட்டான். அந்த நிலையில் கேட்டான், "என்ன சந்தேகித்தாய்? எப்பொழுது?" என்று.

"நீ காமுகன் என்ற சந்தேகித்தேன். எப்பொழுது என்பது உனக்கே தெரியும்" என்றாள் மருதி.

அதுவரை வாயடைத்துத் திகில் பிடித்து நின்றிருந்த எல்லன், "மருதி! எஜமானைக் கண்டபடி பேசாதே! அவர் நாகர் குலத்தின் தலைவர் என்பதை மறவாதே" என்று இடைபுகுந்து பேசினான்.

மருதி ஒரு ஹூம் கொட்டினாள். இகழ்ச்சியுடன் தனது அழகிய அதரங்களை மடித்தாள். "நாகர் குலத்தின் தலைவர்! உண்மைதான். நச்சுப்பாம்பு" என்றும் சொன்னாள். "ஏமாந்த பெண்களைக் கடித்துக் கொல்லும்" என்றும் வாசகத்தைக் கூட்டினாள்.

www.cleanindians.com

அதுவரை அங்கிருந்த அலங்கோல நிலையைக் கண்டு மௌனமாக நின்றுகொண்டிருந்த சுத்தானந்தர், "மருதி! நீ நினைக்கிறபடி உபேந்திரன் அயோக்கியனல்ல. கண்ணியத்தின் சிகரம். இன்று இவன் நடத்தையில் புதுமையிருக்கிறது. நீ போ மடத்துக்கு. நான் வருகிறேன் சிறிது நேரத்தில்" என்று உத்தரவிட, மருதி நடந்தாள் வெளியே. கதவை அடைந்தபின் ஒருமுறை திரும்பி நோக்கினாள் உபேந்திரனை. உபேந்திரன் தோரணை அவள் கல்மனத்தையும் கரைத்திருக்க வேண்டும். அவள் முகத்தில் சினம் மறைந்தது. அதன் இடத்தைத் துன்பம் ஆட்கொண்டது. தலையைச் சட்டென்று தொங்கப் போட்டுக்கொண்டு கதவுக்கு அப்புறம் சென்றுவிட்டாள்.



அவள் சென்றதும் எல்லனை நோக்கிய சுத்தானந்தர் "எல்லா! நீயும் போகலாம். நானும் படைத்தலைவரும் சிறிது நேரம் தனிமையில் பேசவேண்டும்" என்றார்.

எல்லன் எஜமானை நோக்கினான். "சற்று நேரம் வெளியில் இரு. கதவைச் சாத்திக்கொண்டு போ. குருநாதருடன் பேசிவிட்டு உன்னை அழைக்கிறேன்" என்று உபேந்திரன் உத்தரவிடவே எல்லனும் வெளியேறினான் கதவை மூடிக்கொண்டு.

தனிமையில் விடப்பட்ட இருவரும் ஒருவரையொருவர் நோக்கினர் நீண்டநேரம் மௌனமாக. கடைசியில் சுத்தானந்தரே மௌனத்தை உடைத்து "உபேந்திரா! நீ நிதானமிழந்ததை இன்றுதான் பார்க்கிறேன்" என்று துவங்கினார் பேச்சை.

அதற்குப் பதில் பேசாமலே தலையசைத்த உபேந்திரன் அறைக் கோடியிலிருந்து ஒரு மஞ்சத்தை எடுத்து வந்து போட்டான். "உட்காருங்கள் குருநாதரே" என்றான்.

தன்னிடம் சென்ற ஐந்து ஆண்டுகளாகப் புத்த தத்துவங்களைப் படித்த உபேந்திரனை நோக்கினார் சுத்தானந்தர் உற்று. பிறகு அவன் போட்ட ஆசனத்தில் அமர்ந்தார். "உபேந்திரா! உன் மனத்தை ஏதோ துன்பம் வாட்டுகிறது. அது என்ன?" என்று வினவினார்.

உபேந்திரன் வாய் திறக்கவில்லை. என்ன காரணத்தாலோ தான் தோளில் போட்டிருந்த துணியை மேலுடலைச் சுற்றிப் போர்த்திக் கொண்டான். சுத்தானந்தரே மேலும் பேசினார். "உபேந்திரா! குழந்தாய்! நீ மேல் துணியைப் போர்த்த அவசியமில்லை. உன் கையிலிருக்கும் மூன்று தலை நாக சின்னத்தை முன்னதாகவே பார்த்துவிட்டேன். என் கண்களிலிருந்து எதுவும் தப்பாதென உனக்குத் தெரியு

மல்லவா?" அதைச் சொல்லி சிறிது தாமதித்தார் சுத்தானந்தர். "சரி; இந்த அடையாளம் செய்யும் நாகா பரணம் எங்கே?" என்றும் வினவினார்.

அவர் கேள்வி ஒவ்வொன்றும் உபேந்திரன் வியப்பை மட்டுமின்றிச் சந்தேகத்தையும் கிளறவே, "சுவாமி! ஆபரணத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?" என்று வினவினான்.

"உங்கள் குலத்தார் மூன்று உலோக முட்கள் உள்ள ஆபரணத்தைக் கொண்டுதான் பச்சை குத்திக்கொள் வார்கள். உன் கையில் இருக்கும் மூன்று புள்ளிகளும் இன்னும் பத்து தினங்களில் பச்சையாக மாறும். இது நாகர் குலப் பழக்கம். இதை அறிய சாமர்த்தியம் எதுவும் தேவை யில்லை" என்று சொன்ன சுத்தானந்தர் "சரி, நீ எதற்காக நாகலிங்கக் காட்டுக்குப் போனாய்?" என்றும் கேட்டார்.

"புதுக் கப்பல்களின் வரவைப் பார்க்க, சுங்க அதிகாரி களை எச்சரிக்கை செய்ய" என்றான் உபேந்திரன்.

"நாகலிங்கக் காட்டிலேயா நேற்று முழுவதும் இருந்தாய்?" சுத்தானந்தர் சாதாரணமாக விசாரித்தார்.

"வேறெங்கு இருந்திருப்பேன்?" என்று பதில் கேள்வி கேட்டான் உபேந்திரன்.

"என்ன கேள்வி உபேந்திரா? சுங்கத் தலைவன் புதிதாக வரும் நாவாய்களுக்குச் சென்று அங்குள்ள பொருள் களைப் பார்க்க வேண்டாமா? பார்த்து மதிப்புச் செய்ய வேண்டாமா? அதற்குத்தானே உன்னை நியமித்திருக்கிறார் மன்னர்?" என்று கேள்விகளைத் தொடுத்தார் சுத்தானந்தர்.

சுத்தானந்தர் ஏதும் அறியாததுபோல் தொடுக்கும் கேள்விகளில் உள்ளர்த்தங்கள் பல இருப்பதை உபேந்திரன் புரிந்துகொண்டான். ஆகவே அவனும் சர்வசகஜமாகப் பேச



ஆரம்பித்தான். "போக வேண்டியதுதான். ஆனால் நேற்று ஏதோ மயக்கமாயிருந்தது. நாகலிங்கக் காட்டில் விழுந்திருந்த தாகவும், மருதியின் உதவியால் வீரர்கள் என்னைத் தூக்கி வந்ததாகவும் எல்லன் சொன்னான். ஆகவே போக முடிய வில்லை. இன்று முடிந்தால் போகலாமென்றிருக்கிறேன்" என்று கூறினான்.

"எப்பொழுது போவதாக உத்தேசம்?" என்று கேட்டார் சுவாமிகள்.

"இரவில் போகலாமென்றிருக்கிறேன்."

"அதுதான் சரி. அப்பொழுதுதான் கள்ளப் பொருள் களைப் பிடிக்கலாம்."

"பகலில்கூட பிடிக்கலாம். ஆனால் இரவு சௌகரியம்."

"அது சாதாரண மனிதர்களுக்கு. உனக்கு இரவு பகல் வித்தியாசமில்லை. உன் சாமர்த்தியம் நாகை அறிந்தது" என்ற சுத்தானந்தரின் பாராட்டுதலில் விஷமம் ஒலித்ததாகத் தோன்றியது உபேந்திரனுக்கு.

இதைச் சொன்ன சுத்தானந்தர், "எதற்கும் போகு முன்பு என்னைச் சந்தித்துவிட்டுப் போ" என்று கூறி விடைகொண்டார்.

அங்கிருந்து மடத்துக்கு வந்த சுத்தானந்தர் நேராக தமது யோக அறைக்குச் சென்றார். அறையைத் திறந்ததும், தூரத்தில் உலர்த்தியிருந்த காஷாய வேஷ்டிகள் அசைந்தன. அவற்றின் மறைவிலிருந்து வந்த உருவத்தைக் கண்டதும் சுத்தானந்தர் சுத்த கோபிஷ்டராக மாறினார். "முட்டாள்! சுத்த முட்டாள்!" காரியத்தைக் கெடுக்க முயலும் அடி முட்டாள்!" என்று சீறினார்.

அவர் முன்னே உடல் நடுங்கத் தலைகுனிந்து நின்றாள் நாகதேவி சில விநாடிகள். பிறகு நிமிர்ந்தாள் மகாராணி

www.cleanindians.com

யைப் போல. அப்படி நின்றவண்ணம் சுத்தானந்தரை நோக்கிக் கேட்டாள். "குருநாதரே! எதற்காக இப்படிக் கோபிக்கிறீர்கள்?" என்று.

"இல்லை வாழ்த்துவார்கள். உன்னை நேற்றிரவுதான் பார்த்திருக்கிறான் உபேந்திரன். உன்னால் அடிக்கப்பட்டு மூர்ச்சையாய் கிடந்திருக்கிறான் நாகலிங்கக் காட்டில். அவனுக்கு நீ இங்கிருப்பது தெரிந்தால் போதும். உன் உயிர் அரைப்பணம் பெறாது" என்று மீண்டும் சீறினார் சுத்தானந்தர்.

"உங்கள் உயிர்?" என்று சிரித்தாள் நாகதேவி.

"என் உயிருக்கு ஆபத்து ஏதும் இல்லை" என்ற சுத்தானந்தர் குரலில் வெறுப்பு மண்டிக்கிடந்தது.

"எனக்கு மாத்திரம் ஆபத்து என்பது உமக்கெப்படித் தெரியும்?" என்று நாகதேவி வினவினாள். வினவி நகைத்தாள் லேசாக.

சுத்தானந்தர் கோபம் தலைக்கு ஏறினாலும் அதை அவர் வெளிப்படையாகக் காட்டவில்லை. இகழ்ச்சியாக நாகதேவியைப் பார்த்தார். "எப்படித் தெரியுமா? சற்று முன்பு உன்னைப் போலிருந்த பெண்ணை நீ என்று நினைத்துக் கட்டிலில் தூக்கிப்போட்டுக் கழுத்தை முறிக்கப் பார்த்தான் உபேந்திரன். நீ இல்லை அவள் என்று சொல்லி அவளைக் காபாற்றுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது எங்களுக்கு" என்று விளக்கினார் நடந்த கதையை.

நாகதேவியின் முகத்தில் சினம் படருவதற்குப் பதிலாக இச்சை படர்ந்தது. "உண்மையாகவா?" என்று வினவினாள் அன்புதொனித்த குரலில்.

"ஆம்" சுத்தானந்தர் வெறுப்புடன் பேசினார்.

"அவளைத் தூக்கிக் கட்டிலில் போட்டாரா?



"ஆம்"

"அவள் நானில்லை என்று தெரிந்ததால்தான் விட்டாரா?"

"ஆம்"

"நல்லது, மிக நல்லது" என்ற நாகதேவி அந்த யோக அறையில் அங்குமிங்கும் நடந்தாள் நாலைந்து முறை. அவள் உள்ளத்தில் ஏதோ திட்டம் உருவாவதை சுத்தானந்தர் உணர்ந்தார்.

மெல்ல நாகதேவி வதனம் விகசித்தது. "குருநாதரே! இதுவும் நல்லதுக்குத்தான்" என்று கூறிவிட்டு "அவள் என்னைப் போலவே இருப்பாளா?" என்றும் வினவினாள்.

"நீ தரித்திருக்கும் அந்த நாகாபரணம் அவளுக்கில்லை! வேறு எந்த வித்தியாசமுமில்லை. அந்த ஆபரணம் இல்லா விட்டால் அவள்தான் நீ. நீதான் அவள்" என்றார் சுத்தானந்தர்.

www.cleanindians.com

மீண்டும் சிந்தனையில் இறங்கிய நாகதேவி "குருநாதரே! எங்கள் குலதேவதைதான் அந்தப் பெண்ணை இங்கு கொண்டுவந்துவிட்டது. இனி உபேந்திரன் என் கையில்" என்றாள். அத்துடன் கேட்டாள். "அவள் பெயர் என்ன?" என்று.

"என்னையே கேள்" என்று கூறிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் மருதி.

நாகதேவி அவளைக் கண்டு பிரமித்தாள். "என் தந்தைக்கும் உன் தாய்க்கும் சம்பந்தமிருக்க வேண்டும்" என்று கூறினாள் பிரமிப்பின் ஊடே.

துடுக்குடன் கேட்டாள் மருதி "என் தந்தைக்கும் உன் தாய்க்கும் ஏன் சம்பந்தமிருக்கக் கூடாது" என்று.

நாகதேவியின் கண்களில் குரூரமான ஒளி ஒன்று பிறந்தது. "இருக்கலாம் சகோதரி. வா இப்படி" என்று கூறிக்

கொண்டு மருதியை அணுகி அவள் முகத்தை இரு கைகளாலும் பிடித்தாள். தலையிலிருந்து தனது தாழை மலரை எடுத்து, "இந்தா, இதை சூட்டிக்கொள். மிக அழகா யிருக்கும் உனக்கு. இதன் வாசனையைப் பார்" என்ற அவள் மூக்கில் அதை வைத்தாள்.

சுகந்தம் மருதியின் அழகிய நாசியில் புகுந்தது. அடுத்த விநாடி அவள் கண்கள் சுழன்றன. உடல் தள்ளாடியது. அவளைத் தாங்கிப் பிடித்து நகைத்தாள் நாகதேவி மும்முறை!

## 6. மருதியின் மாமன்

தாழை மலர் மடலை எடுத்து மருதியின் தாமரை வதனத்தருகில் நீட்டி மூக்கினால் முகர வைத்து அவளை மயங்கவும் செய்த நாகதேவி, மருதியைக் கீழே விழாமல் தாங்கிப் பிடித்து மும்முறை நகைத்தபோது வெறுப்பினால் முகம் சுளித்தார் சுத்தானந்தர் என்ற சுத்ததத்தர். அவர் முகம் சுளித்ததைப் பார்த்ததும் அதை லவலேசமும் லட்சியம் செய்யாத நாகதேவி தனது அழகிய கண்களை அவர்மீது ஓடவிட்டு, "குருநாதரே! அறைக்கதவை தாளிட்டு வாரும்" என்று உத்தரவும் பிறப்பித்தாள்.

"எதற்கு?" என்று கேட்ட சுத்தானந்தர் குரலில் சினம் ஒலித்தது. வெறுப்பா பயமா என்று நிச்சயமாகத் தெரியா விட்டாலும் அதில் குழப்பமிருந்தது மட்டும் தெளிவாகத் தெரியவே செய்தது.

"இது யோக அறையல்லவா?" என்று வினவிய நாகதேவி மருதியைக் குழந்தையைப்போல் அநாயாசமாகத் தனது இரு கரங்களிலும் தூக்கிக்கொண்டாள்.



நாகதேவியின் மெல்லிய கைகளில் இருந்த வலுவைக் கண்டு வியந்தார் சுத்தானந்தர். அவள் கேள்வியைக் காதில் வாங்கியதால் அவர் வியப்பு அதிகமாயிற்று.

"ஆம். யோக அறைதான் அதற்கென்ன?" என்று வெறுப்புடன் கேட்டார்.

"நானும் தங்களுடன் சிறிது யோகம் செய்யலாமென்று நினைக்கிறேன்" என்ற நாகதேவி சுத்தானந்தர் முகத்தில் துளிர்த்த வெறுப்பின் சாயையைக் கண்டு மெல்ல நகைத்தாள்.

"யோகம் இருவர் சேர்ந்து செய்யக்கூடிய விஷயமல்ல" என்று சுட்டிக்காட்டினார் சுத்தானந்தர்.

"மூவர் சேர்ந்தால் செய்யலாமா?" என்று கேட்ட நாகதேவி, "சரி; அப்படியே செய்வோம்" என்ற பதிலும் சொல்லி, "குருநாதரே! இந்தப் பெண்ணைப் படுக்க வைக்க வேண்டும். எங்கிருக்கிறது இடம்?" என்று வினவினாள். "அடுத்த அறை உள்ளே எனது கட்டிலிருக்கிறது" என்று தயக்கத்துடன் சொன்ன குருநாதர் தமது யோக அறைக்குப் பின்னாலிருந்த ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார் நாக தேவியை.

அந்த அறையிலிருந்த கட்டிலில் மருதியைப் படுக்க வைத்த நாகதேவி அறையைச் சுற்றுமுற்றும் நோக்கினாள். பௌத்த சம்பந்தமான சில ஓலைச் சுவடிகளையும் ஒரு வெண்கல விளக்கையும் தவிர வேறு எதுவும் அங்கு இல்லை. ஆனால் அதன் தெற்குப் பகுதியில் இருந்த சாளரம் மட்டும் அவள் சிந்தனையைக் கிளறவே கதவுகளை நன்றாகத் திறந்துவிட்டாள் நாகதேவி. அந்தச் சாளரம் காரணமாகவே வைக்கப்பட்டிருந்ததை உணர்ந்த நாகதேவி திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள். அதன்

மூலம் நாகையின் துறைமுகம் மிக நன்றாகத் தெரிந்தது. துறைமுகத்தில் வரும் அத்தனை நாவாய்களையும் ஏன் மனிதர்களையுங்கூட நன்றாகப் பார்க்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டாள் நாகதேவி. தவிர அந்தச் சாளரம் ஓரளவு நாகலிங்கக் காட்டையும் நோக்கிக் கொண்டிருந்த தால் அதுவும் குருநாதரின் பார்வையில் இருப்பதைப் புரிந்து கொண்ட நாகதேவி சற்று திரும்பி "குருநாதரே! இந்த சாளரம் மிகவும் உபயோகமுள்ளது. நான் எனது கப்பலில் தங்குவதைவிட இங்கு தங்குவது பயன் தரத்தக்கது என்று நினைக்கிறேன்" என்று சொன்னாள்.

குருநாதரின் சாந்த விழிகளில் குரூரத்தின் சாயை விரிந்தது. "முதலில் மூடு அந்தக் கதவை" என்று உத்தர விட்ட அவர் குரலிலும் குரூரம் ஒலித்தது.

ஆனால் அவள் கதவை மூடவில்லை. வெளியே உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றவள் திடீரென்று, 'நன்று, நன்று' என்று பாராட்டுதலையும் தெரிவித்தாள்.

"எது நன்று?" சுத்தானந்தர் கேட்டார் ஏதும் புரியாமல்.

"சூடாமணி விஹாரம் நன்றாகத் தெரிகிறது இங்கிருந்து. அது மட்டுமல்ல..." நாகதேவி வாசகத்தை முடிக்காமல் விட்டாள்.

"வேறென்ன?"

"விஹாரத்தின் அமைப்பு ரகசியங்களும் தெரிகின்றன."

"புத்த விஹாரத்தில் ரகசியங்கள் ஏது?"

"நிலவறைக்கும் அதில் இடமிருந்தால் அது நிர்மாணிக்கப்பட்டால் ரகசியந்தானே?"

இதைக் கேட்ட குருநாதரின் வதனத்தில் சிறிது அச்சமும் நிலவியது. "நிலவறையாவது!" என்று ஏதுமறியாதது போல் கேட்டார் சுத்தானந்தர்.



"ஆம், அதோ அந்தக் கடைசி இரண்டு தூண்களுக்கும் இடையில் ஒரு பள்ளம் இருக்கிறது..." என்று சுட்டிக்காட்டி னாள் நாகதேவி.

"இன்னும் தரை வேலை முடியவில்லை. மேல்தள வரிசையே முடியவில்லையே, அதை முடித்தல்லவா தரைக்கு வரவேண்டும்" என்று கட்டடக் கலையை எடுத்துச் சொன்னார் சுத்தானந்தர்.

"அப்படியானால் மற்ற இடங்களில் ஏன் கற்களைப் பரப்பிவிட்டீர்கள்?" என்று வினவினாள் நாகதேவி.

"சிற்பியைத்தான் கேட்க வேண்டும்" என்று தப்பப் பார்த்தார் குருநாதர்.

நாகதேவி நகைத்தாள். "குருநாதரே! உமக்கு பதில் சொல்ல சங்கடமாயிருக்கும் விஷயங்களுக்கு சிற்பி வருவார் போலிருக்கிறது" என்று நகைப்புக்கு ஊடே சொல்லிச் சாளரத்திலிருந்து திரும்பி மருதி கிடத்தப்பட்ட கட்டிலுக் கருகில் வந்தாள். வந்து அதன்மீது உட்கார்ந்தாள். கட்டிலின் மீது விரிக்கப்பட்டிருந்த காஷாயத்தின் அடியிலிருந்த இலவம் பஞ்சு மெத்தை மிக மிருதுவாயிருந்தது. அதை இருமுறை கையால் அழுத்திப் பார்த்த நாகதேவி, "குருநாதரே! இது எத்தனை மிருதுவாயிருக்கிறது!" என்று சிலாகித்தாள்.

குருநாதர் பதில் சொல்லவில்லை. நாகதேவியே ஏளனமாகத் தொடர்ந்து பேசினாள். "சுத்தானந்தரே! யோக அறையை அடுத்து ஒரு போக அறையையும் வைத்துக் கொள்கிறீர்கள்" என்று.

அதுவரை குருநாதர் காட்டிய பொறுமை காற்றில் பறந்தது. "என்னைப் பற்றிய விவாதம் இருக்கட்டும். நீ வந்த காரியத்தைச் சொல்" என்று கடுப்புடன் பேசினார்.

நாகதேவி கட்டிலிலிருந்து இறங்கி மருதியை நோக்கினாள். அவள் சந்திரமுகம் குவிந்து பங்கஜக் கண்கள் மூடி இருந்த நிலையே மனோகரமாயிருந்தது. தானும் கண்களை மூடிப் படுத்தால் இப்படித்தானிருக்கும் என்பதை நினைத்ததால் மகிழ்ச்சி கொண்டாள் நாகதேவி. 'உபேந்திரன் நாகதேவியை வெறுக்கலாம். மருதியை வெறுக்க முடியாது' என தனக்குள் சொல்லிக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்தாள். அதன் விளைவாக குருநாதரை நோக்கித் திரும்பி, "சுத்தானந்தரே! நீங்கள் சற்று அடுத்த அறையில் இருங்கள்" என்று உத்தரவிட்டாள்.

சுத்தானந்தர் தயங்கினார். "ஏன்?" என்று வினவினார்.

"இவள் ஆடைகளை அவிழ்க்கப் போகிறேன்" என்றாள் நாகதேவி.

"என்ன! என்ன!" என்று பதற்றப்பட்டார் குருநாதர்.

"என் ஆடையையும் அவிழ்க்கப் போகிறேன்..." என்று சொல்லிய நாகதேவி முறுவல் கொண்டாள்.

"மகாபாவம்... மகாபாவம்" என்று காதுகளைப் பொத்திக்கொண்டார் சுத்தானந்தர்.

"நாங்கள் இருவரும் சிறிது நேரம் நிர்வாணம் அடைவோம்" என்ற நாகதேவி நகைத்தாள் சற்றுப் பெரிதாக.

"அடி பாவி! நாசக்காரி! எத்தனை புண்ணியமான சொல்லை எத்தனை பாபகாரியத்துக்கு உபயோகப்படுத்து கிறாய்" என்று சீறினார் சுத்தானந்தர். "மருதியை ஒன்றும் செய்துவிடாதே" என்று சீற்றத்துடன் கெஞ்சவும் செய்தார்.

"இந்த மருதிக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டாள் நாகதேவி. அவள் கண்களில் விஷம் சொட்டியது.



"அவள் எனது சீடப்பெண். என்னிடம் சமயப்பாடங்கள் கேட்கிறாள்."

"உம்மிடம்?"

"ஆம்."

"சமயப் பாடங்கள் கேட்கிறாள்?"

"ஆம்."

"அவள் உருப்பட்ட மாதிரிதான்" என்ற நாகதேவி "சரி சரி நீர் போய் அடுத்த அறையில் இரும்; சில நிமிடங்களில் உம்மை அழைக்கிறேன்" என்று அதிகாரத்துடன் கூறி அவரை வெளியே செல்லும்படி தன் கையைக் கதவை நோக்கியும் நீட்டினாள்.

சுத்தானந்தர் வேறு வழியின்றி வெளியே சென்றார். நிமிடங்கள் ஓடின. நாகதேவி கதவைத் திறக்கவில்லை. சுத்தானந்தர் தமது யோக அறையில் யோகத்தை மறந்து தாம் துறவி என்பதையும் மறந்து நாகதேவியை கண்டபடி சபித்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் அறைக்குள் மாலுமிகள் இருவர் நுழைந்தனர். "எங்கள் தலைவி இங்கு வந்ததாகக் கேள்விப்பட்டோம். எங்கே அவர்கள்?" என்று குரூரமாக மாலுமிகளில் ஒருவன் வினவினான்.

அவர்கள் உடையிலிருந்தும் முகத்திலிருந்தும் அவர்கள் சாவகப் போர்க் கப்பலின் மாலுமிகளென்பதைப் புரிந்து கொண்ட சுத்தானந்தர், "உள் அறையில் இருக்கிறார்கள்; வருவார்கள்" என்று கூறியதும் இருவரும் உள்ளறைக் கதவுக்கு இருபுறத்திலும் துவாரபாலகர் போல் நின்று கொண்டார்கள். சில விநாடிகளில் கதவு திறந்ததும் இருவரும் தலையை வணங்கினார்கள். வணங்கிய வேகத்தில்

www.cleanindians.com

தலையை நிமிரவும் செய்தார்கள். "நீ யார்?" என்று ஒருவன் அதிகாரத்துடன் கேட்கவும் செய்தான்.

வாயிற்படிக்கு அப்புறம் நின்ற நாகதேவி மும்முறை நகைத்தாள். அதனால் மேலும் குழப்பமடைந்த மாலுமிகள் "தாங்கள்தான் எங்கள் தேவியாக இருக்கவேண்டும். ஆனால்..." என்று ஏககாலத்தில் பேசினார்கள்.

நாகதேவி சற்று நகர்ந்து எட்ட இருந்த கட்டிலைக் காட்டினாள். அங்கு தலையின் முன்னுச்சியில் முத்தலை நாகாபரணத்தைச் சூடிப் படுத்திருந்த மருதியைக் கண்டதும் நாகதேவியை விலக்கித் தள்ளிவிட்டு உள்ளே ஓடி மருதியை வணங்கினார்கள். அவர்களில் ஒருவன் திரும்பி "தேவியார் ஏன் இப்படி மயக்கமாயிருக்கிறார்கள்!" என்று வினவினான்.

"அவர்கள் ஏதோ சாந்திக்கு மருந்து அருந்துவது வழக்கமாமே..." என்று நாகதேவி ஏதும் புரியாததுபோல் விழித்தாள்.

"ஆமாம். மனம் சஞ்சலத்தில் இருந்தால் அருந்துவார்கள். அதை அருந்தினால் ஒருநாள் முழுவதும் எழுந்திருக்க மாட்டார்களே" என்றான் மாலுமி.

"அப்படியானால் எப்பொழுது விழிப்பார்கள்!" என்று ஏதும் அறியாததுபோல் கேட்டாள் நாகதேவி.

"எப்பொழுது நாக ரசாயனம் அருந்தினார்கள்?" என்று ஒரு மாலுமி கேட்டான்.

"சுமார் ஒரு நாழிகைக்கு முன்பு" என்றாள் நாகதேவி.

"அப்படியானால் இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு சுரணை சிறிது வரலாம்" என்றான் இன்னொரு மாலுமி.

www.cleanindians.com



"அப்படியானால் தேவி இங்கேயே இருக்கட்டும். நீங்கள் இரவு பன்னிரண்டு மணிக்கு அவளை எடுத்துச் செல்லுங்கள்" என்றாள் நாகதேவி.

"அதுவரை?" சந்தேகத்துடன் கேட்டான் ஒரு மாலுமி.

"இது உங்கள் தேவியின் குருநாதரின் மடம். இவர்தான் குருநாதர். இங்கு உங்கள் தேவிக்கு எந்த ஆபத்துமில்லை" என்று உறுதி கூறினாள் நாகதேவி.

அதுவரை ஏதோ யோசனையிலும் குழப்பத்திலும் இருந்த மாலுமிகள் சட்டென்று நாகதேவியை ஏற இறங்கப் பார்த்தார்கள். பிரமித்தார்கள். "நீங்கள்... நீங்கள்..." என்று இழுத்தான் ஒரு மாலுமி.

"அதே உருவம், வித்தியாசமே இல்லை. அந்த நாகாபரணம் மட்டும் உங்கள் தலையில் இருந்தால் உங்களையே ராணியென்று நினைத்திருப்போம்" என்றான் இன்னொருவன்.

"ஏன் சும்மா நிற்கிறீர்கள் குருநாதரே? விஷயத்தைச் சொல்லுங்களேன்" என்று நாகதேவி கடிந்துகொண்டாள்.

"இவள் நாகதேவியின் சகோதரி. எனது வளர்ப்புப் பெண்" என்று குருநாதர் பொய்யைச் சொன்னார்.

"இருவருக்கும் வித்தியாசமே தெரியவில்லையே?" என்றான் ஒரு மாலுமி பிரமிப்பால் குரல் அசைய.

"இரட்டைப் பிறவிகள். எல்லாம் புத்தபிரான் கருணை" என்றார் குருநாதர்.

இரு மாலுமிகளும் குருநாதரை வணங்கிச் சென்றனர். அவர்கள் சென்றதும் மருதியின் உடையிலிருந்த நாகதேவி, "குருநாதா! கடலுக்குச் சென்று நீராடி வருகிறேன். நாகதேவி

ஜாக்கிரதை. ஆமாம், மருதியின் வீடு எங்கிருக்கிறது?" என்று வினவினாள்.

"நாகலிங்கக் காட்டின் தென்பகுதியில் தனியான குடிசை. அதன்மீது சந்தன முல்லைக்கொடி படர்ந்திருக்கும்" என்று அடையாளம் சொன்னார் சுத்தானந்தர்.

அதற்குமேல் அங்கு நிற்காத நாகதேவி அசைந்து ஆடி நடந்தாள் நாகலிங்கக் காட்டை நோக்கி. பெரும் மரங்கள் சிவப்பும் மஞ்சளும் கலந்த நாகலிங்கப் புஷ்பங்களை ஏராளமாக உதிர்த்திருந்தன. அந்த மலர்களில் ஒன்றை எடுத்துத் தலையில் சூட்டிக்கொண்டு மருதியின் குடிசையை நோக்கி நடந்தாள் அநாயாசமாக.

குடிசை மற்ற குடிசைகளிலிருந்து தள்ளித் தனித்திருந்தது. அந்தத் தனிமையில் ஓர் அழகும் இருந்தது. அதன் மீது படர்ந்துகிடந்த சந்தனமுல்லை தனது வெள்ளை மலர்க் கொத்துக்களைக் காற்றில் ஆட்டிக்கொண்டிருந்தது. ஒரு கொத்து மலரைக் கிள்ளி நாகலிங்கப் பூவுடன் தலையில் சொருகிக்கொண்ட நாகதேவி மெள்ள குடிசைக்குள் புகுந்தாள். புகுந்து சுற்றுமுற்றும் நோக்கினாள். குடிசையின் கிழக்கு மூலையில் ஒரு மனிதன் தரையில் உட்கார்ந்திருந்தான் முழந்தாள்களைக் கட்டிக்கொண்டு. அவனைக் கண்ட நாகதேவி தான் மருதியென்பதை மறந்து வெளியே செல்லத் திரும்பினாள்.

"நில்" என்று எழுந்தது அவன் கட்டளை.

"எனக்கு ஆணையிட நீ யார்!" என்று கேட்டாள் நாகதேவி.

"உரிமையுள்ளவன்."

"என்ன உரிமை உனக்கு."

"தாய்மாமன்! மணம் செய்யும் உரிமையிருக்கிறது."



"சே! உளறாதே."

"அடி மருதி! இம்முறை நீ என்னிடமிருந்து தப்ப முடியாது" என்று கூறிய அந்த மனிதன் சரேலென்று எழுந்திருந்து நாகதேவியின் கையை இறுகப் பிடித்தான்.

## 7. நாகதேவியின் திட்டமும் திண்டாட்டமும்

திட்டங்களை வகுப்பது சுலபம். ஆனால் நமது இஷ்டப்படி அவை நிறைவேறுகின்றனவா அல்லது சிக்கலிலும் குழப்பத்திலும் கொண்டுபோய் விடுகின்றனவா என்பது மட்டும் நமது கையில் இல்லை. மனித அறிவையும் மீறிய ஏதோ ஒரு சக்தி சகல திட்டங்களையும் இயக்குகிறது. நமது எதிர்பார்ப்பை அது உடைக்கிறது. எதிர்பாராத நிகழ்ச்சிகளை விளைவித்துத் திண்டாடவும் வைக்கிறது. அத்தகைய ஒரு திண்டாட்டத்தில் மாட்டிக்கொண்டாள் நாகதேவி நாகலிங்கக் காட்டின் குடிசையில். மருதிக்கு ஒரு மாமன் இருப்பானென்றோ அங்கு அவன் திடீரென வந்து முளைப்பானென்றோ அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மருதியின் தாய்மாமன் பெண்ணுரிமை கொண்டாட அவள் கையை இறுகப் பிடித்தபோது என்ன செய்வதென்று அறியாமல் திண்டாடினாள் நாகர்கள் தலைவி.

குருநாதரின் விடுதியில் மருதியைக் கண்டதுமே அவள் போட்ட திட்டம் வேறு. நாகதேவியை விஷமென நினைத்த உபேந்திரன் மருதியை அமுதமென நினைக்கலாம் என்று கணக்குப் போட்டாள் நாகதேவி. அப்படி உபேந்திரன் தனது காதலில் சிக்கினால் அவனைக் கொண்டு தான் வந்த காரியத்தைச் சாதிக்கலாம் என்பதும் அவள் யோசனை. அந்த யோசனையைச் சாதிக்கவும் அவள் காலம் தாழ்த்த

www.cleanindians.com

வில்லை. தாழைமடலின் சுகந்தத்தால் மருதியை மயக்க மடையச் செய்த சாவகத் தீவின் சதிகாரி அவளைத் தூக்கிக் கொண்டு குருநாதரின் யோக அறைக்குச் சென்று அங்கு கட்டிலில் மருதியைக் கிடத்திக் குருநாதரை வெளியே அனுப்பியதும் வெகு விரைவில் தனது அலுவலை முடித்துக் கொண்டாள். மருதியின் ஆடையை அவிழ்த்து அதைத் தான் புனைந்து மருதிக்குத் தனது ஆடையை அணிவித்தாள். அவள் தலையில் கோணல் வகிடை நடு வகிடாக எடுத்து முத்தலை நாகாபரணத்தையும் அவளுக்கு அணிவித்தாள். அதற்கு முன்பு அந்த நாகாபரணத்தால் மருதியின் கையில் முத்தலை நாகச் சின்னத்தையும் பொறித்தாள். பிறகு விலகி நின்று மருதியைக் கவனித்தாள்.

"யாரும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. இவள் நாகதேவிதான்" என்று குதூகலித்த நாகதேவி தனது மரக் கலத்தில் வந்த மாலுமிகளை நள்ளிரவில் வந்து தேவியைத் தூக்கிச் செல்லும்படி பணித்துவிட்டு, மருதியின் குடிசையைப் பற்றிக் குருநாதரிடம் தகவல் கேட்டு அங்கு விரைந்தாள். அதுவரை சகலமும் அவள் திட்டப்படிதான் நடந்தது. ஆனால் குடிசையில் ஒரு தாய்மாமன் முளைத்து அவள் கையைப் பிடித்து இழுத்தபோதுதான் தனது திட்டம் சிறிது மாறிவிட்டதை உணர்ந்தாள் நாகதேவி.

மருதியின் தாய்மாமன் கையைப் பிடித்ததும் ஏது செய்தவதென்று ஒரு விநாடி திகைத்த நாகதேவி, "டேய் விடு கையை" என்று சீறினாள். பழைய நாக குணம் அவள் விழியில் விஷத்தைத் தோற்றுவித்தது. முகத்தின் அழகை குரூரம் சற்று குறைத்தது. ஆனால் அதையெல்லாம் கவனிக்க மாமனுக்கு அவகாசமில்லாததால் அவள் கையைப் பிடித்து இழுத்ததோடு நில்லாமல் அவளை இறுகத் தழுவவும் முற்பட்டான். ஆனால் அடுத்த விநாடி அவன் கையில்



சுர்ரென்று ஏதோ குத்தியது. அவ்வளவுதான், குடிசைத் தரையில் குப்புற விழுந்தான் தாய்மாமன். இடையில் எப்பொழுதும் தற்காப்புக்காக மறைத்து வைத்திருந்த ஒருதலை நாகாபரணத்தை, அதாவது விஷக்குப்பியை மறுபடியும் மடியில் சொருகிக்கொண்ட நாகதேவி குடிசையை விட்டு வேகமாக நாகையின் கடலாடு துறையை நோக்கிச் சென்றாள். அங்கு சேலையை வரிந்து கட்டிக் கொண்டு நீரில் குதித்து நீந்தினாள்.

சுற்றிலும் ஆங்காங்கு நாவாய்கள் நங்கூரம் பாய்ச்சி நின்றுகொண்டிருந்தன. கடலில் பெண்கள் ஒருபுறத்திலும் ஆண்கள் ஒருபுறத்திலும் நீராடிக்கொண்டிருந்தார்கள். பரதவர் சிலர் படகுகளைச் சற்று தூரம் செலுத்தி வலைவீசி மீன்பிடித்துக்கொண்டிருந்தார்கள். நாகையின் துறைமுகத்தில் கதிரவன் ஒளிவீசிக்கொண்டிருந்ததால், கடல்நீர் பல கண்ணாடிகளைப் போல் பளபளத்துக் கொண்டிருந்தது. அன்று கடலலை அதிகமில்லாத காரணத்தால், அந்த நீரில் துளைந்து விளையாடிய நாகதேவியை மருதியென நினைத்த பெண்களில் சிலர், "மருதி! நீருக்குள் நீந்துவாயே வேகமாக, இன்று ஏன் எங்களைப் போல் சாதாரண நீச்சல் போடுகிறாய்?" என்று வினவினார்கள். "ஏதோ நீ நீந்திச் சென்று அதோ இருக்கும் சாவக நாட்டுக் கப்பலில் ஏறு பார்ப்போம்" என்று இன்னும் சிலர் கேட்டார்கள்.

இந்தக் கேள்விகள் நாகதேவியைப் பெரிதும் பாதித்தாலும் அவள் அவற்றைச் சட்டை செய்யாமல் நீந்தினாள். நீச்சலை முடித்துக்கொண்டு கரை ஏறி எதிரேயிருந்த நாகலிங்கக் காட்டு முனைப்பிலிருந்து மேட்டுக்கு வந்தாள். அங்கு உட்கார்ந்திருந்தான் உபேந்திரன். அவனைக் கண்டதும் அதிக வெட்கத்தைக் காட்டவில்லை நாகதேவி. தனது உடலில் ஆடை ஆங்காங்கு ஒட்டி அழகுகளைப்

www.cleanindians.com

பிரித்தும், எழுச்சி செய்தும் காட்டிக்கொண்டிருந்த இடங்களை மறைக்கும் பாவனையில் கைகளை மார்பில் கட்டிக்கொண்டு ஓடினாள் மரங்களின் மறைவுக்கு. அங்கேயே சேலையின் ஒருபுறத்தைப் பிழிந்து கட்டிக் கொண்டு இன்னொரு புறத்தை உலர்த்தினாள். பிறகு தலையைத் துவட்டி முடிந்துகொண்டு நாகலிங்கப்பூ ஒன்றையும் பறித்துத் தலையில் சூட்டிக் கொண்டாள். பிறகு மருதியின் குடிசையை நோக்கிச் சென்றாள். குடிசைக்குள் நுழைந்ததும் பிரமித்து நின்றாள் ஒரு விநாடி. அங்கு மயக்க மாய் அவள் விட்டுப்போன மாமன் மறைந்துவிட்டான்.

"அவன் எப்படி மறைந்திருக்க முடியும்? அவனை யார் வந்து தூக்கிப் போயிருப்பார்கள்?" என்று தன்னைத்தானே வினவிக்கொண்டாள் நாகதேவி. விடைகாண முடியாததால் அதைப்பற்றி நினைப்பதைவிட்டு "தொலையட்டும் அவன், எப்படியாவது" என்று சற்று இறைந்தே சொல்லிவிட்டு மருதியின் குடிசை மூலையில் கொடியில் இருந்த சேலை களில் ஒன்றை எடுத்துக் கட்டிக்கொண்டு தனது ஈர உடையை கொடியில் உலர்த்தினாள். சுற்றுமுற்றும் குடிசையை நோக்கினாள் இரண்டாம் முறையாக.

குடிசையில் மாறுதல்கள் சில இருந்தன. அங்குள்ள சிறு அடுப்பு மூட்டி அணைக்கப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு கலயம் மூடி வைக்கப்பட்டிருந்தது. மூடியைத் திறந்து பார்த்தாள் நாகதேவி. கலயத்தில் சூடாக பால் இருந்தது. அதைக் குடிக்கலாமென்று எடுத்துக் கலயத்தை வாயை நோக்கிக் கொண்டுபோன நாகதேவி ஏதோ சந்தேகப்பட்டு சட்டென்று நிறுத்திக்கொண்டாள் பால் அருந்துவதை. "அஞ்ச வேண்டாம். அதில் விஷமில்லை. அருந்தலாம்" என்று குரல் கேட்டுச் சரேலெனத் திரும்பிய நாகதேவி குடிசையின் வாயிலில் உபேந்திரன் நிற்பதைக் கண்டாள்.

www.cleanindians.com



அவன் குடிசையின் மேல் பகுதியைப் பிடித்துக் கொண்டு நின்றதே அழகாகத் தெரிந்தது நாகதேவிக்கு. அவன் முகத்திலிருந்த புன்முறுவல் அவளுக்குப் பெரும் இன்பத்தை அளித்தது. தன்னை அவன் மருதியென்று நினைத்திருக்கிறானென்று அவள் நினைத்தாள். ஆனால் அந்த நினைப்பிலும் சந்தேகமிருந்தது. 'பாலைக் குடிக்கலாம், விஷமில்லை' என்று சுட்டிக் காட்டினானே அதற்கு என்ன பொருள் என்று நினைத்துப் பார்த்தாள். தன்னை ஒரு வேளை அடையாளம் கண்டுகொண்டு விட்டானோ என்ற அச்சமும் அவள் இதயத்தில் எழுந்து கண்களிலும் பிரகாசித்தது.

அப்பொழுது அவன் சொன்னான், "மருதி! பயப் படாதே! உன்னை நான் நாகதேவி என்று நினைத்துத்தான் மூர்க்கத்தனமாக நடந்துகொண்டேன். மன்னித்துவிடு" என்று.

இதைக் கேட்டதும் நாகதேவி பெரும் பூரிப்படைந்தாள். உபேந்திரன் தன்னை மருதியென்றே நினைக்கிறான் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள். ஆகவே தலை குனிந்து கொண்டு மெதுவாகப் பதில் சொன்னாள். "நீங்கள் நடந்துகொண்ட முறை..." என்று வாசகத்தை முடிக்காமல் இன்பநகை கொட்டினாள்.

"தவறுதான் மருதி. ஆனால் வேண்டுமென்று செய்யப் பட்ட தவறல்ல, உன்னைப்போல் வேறொருத்தியைப் பார்த்தேன். நீதான் அவளென்று நினைத்தேன். ஆத்திரத்தில் அப்படிச் செய்துவிட்டேன்" என்று விளக்கம் சொன்னான் உபேந்திரன்.

"அதற்காக ஒரு பெண்ணைத் தூக்கிக் கட்டிலில் போட்டு..."

"அதற்காகப் போடவில்லை..."

"எதற்காகப் போடவில்லை?"

"மருதி! என்னை அதிகமாக பரீட்சை செய்யாதே! உன்னை எந்தவிதத்திலும் துன்புறுத்தும் நோக்கம் எனக்கில்லை. உன்னை நான் பார்த்ததுகூடக் கிடையாது."

போலி மருதி நகைத்தாள் இன்பமாகவே. "நாகையின் நாகர்கள் தலைவரே! சோழரிடம் சேவை செய்தும் உமக்கு நாகர்களின் முரட்டுத்தனம் போகவில்லை" என்றாள் நாகதேவி. "ஏன் வாயிற்படியிலேயே நிற்கிறீர்கள்? வாருங்கள் உள்ளே" என்றும் அழைத்தாள் நாகதேவி.

"இல்லை மருதி நான் வருவதற்கில்லை" என்று சொன்னான் உபேந்திரன்.

"ஏன்?" என்று கேட்டாள் நாகதேவி.

"நான் போகவேண்டும். தவிர... இந்த ஊர் பொல்லாதது. உனக்கும் எனக்கும் முடிச்சு போட்டுவிடும்" என்று சுட்டிக்காட்டினான் உபேந்திரன்.

"அதற்கு நான் அஞ்சவில்லை" என்றாள் நாகதேவி.

"நான் அஞ்சுகிறேன் மருதி. தவிர சற்று முன்பு இங்கு கிடந்தானே ஒரு மனிதன் அவன் உன் தாய்மாமனாமே" என்று வினவினான் உபேந்திரன்.

இதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது நாகதேவிக்கு. "இங்கு... மனிதனா... தாய்மாமனா..." என்று உளறியதுபோல் பாசாங்கு செய்தாள் நாகதேவி.

"அப்படித்தான் நாகர் குடிசைகளில் பேசிக்கொள்கிறார்கள். நல்லவேளை சமயத்தில் நான் வந்தேன். அவன் பிழைத்தான்" என்று விளக்கினான் உபேந்திரன்.



"அவன் ஏன் இங்கு கிடந்தான்?" என்று வினவிய நாகதேவியின் குரலில் அச்சமிருந்தது.

"கையில் பாம்பு கடித்துவிட்டது. நல்லவேளை விஷத்தை நான் எடுத்துவிட்டேன்" என்றான் உபேந்திரன்.

நாகதேவி பிரமிப்பது போல் பாசாங்கு செய்தாள். "ஐயோ" என்று திகைப்புடன் சொல்லையும் உதிர்த்தாள்.

"இப்பொழுது உயிருக்கு ஆபத்தில்லை. எப்படியும் இன்று மாலைக்குள் எழுந்து நடமாடுவான். நீ பார்க்க வேண்டுமானால் அவனிடம் உன்னை அழைத்துப் போகிறேன்" என்றான் உபேந்திரன்.

நாகதேவியின் முகத்தில் கோபம் துளிர்த்தது. "நான் யாரையும் பார்க்க வேண்டியதில்லை. எனக்கு எந்தத் தாய் மாமனையும் தெரியாது" என்ற நாகதேவி கையிலிருந்த கலயத்திலிருந்த பாலை இரண்டு வாய் குடித்து கலயத்தை பழையபடி அடுப்பில் வைத்து மூடினாள்.

www.cleanindians.com

அதனால் சிறிது சுயநிலையடைந்த நாகதேவி குடிசையின் தரையில் உட்கார்ந்து கையில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். அந்த நிலையில் உபேந்திரன் வருவான், தனது குழல்களைக் கோதுவான், தலையிலிருந்த பூவை எடுத்து முகர வருவான் என்று ஏதேதோ மனோ ராஜ்யம் செய்துகொண்டாள் நாகதேவி. ஆனால் அவள் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. அவள் தலையை நிமிர்ந்து பார்த்தபோது உபேந்திரன் வாயிலில் இல்லை. வாயிலை நோக்கி ஓடினாள் நாகதேவி. நாகலிங்கக் காட்டில் சற்று எட்ட நடந்து சென்றுகொண்டிருந்தான் உபேந்திரன். நாகதேவி தூரத்தில் அவனைத் தொடர்ந்து சென்றாள்.

அவன் நாகலிங்கக் காட்டைத் தாண்டி சூடாமணி விஹாரம் கட்டிக்கொண்டிருந்த இடத்துக்கு வந்தான். அந்த

விஹாரத்தின் நடுவில் பூசாமல் விடப்பட்டிருந்த மண் தரையை நீண்ட நேரம் கவனித்துக்கொண்டிருந்தான். பிறகு புன்முறுவல் கொண்டு குருநாதர் விடுதியை நோக்கி நடந்தான்.

நாகதேவியின் மார்பு திக்கென்று அடித்துக்கொண்டது. உபேந்திரன் ஏதோ சந்தேகப்படுகிறான் என்பது மாத்திரம் திட்டமாகத் தெரிந்தது அவளுக்கு. அடுத்து அவன் குருநாதர் இல்லத்தை நோக்கி விரைந்தது இன்னும் அதிக சந்தேகத்தைக் கிளறவே அவனை மேலும் தொடர்ந்து சென்றாள். குருநாதர் இல்லத்தில் நாகதேவியின் அச்சத்தை உச்சத்துக்குக் கொண்டு போகும் நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருந்தன. குருநாதரின் யோக அறையின் சாளரத்தருகில் மறைந்து நின்ற நாகதேவி பிரமிக்கும் பல நிகழ்ச்சிகளைக் கண்டாள்.

மருதி மயக்கமாய்க் கிடந்த கட்டிலுக்கருகே நின்று அவளை உற்று நோக்கிக்கொண்டிருந்தான் உபேந்திரன். எதிரே குருநாதர் சங்கடத்துடன் நின்றிருந்தார். அவரை நோக்கி உபேந்திரன் கேட்டான், "குருநாதரே! யாரையும் மயக்கவல்ல நாகதேவியே மயங்கிக் கிடப்பது விந்தையல்லவா?" என்று.

குருநாதர் பதில் சொல்லவில்லை முதலில். பிறகு "உபேந்திரா! நீ சொல்வது விளங்கவில்லை" என்று கூறினார் தட்டுத்தடுமாறி.

"இதில் விளங்காததற்கு என்ன இருக்கிறது? இரட்டைப் பிறவிகள் சிருஷ்டியில் புதிதா என்ன?" என்று இன்னொரு கேள்வியையும் தொடுத்தான்.

## 8. மாறிய வேடங்கள்

எதிர்பாராத விதமாக உபேந்திரன் தமது விடுதிக்குத் திடீரென விஜயம் செய்ததன்றி யோக அறைக்குள்ளும் புகுந்தபோதே குருநாதரின் முகத்தில் அச்சத்தின் களை சொட்டி வழிந்ததென்றால், அவன் கட்டிலில் நாகதேவியின் வேடத்தில் கிடந்த மருதியை உற்று நோக்கியதும் பிறகு, "இரட்டைப் பிறவிகள் சிருஷ்டியில் புதிதா என்ன?" என்று கேள்வியை விடுத்ததும் அந்தத் துறவியின் முகம் பூராவும் பிரமிப்பைப் படரவிட்டது. அதனால் சற்று பெருமூச்சுவிட்ட குருநாதர், "ஆம்! ஆம்! புதிதல்ல" என்று குழறினார்.

www.cleanindians.com

அவர் குரலில் ஒலித்த குழப்பத்தைக் கவனிக்கவே செய்தான் உபேந்திரன்.

அதன் விளைவாக மேலும் ஒரு கேள்வியை வீசினான். "குருநாதரே! யோக அறையில் இத்தகைய அழகிய கட்டிலும் பஞ்சணையும் எதற்கென்று பலநாள் நான் யோசித்ததுண்டு. ஆனால் எதற்கும் ஓர் உபயோகம் என்றாவது ஒருநாள் நிச்சயமாக இருக்கும் என இப்பொழுது தெரிகிறதல்லவா?" என்று.

இந்தக் கேள்வி எதற்கும் அசையாத குருநாதரை மேலும் அசைய வைத்தது. "ஆம்! ஆம்! தெரிகிறது" என்று அவரும் தமது ஒப்புதலைத் தெரிவித்தார்.

சிறிது நேரம் சிந்தித்தான் மருதியைப் பார்த்த வண்ணம் உபேந்திரன், "நல்லவேளை" என்று பிறகு பெருமூச்சு விட்டான்.

"நல்ல வேளையா? எது நல்ல வேளை?" என்று குருநாதர் கேட்டார், ஏதோ கேட்கவேண்டும் என்பதற்காக.

"கட்டிலும் பஞ்சணையும் இருப்பது" என்றான் உபேந்திரன்.

"அவற்றுக்கும் நல்லவேளைக்கும் என்ன சம்பந்தம்?" என்று குருநாதர் வினவினார்.

"இவையில்லாவிட்டால் நாகதேவியைப் போன்ற ஓர் அப்ஸரஸை எங்கு படுக்க வைப்பீர்கள்? இத்தகைய அழகி, அதுவும் நாகர்கள் தலைவி, தரையில் படுக்க முடியுமா?" என்று உபேந்திரன் கேட்டான்.

"முடியாது, முடியாது" என்றார் குருநாதர்.

"ஆகவே கட்டிலிருப்பது நல்லவேளைதானே?"

"ஆம்."

மீண்டும் சிந்தனையில் இறங்கினான் உபேந்திரன். பிறகு "குருநாதரே!" என்று மெல்ல அழைத்தான்.

"என்ன உபேந்திரா?" என்று கேட்டார் குருநாதர் அடுத்து என்ன கேள்வி வருமோ என்ற அச்சத்தால்.

"இப்பொழுது மருதி வந்தால் அவளை எங்கே படுக்க வைப்பீர்கள்?" இந்தக் கேள்வியை சர்வசாதாரணமாகக் கேட்டான் உபேந்திரன்.

"இதென்ன கேள்வி உபேந்திரா! அவள் எதற்காக இங்கு வரவேண்டும்? அவளை ஏன் படுக்க வைக்க வேண்டும்? இந்தத் துறவியின் ஆசிரமத்தில் பெண்களுக்கு என்ன வேலை?" என்று சற்று கோபத்தைக் காட்டினார் குருநாதர்.

"அதைத்தான் நானும் கேட்கலாமென்றிருந்தேன்" என்றான் உபேந்திரன். குருநாதர் ஒரு விநாடி விழித்தார். பிறகு சமாளித்துக்கொண்டு, "உபேந்திரா! எந்தப் பெண்ணுக்கும் இங்கு வேலை எதுவும் இல்லை. இந்த விடுதியை



விளக்கும் வேலையைக்கூட எனது சீடர்கள் செய்கிறார்கள். சீடப் பெண்கள் இங்கு வரலாம். படிக்கலாம், போகலாம், அவ்வளவுதான்" என்றார். வாசகத்தை முடிக்கவில்லை அவர்.

"நாகதேவி அந்தப் பொது விதிக்கு விலக்கு போலிருக்கிறது."

"ஆம். இவள் வேறு நாட்டைச் சேர்ந்தவள். ஏதோ அரசாங்க அலுவலாக வந்திருக்கிறாள். இங்கு என்னைப் பார்க்க வந்தாள்."

"அரசாங்க அலுவலாக வந்தவள் உங்களைப் பார்க்க வந்தாள்!... உம்..." என்று நிதானித்த உபேந்திரன், "ஆமாம் குருநாதரே! அரசாங்க அலுவல்களுக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டான்.

www.cleanindia...com

இந்தக் கேள்வியை உபேந்திரன் கேட்டதும் சிறிது நிமிர்ந்து நின்றுகொண்டார் குருநாதர். "உபேந்திரா! உனது கேள்வி மிக்க விசித்திரமாயிருக்கிறது. சூடாமணி விஹாரம் யார் மேற்பார்வையில் கட்டப்படுகிறது? சாவக மன்னன் சார்பில். அதைக் கட்டுவதற்கு முதலில் இராஜராஜ சோழ தேவரிடம், பிறகு இராஜேந்திர சோழதேவரிடம் அனுமதி பெற்றது யார்? இந்த சுத்தானந்தன் நினைப்பிருக்கட்டும். துறவறத்துக்கும் அரசுக்கும் சம்பந்தமில்லையென்று சொல்ல முடியாது. சாணக்கியன் துறவிதான். அவன் சந்திரகுப்தனை மகதத்தின் மன்னனாக்கினான். அதற்காக..." என்று பேசிக் கொண்டு போன குருநாதர் என்ன காரணத்தினாலோ சட்டென்று பேச்சை நிறுத்தினார்.

உபேந்திரன் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. "அதற்காகப் பல ஒற்றர்களைச் சாணக்கியர் வைத்துக் கொண்டார். தந்திரங்கள் பலவற்றைச் செய்தார். எதிரிகளை

முறியடிக்க சாணக்கிய தந்திரம் இன்றும் பிரமிப்புடன் பேசப்படுகிறது" என்றான் உபேந்திரன் புன்முறுவலின் ஊடே. "குருநாதரே! அந்த மாதிரி உமது பெயரும் சரித்திரத்தில் நிலைக்க வேண்டும் என்பது உமது சீடன் ஆசை" என்றும் கூறினான்.

"சீடனா? யார் சீடன்?" என்றொரு கேள்வியை வீசினார் குருநாதர்.

"நான்தான். ஏன் சீடப் பெண் வந்ததும் சீடனை மறந்துவிட்டீர்களா?" என்று கேட்டான் உபேந்திரன்.

"சீடப் பெண்ணா! யாரது?"

"என்ன குருநாதரே! மருதிதான். அவளை என்னிடமிருந்து காக்கவில்லை நீர்?"

"ஆம்! ஆம்! நீ நடந்துகொண்டது சரியல்ல. இன்று காலை..."

"குருநாதரே! அது என் தவறல்ல. இரட்டைப் பிறவிகளைப் பற்றி அப்பொழுது எனக்குத் தெரியாதல்லவா?" என்று ஆரம்பக் கதைக்கு வந்தான் உபேந்திரன்.

இந்த உரையாடலை மேற்கொண்டு நடத்துவது ஆபத்து என்பதை உணர்ந்த குருநாதர் "அது கிடக்கட்டும் இங்கு நீ எதற்காக வந்தாய்?" என்று வினவினார் சற்று எரிச்சலுடன்.

"நாகதேவியைப் பார்க்கலாமென்று வந்தேன்" என்றான் உபேந்திரன்.

"நாகதேவி இங்கு இருப்பாளென்று உனக்கு எப்படித் தெரியும்?"

"எனது ஒற்றர்கள் சொன்னார்கள். மருதியைப் போலவே ஒரு பெண் இங்கு வந்ததாகவும் ஆனால் அவள் நாகாபரணம் அணிந்து பெரிய அரசியைப் போலிருந்ததாகவும் கூறினார்கள். சாவகத்திலிருந்து கப்பல் வருகிறது. நானோ கப்பல்களைச் சோதிக்கவில்லை. அதற்கு நீங்களே கோபித்துக்கொண்டீர்கள் என்னிடம். அப்படியிருக்க அந்தக் கப்பலிலிருந்து ஓர் அரசி வந்தாளென்றால் அதுவும் அவள் மருதியைப் போலவே இருக்கிறாளென்றால் அவளைப் பார்த்து விசாரிக்க வந்தேன். இங்கோ அவள் மயக்கமாய்ப் படுத்திருக்கிறாள்" என்று அலுத்துக்கொண்டான் உபேந்திரன்.



குருநாதர் பாடு பரம திண்டாட்டமாயிருந்தது. உபேந்திரன் திறமையை இராஜேந்திர சோழ தேவர் போலவே அவரும் நன்றாக உணர்ந்திருந்தார். அவன் கண்ணோட்டத்திலிருந்தும் அவன் ஒற்றர்கள் கண்ணோட்டத்திலிருந்தும் எதுவும் தப்ப முடியாதென்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆகவே கேட்டார், "இப்பொழுது அவளுடன் எப்படி நீ பேச முடியும்?" என்று.

"முடியாது. ஆனால் இவள் ஏன் மயக்கமாயிருக்கிறாள்?" என்று விசாரித்தான் உபேந்திரன். அவன் குரலில் அனுதாபம் ஒலித்தது.

"காரணம் தெரியாது. இங்கு வந்ததும் சற்று மயக்கமாயிருக்கிறதென்றாள். யோக அறையில் படுக்கச் சொன்னேன்" என்று சமாளித்துக்கொண்டார் குருநாதர்.

"அப்படியா! அதை ஏன் இத்தனை நாழி சொல்லவில்லை நீங்கள்? நான் நமது அரண்மனை மருத்துவரை இங்கு அனுப்பியிருப்பேனே" என்றான் உபேந்திரன்.

குருநாதர் சற்று நிமிர்ந்து நின்றார். "ஏன், எனக்கு வைத்தியம் தெரியாதா?" என்று கேட்டார்.

"தெரியும். ஆனால் நீங்கள் ஏன் இவள் மயக்கத்தைத் தீர்க்கவில்லை?" என்று உபேந்திரன் கேட்டான்.

www.cleanindians.com

"இப்பொழுது அவள் மயக்கத்தில் இல்லை. நல்ல உறக்கத்திலிருக்கிறாள்."

"தாங்கள் அதற்கு மருந்து கொடுத்திருக்கிறீர்களா?"

"ஆமாம்."

"எப்பொழுது எழுந்திருப்பாள்?"

"இரவுதான்."

"எழுந்திருந்ததும் என் இல்லத்திற்கு அழைத்து வாருங்கள்."

"ஆகட்டும்."

அதற்குப்பின் அங்கு நிற்கவில்லை உபேந்திரன். "வருகிறேன் குருநாதரே! நீங்கள் வருவதற்கு முன்பு எனக்குச் சொல்லியனுப்புங்கள். நாகதேவியை முறைப்படி வரவேற்க ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறிவிட்டு யோக அறையிலிருந்து கிளம்பினான் உபேந்திரன். குருநாதரும் வாயில் வரை சென்று அவனை வழியனுப்பி விட்டுத் திரும்பினார். பிறகு மீண்டும் யோக அறைக்குத் திரும்பியபோது அங்கு உண்மை நாகதேவி நின்றிருந்தாள். அவள் முகத்தில் கோபம் ஜொலித்துக் கொண்டிருந்தது.

"குருநாதரே! உமக்கு அறிவு லவலேசமாவது இருக்கிறதா?" என்று வினவினாள்.

குருநாதரின் இதழ்கள் இகழ்ச்சியுடன் மடிந்தன. "இல்லை" என்று திட்டமாக அறிவித்தார். "இருந்தால் உன் சதிக்கு இசைந்திருப்பேனா?" என்றும் வினவினார்.

"மிகவும் புத்திசாலித்தனமாகப் பேசுவதாக உமது எண்ணமோ?" என்று வினவிய நாகதேவி கோபத்துடன் காலைத் தரையில் உதைத்தாள்.



"அந்த எண்ணம் சிறிதளவும் இல்லை; இத்தனை நேரம் உபேந்திரன் பேசியதையெல்லாம் கேட்டாய் அல்லவா?" என்று வினவினார் குருதேவர்.

"கேட்டேன். மருதியை ஏன் என் வேடத்தில் அவர் வீட்டுக்கு அழைத்துப் போகச் சம்மதித்திருக்கிறீர்?"

"வேறு வழி? உன் வேடத்தை மருதிக்குப் போட்டது நீதானே?"

"ஆம் போட்டேன். அவளை எனது கப்பலுக்கு அனுப்பும் நோக்கத்துடன்."

"நீ உபேந்திரன் வீட்டுக்குப் போகத் திட்டமிட்டாய்?"

"ஆம்."

"இப்பொழுது கதை மாறிவிட்டது. இவள் அவன் வீட்டுக்குப் போகிறாள். நீ குடிசைக்குப் போகிறாய்." இதைச் சொன்ன குருநாதர் மெல்ல நகைத்தார். "உன் புத்திசாலித்தனத்தின் விளைவை கவனித்தாயா!" என்று கேட்கவும் செய்தார் நகைப்பின் ஊடே.

நாகதேவி நிமிர்ந்து நின்றாள். "குருநாதரே! இப்பொழுதும் குடிமுழுகிப் போய்விடவில்லை. கதையை மறுபடியும் மாற்றிவிடுகிறேன். எனக்கும் மருதிக்கும் ஆடையும் முத்தலை நாகாபரணமுந்தானே வித்தியாசம்? அவற்றை மாற்ற அரை நாழிகைகூடப் பிடிக்காது. நீங்கள் வெளியே செல்லுங்கள். நான் ஆடையை அவிழ்க்க வேண்டும்" என்றாள்.

"மறுபடியுமா?" என்று விஷமத்தனமாகக் கேட்டார் துறவி.

"எத்தனை தடவை வேண்டுமானாலும் அவிழ்ப்பேன். நீர் யார் கேட்க?" என்றாள் நாகதேவி.

குருநாதர் வெளியே நடந்தார். மீண்டும் நாகதேவி அவரை உள்ளே அழைத்தபோது வேடங்கள் மாறி இருவரும் சுய உருவில் இருந்தார்கள். அப்பொழுதும் மருதி மயக்கத்தில் இருந்தாள். அப்பொழுது இன்னொரு திட்டத்தைச் சொன்னாள் நாகதேவி. அதைக் கேட்ட குருநாதர் பேரதிர்ச்சி அடைந்தார். "உன் குரூரத்துக்கு எல்லையே இல்லையா?" என்று வினவினார்.

"என் எண்ணம் நிறைவேற எதையும் செய்வேன் குருநாதரே! இன்றிரவோடு நாகையில் இரட்டைப் பிறவிகள் இல்லை. இருக்கப் போவது ஒருத்தி. அவளே நாகதேவி—அவளே மருதி. இனி குழப்பத்துக்கு இடமில்லை. நீரும் நானும் சேர்ந்து இங்கு ஒரு புது சிற்றரசை அமைப்போம்" என்றாள் நாகதேவி.

அன்றிரவு அவள் குருநாதருடன் உபேந்திரன் இல்லத் துக்குப் புறப்பட்டாள். அவள் புறப்பட்டதும் சாவகக் கப்பலின் மாலுமிகள் இருவர் குருநாதரின் யோக அறையில் பெரிய சீலையால் மூடப்பட்டிருந்த மருதியை அப்படியே தூக்கிக்கொண்டு நாகலிங்கக் காட்டை நோக்கி விரைந்தனர். அதைச் சற்று எட்ட இருந்து பார்த்துக் கொண்டிருந்த நாக தேவி பக்கத்திலிருந்த குருநாதரை நோக்கி, "குருநாதரே! வாரும். இனி பயமின்றிப் போகலாம் உபேந்திரன் மாளிகைக்கு" என்றாள்.

குருநாதரும் நாகதேவியும் உபேந்திரன் இல்லத்தில் சகல மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். உள்ளே கூடத்தில் உட்கார்ந்த பிறகும் உபேந்திரன் தலைகாட்டவில்லை. "உபேந்திரன் எங்கே?" என்று குருநாதர் வினவினார் அங்கிருந்த பணிமகனிடம்.

"அவசர வேலையாக வெளியே போயிருக்கிறார். சீக்கிரம் வந்துவிடுவார். உங்களிருவரையும் இருக்கச் சொன்னார்" என்று பணிமகன் பதிலிறுத்தான்.

www.cleanindians.com

## 9. திருமணம் எனும் தொல்லை

நாகையின் நாகர்கள் தலைவனான உபேந்திரன் இல்லத் துக்கு சாவகத்தின் நாகர்கள் தலைவியான நாகதேவியுடன், சுத்தானந்தர் என்ற சுத்ததத்தர் வந்ததும், வாயிலிலேயே இரு வீரர்கள் அவர்களை மிகுந்த மரியாதையுடன் வரவேற் றதாலும் இரு பணிப் பெண்கள் வந்து நாகதேவிக்கு ஆரத்தி சுத்தி அழைத்ததாலும் ஏற்கெனவே உள்ளூர இருந்த நடுக்கத்திலிருந்து விடுபட்டார் குருநாதர். அன்று நாகையின் படைத்தலைவன் தமது ஆசிரமத்துக்கு வந்தபோது விடுத்த வினாக்களையும் அவற்றில் தொனித்த விஷமம் சந்தேகம் முதலியவற்றையும் கவனித்ததால் மிகுந்த கவலையுடன் படைத்தலைவன் இல்லத்தை அடைந்த அவருக்கு, அங்கு காட்டப்பட்ட மரியாதை மனச்சாந்தியைப் பெருமளவு அளிக்கவே செய்தது. தவிர இருவரையும் உள்ளே அழைத்துச் சென்ற பணிமக்கள் கூடத்தை அடுத்து ஒரு கட்டு தள்ளி யிருந்த உபேந்திரன் தனியறையில் அவர்களை உட்கார வைத்தது கூட பரம திருப்தியாயிருந்தது குருநாதருக்கு. அந்த அறையைக் கவனித்த நாகதேவிகூட திருப்தியடைந்தாள். அறையின் கிழக்குச் சுவரில் வாயிற்படிக்கு மேலே காட்சி யளித்த வெள்ளி ஐந்தலை அரவமும் அதன் கண்களில் பளிச்சிட்ட ஐந்து மாணிக்கக் கற்களும் நாகனாயிருப்பதில் உபேந்திரன் பெருமை கொண்டிருக்கிறானென்பதை உணர்த்தியதால், தான் மட்டும் சாமர்த்தியத்துடன் நடந்து கொண்டால் வந்த காரியத்தைச் சாதிப்பதில் அதிகக் கஷ்ட மிருக்காதென்பதைப் புரிந்துகொண்டாள் நாகதேவி. ஆனால் தாங்கள் வந்த இத்தனை நேரத்துக்குப் பிறகும் படைத் தலைவன் அந்த அறைக்குள் தலைகாட்டாதது விசித்திரமா யிருந்தது அவளுக்கு. அந்த சமயத்தில்தான் குருநாதர்

"உபேந்திரன் எங்கே?" என்று விசாரித்ததும், பணிமகன் எசமானர் அவசர வேலையாக வெளியே போயிருப்பதாகவும் சீக்கிரம் வந்துவிடுவாரென்றும் பதிலளித்ததும் அவளுக்கு இயற்கையாக இருந்த சந்தேகத்தை அதிகப் படுத்தியது. அதனால் தனது கண்களை குருநாதர்மீது சீற்றத்துடன் திருப்பினாள் நாகதேவி.

அந்தச் சீற்றத்தை தமது கண்களுக்கு மாற்றிக் கொண்ட குருநாதர் பணிமகனை நோக்கி "எல்லா!" என்று குரலிலும் சீற்றம் ஒலிக்க அழைத்தார்.

"சுவாமி!" என்று எல்லன் கைகட்டி வாய் புதைத்துக் குழைந்து நின்றான்.

"நாங்கள் வருவது உன் எசமானருக்குத் தெரியுமல்லவா?" என்று மறுபடியும் கேட்டார் உஷ்ணமான குரலில்.

"இங்கு அளிக்கப்பட்ட வரவேற்பிலிருந்தே தங்களுக்கு அது தெரிந்திருக்குமே குருநாதரே" என்றான் எல்லன்.

எல்லனின் அதிகமான குழைவும் இடக்கான பேச்சும் குருநாதரின் சந்தேகத்தை மீண்டும் கிளறவே, "எல்லா! என்னுடன் வந்திருப்பது..." என்று துவங்கிய குருநாதர் வாசகத்தை முடிக்கவில்லை.

அதற்குள் எல்லனே முந்திக்கொண்டு, "நாகதேவி! அரசகுமாரி! எசமானரே சொன்னார்கள். 'எல்லா! வெளிநாட்டு அரசகுமாரியுடன் நமது குருநாதர் வருவார். பெருமக்களை அழைக்கும் முறையில் அவர்களை அழை. என் அந்தரங்க அறையில் உட்கார வை. அவர்களுக்கு சகல உபசாரங்களையும் செய்!' என்று" என்றான். பிறகு தேவியை நோக்கி, "தேவிக்கு சிற்றுண்டியும் பானங்களும் சித்தமாக வைத்திருக்கிறேன், கொண்டு வரட்டுமா?" என்று வினவினான்.



குருநாதர் மெல்ல தமது நகைச்சுவையைக் காட்டி, "பானமா! எல்லாம் நாகதேவிக்குத்தானா? எனக்கு எதுவும் இல்லையா" என்று வினவியதோடு புன்முறுவலும் செய்தார்.

எல்லன் அதிகப் பணிவைக் காட்டினான். "அதைத் தங்களுக்குச் சமர்ப்பிப்பது அபசாரம் என்று எசமான் சொன்னார்" என்றான்.

"எதை?"

"பானத்தை!"

"என்ன பானம் அது?"

"அது."

www.cleanindians.com

இதைக் கேட்ட குருநாதர் சற்று சங்கடப்பட்டார். இப்படியும் அப்படியும் ஆசனத்தில் அசைந்தார் சங்கடத்தின் விளைவாக.

நாகதேவியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. அவளும் எல்லனை அழைத்தாள், "எல்லா!" என்று. "உன் பெயரும் நாகர்கள் பெயராகத்தானிருக்கிறது. நீயும் நாகனா?" என்று வினவினாள்.

"ஆம் தேவி."

"விருந்தினர்களை வரவழைத்துவிட்டு அழைத்தவர் வெளியே போய்விடுவது நாகர்கள் பண்பாடில்லையே!"

"இல்லை தேவி, தமிழர் பண்பாடும் அப்படி இல்லை. எதிர்பாராத செய்தி ஏதோ வந்ததால்தான் எசமானர் வெளியே போனார். இப்பொழுது வந்துவிடுவார்கள்" என்று சமாதானம் சொன்னான் எல்லன்.

அந்த சமயத்தில் வெளியே வேகமாக வந்து நின்ற ஒரு புரவியின் குளம்படி ஒலிகள் கேட்டன. அதை அடுத்து,

"தேவியாரும் குருநாதரும் வந்துவிட்டார்களா?" என்ற உபேந்திரனின் அதிகாரக் குரலும் கேட்டது. அடுத்த இரண்டு விநாடிகளில் உபேந்திரன் உள்ளே நுழைந்து குருநாதருக்கும் நாகதேவிக்கும் தலைவணங்கினான்.

அவன் உடையிலிருந்தும் நெற்றியில் புள்ளி புள்ளியாகத் தெரிந்த குறு வியர்வையிலிருந்தும் அவன் அங்கி ஒவ்வோரிடங்களில் கிழிந்திருந்ததாலும் அவன் ஏதோ அவசர வேலையாகச் சென்று திரும்பி வந்திருக்கிறானென்பதை குருநாதர் புரிந்துகொண்டார். ஆனால் அவன் கோலம் நாகதேவிக்குச் சிறிது சந்தேகத்தை அளித்ததால் அவள் கேட்டாள்: "படைத் தலைவரே! எங்கே இத்தனை அவசரமாகப் போய் வருகிறீர்கள்?" என்று.

"அரசாங்கப் பணி, புறக்கணிக்க முடியாத நிலை" என்றான் உபேந்திரன்.

"எங்களிடம் சொல்லக்கூடாத ரகசியமா?" என்று கேட்டாள் நாகதேவி.

"எந்த ரகசியமும் இல்லை தேவி. திடீரென சீனத்துக் கப்பல் ஒன்று வந்திருப்பதாகச் செய்தி வந்தது. அதைப் பார்க்கப் போனேன். அதில் மன்னருக்குத் தேவையான சில பொருள்கள் சீன நாட்டில் இருந்து வந்திருக்கின்றன. அவற்றைப் பார்த்துக் கப்பலையும் சோதித்துவிட்டு வந்தேன். சீக்கிரம் திரும்பிவிட வேண்டுமென்றுதான் கடற்கரை வரையில் புரவியில் போனேன்" என்றான் உபேந்திரன்.

"உங்கள் அங்கி ஏன் கிழிந்திருக்கிறது?" என்று நாகதேவி மீண்டும் கேட்டாள்.

"சீனக் கப்பலின் பாய்மரம் ஒன்று விரிந்து சிலாம்பு நீட்டிக்கொண்டிருந்தது. அது மாட்டிக் கிழித்துவிட்டது"

www.cleanindians.com



என்று சர்வ சாதாரணமாகச் சொன்ன உபேந்திரன், "இதைப் பற்றி இப்பொழுதென்ன? உங்களை நானே இருந்து வரவேற்காத குற்றத்துக்கு மன்னித்து விடுங்கள்" என்று உபசார வார்த்தையும் சொன்னான்.

அவன் குரலில் மிகுந்த மரியாதை இருந்தாலும், காரணம் கோர்வையாக இருந்தாலும், அவன் சொன்னது முழுவதையும் நம்பவில்லை நாகதேவி. அவன் எதையோ மறைத்துத் தனது கண்ணில் மண்ணைத் தூவப் பார்க்கிறானென்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டாள்.

குருநாதருக்கும் அவன் பேச்சில் அவநம்பிக்கை இருந்தாலும் அவர் அதை வெளிக்காட்டாமல் "உபேந்திரா! நாகதேவியை வரச் சொல்லிவிட்டு நீ போய்விட்டது தவறு" என்று கடிந்து கொண்டார்.

வியப்பு நிரம்பிய கண்களை குருநாதர் மீது திருப்பினான் உபேந்திரன். "குருநாதரே! நீர்தானே இரவிலும் கப்பல்களைச் சோதனைபோட வேண்டுமென்று இன்று காலை சொன்னீர்கள். இரவில் போகாததற்கே கடமை தவறியதாகக் குற்றம் சாட்டிய நீர் பகலில் கடமையைச் செய்யாவிட்டால் வாளாவிருப்பீரா?" என்று வினவினான் வியப்பு குரலிலும் விரிய.

குருநாதர் ஏதும் சொல்ல இயலாததால் பெருமாள் மாட்டைப்போல் தலையை ஆட்டினார். "நீ சொல்வது நியாயந்தான்..." என்று இழுத்தார்.

"எது நியாயம்?" நாகதேவி சீற்றத்தைக் காட்டினாள்.

"கடமையைச் செய்வது" என்று குருநாதர் குளறினார்.

நாகதேவி குருநாதரைத் தனது கொல்லும் விழிகளால் நோக்கினாள்.

"குருநாதரே! விருந்தினரை வரவேற்பது கடமையல்லவா?" என்று சீறவும் செய்தாள்.

"ஆம் ஆம். அதுவும் கடமைதான்" என்று ஒப்புக் கொண்டான் உபேந்திரன். மேலும் சொன்னான்: "தேவி! உங்கள் நாட்டில் எப்படிப் பழக்கமோ எனக்குத் தெரியாது. தமிழகம் சம்பந்தப்பட்டவரை அரசாங்க அலுவல் சொந்த அலுவலைவிட முக்கியம்" என்று.

"நான் வந்திருப்பது அரசாங்க அலுவல் இல்லை?" என்று கேட்டாள் நாகதேவி.

உபேந்திரன் அவள் பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கால்களை நன்றாக நீட்டிக்கொண்டான். "தேவி! நீங்கள் வந்திருக்கும் அரசாங்க அலுவல் வேறு. ஆனால் தேவி..." என்று இழுத்தான் சொற்களை.

"என்ன?" தேவி கடுமையான குரலில் கேட்டாள்.

உபேந்திரன் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. "தேவி! உங்களை நான் திருமணம் செய்துகொள்கிறேனென்று வைத்துக் கொள்வோம்" என்று தொடர்ந்தான்.

"உபேந்திரா!" என்று அதட்டினார் குருநாதர்.

உபேந்திரன் குருநாதரை போலிப் பணிவுடன் நோக்கி, "குருநாதரே! தவறாக நினைக்க வேண்டாம். உதாரணத்துக்காகச் சொன்னேன். அப்படித் திருமணம் செய்வதாக வைத்துக் கொண்டால், திருமண சமயத்தில் இராஜேந்திர சோழ தேவர் கட்டளை வந்தால், மங்கல நாணை அங்கேயே எறிந்துவிட்டு நாகதேவியை மணையில் விட்டுவிட்டு ஓடி விடுவேன்" என்று உற்சாகமாகச் சொன்னான்.

இதைக் கேட்ட குருநாதருக்கு நகைப்பதா கோபிப்பதா என்று புரியாததால் அவர் திருதிருவென விழித்தார்.

www.cleanindians.com



"உதாரணம் சரியாயில்லை. என் சீடன் இப்படிப் பேசக் கூடாது" என்று சீடனைத் திருத்த முயன்றார்.

சீடன் திருந்துவதாயில்லை. "என் ராஜபக்தியைக் காட்ட இதைவிடச் சிறந்த உதாரணத்தைச் சொல்ல முடியுமா குருநாதரே?" என்று வினவினான்.

குருநாதருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் அவர் நாகதேவியைப் பார்த்தார். நாகதேவியின் இதழ்களில் குறுநகை விரிந்துகொண்டிருந்தது. முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது. "எப்படியாவது போகட்டும். ஒரு பெரிய நாட்டின் படைத்தலைவர் என்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னாரே, அதுவே எனக்குப் பெரிய கௌரவம்" என்றாள் தேவி.

"உதாரணத்துக்காகச் சொன்னேன்" என்றான் உபேந்திரன்.

"நமது வாக்கு தெய்வத்தால் இயக்கப்படுகிறது" என்று நாகதேவி சொன்னாள். "ஒன்று தெரியுமா உங்களுக்குப் படைத்தலைவரே! நாகப்பெண் ஒருத்தியை மணக்கப் போவதாக எந்த நாகன் ஒருமுறை கூறினாலும் போதும். பிறகு அவன் வேறு யாரையும் மணக்க முடியாது. இது நாகவம்ச விதி" என்றாள் நாகதேவி. இதைச் சொன்னபோது அவள் குரலில் தீர்மானமிருந்தது. வெற்றியும் ஒலித்தது.

அதுவரை குதூகலமாயிருந்த உபேந்திரனின் முகத்தில் சிறிது கவலைக்குறி படர்ந்தது. "அப்படியா இருக்கிறது விதி?" என்று குரலிலும் ஒலிக்கக் கேட்டான்.

"ஆம். வேண்டுமானால் குருநாதரைக் கேளுங்கள்" என்றாள் நாகதேவி.

கிடைத்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்ள குருநாதர் தயங்கவில்லை. "அப்படித்தான் விதி. நீ நாக

தேவியை மணப்பதைவிட வேறு வழியில்லை" என்றார் குருநாதர்.

சங்கடத்தை முகத்தில் காட்டினான் உபேந்திரன். "வேடிக்கையாகச் சொல்லப்பட்ட வார்த்தை குருநாதரே" என்று கெஞ்சவும் செய்தான்.

"திருமணம் வேடிக்கையா?" என்று குருநாதர் வினவினார்.

"இல்லை. அதைப் பற்றிப் பேசுவதுகூட அபாயம் என இப்பொழுது தெரிகிறது" என்ற உபேந்திரன், "எல்லா! எல்லா!" என்று அழைத்தான்.

உபேந்திரன் உள்ளே நுழைந்ததும் வெளியே போய்க் காத்திருந்த எல்லன் மீண்டும் உள்ளே நுழைந்தான். "எனக்கும் நாகதேவிக்கும் சிறிது மது கொண்டு வா" என்று உத்தரவிட்டான் உபேந்திரன். எல்லன் மதுவை இரு பாத்திரங்களில் கொண்டு வந்ததும் ஒன்றைத் தான் வாங்கிக் கொண்டு இன்னொன்றை நாகதேவியிடம் கொடுத்தான். பிறகு நாகதேவியை நோக்கி "தேவி! தமிழகத்தின் இந்த மது மிக இனிப்பானது. அருந்துங்கள். இதில் எந்தக் கலப்படமுமில்லை. தமிழ் மண்ணைப்போல் சுத்தமானது. அருந்துங்கள்" என்று கூறிவிட்டு, தான் முதலில் அருந்தினான்.

நாகதேவியும் மதுவை அலட்சியமாகக் குடித்தாள். "இனி நாம் பேசலாமா?" என்றாள்.

"குருநாதரே! தாங்கள் சற்று வெளியில் இருக்கிறீர் களா?" என்று கேட்டான் உபேந்திரன்.

"நான் எதற்கு வெளியில் போக வேண்டும்?" என்று கோபித்துக் கொண்டார் குருநாதர்.



"வேண்டாம் பக்கத்து அறையில் இருங்கள்" என்று கூறினான் உபேந்திரன்.

"அதுவும் வெளியில் போகிற மாதிரிதானே" என்று குருநாதர் ஆட்சேபித்தார்.

அப்பொழுது சீறி எழுந்தது நாகதேவியின் குரல், "குருநாதரே! அவர் சொல்கிறபடி செய்யுங்கள்" என்று.

அடுத்த விநாடி எல்லன் வந்து குருநாதரைப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தான். குருநாதர் உட்கார்ந்தார். இரவு ஏறிக்கொண்டிருந்தது. ஊரடங்கு நேரம் நெருங்கியும் நாகதேவியோ உபேந்திரனோ அடுத்த அறையை விட்டு வெளியே வரவில்லை. அவர் இருந்த அறையில் அதுவரை இருந்த மௌனத்தை அவரே கலைத்து, "இந்தத் திருமண விவகாரமே பெரும் தொல்லை" என்று வாய் விட்டுச் சொன்னார். அதற்கு இசை கூட்டுவதுபோல் அந்த அறையின் ஒரு மூலையிலிருந்து யாரோ முனகும் ஒலி கேட்டது. அந்த சத்தம் வரவர அதிகமாகி 'ஐயோ' என்ற வேதனைச் சொல்லில் முடிந்தது. குருநாதர் முகத்தில் கிலி பரவலாயிற்று.

## 10. காந்தருவம்

குருநாதர் தங்கியிருந்த அறையின் விளக்கு என்ன காரணத்தாலோ அதிகமாக இழுத்துவிடப்பட்டிருந்ததாலும் அறை மூலையிலும் ஒரு திரை தொங்கி அறையை இரண்டாகப் பிளந்திருந்ததாலும் ஏதேதோ யோசனைகள் குருநாதரின் மண்டையைக் குழப்பிக்கொண்டிருந்ததாலும், அந்த அறையில் முனகல் கேட்டதும், அது 'ஐயோ' என்ற தீனக் குரலில் முடிந்ததையும் கவனித்த குருநாதர் சித்தத்தில்

www.cleanindians.com

சந்தேகம் பெரிதாக எழவே தமது ஆசனத்திலிருந்து எழுந்து முனகல் தொடர்ந்து வந்து கொண்டிருந்த மூலையை நோக்கிச் சென்றார். அங்கிருந்த சீலையைச் சற்று நீக்கியதும் தனது காலில் யாரோ சரணடைந்து கிடப்பதைக் கவனித்துக் காலைச் சட்டென்று இழுத்துக்கொண்டு மறுபடியும் ஆசனத்தருகில் வந்து, "எல்லா! எல்லா!" என்று இருமுறை குரல் கொடுத்தார்.

அவர் குரல் கேட்டதும் எல்லன் அவசர அவசரமாக உள்ளே வந்து, "சுவாமி! அழைத்தீர்களா?" என்று வினவினான்.

குருநாதர் அவனைக் கோபத்துடன் பார்த்து, "அழைக்காமல் என்ன செய்வது?" என்று எரிச்சலுடன் பேசினார்.

எல்லன் வாய் புதைத்து, "அடிமை காத்திருக்கிறேன்" என்று குழைந்தான்.

www.cleanindians.com

குருநாதருக்கு அதுவரை இருந்த நிதானமெல்லாம் பறந்துவிடவே என்ன கேட்கிறோமென்பதை அறியாமல், "எதற்காகக் காத்திருக்கிறாய்?" என்று வினவினார்.

"தங்கள் ஆணையை நிறைவேற்ற" என்று மேலும் குழைந்தான் எல்லன்.

குருநாதர் பொறுமையை அடியோடு இழந்தார். "இந்த விளக்கின் திரியை ஏன் இழுத்து வைக்கிறாய்?" என்று வினவினார்.

"குருநாதருக்குக் கண் கூசக்கூடாது என்பதற்காக." இதை எல்லன் கெஞ்சும் குரலில் கூறினான்.

"கண் கூசக்கூடாது என்பதற்காகவா? தெரியக் கூடாது என்பதற்காகவா?" குருநாதர் குரலில் உஷ்ணம் ஏறி இருந்தது.



"கூசக்கூடாது என்பதற்காகத்தான்."

"இல்லை."

"சரி."

"தெரியக்கூடாது என்பதற்காகத்தான்."

"சரி."

"என்னடா 'சரிசரி' என்று சரளி வரிசை பாடுகிறாய்?"

"குருநாதரின் சொற்களை எதிர்த்துப் பேசுவது அபசாரம் என்று எசமானர் அடிக்கடி சொல்லுவார்."

"சொல்லுவாரா?"

"ஆமாம். குருநாதரிடம் எசமானுக்குள்ள பயபக்தி இந்த நாகையே அறியும்."

"அறியுமா?"

"ஆமாம்."

"ரொம்ப சந்தோஷம்!"

"தங்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதே எங்கள் நோக்கம்."

குருநாதர் எல்லன் இடக்கை சமாளிக்கும் நிலையில் இல்லை. "டேய் எல்லா!" என்று கடுமையாக அழைத்தார்.

"சுவாமி" என்று கேட்டான் எல்லன்.

"இந்த விளக்கைத் தூண்டிக் கையில் எடுத்துக் கொள்" என்று உத்தரவிட்டார்.

குருநாதர் சொன்னபடி விளக்கைத் தூண்டி கையி லெடுத்துக்கொண்ட எல்லனை நோக்கிய சுத்தானந்தர், "விளக்குடன் அந்த மூலைக்குப் போ" என்று உத்தர விட்டு, அவன் போக முற்பட்டதும் தானும் அவனைத்

தொடர்ந்தார். சீலையருகில் இருவர் வந்ததும், "அந்தச் சீலையை அகற்று" என்று கூறினார்.

சொன்னபடி எல்லன் செய்ததும் கீழே கிடந்த மனிதனைச் சுட்டிக்காட்டிய குருநாதர், 'இவன் யார்?' என்று வினவினார்.

"தெரியாது" என்றான் எல்லன்.

அந்தச் சமயத்தில் அந்த மனிதன் மேலும் இருமுறை முனகினான்.

"ஏன் முனகுகிறான்?" என்று கேட்டார் குருநாதர்.

எல்லன் கீழே கிடந்தவனை கவனியாமலே சொன்னான், "இவன் மண்டையில் சிறிது அடிபட்டிருக்கிறது" என்று.

அந்த மனிதனைக் கூர்ந்து எல்லன் ஏந்தி நின்ற விளக்கொளியில் கவனித்த சுத்தானந்தர், "ஆம், அடிபட்டிருக்கிறது. அதுவும் பலமான அடியாயிருக்க வேண்டும். தலையில் போட்டுள்ள கட்டுக்கு மேலும் இரத்தம் கசிந்திருக்கிறது" என்று கூறினார். அத்துடன் கேட்டார், "இந்த நிலையிலிருக்கும் இவன் வாயில் ஏன் துணியடைத்திருக்கிறீர்கள்?" என்று.

"முதலில் வேண்டாமென்றுதான் பார்த்தேன்" என்று இழுத்தான் எல்லன்.

"உம்."

"இவன் பெரிதாகக் கத்தினான். எசமானுக்குத் தொந்தரவாயிருக்கப் போகிறதென்று வாயில் துணியடைத்தேன்."

"சரி, கைகளை ஏன் கட்டியிருக்கிறாய்?"



"வாய்த் துணியை எடுக்காமலிருக்க."

இதைக் கேட்ட குருநாதரின் உள்ளம் எரிமலையாகவே, "எல்லா! யாரிடம் விளையாடுகிறாய் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறாயல்லவா?" என்று வெடித்தார்.

"சுவாமி! யாரிடமும் விளையாடும் நிலையில் நான் இல்லை. எசமான் இடும் கட்டளையைச் செய்கிறேன்" என்று பதில் கூறினான்.

"இவன் என்ன குற்றம் செய்தான்?" என்று மீண்டும் கேட்டார் குருநாதர்.

"தெரியாது சுவாமி."

"குற்றம் செய்தவன்தானா என்பதாவது தெரியுமா?"

"எசமானர் தாமே சிறை செய்துகொண்டு வந்திருக்கும் போது குற்றவாளியாகத்தானிருக்க வேண்டும்."

"குற்றவாளியாயிருந்தால் சிறையில் ஏன் அடைக்கவில்லை?"

"எசமானரைத்தான் கேட்க வேண்டும்."

இதைக் கேட்ட குருநாதர், "டேய் எல்லா! நீ பாவம். ஒன்றும் தெரியாத பூனை இல்லை; நுழைநரி" என்று கூறிவிட்டு, "உன் எசமானர் இவனை எப்பொழுது எவ்விடத்திலிருந்து கொண்டு வந்தார்?" என்று வினவினார்.

"நீங்கள் வருவதற்குச் சற்று முன்புதான் கொண்டு வந்தார். கொண்டு வந்து இவனைக் கட்டிப் போட்டு வைக்கும்படி சொல்லிவிட்டு மீண்டும் வெளியே சென்றார்" என்று இம்முறை உண்மையை அப்படியே சொன்னான்.

இதைக் கேட்ட குருநாதர் சிந்தனை வசப்பட்டார். தனக்கும் தெரியாமல் ஏதோ சில்மிஷம் நடப்பதைப் புரிந்து

www.cleanindians.com

கொண்டார். நாகதேவியை இரவு அழைத்து வரும்படி சொன்னதும் தமது ஆசிரமத்திலிருந்து மருதி தூக்கிச் செல்லப்பட்ட நேரத்திற்கும் தாங்கள் இங்கு வரும் நேரத்திற்கும் உள்ள இடைவெளியை உபேந்திரன் பயன்படுத்திக் கொண்டிருப்பதையும் உணர்ந்தார். நாகதேவியின் அவசரத்துக்கும் துடுக்குக்கும் இது தேவைதானென்பதை மனத்துக்குள் சொல்லிக்கொண்டாலும், இது தம்மையும் பாதிக்குமென்ற காரணத்தால் "சரி எல்லா! நீ வெளியே போகலாம்" என்று உத்தரவு கொடுத்தார்.

எல்லன் வெளியே சென்றதும் பெரும் துரிதத்தைக் காட்டிய குருநாதர் கதவை உட்புறம் தாளிட்டுவிட்டுத் திரைச் சீலையின் அருகில் கிடந்தவன் வாயிலிருந்த துணியை எடுத்தார். துணி எடுக்கப்பட்டதால் அவன் "ஐயோ! வலிக்கிறதே!" என்று பெரிதாக அலறினான்.

www.cleanindians.com

அவனை அப்படியே அறைந்து கொன்றுவிட வேண்டும் போல் கோபம் வந்தாலும் அதை அடக்கிக் கொண்ட குருநாதர் அறை மூலையிலிருந்த பாத்திரத்திலிருந்து கையில் சிறிது நீரை எடுத்து வந்து அவன் முகத்தில் அடிக்கவே அவன் மெதுவாகக் கண்ணைத் திறந்தான். அவன் முகத்தை விளக்கொளியில் ஊன்றிக் கவனித்த குருநாதர் அவன் தனது ஆசிரமத்துக்கு நாகதேவியுடன் வந்த சாவகக் கப்பலின் மாலுமிகள் இருவரில் ஒருவன் என்பதை உணர்ந்து கொண்டார். அவன் கண்விழித்து ஏதோ சொல்ல முற்பட்டதும், "மெதுவாகப் பேசு" என்று எச்சரிக்கை செய்த குருநாதர் "என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

அவன் பேச முடியவில்லை என்று ஜாடை காட்டவே அவன் வாயில் சிறிது நீரைப் புகட்டினார் குருநாதர். பிறகு பேச ஆரம்பித்த அவன் "தேவி எங்கே?" என்று வினவினான்.



"தேவியாவது மண்ணாங்கட்டியாவது, நடந்ததைச் சொல்" என்று மிரட்டினார் சுத்தானந்தர்.

அவன் குழறிக் குழறிப் பேசினான், தலையிலிருந்த காயத்திலிருந்து இரத்தம் சேதப்பட்டு விட்டதன் காரணமாக. "தேவியின் கட்டளைப்படி அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு சென்றோம்!" இங்கு அவன் சிறிது தடுமாறினான்.

"உம் சொல்" ஊக்கினார் குருநாதர்.

"அப்படியே செய்தோம். நாகலிங்கக் காட்டில் இருந்த ஊர்க்காவலன் ஒருவன் புரவியில் வந்துகொண்டிருந்தான். நாங்கள் மறைய முயன்றோம்; அவன் விடவில்லை. 'நீங்கள் யார்?' என்று கேட்டான்" என்று மாலுமி திணறினான்.

அறை மூலைக்குச் சென்ற குருநாதர் அங்கிருந்த பிறைகளில் ஏதோ தேடினார். பிறகு ஒரு சிறு மதுக்குப்பியைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து மாலுமியின் வாயில் சிறிது ஊற்றினார். அவன் மடக் மடக்கென்று இரு வாய் குடித்து விட்டுப் பேசத் துவங்கினான். இம்முறை அவன் குரல் தெம்பாயிருந்தது. "அந்த வீரனிடமிருந்து நாங்கள் தப்பப் பார்த்தோம். நாகதேவி ஒப்படைத்த பெண்ணை இருவரும் தூக்கிக்கொண்டிருந்ததால் ஓட முடியவில்லை. எனது நண்பனிடம் அந்தப் பெண்ணை ஒப்படைத்துவிட்டு நான் என் வாளை எடுக்க முயன்றேன். அந்த வீரன் 'வாளை எடுக்காதே!' என்று மிரட்டினான். அவன் குரலில் எச்சரிக்கை பலமாக இருந்தது. இருப்பினும் நான் வாளை உருவினேன். வாளை அவன் வாளால் தட்டிவிட்டான் புரவியிலிருந்தபடி. இதைக் கண்ட என் நண்பன் பெண்ணைக் கீழே கிடத்திவிட்டுத் தன் வாளை உருவிக்கொண்டு என் துணைக்கு வந்தான். புரவியிலிருந்த வீரன் கீழே குதித்து எனது நண்பன் வாளைத் தனது வாளால் சந்திப்பதற்குப்

பதிலாக அவன் வாள் கரத்தின் மணிக்கட்டைப் பிடித்து உலுக்க எனது நண்பன் வாள் கீழே விழுந்தது. அதை தூர உதைத்துத் தள்ளிய அந்த வீரன் அந்தப் பெண்ணை மூடியிருந்த சீலையை நீக்கச் சொன்னான். எனது நண்பன் நீக்கப் போகவே அந்த வீரனும் அந்தப் பெண்ணை நோக்கிக் குனிந்தான். அதுதான் சமயமென்று நான் உதைக்கப்பட்டு அருகில் கிடந்த எனது நண்பன் வாளை எடுத்து அவன் முதுகில் பாய்ச்சிவிட முயன்றேன். அந்த வீரன் முதுகிலும் கண் இருந்திருக்க வேண்டும். திடீரென்று திரும்பித் தனது வாளால் என் மண்டையில் அடித்தான். நான் சுரணை யற்று விழுந்தேன். பிறகு எதுவும் எனக்குத் தெரியாது. சுரணை வந்தபோது இங்கிருக்கிறேன். நல்லவேளை தாங்கள் வந்தீர்கள்" என்று நடந்ததை விவரமாகச் சொன்னான்.

குருநாதர் முகத்தில் கிலி பரவியது. 'நான் வந்தது நல்ல வேளையா' என்று தம்மைத்தாமே நொந்துகொண்டார். காரியம் மிஞ்சிவிட்டதையும் புரிந்துகொண்டார். அநேகமாக அந்த இன்னொரு மாலுமியும் கொல்லப்பட்டிருப்பான் என்பதையும் எந்த நிமிடத்திலும் நாகதேவியையும் தம்மையும் உபேந்திரன் சிறை செய்யக்கூடிய நிலைமையிலிருக்கிறான் என்பதையும் சந்தேகமறத் தெரிந்துகொண்டதால் சோகப் பெருமூச்சு விட்டார். அந்த சமயத்தில் அந்த அறைக்கதவு லேசாகத் தட்டப்பட்டது.

அவசர அவசரமாக திரைச்சீலையைத் தொங்கவிட்டு சாவக மாலுமியை சத்தம் செய்ய வேண்டாமென்று எச்சரித்துவிட்டுக் கதவைத் திறந்தார் குருநாதர். கதவருகில் நின்றிருந்த எல்லன், "சுவாமி! தங்களுக்கு விருந்து காத்திருக் கிறது" என்றான்.

"விருந்தா?" என்று வாயைப் பிளந்தார் குருநாதர்.

www.clearindians.com



"ஆம் சுவாமி; எசமானரும் அரசகுமாரியும் தங்களுக் காகக் காத்திருக்கிறார்கள்" என்று கூறிய எல்லன், குருநாதர் அறை மூலையில் கண் ஓட்டியதைக் கண்டதும், "அவனைப் பற்றிக் கவலை வேண்டாம் நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று தைரியம் சொன்னான்.

"அவனைப்பற்றி எனக்கென்ன கவலை?" என்று கேட்டுவிட்டு எல்லனைத் தொடர்ந்தார் குருநாதர்.

எல்லன் அவரை அடுத்த அறையில் கொண்டுவிட்டுச் சென்றான். அந்த அறைக்குள் உபேந்திரன் அருகில் அவன் பஞ்சணையில் உட்கார்ந்திருந்தாள் நாகதேவி. அவள் முகத்தில் மகிழ்ச்சி நிரம்பிக் கிடந்தது. மகிழ்ச்சிக்குக் காரணம் குருநாதருக்குத் தெரியாததால் சிடுசிடுவென்ற மூஞ்சியுடன் பஞ்சணைக்கு எதிரேயிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தார்.

"சுவாமி! உமது முகத்தில் மகிழ்ச்சியைக் காணோமே என்ன நடந்தது?" என்று வினவினான் உபேந்திரன்.

"நீங்களிருவரும் மகிழ்ச்சியாயிருக்கிறீர்களே, அதுவே போதும்!" என்றார் குருநாதர். அவர் குரலில் திகில் லேசாகத் தெரிந்தது.

அவர் மேற்கொண்டு பேசுவதற்கு முன்பு எல்லன் உணவுப் பொருள்களை மூன்று வெள்ளித் தட்டுகளில் ஏந்தி வந்தான். பஞ்சணையில் இரு தட்டுகளை வைத்து விட்டு ஒரு தட்டை சுவாமியிடம் கொடுத்தான். தட்டுகளில் சித்திரான்னங்கள், பழவகைகள் வைக்கப்பட்டிருந்தன. நாகதேவியும் உபேந்திரனும் உற்சாகத்துடன் உணவருந்தி னாலும் குருநாதர் இரண்டொரு பழங்களை மட்டும் எடுத்துக்கொண்டு தட்டைக் கீழே வைக்க முயன்றார்.

அதைக் கைநீட்டி வாங்கிக்கொண்டான் எல்லன்.

"சுவாமி ஏதும் சாப்பிடவில்லையே?" என்று விசாரித்தான் உபேந்திரன்.

"பசியில்லை" என்றார் குருநாதர்.

"அப்படித்தானிருக்கும்" என்றான் உபேந்திரன்.

"எப்படித்தானிருக்கும்?" எரிந்து விழுந்தார் குருநாதர்.

"உணவு நேரம் தாண்டிவிட்டது. துறவிகள் காலப்படி நேரப்படிதான் சாப்பிட முடியும்?" என்று கூறிய உபேந்திரன் "எங்கள் வயது ஆசிரமம் இரண்டும் வேறு" என்று குறிப்பிட்டான்.

"என்ன ஆசிரமம்?" என்று சந்தேகத்துடன் கேட்டார் குருநாதர்.

நாகதேவி மெல்ல நகைத்தாள். "சொல்லிவிடட்டுமா?" என்று உபேந்திரனைப் பார்த்துக் கேட்டாள்.

"எப்படியும் தெரியப் போகிறது. சொல்லிவிடேன்!" என்றான் உபேந்திரன்.

அவன் தேவி என்ற மரியாதைச் சொல்லைக் கைவிட்டதையும், 'சொல்லிவிடேன்' என்று சொந்தக்காரன் போல் தேவியை அழைப்பதையும் பார்த்த சுத்தானந்தர் மனத்தில் சுத்தம் ஆனந்தம் இரண்டுமே மறைந்துவிட்டதால் "சொல் தேவி" என்று கடுமையாகக் கேட்டார்.

நாகதேவி குருநாதர் மீது திகைக்க சொற்களை வீசினாள். "படைத்தலைவர் தம்மைத் திருமணம் செய்து கொள்ளும்படி என்னைக் கேட்டார். நானும் ஒப்புக்கொண்டு விட்டேன்" என்று தேவி கூற, குருநாதர் பிரமித்தாரென்றால் அவர் பிரமிப்பை ஆயிரம் மடங்கு உயர்த்தும்படியான சொற்களை உபேந்திரன் உதிர்த்தான். "நாங்கள் முறையான திருமணத்திற்குக் காத்திருக்கப் போவதில்லை" என்று கூறினான் படைத்தலைவன்.

"புரியவில்லை" என்றார் குருநாதர்.



"காந்தருவம் எங்களுக்கு உண்டு. ஆகையால் நாக தேவி இன்றிரவு என்னுடன் தங்குகிறாள். நீங்கள் ஆசிரமம் செல்லலாம்" என்று கூறினான் உபேந்திரன்.

எல்லன் எங்கிருந்தோ தோன்றி, "குருநாதரே! வாருங்கள் என்றழைத்தான். குருநாதர் குழம்பிய உள்ளத்துடன் எழுந்து நின்றார். ஒருமுறை இருவரையும் பார்த்தார். பிறகு அறையிலிருந்து வெளியேறினார். வெளியே வந்ததும் சிறிது திரும்பி நோக்கினார். அவர் முகத்திற்கு நேரே அறைக் கதவு தாளிடப்பட்டது. உள்ளிருந்து இருவர் நகைக்கும் ஒலி அவர் காதில் தெளிவாகக் கேட்டது.

## 11. சிற்பியும் சிற்பமும்

உபேந்திரன் இல்லத்தைவிட்டு வெளிப்போந்த குருநாதர் மனம் பலவிதத்திலும் குழம்பியிருந்ததால் அவர் நேராகத் தமது ஆசிரமத்தை நோக்கிச் செல்லாமல் கால் போன வழிப்படி நடக்கலானார். அப்படி நடந்தபோது தமது மூளை கூர்மையிழந்து மங்கிவிட்டதை அடிக்கடி நினைத்துத் தம்மை மிகவும் நொந்துகொண்டார். நாகதேவியும் உபேந்திரனும் ஒன்றாயிருக்கும் சமயத்தில் பக்கத்து அறையில் அடியுண்டு கிடந்த சாவகத்தின் மாலுமியைப் பற்றி தாம் ஏதும் பிரஸ்தாபிக்காதது ஏன் என்று தம்மைத்தாமே வினவிக் கொண்டார். முதலில் உபேந்திரன் சீனத்துக் கப்பலை சோதிக்கப் போவதாகச் சொன்னதும் ஏதோ சிலாம்பில் அங்கி மாட்டிக் கிழிந்ததாகச் சொன்னதும் சுத்தப் பொய் என்பதையும், வாட்போர் நடந்ததை மாலுமி சொன்ன பிறகும் தாம் ஏன் அதைக் குறிப்பிட்டு நாகர் தலைவனை மடக்கவில்லை என்றும் கேட்டுக்கொண்டார். எல்லாவற்றுக்கும் தமது மூளை கெட்டுப் போய்விட்டதுதான் காரணம்

என்று முடிவு கட்டினார். "என் மூளை மட்டுமென்ன? நாகதேவியின் மூளையும் கணிமண்ணாகிவிட்டது" என்று அவளையும் கடிந்துகொண்டார். "காமத்தால் கண்ணிழந்து விட்டாள் நாகதேவி. இதற்குத்தான் பெண்களை நம்பி அரசியலில் புகக்கூடாது" என்ற தத்துவத்தையும் எடுத்துச் சொல்லி நாகதேவியைப் பெரிதும் சபித்தார். அத்துடன் நாகதேவியும் உபேந்திரனும் எந்த நிலையில் இருப்பார்கள் என்றும் எண்ணி, "சே! இது துறவி எண்ணக்கூடிய எண்ணமா?" என்று தம்மை வெறுத்தும் கொண்டார்.

இத்தனைக்கும் உபேந்திரன் மீது அவருக்கிருந்த நம்பிக்கை போகவில்லை. 'உபேந்திரனை நான் சில ஆண்டுகளாக அறிவேன். பெண் வலையில் அவன் அத்தனை சீக்கிரம் விழுபவனல்லவே? அப்படியானால் காந்தருவத்தைப் பற்றிப் பேசினானே, அது உண்மைதானா?' என்றும் நினைத்தார். 'ஆனால் நாகதேவியின் இணையிலா அழகில் எந்த ஆடவனும் மயங்குவான். அவனாக மயங்கா விட்டால் மயங்க வைக்கும் திறன் நாகதேவிக்கு உண்டு' என்றும் சொல்லிக்கொண்டார் உள்ளத்துள். தம் மனத்துள் எழும் இந்த ஆட்சேபணை சமாதானங்களுக்கு உபேந்திரன் அறையில் அந்த சமயத்தில் நடக்கும் காந்தருவம் அல்லது காம நாடகம் எத்தன்மையானதென்பதற்கு ஆண்டவன்தான் பதில் சொல்ல முடியும் என்ற தீர்மானத்தின் விளைவாகப் பெருமூச்சொன்றும் விட்டார்.

இத்தகைய நினைப்புகளுடன் போகும் திசையை எண்ணாமல் நடந்த சுத்தானந்தர் மெல்ல ஆசிரமப் பாதையி லிருந்து விலகி முக்கால்வாசி முடிந்து நின்ற சூடாமணி விஹாரத்துக்கு வந்து சேர்ந்து அங்கிருந்த பாறாங்கல் படியொன்றில் உட்கார்ந்து கொண்டார். சில விநாடிகள் கழித்து அண்ணாந்து பார்த்தார். விஹாரத்தின் தூண்களின்

www.cleanindians.com



வேலை முடிந்துவிட்டதையும் கூரை வேலை முடிந்து விட்டால் பிறகு உள்வேலையைக் கவனிக்கலாமென்றும் எண்ணினார். அந்த எண்ணத்தால் அவர் முகம் மலர்ந்தது. "உள்வேலை துவங்கியதும் இராக்காலங்களில் நிலவறை வேலையைத் துவங்கலாம். விஹாரத்தின் நிலவறையில் அரண்மனையைத் தோற்கடிக்கும் கூடமும் அறைகளு மிருக்கும். சாவகத்தின் மன்னர் யாருக்கும் தெரியாமல் இங்கு தங்கலாம்" என்று எண்ணிய சுத்தானந்தர் உண்மையில் சுத்தராக இல்லாவிட்டாலும் ஆனந்தமயமாகக் காட்சி யளித்தார். அவர் முகமலர்ச்சியை நீண்ட நேரமாக அவன் எதிரே நின்ற மனிதனும் கவனித்தாலும் அவன் ஏதும் பேசவில்லை.

சுத்தானந்தர் தமது கனவு நிலையிலிருந்து சுயநிலைக்கு வந்த பிறகுதான் எதிரே நிற்கும் மனிதனைக் கவனித்தார். அவனைக் கண்டதும் அவர் முகம் முன்னைவிட அதிகமாக மலர்ந்தது. அவன் வரவு சுபசூசகம் என்று எண்ணியதால் என்ன சொல்கிறோம் என்பதை அறியாமல், "மாணிக்க ஸ்தபதி! நீர் உண்மையில் மாணிக்கந்தான். இப்படி வாரும் என் பக்கத்தில் அமரும்" என்று அழைத்தார்.

வயோதிகரான மாணிக்க ஸ்தபதி பிரமித்தார். "சுவாமி! என்னை பரீட்சை செய்கிறீர்களா?" என்று பிரமிப்புடன் கேட்டார்.

"பரீட்சையா! என்ன பரீட்சை?" என்று குருநாதர் வினவினார்.

"தங்களுக்கு சமமாக நான் என்று உட்கார்ந்திருக் கிறேன்?" என்று வினவினார் ஸ்தபதி.

அப்பொழுதுதான் விழித்துக்கொண்ட சுத்தானந்தர் "உம்மிடமுள்ள மரியாதையால் மறதியாகச் சொல்லி

விட்டேன். ஆனால் உட்கார்ந்தாலும் தவறில்லை" என்று சொன்னார்.

மேலும் பிரமித்த ஸ்தபதி "நான் வெறும் சிற்பி, கல்லைச் செதுக்குபவன்..." என்று கூறினார்.

"நீ கால வெள்ளத்தில் நிற்பாய். நாங்கள் மறைந்து விடுவோம்" என்றார் சுத்தானந்தர்.

"குருநாதர் பெயர் மட்டும் எப்படி மறையும்? எந்த முனிவரின் பெயர் இதுவரை மறைந்திருக்கிறது?" என்று கேட்டார் ஸ்தபதி.

ஸ்தபதி கேட்டது மிகவும் திருப்தியாயிருந்ததால் குருநாதர் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. பதில் சொன்னபோது யார் பெயர் வரலாற்றில் நிலைக்கும் என்பதைப் பற்றியும் பேசவில்லை. "இந்த விஹாரத்தின் கூரை எப்பொழுது முடியும்?" என்று வினவினார்.

"மூன்று மாதங்களில் முடியும்" என்றார் ஸ்தபதி.

"அதற்குள் முடிந்துவிடுமா?"

"முடிந்துவிடும்."

"எப்படி? எத்தனை கருங்கற்கள் மேலே ஏற்றப்படும்?"

"மேலே கருங்கல் ஏற்றும் வழக்கமில்லை. கண்டி பிடித்து கூரையை வளைத்து வண்ணச் சித்திரங்களை எழுத வேண்டும். போதிசத்துவரின் வாழ்க்கையை எழுதுவதுதான் வழக்கம் புத்த விஹாரங்களில்."

"ஆம், ஆம்" என்று சொன்ன சுத்தானந்தர், "ஏன் கூரையை இன்னும் சற்று துரிதமாக முடிக்க முடியாதா?" என்று வினவினார்.

ஸ்தபதி வியப்பை முகத்தில் காட்டினார். "தங்களுக்குத் தெரியாதது ஏதுமில்லை. கண்டி பிடித்து இறுகுவதற்கு ஒரு மாதமாகும். பிறகு வெள்ளை வைக்க இன்னொரு மாதம்.



மூன்றாம் மாதத்தில் சித்திரம் தீட்டலாம். அதற்கு முன்பு எதைச் செய்தாலும் கூரை தரையில் இறங்கும்" என்று விளக்கினார் ஸ்தபதி. அத்துடன் வினவினார்: "ஏன் குரு நாதரே! என்றுமில்லாத விந்தையாக ஏதேதோ கேட்கிறீர்களே, மாணிக்க ஸ்தபதியிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லையா?" என்று.

"நம்பிக்கையில்லாமலில்லை ஸ்தபதி. சாவக மன்னர் அடிக்கடி ஓலை விடுக்கிறார் முடிந்ததா என்று, அதனால் கேட்டேன். தவிர கூரை முடிந்துதானே நிலவறை கட்ட வேண்டும்?" என்றார் சுத்தானந்தர்.

"அதற்குத்தான் இடம் விட்டிருக்கிறோம். அப்படி நிலவறையில் என்ன பெரிய வேலை. சாவகத்திலிருந்து வரும் பொருள்களை அடைத்து வைக்கத்தானே கட்டுகிறோம்?" என்று ஸ்தபதி சொன்னதும் சுத்தானந்தர் சிறிது மென்று விழுங்கினார்.

"என்ன ஸ்வாமி?" என்று மாணிக்க ஸ்தபதி வினவினார் குருநாதரின் சங்கடத்தைப் பார்த்து.

குருநாதர் சமாளித்துக்கொண்டு பேசினார். "இல்லை ஸ்தபதி! நிலவறை கட்டத்தான் கட்டுகிறோம். அதை கிடங்காகக் கட்டுவானேன்? ஏன் அரசு விருந்தினர் தங்குமாறும் கட்டினால் என்ன என்று யோசித்தேன்" என்றார் சுத்தானந்தர் மெதுவாக.

"அரசு விருந்தினர் மாளிகையைத்தான் இராஜேந்திர சோழதேவர் நாகையில் பெரிதாக நிர்மாணித்திருக்கிறாரே. அதிருக்க நிலவறையில் எதற்காகத் தங்கவேண்டும்?" என்று ஸ்தபதி கேட்டார்.

"தங்கப் போவதில்லை. ஆனால் நமது சிற்பத்திறன் கண்டு சாவகத்தார் பிரமிக்க வேண்டாமா?" என்றார் குருநாதர்.

www.cleanindians.com

"சுவாமி!" என்று மரியாதையுடனும் மெதுவாகவும் ஸ்தபதி அழைத்தார்.

"என்ன ஸ்தபதி?" குருநாதர் குரலில் குழைவும் இருந்தது, பயமும் இருந்தது.

"மாணிக்க ஸ்தபதி இன்றுவரை பெருமைக்காக வேலை செய்யவில்லை. யாரும் மெச்சுவதற்காகச் செய்ய வில்லை."

"உமக்கு வேண்டாம் பெருமை. ஆனால் எங்களுக்கு?"

"துறவியான குருநாதருக்கு மட்டும் எதற்குப் பெருமை?"

இதைக் கேட்ட குருநாதர் சிறிது தயங்கினார். "ஸ்தபதி! உம்மிடம் ஒன்றைச் சொல்லக் கூடாதென இருந்தேன். ஆனால் மறைப்பதில் பயனில்லை. சாவக மன்னர் புத்த மதத்தில் தீவிர அக்கறை உள்ளவர்..." என்று சிறிது பேச்சை நிறுத்தினார்.

"மகிழ்ச்சி" என்றார் ஸ்தபதி.

"அவருக்கு ஒரு தியான அறை வேண்டுமாம். அது நிலவறையாக இருந்தால் தியானத்துக்குக் குந்தகம் இருக்காதாம்" என்றார் சுத்தானந்தர்.

"அப்படிச் செய்தி ஏதாவது வந்திருக்கிறதா?"

"ஆம்."

"ஓலை அனுப்பியிருக்கிறார்களா?"

"ஆளையே அனுப்பியிருக்கிறார்கள்."

"தூதுவர் எப்பொழுது வந்தார்?"

"இரண்டு நாள்களாயிற்று."

"எனக்குத் தெரியவில்லையே?"

"சாவகத்திலிருந்து ஒரு மரக்கலம் வந்திருக்கிறது."

"ஆமாம், அதைப்பற்றி மக்கள் பேசிக்கொண்டார்கள்."



"என்னவென்று?"

"அதில் யாரோ மாயக்காரி வந்திருக்கிறாளாம்."

"அப்படியா பேசிக்கொள்கிறார்கள்?"

"ஆம். நமது மருதியின் தாய்மாமனைக் கொலை செய்ய முயன்றாளாம். படைத்தலைவர்தான் தப்புவித்தாராம்."

ஸ்தபதி சொற்களைக் கேட்ட குருநாதர் ஸ்தம்பித்தார். "சுத்தப் புரட்டு, ஸ்தபதி! வந்திருப்பவள் சாவக நாகர் குலத்தாரின் தலைவி. நாகதேவி என்று அழைக்கப் படுகிறாள். அவள்தான் சாவக மன்னரின் தூதுவராக வந்திருக்கிறாள். அவள் எதற்காகப் போயும் போயும் மருதியின் மாமனைக் கொல்ல வேண்டும்?" என்று குருநாதர் சொன்னார். அத்துடன் நிறுத்தவில்லை குருநாதர். "இப் பொழுது அந்த நாகதேவி நமது படைத்தலைவர் உபேந்திரன் மாளிகையில் இருக்கிறாள்" என்றும் விளக்கினார்.

இது இன்னும் வியப்பாக இருக்கவே ஸ்தபதி கேட்டார், "இந்த நேரத்திலா?" என்று.

"ஆம்."

"படைத்தலைவர் பிரும்மச்சாரியாயிற்றே."

"அதனாலென்ன?"

"நாகதேவி வயதான மூதாட்டியா?"

"சே! என்ன கேள்வி?"

"இல்லாவிட்டால் உபேந்திரர் தமது மாளிகையில் ஒரு பெண்ணை எப்படித் தங்க வைப்பார்?"

இதைக் கேட்டதும் பின்னாலிருந்த யாரோ நகைத் தார்கள். "ஸ்தபதி! நாகதேவியைப் பாராமலே எடை போட வேண்டாம். திரும்பிப் பாரும்" என்றான் உபேந்திரன்.

www.cleanindians.com

இந்த சமயத்தில் மாணிக்க ஸ்தபதி மீது கண்களைத் திருப்பிய உபேந்திரன், "ஸ்தபதி, சுவாமிக்குப் பொருந்தாத விஷயம் ஏதுமில்லை. ஸ்வாமி சகலமும் அறிந்தவர். எங்கள் இருவரைப் பற்றியோ, சூடாமணி விஹார நிர்மாண விஷயத்தைப் பற்றியோ, அரசியலைப் பற்றியோ, எதுவும் சொல்ல சுவாமிக்கு உரிமை உண்டு" என்று கூறிவிட்டு, "ஸ்தபதி, நிலவறை அமைப்புப்பற்றி திட்டமிட்டு விட்டீரா?" என்று வினவினான்.

"ஆகா! ஒரு படம் வரைந்திருக்கிறேன். அதை வைத்து சின்னஞ்சிறு மரத்துண்டுகளால் மாதிரி ஒன்று முதலில் செய்ய வேண்டும். ஆசாரி வெளியூர் போயிருக்கிறார். வந்ததும் மாதிரி அறையை முடித்துவிடுகிறேன்" என்றார் ஸ்தபதி.

"படத்தை எப்பொழுது பார்க்கலாம்?" என்று வினவினான் உபேந்திரன்.

"இப்பொழுதுகூடப் பார்க்கலாம்."

"தேவியை அழைத்துக்கொண்டு இப்பொழுது வருவதற் கில்லை. நாளைக் காலையில் நீரே என் மாளிகைக்குக் கொண்டுவந்து விடலாமே?"

"கொண்டு வருகிறேன், எத்தனை நாழிகைக்குக் கொண்டு வரலாம்?"

"சுமார் பத்து நாழிகைக்கு."

"சரி படைத்தலைவரே" என்ற ஸ்தபதி குருநாதருக்கும் தலைவணங்கி அந்த இடத்திலிருந்து நகரப் பார்த்தார்.

"சற்று இருங்கள் ஸ்தபதி" என்று அவரைத் தேக்கிய உபேந்திரன், "நான்கூடப் பார்க்க வேண்டுமென்பதில்லை; தேவியும் குருநாதரும் பார்த்தாலே போதும். அவ்விருவர்

www.cleanindians.com



இஷ்டப்படி அறையை அமைத்து விடுங்கள்" என்றும் சொன்னான்.

"உத்தரவு" என்றார் ஸ்தபதி.

"ஸ்தபதி!" என்று அழைத்தான் உபேந்திரன் மெதுவாக.

"என்ன படைத்தலைவரே?" என்று வினவினார் ஸ்தபதி.

"நீங்கள் நினைத்ததுபோல் நாகதேவி மாயக்காரி அல்லள்" என்று சுட்டிக்காட்டிப் பக்கத்திலிருந்த நாகதேவி யைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்.

ஸ்தபதி சிறிது சங்கடத்துக்குள்ளானார். "ஊரில் பேசிக் கொண்டதைத்தான் சொன்னேன். என் சொந்த அபிப்பிராய மல்ல அது" என்றார் ஸ்தபதி.

"ஊர் அபிப்பிராயத்தைத் திருத்த வேண்டியது உமது கடமை. வெளிநாட்டு தூதர் ஒருவரைப் பற்றி வீண் வம்பு எதையும் இராஜேந்திர சோழதேவர் விரும்ப மாட்டார்" என்று சற்று வலியுறுத்தியே சொன்னான் உபேந்திரன். அத்துடன் நாகதேவியின் இடையில் தனது இடது கையைச் செலுத்திச் சிறிது அழுத்தியும் கொடுத்தான்.

ஸ்தபதியின் கண்களிலிருந்து அந்த இன்பநிலை தப்பாததால், "படைத்தலைவரே! உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது என்ற பழமொழி தங்களுக்குத் தெரியாததல்ல" என்ற ஸ்தபதி "அநாவசிய வதந்திகளுக்குப் பெரிதாய் இடங்கள் கொடுக்காதிருப்பதுகூட நல்லது" என்றும் சொன்னார்.

இதைக் கேட்டதும் அதுவரை மௌனம் சாதித்த சுத்தானந்தர் கொதித்து எழுந்தார். "ஸ்தபதி! படைத் தலைவரை எதிர்த்துப் பேசும் அளவுக்கு உமது நிலைமை உயர்ந்துவிட்டதா?" என்று வினவினார்.

சுத்தானந்தர் ஸ்தபதி இருவருமே குரல் வந்த திசையை நோக்கினார்கள். சூடாமணி விஹாரத்தின் தூண்களிலிருந்த விளக்கொன்றை சுக்காங் கற்களைத் தட்டித் தீயுண்டாக்கிக் கொளுத்தினான் உபேந்திரன். அந்த ஒளியில் சிற்பி செதுக்கிய சிலையென நின்றாள் நாகதேவி. அதைப் பார்த்த தமிழகச் சிற்பியும் சிலையானார். அவரே சிலையாகி விட்டால் குருநாதரைப் பற்றி என்ன சொல்ல?

அடியோடு உணர்விழந்து நின்றார் குருநாதர். அப்பொழுது உயிர்ச் சிற்பமான நாகதேவி சொன்னாள். "குருநாதரே! நீர் இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்ததைத் தலைவர் முழுவதும் கேட்டார்" என்று கூறினாள்.

அரைகுறை சுரணை ஏதாவது குருநாதருக்கு இருந்திருக்கும் பட்சத்தில் அதுவும் பறந்தது நாகதேவியின் சொற்களால்.

## 12. நாடகம்

எந்த அறிவாளிக்கும் உணர்ச்சிகள் தடுமாறும் சமயம் உண்டு. அந்த சமயத்தில் அவன் நிலைகுலைந்து உளறுவதும் இயற்கை. அறைகுறையாகக் கட்டப்பட்டிருந்த சூடாமணி விஹாரப் படியில் உட்கார்ந்திருந்த குருநாதர் சுத்தானந்தரும் அன்றிரவு அந்த நிலையில் தானிருந்தார். ஆகையால் நாகதேவியையும் உபேந்திரனையும் கடுமையாக நோக்கினார் சில விநாடிகள் மெதுவாக. பிறகு மௌனத்தை உடைத்து, "உங்களிருவருக்கும் இங்கென்ன வேலை? இந்த நேரத்தில்?" என்று குரலிலும் கடுமை ஒலிக்க இருவரையும் நோக்கிக் கேட்டார்.

இதற்கு நாகதேவி பதிலேதும் சொல்லவில்லை. உபேந்திரனே கேட்டான் "வேறெங்கு வேலை?" என்று.



சுவாமிகள் நிதானத்தை அடியோடு இழந்துவிட்டிருந்ததால் மீண்டும் உளற முற்பட்டு, "காந்தருவ மணம் நடுத் தெருவிலா நடக்கும்?" என்று சீறினார்.

"காந்தருவ மணமா!" என்று வியப்புடன் வினவினான் உபேந்திரன்.

"நீதானே கூறினாய், நீயும் இவளும் இன்றிரவே" என்று துவங்கி அதற்குமேல் ஏதும் பேச முடியாததால் மென்று விழுங்கினார் துறவியார்.

"நானும் இவளும் இன்றிரவே?" என்று வினவினான் உபேந்திரன் ஏதும் அறியாதவன்போல.

"இருவரும் இன்றிரவு உன் மாளிகை அறையிலேயே..." என்று குருநாதர் தமது முட்டாள்தனத்தை முதன்முதலாக உணர்ந்ததால் சட்டென்று தமது கேள்விகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து எழுந்து நின்றார்.

www.cleanindians.com

இருவர் உரையாடலையும் கேட்டுக்கொண்டிருந்த மாணிக்க சிற்பி அடியோடு பிரமை தட்டிப்போய், "சுவாமி! சுவாமி! நீங்கள் இப்படியெல்லாம் பேசுவது அழகல்ல" என்றான் மெதுவாக.

சுத்தானந்தர் தமது கோபத்தை ஸ்தபதி மீது திருப்பினார். "ஸ்தபதி! நான் எப்படிப் பேசவேண்டும் என்று உம்மைக் கேட்கும்போது நீர் சொல்லிக் கொடுக்கலாம்" என்று கடிந்து கொண்டார்.

மாணிக்க ஸ்தபதியின் முகத்தில் விஷமச்சாயை பூராவாகப் படர்ந்தது. "சரி ஸ்வாமி, தங்களிஷ்டம். ஆண் பெண் உறவைப்பற்றி தாங்கள் பேசுவது தங்கள் ஆசிரமத்துக்குப் பொருத்தமாயில்லை" என்று கூறினார், குரலில் லேசாக விஷமத்தைக் காட்டி.

"குருநாதரே! நானோ சிற்பி. இந்தக் கட்டடத்தைக் கட்டுவதுதான் என் வேலை. ஊரைத் திருத்துவது என் வேலையல்ல. அதைத் தங்களைப் போன்ற பெரியவர்கள்தான் செய்யவேண்டும். உத்தரவு கொடுத்தால் நான் வருகிறேன்" என்ற ஸ்தபதி திரும்ப முயன்றார்.

அந்த சமயத்தில் நாகதேவியின் இனிமையான குரல் எழுந்தது. "ஸ்தபதி! நீர் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால் திருமணமாகாதிருக்கும் இருவரைப்பற்றி ஏற்படும் ஊர் வம்புக்குத் தாங்கள் செவிமடுக்காதிருக்கலாம்" என்று கூறியதோடு நில்லாமல் ஸ்தபதியை நோக்கி நடந்தும் வந்தாள். அவள் நடையே படமெடுத்த சர்ப்பம் அசைந்து வருவது போலிருந்ததை ஸ்தபதி கவனித்தார். அந்த அசைவுகளில் பயங்கரத்துடன் பெரும் அழகும் கலந்திருப்பதையும் பார்த்தார். அதிலிருந்து அவருக்கு ஏதோ யோசனை தோன்றியிருக்க வேண்டும். ஆகவே, நாகதேவி தமக்கு அருகில் வந்து நின்றுவிட்டதைக்கூட அவர் கவனிக்கவில்லை. ஏதோ தீவிர சிந்தனையிலிருந்ததால் பேசவில்லை அவர். நாகதேவி அவர் சிந்தனையைக் கவனித்தாள். "ஸ்தபதி! உங்கள் எண்ணம் புரிகிறது எனக்கு" என்றாள்.

"என் எண்ணமா தேவி?" என்று வியப்புடன் வினவினார் ஸ்தபதி.

"ஆம் நிலவறை அமைப்புப்பற்றி யோசிக்கிறீர்" என்றாள் நாகதேவி.

மேலும் பிரமையடைந்தார் மாணிக்க ஸ்தபதி. "நிலவறை அமைப்பு பற்றியா!" என்று கேட்டார் பிரமை குரலிலும் விரிய.

"ஆம் ஸ்தபதி. முதலில் நிலவறைப் பாதையைக் கருங்கல் சூத்திரத்தால் திறந்துவிடலாமென்று நினைத்தீர்கள்.



இப்பொழுது மாறி மாறி நான்கு இடங்களில் சூத்திரங்களை அமைத்தால் நான்கு காறைகள் மாறி மாறி திறக்கும் மூடும். அந்த அமைப்பை சீக்கிரம் உணருவதும் கஷ்டம். தவிர பெண்களின் நடையைப் போல் அசைந்து அசைந்து நகரும் பாறாங்கல் மூடிகள்" என்று விளக்கிய நாகதேவி மந்தகாசம் செய்தாள்.

ஸ்தபதியின் மூச்சு நின்றுவிடும் போலாயிற்று. பிறர் மனத்தை நிமிஷ நேரத்தில் அறியக் கூடிய பயங்கரமான ஒரு பெண் முன்பு தானிருப்பதைப் புரிந்துகொண்டார். மாயக்காரியென்று மக்கள் அழைப்பதில் தவறில்லை என்று உள்ளூர எண்ணவும் செய்தார். இருப்பினும் எதையும் வெளிக்குக் காட்டாமல், "தேவி, தங்களுக்கு மனோதத்துவ சாஸ்திரம் தெரியுமா?" என்று வினவினார்.

"தெரியாது" என்றாள் நாகதேவி.

"அப்படியானால் என் உள்ளத்தில் எழுந்த திட்டத்தை எப்படி அப்படியே எடை போட்டீர்கள்?" என்று ஸ்தபதி வினவினார்.

"ஊகந்தான்" என்றாள் தேவி.

"தங்களைவிட யாரும் எதையும் அதிகமாக ஊகிக்க முடியாது" என்று ஸ்தபதி பாராட்டினார். "நிலவறைக்கு வழியை அப்படியே அமைத்து விடுகிறேன்" என்றும் உறுதி கூறினார்.

அதுவரை சற்று எட்ட நின்றிருந்த குருநாதர், "அப்படியானால் என் யோசனை யாருக்கும் தேவையில்லை போலிருக்கிறது" என்றார் கோபத்துடன்.

"இந்த விஹாரம் சம்பந்தப்பட்டவரை தங்களுக்கு தெரியாமல், தங்கள் யோசனையைக் கேட்காமல் எதுவும்

www.cleanindians.com

நடக்காது" என்றார் ஸ்தபதி. பிறகு தேவியை நோக்கி, "தேவி! நான் வருகிறேன். இந்த ஏழையின் சிற்ப சாலைக்கு, தாங்கள் எப்பொழுது வந்தாலும் சூடாமணி விஹாரத்தின் முழு அமைப்பைப் பார்க்கலாம்" என்று கூறிவிட்டு, படைத்தலைவனுக்கும் தலைவணங்கிவிட்டுத் திரும்பச் சென்றார்.

ஸ்தபதி அந்த இடத்தில் இருந்து அகன்றதும் குருநாதர் படைத்தலைவனை நோக்கி, "சரி, நானும் வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொள்ள முயன்றார்.

"இருங்கள்" என்று தடுத்தாள் நாகதேவி.

"என்ன வேலை எனக்கு இங்கே?" என்று வினவினார் குருநாதர்.

நாகதேவியின் கண்கள் விஹாரத் தூணின் சிறு விளக்கில்கூட பளபளத்தன. "இங்கு வேலையில்லைதான்..." என்றாள்.

"வேறெங்கு வேலை?" என்று வினவினார் குருநாதர்.

"எனது மரக்கலத்தில்" என்று சுட்டிக்காட்டிய நாகதேவி, "குருநாதரே! வாரும். நாங்களும் அங்குதான் போகிறோம்" என்றாள்.

குருநாதர் விழித்தார். "என்ன உளறுகிறாய்?" என்று சீற்றத்துடன் கேட்டார்.

அடுத்து அவர் சுயநிலையில் இல்லை. இரு மாலுமிகளின் பிடிப்பில் இருந்தார். "இவரை நமது மரக்கலத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று உத்தரவிட்டாள் நாகதேவி.

இரு மாலுமிகளும் குருநாதருக்குச் சிறிதும் மரியாதை காட்டாமல் கைகளைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் சென்றார்கள். "நாகதேவி! உபேந்திரா! இதற்கு நீங்கள்



நல்ல பலனை அனுபவிப்பீர்கள். குருநாதர் யாரென்று காட்டுகிறேன். பொறுங்கள்" என்று சீறினார். மாலுமிகள் அவரை தயை தாட்சண்யம் பார்க்காமல் இழுத்துச் சென்றார்கள்.

அவர் போனதும் தூணிலிருந்த விளக்கை அணைத்தான் உபேந்திரன். "நமது நாடகம் எப்படி" என்று பக்கத்திலிருந்த தேவியைக் கேட்டான்.

"என் நடிப்பில் மட்டும் என்ன குறைவு?" என்றாள் அவள்.

அடுத்த கணம் உபேந்திரன் அணைப்பிலிருந்தாள் அந்த அழகி.

www.cleanindians.com

## 13. புரிந்த நிலை

முக்கால்வாசி கட்டப்பட்டு நின்றிருந்த சூடாமணி விஹாரத்தின் தூண்களுக்கு நடுவில் பரஸ்பர அணைப்பிலிருந்த அந்த இருவரில் உபேந்திரனே சற்று தலையை எட்டிச் சாய்த்துப் பக்கத்துத் தூணிலிருந்த விளக்கை ஊதி விட்டபடியால் பெரும் அந்தகாரம் சூழ்ந்து நின்றது. அந்த அந்தகாரத்தில், அணைத்த அணங்கின் இடையைச் சுற்றியிருந்த இரு கைகளில் வலது கையைத் தூக்கி அவள் தலைக் குழலைக் கோதிவிட்ட உபேந்திரன், அதில் சூடப்பட்டிருந்த நாகாபரணத்தை எடுத்துத் தனது அங்கியில் வைத்துக் கொண்டான். "ஏன் அதை எடுத்துவிட்டீர்கள்?" என்று அவள் மெதுவாகக் கேட்டாள்.

"தற்சமயம் அவசியமில்லை. திரும்பவும் நீ நாகதேவியாகும்போது அதை அணிந்துகொள்ளலாம்" என்ற உபேந்திரன், "மருதி! உனது இணையற்ற எழிலை எத்தனை

நாள் தூரத்திலிருந்தே கண்டு ஏங்கியிருக்கிறேன் தெரியுமா? உன்னை அறியாததுபோல் நடித்திருக்கிறேன் தெரியுமா?" என்று வினவியதன்றி அவள் கன்னமொன்றை கையால் தடவியும் கொடுத்தான்.

அதுவரை எந்த ஆண்மகனாலும் தொடப்படாத மருதியின் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. "அப்படியா!" என்று ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டாள் மருதி.

"ஆம் மருதி! நீ நாகலிங்கக் காட்டில் செல்லும் போதெல்லாம் அசையும் உன் பின்னெழில்களைக் கண்டிருக்கிறேன் பலமுறை. ஆனால் உன்னை அணுகவோ பேசவோ பயமாயிருந்தது" என்ற உபேந்திரன், இடையைத் தழுவி நின்ற இடது கையைச் சற்றே இறக்க முற்பட்டான். அவள் தனது கையொன்றால் அதை விலக்கி, "இந்த விஷம மெல்லாம் என்னிடம் வேண்டாம்" என்று கடுமையாகச் சொன்னாளே தவிர, விலக்கிய கையின் விரல்களோடு தன் கைவிரல்களைப் பின்னவும் செய்தாள். ஆனால் அந்த பின்னிய கைகள் இரண்டுமே ஒன்று சேர்ந்து கீழே இறங்கிய தன்றி, பின்னெழில் ஒன்றில் தேங்கி நிற்கவும் செய்யவே "மருதி!" என்று மெள்ள அழைத்தான் உபேந்திரன்.

"உம்." மருதியின் குரல் குழைந்து கிடந்தது.

"நாம் ஏன் முன்னமே ஒருவரையொருவர் சந்திக்க வில்லை?" என்ற உபேந்திரன் அவள் கன்னத்தை லேசாகத் தனது இதழ்களால் தடவினான். வலது கையும் அவள் விலாவில் பதிந்து அதை இறுகப் பிடித்தது.

"சந்திக்காததால் இப்போது என்ன குறைந்து விட்டது?" என்று கேட்ட மருதியின் உடல் அவன் மீது சற்று அதிக மாகவே அழுந்தியது.



உபேந்திரன் தன்து இடது கையைத் தூக்கி அவள் முதுகில் வைத்து அழுந்திய அவள் பூவுடலை மேலும் அதிகமாகத் தனது மார்புடன் அழுத்திக் கொண்டான். அத்துடன் அவள் கன்னத்தில் உதடுகளைப் புதைத்த வண்ணம், "சந்திக்காததால் பல தொந்தரவுகள் மருதி" என்று கூறினான்.

"என்னவோ?" உணர்ச்சிப் பெருக்கால் அதிகமாகப் பேச முடியாத மருதி இந்த ஒரு வார்த்தையை மட்டும் சொன்னாள்.

"இந்த நாகதேவியிடம் நான் சிக்கியிருக்கமாட்டேன்" என்ற உபேந்திரன் தனது இதழ்களை மெள்ள கன்னத்தி லிருந்து அகற்றி அவள் மார்புக்குச் சிறிது மேலே புதைத் தான்.

www.cleanindians.com

மருதி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அந்த ஆண்மகன் உதடுகள் தனது இரட்டை எழில்களைத் தொடா விட்டாலும் அவற்றின் விளிம்பில் பதிந்து கிடந்ததால் உணர்ச்சியின் எல்லையைத் தொட்டுக் கொண்டிருந்தாள். அவள் உடல் அந்த நேரத்தில் லேசாக நடுங்கவும் செய்தது. அடுத்த கணம் அந்த நடுக்கத்தை நிறுத்தவோ என்னவோ அவள் கைகள் இரண்டும் அவன் குழல்களைப் பிடித்து அவன் முகத்தை மார்பை நோக்கி நகர்த்தி அழுத்தவே, உபேந்திரன் இந்திர போகத்திலிருந்தான்; "மருதி! மருதி!" என்று முணுமுணுக்கவும் செய்தான்.

மருதி சிறிது துணிவு கொண்டாள். முடித்திருந்த தனது குழல்களை இடது கையால் அவிழ்த்து அவன் தலைக் குழலுடன் தனது குழலைப் புரளவிட்டாள். நீண்ட அவள் குழல் அவன் குழல்களை மட்டுமின்றி முகத்தையும் மறைத்து விடவே உபேந்திரன் அவள் மார்பு மீது தனது தலையைப் புரட்டினான். அடுத்து இரு மார்புகளுக்கிடையிலிருந்த சிறு

வெளியில் இதழ்களைப் புதைக்கவும் செய்தான். அவன் கைகளின் சேஷ்டையும் அத்துடன் இணையவே சுயநிலையை அடியோடு இழந்த மருதி அவன்மீது இழைந்தாள்.

இழைந்த உடல்களால் இருவர் சிந்தையும் எங்கோ பறந்தது. தங்களுக்கென தனி உலகம் சிருஷ்டிக்கப்பட்டு விட்டதை இருவருமே உணர்ந்தார்கள்.

நின்ற நிலையில் இரு சர்ப்பங்கள்போல இழைந்த இருவரும் தாங்கள் நாகஜாதி என்பதைச் சந்தேகமற உணர்ந்தார்கள். ஏகபோகத்திலும் அந்த நாகபோகம் இருவருக்குமிடையே அதுவரையிலிருந்த வித்தியாசங்கள், சங்கடங்கள், வெட்கம் அனைத்தையும் விலக்கிவிட்டதால் உபேந்திரன் சட்டென்று பிரிந்து அவளைத் தூக்கிக்கொண்டு விஹாரத்தின் ஒரு மூலைக்குச் சென்றான். அவன் தூக்கிய போது அவன் மார்புமீது சாய்ந்துவிட்ட மருதி அவன் மேலங்கியின் கயிறுகளை அவிழ்த்து மார்பின் ரோமங் களைக் கையால் தடவி, "அப்பா என்ன முரட்டு உடல்" என்றும் முணுமுணுத்தாள் அங்கு சாய்த்த தலையை எடுக்காமலே.

அதைக் கேட்ட உபேந்திரன் அவளைத் தூக்கி நடந்த படியே, "இந்த முரட்டு உடல் உனக்குப் பிடிக்கவில்லையா மருதி?" என்று வினவினான்.

"நல்ல கேள்வி" என்று அவன் மார்பில் பதிந்த வண்ணம் சொன்னாள் அவள்.

அதற்கு அவன் வெளிப்படையாகப் பேசி பதிலேதும் சொல்லாமலும் நடந்தாலும் அவன் வாய் சொல்லியது பதிலை. அவள் மேலாடையைக் கவ்விய அவன் வாய் அதைத் தோளிலிருந்து நெகிழச் செய்துவிட்டதை உணர்ந்த மருதி, "சரி சரி" என்றாள்.

www.cleanindians.com



அவன் மெதுவாக நகைத்தான். "ஒப்புதலுக்கு நன்றி" என்று சொன்னான் நகைப்பின் ஊடே.

"என்ன ஒப்புதல் தந்துவிட்டேன்?" அவள் வாய் முணுமுணுத்தது. அந்த முணுமுணுப்பில் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்து கிடந்தன.

"சரி சரி என்றாயே!"

"அது ஒப்புதலா?"

"அப்படித்தான் தமிழில் பொருள்."

"தமிழறிவு இதற்கும் உபயோகப்படுகிறது."

"அதனால் லாபமே தவிர நஷ்டமில்லை."

"அது புரிகிறது."

"எதையும் புரியவைக்கும் மொழி தமிழ்தான்."

இப்படிப் பேசிக்கொண்டே அவளைத் தூக்கி வந்த உபேந்திரன் சூடாமணி விஹாரத்தின் மூலைக்கு வந்ததும் அங்கிருந்த சார்புத் திண்ணையில் அவளைப் படுக்க வைத்தான். தானும் அருகில் உட்கார்ந்து கொண்டான். சிறிது நேரம் அவன் பேசவில்லை. பேச்சை அவளே துவக்கினாள், "இந்தத் திண்ணையை எதற்காகக் கட்டியிருக்கிறார்கள்?" என்று.

"துறவிகள் உட்கார்ந்து ஜபம் செய்ய. இதே மாதிரி நான்கு திண்ணைகள் இருக்கின்றன" என்று சொன்ன உபேந்திரன் சற்றே சாய்ந்த அவள் உடலின் மீது வலது கையை வைத்தான்.

அவள் லேசாக நகைத்தாள். "ஜபம் செய்வதற்கா?" என்று கேட்டாள்.

"ஆம்" என்றான் உபேந்திரன் அவளை நோக்கிக் குனிந்து.

"ஆம் என்று சொல்லாதீர்கள்" என்றாள் மருதி மிக மிருதுவாக.

"வேறு என்ன சொல்ல வேண்டும் மருதி?" என்று வினவிய அவன் அவள் கையொன்றை எடுத்து அதில் இதழ்களைப் பதித்து மீண்டான்.

"ஓம் என்று சொல்லுங்கள்" என்ற மருதி நன்றாக மல்லாந்து படுத்தாள். இருட்டிலும் லேசாகத் தெரிந்த விகசித்த அந்தப் பூவுடலைப் பார்த்த உபேந்திரன், "ஓம் என்று சொல்ல வேண்டுமா?" என்று வினவினான்.

"ஜபத்திற்கு அதுதான் மூலாதாரம், பிரணவம்" என்றாள் மருதி மிக இன்பமான குரலில்.

"சரி சொல்கிறேன். ஜபம் என்ன? தவம் வேண்டுமானாலும் செய்கிறேன். அப்பொழுது நீ என்ன செய்வாய்?" என்று கேட்ட அவன், "எதற்கும் உன் இதயத்தைக் கேள்" என்று இதயமிருந்த இடத்தில் கையை வைத்தான்.

இதய பீடத்தின் மீது அழுந்திய அவன் கையைத் தன் கையால் பற்றினாள் மருதி. "இதயமிருக்குமிடம் எனக்கே தெரியும், தொட்டுக் காட்ட வேண்டாம்" என்று வெட்கம் தழுவிய சொற்களால் கூறினாள்.

"நீ என்ன தொட்டால் சிணுங்கியா?" உபேந்திரன் கை உலாவியது.

"நானல்ல."

"பின்?"

"அவை!"

"எவை?"

"நல்ல லட்சணம்!" என்று கூறிய அவள் சற்றே புரளவே அவன் கை அவள் உடலுக்கும் தரைக்கும் இடையே

www.cleanindians.com



அகப்பட்டுக்கொண்டது. அந்த நிலையில், "நீ என்ன செய்வாய்?" என்று பழைய கேள்வியைத் திருப்பினான்.

"என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"நான் தவம் செய்தால் அதை மேனகை, ரம்பை, யாராவது கெடுக்க வேண்டாமா?" என்ற உபேந்திரன் தனது வலது கையை எடுத்து அவளைத் தன்னை நோக்கி நன்றாக இழுத்தான்.

"தவத்தைக் கெடுக்க உங்களுக்கு ஒரு பெண் அவசியம்?" என்று கேட்டுக்கொண்டே அவள் அவன் மடிமீது தலையை வைத்தாள்.

"இல்லாவிட்டால்! தவம் செய்து என்ன பயன்?" என்று கேட்ட அவன் கை பயன் தரும் இடங்களை நாடிச் செல்லத் துவங்கியது.

அவள் தலையைச் சற்று நிமிர்த்தி சற்று அவன் மடியில் நெகிழ்ந்து ஏறியபடி, "தவம் முடிந்துவிட்டது போலிருக்கிறது?" என்று வினவினாள்.

"எப்படித் தெரியும்?" அவன் குரல் வேகத்துடன் ஒலித்தது.

"அடுத்த கட்டம் துவங்கிவிட்டதே" என்ற அவள் குரலிலும் லேசாக வேட்கை தெரிந்தது.

அவன் வெறி மெதுவாக ஏறிக்கொண்டிருந்தது. பல பெண்களைப் பார்க்காத அவன் அன்றுவரை கட்டி வைத்திருந்த உணர்ச்சிகளையெல்லாம் உடைத்துக் கொண்டான். மடியிலிருந்த அவள் தலையை எடுத்து அவன் மீண்டும் திண்ணையில் அவளை நன்றாகக் கிடத்தினான். அவன் வலிய இதழ்கள் அவள் மெல்லிய செவ்விய இதழ்கள் மீது வேகத்துடன் பதிந்தன. கைகள் அவளைச் சுற்றின. உடல்

தாழ்ந்தது அவள்மீது வேகமாக. உணர்ச்சிகள் அலைக் கழித்ததால் அவள் கால்களில் கையொன்றை வைத்தான் உபேந்திரன். அவனது இன்னொரு கை அவள் கழுத்துக்குப் பின்புறம் சென்று அவள் தலையை லேசாகத் தூக்கியதால் பதிந்த இதழ்கள் மேலும் பதிந்தன. இழைந்தன. மார்பில் இழைந்த மொட்டுகள் விகசித்தன. இருவரும் உணர்ச்சி வசப்பட்ட நேரம் அது. உலகை மறந்த நிலை! உவகை துள்ளிய நிலை! வேட்கை மிகுதியால் கனவுகளெல்லாம் நனவாகப் புகுந்த நிலை! அந்த நிலையில் அவள் லேசாக முனகினாள். "இத்தனை நாள்..." என்று ஏதோ முணுமுணுத்தாள் இதழ்களை விலக்கிக் கொண்டு.

"உன்னைப் புரிந்துகொள்ளவில்லை. ஏன், உலகத்தையே புரிந்துகொள்ளவில்லை. என்னையும் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் மருதி..." என்று இழுத்தான் உபேந்திரன்.

"என்ன?" கேள்வியில் தொனித்த குரலில் ஜாலமிருந்தது.

"இப்பொழுதுதான் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறேன்" என்று அவனும் முணுமுணுத்தான்.

இருவரும் உலகை மறந்த நிலையில் அவர்களைப் புரிந்துகொண்டிருந்த வேறோர் உருவம் சற்று எட்ட இருந்த தோப்பில் இருந்து மெள்ள கிளம்பி விஹாரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது.

## 14. ஆரம்பக் காட்சி

சூடாமணி விஹாரத்தின் அருகாமையில் இருந்த தோப்பிலிருந்து அரவமேதும் செய்யாமல் மெதுவாக நடந்து வந்த அந்த உருவம், விஹாரத்தை அடைந்ததும் சிறிது நின்று விஹார முன் மண்டபத்தை உற்று நோக்கியது. என்ன

www.cleanindians.com



காரணத்தாலோ தனது காதை ஒரு கையால் சிறிது திருப்பி எதையோ உற்றுக் கேட்கவும் முயன்றது. அதன் வதனத்தில் திடீரென ஏற்பட்ட சினத்தை அத்தனை இருளிலும் ஒளி வீசிய விழிகள் நன்றாக எடுத்துக்காட்டவே செய்தன. அதன் விளைவாகவோ என்னவோ அந்த உருவம் தனது வலது கையை விஹாரத்தின் இடது பக்கத்தை நோக்கி அசைத்து ஏதோ சைகையும் செய்தது. பிறகு மெல்ல விஹாரத்தின் மண்டபப் படியில் காலை வைத்து ஏறி விஹாரத்தில் நுழைந்தது.

விஹாரத்தின் அகலமான தூண்கள் அந்த உருவத்துக்கு மறைவிடம் கொடுத்ததால், அந்த தூண்களில் ஒன்றின் மறைவில் மறைந்துகொண்ட உருவம் நிதானித்து நின்றது. மீண்டும் விஹாரத்தின் மூலையிலிருந்த சார்புமணைத் திண்ணையிலிருந்து "உஸ் உஸ்" என்று கிளம்பிய இருவர் மூச்சும் அதன் காதில் நன்றாக விழுந்தது. பிறகு உடைகள் சலசலக்கும் ஒலிகளும் விழுந்தன. அதுவரை பொறுத்த அந்த உருவம் தனது கையிலிருந்த சிறு கல்லை எடுத்துத் தான் மறைந்து நின்ற தூணில் தட்டவே மேற்படி ஒலிகள் திடீரென நின்றன. "யாரங்கே?" என்று எழுந்தது உபேந்திரன் குரல்.

அந்த உருவம் பதிலேதும் சொல்லாமலும் எந்தவித அரவமும் செய்யாமலும் அப்படியே நின்றுகொண்டிருந்தது காதைத் தீட்டிக்கொண்டு. "ஐயோ! யாரோ வந்துவிட்டார்கள்" என்று ஒலித்தது மருதியின் குரல் தீனமாக.

"யாருமில்லை, வீண் பிரமை. சும்மா இரு" என்று உபேந்திரன் செல்லமாக அதட்டியது அந்த உருவத்தின் காதில் விழவே செய்தது.

மருதி சட்டென்று எழுந்து உட்கார்ந்து உடைகளை சரிப்படுத்திக் கொண்டாள்.

"இல்லை. யாரோ இருக்கிறார்கள். எதற்கும் போய்ப் பாருங்கள்" என்றாள் மருதி அச்சம் ஒலித்த குரலில்.

உபேந்திரன் திண்ணையிலிருந்து எழுந்து நின்று கொண்டு "இரு. விளக்கைக் கொளுத்துகிறேன்" என்றான்.

"ஐயோ! விளக்கைக் கொளுத்தாதீர்கள். என் நிலை மிகவும் கேவலமாயிருக்கிறது" என்று மிருதுவாக அலறினாள் மருதி.

"இதில் கேவலத்துக்கு என்ன இருக்கிறது? எல்லோருக்கும் ஏற்படும் நிலைதான் இது" என்று உபேந்திரன் தத்துவம் பேசினான்.

"எல்லோருக்கும் ஏற்படும் நிலை அல்ல இது."

"வேறென்ன?"

"திருட்டு நிலை!"

இதைக் கேட்டு மெல்ல நகைத்த உபேந்திரன், "திருட்டு நிலை இருக்கட்டும். இருட்டில் எப்படித் தேடுவது?" என்று கேட்டான்.

"இத்தனை நாழி விளக்கா வைத்திருந்தது?" என்றாள் மருதி.

"அது வேறு."

"எது வேறு?"

"நீ சொன்னது" என்று கூறிய உபேந்திரன், "சரி. நீ அப்படியே படுத்திரு. நான் வந்திருப்பது யாரென்று பார்த்து விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு சூடாமணி விஹாரத்தின் முன் மண்டபப் படிகளை நோக்கி நடந்தான். அவன் நடந்து வந்ததும் அந்த உருவம் வேறு திசையை நோக்கி அரவம் கேட்காமல் நகர்ந்து சென்றுவிட்டது.



சூடாமணி விஹாரத்துக்கு வெளியே வந்து விண்ணை நோக்கிய உபேந்திரன், "அடடா? நீண்ட நேரம் ஓடிவிட்டதே. விடிய இன்னும் ஆறு நாழிகைகளுக்கு மேல் இராது" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டான். பிறகு தோப்பிலும் விஹார மண்டபத்துக்கு முன் பகுதியிலும் சிறிது நேரம் நடந்து அப்புறமும் இப்புறமும் பார்த்தான். திடீரென விஹாரத்துக்கு உட்புறம் ஏதோ சப்தம் கேட்டது போலிருக்கவே மண்டபப் படிகளில் ஏறி உள்ளே புகுந்தான்.

முதலில் கேட்ட அரவம் திடீரென நின்றுவிட்டாலும் சந்தேகம் மிக்கவனாய் சார்புமணைத் திண்ணை இருந்த இடத்துக்குச் சற்று வேகமாகவே சென்று அந்தத் திண்ணை மீது உட்கார்ந்து கொண்டான். அவன் இடுப்பைச் சுற்றி அழகிய கையொன்று தவழ்ந்தது. அதனால் இன்பப் புன்முறுவல் கொண்ட உபேந்திரன், "அப்பா! ஆசைக்கு அளவில்லை போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு சற்றே திரும்பி சார்புமணையில் கிடந்த பைங்கிளியின் முகத்தோடு தனது முகத்தைப் பொருத்தினான்.

அவன் முகம் அழகிய இரு கரங்களால் திருப்பப்பட்டு பூவிதழ்கள் இரண்டு அவன் வலிய இதழ்களுடன் இணைந்தன. அவற்றின் அழைப்புக்கு அவனும் இசைந்து அவள் பூவுடலை இறுக அணைத்து, "மருதி! இன்று போதும். விடிய அதிக நேரமில்லை. நாம் இத்தனை நேரம் இங்கிருந்ததே தவறு. வா போவோம்" என்று சொன்னானே தவிர காம ஜாலம் அவனை விலக விடவில்லை. அவனைப் போலவே அவளும் அவனை வலிய அணைத்தாள்.

அந்த அணைப்பில் முன்னைவிட அதிக வேகமும் வெறியும் இருந்ததைக் கவனித்த உபேந்திரன், "மருதி! நீ நாழிகைக்கு நாழி முரடாகிக் கொண்டிருக்கிறாய்" என்று சொன்னான் அவள் காதில்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. அவள் முரட்டுத் தனம் எல்லை மீறிக்கொண்டிருந்தது. உபேந்திரன், "மருதி விடு. இன்னும் அதிக நேரம் கழித்துச் சென்றால் எல்லன் கூட என் மீது சந்தேகப்படுவான்" என்றான்.

பதிலுக்கு சிரிப்பு ஒன்றுதான் உதிர்ந்தது. மேலும் அவள் சரசம் தொடர்ந்தது. மோகலாகிரி உபேந்திரனையும் சூழ்ந்து கொள்ளவே அவன் சுயநிலையை அடியோடு இழந்தான். இம்முறை அவள் நெறிகளை அறவே உடைக்க முயன்றதால் சட்டென்று எழுந்து உட்கார்ந்துவிட்ட சோழர் படைத் தலைவன், "மருதி! முன்னமே சொன்னேன் உனக்கு. நமக்குள் காந்தருவம் வேண்டாம். முறைப்படி திருமணம் வைத்துக்கொள்வோம் என்று. வரம்பை மீறுவது நமக்குள் அனாவசியம். நீயும் எனக்கு எட்டாக் கனியல்ல. நானும் உன்னை உதறித் தள்ளும் ஆண் மகனல்லன். ஆகவே பொறுப்போம். சோழர் படைத்தலைவன் திருமணம் நாடறிய நடக்கும். மக்கள் வீர விளையாட்டுக்கள் விளையாடுவார்கள். நமது திருமணத்தை ராஜேந்திர சோழ தேவரே முன்னின்று நடத்துவார்" என்று கூறினான் தொடர்ச்சியாக.

அவன் பேச்சின் விளைவாகவோ என்னவோ அவளும் எழுந்து நின்றாள் திண்ணையின் மறுபுறம். விளக்கை மீண்டும் கொளுத்தினான் உபேந்திரன். திண்ணைக்கு அப்புறம் தலைகவிழ்ந்து நின்றிருந்த மருதியிடம், "மருதி! இந்தா! உன் ஆபரணத்தை அணிந்து கொள். நீ மீண்டும் அந்த மாயக்காரியாக மாற வேண்டும்" என்று கூறித் தனது அங்கியிலிருந்த நாகாபரணத்தை எடுத்து அவளிடம் அளித்தான். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு அவளிருந்த புறம் சென்று அவள் குழலைத் திருத்தி ஆபரணத்தைத் தனது கையாலேயே அணிவித்தான். பிறகு ஏதும் பேசாமல் விஹாரத்தைவிட்டு வெளியே நடந்தான்.



அவளும் அவனைப் பின்தொடர்ந்தாள். மாளிகைக் கதவைத் தட்டியதும் எல்லனே வந்து கதவைத் திறந்தான். எசமானுடன் நாகதேவியும் நிற்பதையும் அவள் கலைந்த உடையையும் பார்த்து எல்லன் மெல்ல தனது பற்களைக் காட்டினான்.

"என்னடா இளிக்கிறாய்!" என்று சினத்துடன் வினவினான் உபேந்திரன்.

"ஒன்றுமில்லை எசமான்" என்ற எல்லன் வழிவிட்டு நின்றான்.

இருவரும் உள்ளே நுழைந்ததும் முன் கூடத்தில் அமர்ந்துகொண்ட படைத்தலைவன், "எல்லா!" என்று அழைத்தான் தனது பணியாளை.

"எசமான்!" என்று அதிகப் பணிவைக் காட்டினான் எல்லன்.

"அவள் என்ன செய்கிறாள்?" என்று உபேந்திரன் வினவினான்.

"யார் எசமான்?"

"அவள்தானடா, அந்த மாயக்காரி."

"தேவிகளா?"

"தேவிகள் ஏதடா, முட்டாள். தேவிதான்."

"சரி எசமான்."

"என்னடா சரி."

"தேவிதான்."

"எங்கேயிருக்கிறாள்?"

"நீங்கள் படுக்க வைத்த இடத்தில்தான்."

உபேந்திரன் பாடு சங்கடமாயிருந்தது. பக்கத்திலிருந்த மருதியைப் பார்த்தான் பக்கப் பார்வையாக. அவள்

முகத்தில் கோபத்திற்கு பதில் ஏளனச் சிரிப்பே விரிந்து கிடந்தது. "நான் எங்கேடா படுக்க வைத்தேன்?" என்று எரிச்சலுடன் வினவினான் எல்லனை நோக்கி.

"இல்லை."

"என்ன இல்லை."

"நீங்கள் படுக்க வைக்கவில்லை. அவர்களாகப் படுத்துக் கொண்டார்கள்."

"நீங்கள் மயக்கத் துளிகளைத்தான் துணியில் தெளித்து அவர்களை உறங்க வைத்தீர்கள்" என்று எல்லன் சொன்னதும் உபேந்திரன் மருதியை வெற்றிப் பார்வையாகப் பார்த்தான். "மருதி! அவளைப் பார்ப்போம் வா" என்று கூறிக்கொண்டு எழுந்திருந்தான் தனது ஆசனத்திலிருந்து.

அவள் தொடர சற்று தூரத்திலிருந்த தன் அறைக்குள் நுழைந்த உபேந்திரன் சட்டென்று நின்றுவிட்டான். அங்கிருந்த பஞ்சணையில் யாருமில்லை. அதனால் சினத்தின் வசப்பட்ட உபேந்திரன் சரேலெனத் திரும்பி வெளியே நடக்க முற்பட்டவன் சட்டென்று கால்கள் தரையில் சிக்குண்டவன் போல் நின்றான். கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு நின்றிருந்த அழகி மும்முறை லேசாக நகைத்தாள்.

மெல்ல மெல்ல உண்மை விளங்கவே குழப்பமும் பிரமிப்பும் அடைந்த உபேந்திரன், "நீ மருதியல்ல, நாகதேவி. அந்தச் சிரிப்பு எனக்கு நன்றாகத் தெரியும்" என்று கூறிக்கொண்டு அவளை அணுகித் தூக்கி பஞ்சணையில் எறிந்தான். "அடி! மருதியை என்ன செய்தாய்? எப்படி நீ மாறினாய்? சொல் உண்மையை" என்று கூறிக்கொண்டு அவள் அழகிய கழுத்தில் தனது கைகளை வைத்து முறிக்க முயன்றான்.



நாகதேவி அசையாமல் படுத்திருந்தாள். சட்டென்று அவன் கைகள் அகன்றன. "உன்னைக் கொலை செய்யலாம். தவறில்லை. நீ பெண்ணல்ல. இந்த நாட்டைப் பிடிக்க வந்த பிசாசு. இருப்பினும் சோழநாட்டு மக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்" என்று கூறிக்கொண்டே எழுந்த உபேந்திரன், "நாகதேவி! உண்மையைச் சொல். எங்கே மருதி? எப்படி அவளிருந்த இடத்துக்கு வந்தாய்?" என்று சீறினான்.

நாகதேவி பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்தாள். "உபேந்திரா! இன்றும் நேற்றும் நாகர்களுக்கு நீ புரிந்திருக்கும் துரோகம் மகத்தானது. உன்னைக் கொல்ல நமது இனத்தின் சட்டதிட்டங்கள் இடம் கொடுக்கின்றன. இருப்பினும் உன்னைக் கொல்ல நான் விரும்பவில்லை. உன்னால் நாகர்களுக்கு ஆகவேண்டிய வேலை இருக்கிறது" என்றாள்.

www.cleanindians.com

உபேந்திரன் பதிலேதும் சொல்லவில்லை. அவளை வெறுத்து நோக்கினான். அவள் பஞ்சணையிலிருந்து இறங்கி வந்தாள். "நான் போகிறேன் என் மரக்கலத்துக்கு. நீ வருவதானால் வரலாம்" என்று கூறிவிட்டு வெளியே நடந்தாள். மந்திரத்தால் கட்டுண்டவன் போல் அவள் பின்னாலேயே அவனும் நடந்தான். இருவரும் கடற்கரையை அடைந்ததும் அங்கிருந்த படகொன்றை அவிழ்த்து அதில் நாகதேவியை ஏறச் சைகை காட்டிய உபேந்திரன் அவள் ஏறியதும் தானும் ஏறி உட்கார்ந்து துடுப்புகளைத் துழாவி, படகை சாவகத்தின் மரக்கலத்தை நோக்கிச் செலுத்தினான்.

மரக்கலத்தை அடைந்ததும் அவன் கண்ட முதல் காட்சி அவனை விவரிக்க இயலாத திகைப்புக்கு இலக்காக்கியது. அவன் கண்களில் ஏற்பட்ட திகைப்பு மிதமிஞ்சிய சினத்துக்கு இடம் கொடுத்ததால் சட்டென்று படகைத் திருப்ப முயன்றான் மீண்டும் கரையை நோக்கி. அவன் உறுதியை நாகதேவியின் விஷச் சொற்கள் குலைத்தன.

"மரக்கலத்துக்கு வாருங்கள். நீங்கள் காணவேண்டியது நிரம்ப இருக்கிறது. நீங்கள் இப்பொழுது கண்டது ஆரம்பக் காட்சிதான்" என்றாள் நாகதேவி.

## 15. நாகதேவியின் தந்திரம்

சாவகத்தின் மரக்கலத்துக்கு அருகில் வந்ததும் அதன் தளத்தில் குருநாதர் சுதந்தரமாக உலாவிக் கொண்டிருந்ததையும், மாலுமிகள் அவர் உத்தரவுகளை ஏற்று அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்ததையும் கண்ட உபேந்திரன் தனது திட்டத்தில் ஏதோ ஓர் இடம் உடைந்து விட்டதைப் புரிந்துகொண்டான். அதனால் படகைத் திருப்ப முயன்ற படைத்தலைவனை நாகதேவி தடுத்து மரக்கலத்துக்கு வரும்படி அழைத்ததாலும், தனது படகைக் கண்டதும் குருநாதர் இரண்டு மாலுமிகளை அழைத்து ஈட்டிகளைத் தனது மார்புக்காகக் குறிவைக்கும்படி கட்டளையிட்டதாலும், வேறு வழியின்றிக் கப்பல் தளத்திலிருந்து தொங்கவிடப்பட்ட நூலேணியில் ஏறிச் சென்றான். நாகதேவியும் நிதானமாக அவனைத் தொடர்ந்து ஏறினாள்.

மரக்கல தளத்தை அடைந்ததும், "சோழர் படைத் தலைவரே! வரவேண்டும்! தங்கள் வரவால் இந்தக் கப்பல் புனிதமடைகிறது" என்ற ஏளனக் குரலில் முகமன் கூறி வரவேற்றார் குருநாதர்.

தளத்தில் காலை வைத்த உபேந்திரன் அவர் ஏளன வரவேற்புக்கு பதிலேதும் சொல்லவில்லை. கப்பலைச் சுற்று முற்றும் நோக்கினான். நாலா பக்கத்திலும் போருக்கு சன்னத்தமாயிருப்பவர்கள்போல் மாலுமிகள் ஆயுதங்களைத்



தாங்கி நின்றனர். ஆனால் குருநாதர் காட்டிய குதூகலம் யார் முகத்திலும் இல்லை. எல்லோரும் பதுமைகள்போல் நின்றிருந்தனர். பணிபுரிந்து கொண்டிருந்த சிலர்கூட நாகதேவி மரக்கலத்தில் காலை வைத்ததும் சட்டென்று உறைந்துபோய் நின்ற இடத்தில் சிலையென நின்றுவிட்டனர். நாகதேவியைக் கண்டதும் யந்திரத்தால் இயக்கப்பட்டவர்கள்போல் ஒரே மாதிரி தலைவணங்கினார்கள்.

நாகதேவி அவர்கள் அனைவர் மீதும் ஒருமுறை கண்களை ஓட்டினாள். பிறகு உபேந்திரனைத் தன்னுடன் வரும்படி சைகை செய்து கீழ்த்தளம் செல்லும் படிகளில் இறங்கிச் சென்றாள். அங்கிருந்த தனது அறையை அடைந்ததும் பழையபடி உல்லாசமாகத் தனது பஞ்சணையில் படுத்துக் கால்களை நீட்டிக்கொண்டாள். தனது அருகில் வந்து உட்காரும்படி உபேந்திரனை நோக்கி சைகையும் செய்தாள்.

ஆனால் உபேந்திரன் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை. அறையின் நட்ட நடுவில் நின்ற வண்ணம் முதன் முதலாக தேவியைச் சந்தித்தபோது ஏற்பட்ட நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தான். அன்றிலிருந்து விளைந்த பல விந்தைகளையும் கொடூரங்களையும் எண்ணி, 'இந்தப் பேய் எதற்காக வந்தது இந்த நாட்டுக்கு?" என்று உள்ளூரக் கேட்டு அவளிடம் விவரிக்க இயலாத வெறுப்புக் கொண்டான்.

பஞ்சணையில் கிடந்த அஞ்சுகம் மெல்லத் தலையை நிமிர்த்தித் தனது வலது கையை முட்டுக் கொடுத்து ஒருக்களித்த நிலையில் உபேந்திரனை நோக்கி, "ஏன் சிலை போல் நிற்கிறீர்கள், வாருங்கள் இப்படி" என்று வாய்விட்டு அழைக்கவும் செய்தாள்.

அந்த அழைப்புக்குப் பின்னும் கல்லுப்பிள்ளையார் மாதிரி நின்றுகொண்டிருந்த உபேந்திரனை நோக்கி மரியாதையைக் கைவிட்டு, "உபேந்திரா! சொல்வதைக் கேள்! வா இப்படி! இருவரும் சேர்ந்து பெரிய சாம்ராஜ்ஜியத்தை அமைப்போம்" என்று கூறினாள்.

உபேந்திரன் ஒரு விநாடி சிந்தித்தான். பிறகு கட்டிலை நோக்கி நடந்து அதன் முகப்பில் உட்கார்ந்தான். "மருதியை என்ன செய்தாய்?" என்று வினவினான். வினவியதோடு நில்லாமல் தனது வலது கையால் அவள் இடையையும் வளைத்தான்.

அதைக் கண்டு நாகதேவி சிறிதளவும் ஏமாறவில்லை. இந்த சாகசமெல்லாம் மருதியை விடுவிக்க என்பதை உணர்ந்திருந்ததால் அவள் சர்வசாதாரணமாகவே படுத்துக் கிடந்தாள். அந்த நிலையில் மெதுவாக அழைத்தாள், "உபேந்திரா?" என்று.

"என்ன தேவி?" என்று அன்புடன் கேட்ட உபேந்திரன் அவளை நோக்கிக் குனிந்து அவள் கன்னத்தில் தனது இதழ்களைப் பொருத்தினான்.

அ[illegible]பொழுது தேவி சொன்னாள்: "உபேந்திரா! எதுவும் சிர்[illegible]யைப் பொறுத்தது" என்று.

"ஆம்" என்றான் உபேந்திரன் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக.

"நேற்று இரவு விஹாரத்தின் சார்புமனையில் கிடந்தது மருதியென்று எண்ணினாய்; அதனால் என்னை அணைத்தாய்; இதழ்களைச் சுவைத்தாய்; படாத பாடு படுத்தினாய். மருதியல்ல என்று தெரிந்ததும் விலகி நிற்கிறாய். போலி அணைப்பு! போலி முத்தம்! சகலமும்

www.cleanindians.com



போலி! ஆகையால் மருதிக்கும் எனக்குமுள்ள வித்தியாசம் அழகில் இல்லை; அழகின் அனுபவத்தில் இல்லை. உன் சிந்தையில் இருக்கிறது. அதைச் சிறிது மாற்றிக்கொண்டால் தானென்ன? அல்லது நினைத்துக்கொள்ளேன் எண்ணம் இனிக்கும்" என்றாள் நாகதேவி.

இதற்கு உபேந்திரன் பதிலேதும் சொல்லவில்லை. அவள் இடையில் தவழ்ந்திருந்த தனது கையை நீக்கி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். "மருதி எங்கே?" என்று மட்டும் கேட்டான்.

"இந்தக் கப்பலில் தானிருக்கிறாள்."

"நான் பார்க்க வேண்டும் அவளை."

"அதற்கு ஏதும் தடையில்லை."

"அவளிருக்குமிடத்துக்கு என்னை அழைத்துப்போ. அல்லது இங்கு வரவழை."

"இன்னும் இரண்டு நாழிகைகள் போகட்டும்."

"ஏன்?"

"முதலில் நீங்கள் நீராடிப் புத்தாடை புனையுங்கள். நானும் நீராட்டத்தை முடித்துக் கொள்கிறேன்" என்று மரியாதையுடன் பேசிய நாகதேவி தனது கைகளைத் தட்டவே இரு மாலுமிகள் உள்ளே நுழைந்தனர். "படைத்தலைவரை அழைத்துப்போய் நீராடச் செய்யுங்கள்; பட்டாடைகளைக் கொடுங்கள். நானும் நீராடுகிறேன்" என்று உத்தரவிட மாலுமிகள் இருவரும் படைத்தலைவனுக்கு தலைவணங்கி வழிகாட்டி முன்னே நடந்தார்கள்.

அந்த மரக்கலத்தின் குளிக்கும் அறை பெரிய சக்கரவர்த்திகளின் நீராட்ட அறை போலிருந்தது. பெரிய மண்

ஜாடிகளில் சுத்த நீர் நிரப்பப்பட்டிருந்ததோடு வாசனைத் திரவியங்களும் ஒருபுறத்தில் வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த ஒரு பலகையில் உபேந்திரனை உட்காரச் செய்த மாலுமிகள் அவனுக்கு நீருற்றி உடல் தேய்த்து ஸ்நானம் செய்வித்தார்கள். பிறகு அவர்கள் இருவரில் ஒருவன் உபேந்திரனை அழைத்துக்கொண்டு வேறு ஓர் அறைக்குச் சென்று அங்கிருந்த பெரிய மரப்பெட்டியைக் காட்டி, "இதில் வீரர்களின் ஆடைகள் இருக்கின்றன. இஷ்டப் பட்டதை எடுத்துக்கொள்ளலாம்" என்று கூறி வெளியே சென்றுவிட்டான்.

பெட்டியைத் திறந்த உபேந்திரன் பிரமித்து நின்றான். பல நாட்டுப் பட்டாடைகள் விதவிதமான வண்ணங்களில் பற்பல அளவுகளில் தைக்கப்பட்டிருந்தன. ஏதோ கொள்ளைக்காரக் கப்பலில் காணப்படும் கொள்ளையடித்த உடைகளைப்போல இருந்த அத்தனை ஆடைகளையும் பார்த்த உபேந்திரன் 'சாவகத்திலிருந்து வரும் வழியில் நாக தேவி ஏதாவது ஒரு கப்பலை வளைத்துச் சூறையாடி யிருப்பாளோ?' என்றுகூட நினைத்தான். 'சே! அப்படி இருக்காது. நாகர்களால் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெண் அத்தகைய செயலில் இறங்க முடியாது' என்று தனக்குத்தானே சமாதானமும் செய்துகொண்டான். அதன் விளைவாக தனக்குச் சரியாயிருந்த ஓர் அங்கியையும் சல்லடத்தையும் அணிந்து சாட்சாத் அரசகுமாரன்போல் விளங்கினான். தனது அழகைக் கண்ணாடியிலும் பார்த்துக் கொண்ட உபேந்திரன் கண் திடீரென அந்தப் பெட்டிக்குள் நிலைத்தது மீண்டும். அதில் தெரிந்த ஏதோ ஓர் உலோகப் பிடியை எடுக்க அது நவரத்தினங்கள் இழைத்த பிடியுடன் கூடிய நீண்ட வாளாக வெளியில் வந்தது. அந்த வாளை எடுத்துப் பார்த்த உபேந்திரன் அதன் பிடியிலிருந்த வேலைப்

www.cleanindians.com



பாட்டையும் முத்திரையையும் கவனித்தான். 'இது சாவக மன்னனின் வாட்களில் ஒன்றாக இருக்க வேண்டும்' என்று சொல்லிக்கொண்டு, 'இந்த வாள் இவளுக்கு ஏது?' என்று நினைத்தான். 'ஒருவேளை இவள் அரசனின்...' என்று ஏதோ எண்ணத் தொடங்கி, "சே! சே! ஒருக்காலும் இருக்காது. நாகதேவி ஆயிரம் துஷ்டையாயிருந்தாலும் நெறி தவறாதவள். இல்லையேல் நாகர் குலத்தார் இவளைத் தலைவியாகத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டார்கள்' என்று தனது எண்ணத்தைத் திருத்தியும் கொண்டான்.

அத்துடன் ஆடை அறையைவிட்டு வெளியே வந்த உபேந்திரனை மாலுமி ஒருவன் மீண்டும் நாகதேவியின் அறைக்கு அழைத்து வந்தான்.

நாகதேவி அந்த சமயத்தில் மோகனாகரமாகக் காட்சி யளித்தாள். தலைக்கும் நீராடியதால் விரித்து விடப்பட்ட அழகிய அடர்ந்த குழல் அவள் இரு தோள்களிலும் பிரிந்து தொங்கியது. பஞ்சணையில் உட்கார்ந்தவண்ணம் தனது குழல்களை விரல்களால் பிரித்துக் கொண்டிருந்த நாக தேவி உபேந்திரன் வந்ததும் தனது கண்களை லேசாக உயர்த்தினாள். அப்படி உயர்த்திய தோரணையில் அழகிருந்தது. ஆணையிருந்தது. ஏளனமும் உதிர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த ஏளனம் அவள் செவ்விய இதழ்களை அணுகவில்லை. இதழ்கள் இன்பமான புன்முறுவலையே உதிரவிட்டுக் கொண்டிருந்தன.

அன்று அவள் தேய்த்திருந்த நீராட்டப் பொடியின் நறுமணம் அறை முழுவதையும் ஆக்ரமித்துக் கொண் டிருந்தது. அது போதாதென்று மாலுமியொருவன் துவாரங்கள் கொண்ட மண் குடுவையில் கொண்டு வந்த அகிற்புகையில் தனது குழல்களைப் படியவைத்து நாக தேவி ஆற்றியது அழகின் எல்லையைத் தொட்டது.

அகிற்புகையில் சிறிது நேரமே குழல்களை ஆற்றிய நாகதேவி மாலுமியைச் செல்லும்படி பணித்து, “வாருங்கள், இனி மருதியைப் பார்ப்போம்” என்று அலட்சியமாகக் கூறிய வண்ணம் பஞ்சணையிலிருந்து இறங்கி நடக்கலானாள். அவளை ஏதும் பேசாமல் தொடர்ந்தான் உபேந்திரன். அந்த அறையிலிருந்து பல சின்னஞ்சிறு அறைகளைத் தாண்டிக் கடைசியிலிருந்த ஓர் அறைக்குள் நுழைந்த நாகதேவி உபேந்திரனையும் உடன்வர சைகை செய்தாள்.

அவளைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த உபேந்திரன் பிரமிப்பின் எல்லையை அடைந்தான். நாகதேவியின் அறையைப் போலவே அந்த அறையும் படாடோபமாக இருந்தது. அதேமாதிரி பஞ்சணையில் மருதி உட்கார்ந் திருந்தாள் இன்னொரு நாகதேவியைப் போல். ஏதோ சிறைப் பட்டவளாகக் கைகால்கள் கட்டப்பட்டு மருதி இருப்பாள் என்று நினைத்த உபேந்திரனுக்கு மருதியின் நிலைக்குக் காரணம் புரியவில்லை. ஆகவே தனது பக்கத்தில் நின்ற நாகதேவியை நன்றி ததும்பும் கண்களால் நோக்கினான். “நாகதேவி. ஆயிரம் இருந்தாலும் உன்னிடம் பண்பாடு இருக்கிறது” என்று பாராட்டவும் செய்தான்.

நாகதேவி திட்டமாகப் பேசினாள். “பண்பாடல்ல இதற்குக் காரணம். மருதி என்னைப்போலவே இருக்கிறாள். அவள் உடலுக்கு ஏற்படும் ஒவ்வோர் இம்சையும் என்னை இம்சை செய்வது போலிருக்கிறது. ஆகையால் எனது நிலையை அவளுக்கு அளித்தேன். ஆனால் ஒன்று, நீங்கள் மருதியை அணுக முடியாது” என்று கூறினாள்.

“யார் என்னைத் தடுக்க முடியும்? இப்பொழுதே மருதியைத் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்கிறேன்” என்று சீறி மருதியை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தவன்



திடீரென நின்றான். பிறகு அந்த அறையை விட்டு வெகு வேகமாக தளத்துக்கு ஓடினான். நாகதேவியின் மரக்கலம் நங்கூரம் எடுக்கப்பட்டு நாகப்பட்டினத்திலிருந்து நீண்ட தூரம் நகர்ந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்டான். இனித் தனக்கோ மருதிக்கோ விமோசனமில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது உபேந்திரனுக்கு.

## 16. இன்னும் மூன்று நாள்கள்

உபேந்திரன் மரக்கலத்தின் தளத்துக்கு வந்தபோது கதிரவன் நன்றாகக் கிளம்பிவிட்டதையும், நாகப்பட்டினத்தின் கரையிலிருந்து மரக்கலம் நீண்ட தூரம் வந்துவிட்டதையும், ஓரளவு கரை தெரிந்தாலும் மரக்கலத்திலிருந்து சைகை காட்டுவதோ துணைக்கு அழைப்பதோ முடியாத காரிய மென்பதையும் உணர்ந்து கொண்டதால் என்ன செய்வ தென்று அறியாமல் சில விநாடிகள் திகைத்து நின்று விட்டான்.

அமைதியில்லாத அவன் மனத்துக்கு நேர் விரோதமாக அன்று காலை கடல் மிகுந்த அமைதியுடனிருந்தது. கதிரவன் அதன் சிற்றலைகள் மீது தனது கிரணங்களைப் பாய்ச்சி அவற்றின் அழகையும் அசைவையும் பன்மடங்கு ஒளிபெறச் செய்திருந்ததாலும், அவை கண்ணாடிபோல் பளபளத்த தாலும் நன்றாக இணைக்கப்பட்ட கண்ணாடிகள் மீது மிதந்து செல்லும் பிரமையை அடைந்தான் உபேந்திரன். வானும் கடலும் இணைந்து சிருஷ்டித்த இயற்கையின் இந்திர ஜாலத்தைக் கண்டு சாதாரணமாகத் துள்ளும் மனத்தை உடைய சோழர் படைத்தலைவன் அன்று எதையும் ரசிக்கும் நிலையில் இல்லாததால் ஆசுவாசப் பெருமூச்சு

ஒன்றை வெளியிட்டான். காரணமின்றித் தளத்தைச் சுற்றி நடந்தான் இருமுறை. பிறகு நடுவிலிருந்த பாய்மரத்தண்டில் ஏற முயன்றபோது மட்டும் ஒரு மாலுமி அருகில் வந்து அவனைத் தடுத்து, "படைத்தலைவரே! பாய்மரத்தண்டில் ஏற மட்டும் தங்களுக்கு அனுமதியில்லை. மற்றபடி இந்த மரக்கலம் தங்களுக்குச் சொந்தம். தாங்கள் எதைச் சொன்னாலும் செய்ய தலைவி உத்தரவிட்டிருக்கிறார்கள்" என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டான். விடியற்காலையில் தான் தளமேறி வந்தபோது போர் சன்னத்தத்துடன் நின்றிருந்த மாலுமிகள், இப்போது தங்கள் ஆயுதங்களில் ஓரிரண்டைத் தவிர மற்றவற்றைத் துறந்து நிற்பதைக் கண்ட உபேந்திரன் அந்த மாலுமிக்கு உடனடியாக பதில் சொல்லவில்லை. சில விநாடிகளுக்குப் பிறகு அந்த மாலுமியை நோக்கி, "சுத்ததத்தர் எங்கே?" என்று வினவினான்.

விசித்திரமான பதில் வந்தது மாலுமியிடமிருந்து. "உறங்கிக் கொண்டிருக்கிறார்" என்று கூறினான் மாலுமி.

இதைக் கேட்டதும் வியப்பெய்திய படைத்தலைவன், "உறங்கிக் கொண்டிருக்கிறாரா? இத்தனை நேரத்துக்குப் பிறகுமா? நான் வந்தபோது இங்கு அவரைப் பார்த்தேனே" என்றான்.

"குருநாதர் இரவு முழுவதும் விழித்திருந்ததால் காலையில் உறங்கிவிட்டார்" என்றான் மாலுமி.

உபேந்திரன் நகைத்தான். சித்தம் மிகுந்த துயரத்திலிருந்த போதுகூட "குருநாதர் நேற்று நள்ளிரவில் தானே இங்கு வந்திருப்பார்" என்றான் நகைப்பின் ஊடே.

"ஆம் படைத்தலைவரே! தாங்களும் நாகதேவியும் உத்தரவிட்டதால் குருநாதர் நமது மாலுமிகளால் கட்டிக்



கொண்டு வரப்பட்டார். இங்கு வந்ததும் கூவினார். எங்களையெல்லாம் ஒழித்து விடுவதாகக் கூச்சலிட்டார். நாங்கள் மசியவில்லை. அவரை ஓர் அறையில் அடைத்துப் பூட்டினோம். ஆனால் அடுத்த ஜாமத்தில் நாகதேவியின் உத்தரவின்மேல் இன்னொரு நாகதேவியும் இங்கு பலவந்தமாகக் கொண்டு வரப்பட்டாள். குருநாதரை மரியாதையுடன் நடத்தவும் உத்தரவு வந்தது. எங்களுக்கு ஒரே பிரமையாகப் போய்விட்டது. இருப்பினும் நாகதேவியின் உத்தரவுப்படி அந்த இரண்டாவது நாகதேவியையும் ஓர் அறையில் வைத்துப் பூட்டினோம். ஆனால் அவளை சகல மரியாதைகளுடன் நடத்தினோம். குருநாதரின் கட்டுகளை அவிழ்த்து விட்டோம். அவரே தங்களையும் எங்கள் தலைவியையும் இங்கு வரவேற்றது நினைப்பிருக்கும்" என்று விளக்கினான் மாலுமி.

உபேந்திரனுக்கு ஒரே ஒரு சந்தேகம் மட்டும் வந்தது. "ஆமாம் இரண்டாவது தேவியை யார் தூக்கி வந்தார்கள்? யார் உத்தரவுமீது?" என்று வினவினான்.

மாலுமி சிறிது நிதானித்துவிட்டுச் சொன்னான், "படைத்தலைவரே! நாகதேவி நாகர்கள் குலத்துக்கும் முக்கியமானவர். அவரைப் பார்த்து நாங்கள் திரும்ப அழைத்துச் செல்லாவிடில் சாவகத்தின் நாகர்கள் எங்களைத் தீ வைத்துக் கொன்றுவிடுவார்கள். ஆகவே எப்பொழுதும் இந்த மரக்கலத்தின் பத்து மாலுமிகள் நாகதேவி தங்கும் இடத்தில் இருந்து சற்று எட்ட மறைந்திருந்து கண்காணிப்போம். காவல் செய்வோம். நேற்றிரவின் ஆரம்பத்தில் நீங்களும் நாகதேவியும் உங்கள் மாளிகையிலிருந்து வெளிவந்ததும் உங்களை எதிர் கொண்டோம். உங்கள் கட்டளைப்படி குருநாதரைக் கட்டி இங்கு கொண்டு வந்தோம். பிறகு அடுத்து வேறிருவர் நாகதேவியைப்போல இருந்த

பெண்ணை மயக்கத்துடன் தூக்கி வந்தார்கள். அவர்களை விசாரித்ததில் அதுவும் தலைவியின் ஆணைதான் என்றார்கள். இப்பொழுதுகூட நேற்றிரவு நிகழ்ச்சிகளை நினைத்தால் ஒரே குழப்பமாயிருக்கின்றன" என்று.

அவன் விளக்கத்தைக் கேட்டதும் நடந்ததெல்லாம் மிகத் தெளிவாயிற்று உபேந்திரனுக்கு. நாகதேவியை மயக்கத் துளிகளால் மயக்கித் தனது அறையில் விட்டு மருதியை நாகதேவியாக்கி விஹாரத்துக்கு அழைத்து வந்ததும், இடையில் வந்த நாகர்களைக் குருநாதரைக் கட்டிச் செல்ல மருதி பணித்ததும் அம்மாதிரியே அவர்கள் செய்து முடித்ததையும் புரிந்துகொண்ட உபேந்திரன் உண்மை நாகதேவி சீக்கிரமாகவே மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் அவளும் வெளிவந்து வேறு இரு நாகர்களுடன் விஹாரத்துக்கு வந்து மண்டபத் தூணில் ஒலி எழுப்பித் தன்னை சார்புமணையிலிருந்து மண்டப முன்பகுதிக்கு வரவழைத்து அதே சமயத்தில் மருதியைத் தூக்கிச் செல்ல உத்தரவிட்டிருக்க வேண்டு மென்றும் பிறகு மருதியின் இடத்தில் அவள் படுத்திருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தான். நாகதேவியின் அபாரமான புத்தி சூட்சுமத்தையும், நடவடிக்கைகளைச் சிறப்பாக நிறைவேற்றும் சாமர்த்தியத்தையும் வியந்தான். நாகதேவி மட்டும் கொடியவளாக இல்லாதிருந்து நாகப் பட்டினத்தைக் கைப்பற்றும் எண்ணம் இல்லாதவளாயு மிருந்தால் நாகதேவிகூட தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருப்பாள் என்று நினைக்கவும் செய்தான்.

அந்த நினைப்புடன் சிறிது நேரம் மரக்கலத்தை அளப்பவன்போல் நடைபோட்ட உபேந்திரன் அந்த மரக் கலத்தின் அமைப்பைக் கவனிக்கலானான். அது மிகவும் திடமுள்ள போர்க்கலமென்பது சந்தேகமறத் தெரிந்தது.



அவனுக்கு. அதன் பக்கப் பலகைகளின் கனம் அதிகமாய் இருந்தாலும் மற்ற இடங்கள் மெல்லியதாயிருந்தனவாகை யால் கீழ்த்தளத்தின் தளம் அதன் வேகத்தைத் தடைப்படுத்த முடியாதென்பதை உணர்ந்துகொண்ட உபேந்திரன் பக்கப் பலகையின் ஒரு பகுதியிலிருந்து தலையை நீட்டி அடிப் பலகையை நோக்கினான். அதனுடைய துவாரத்திலிருந்து சுமார் எண்பது பெரும் துடுப்புகள் துழாவப்படுவதைப் பார்த்த உபேந்திரன் "அவர்களை நான் பார்க்க முடிந்தால்..." என்று எண்ணினான்.

அவன் அப்படி எண்ணி ஏதோ மனத்தில் திட்டம் போட்டிருந்த சமயத்தில் அவன் பின்னால் மூன்று முறை சிரிப்பு கேட்கவே சட்டென்று திரும்பினான். நாகதேவி அவனுக்குப் பின்னால் புன்முறுவல் செய்து கொண்டு நின்றிருந்தாள். அவள் கண்களில் விஷமம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. "படைத்தலைவரே! நீங்கள் பார்த்தது எண்பது துடுப்புகள்தான். இன்னொரு பக்கம் எண்பது மட்டும் இருக்குமென்றால் நூற்று அறுபது அடிமைகள் மட்டும் இருப்பார்களென்று நீங்கள் கணக்குப் போடலாம். ஆனால் தவறு படைத்தலைவரே, உண்மை தெரிய வேண்டுமானால் கீழ்த்தளத்துக்கு வாரும் பார்க்கலாம்" என்றாள் நாகதேவி விஷமமும் ஏளனமும் நிரம்பிய குரலில்.

உபேந்திரன் கண்கள் அவளைச் சுட்டுவிடுவதைப் போல் பார்த்தன. "உன்னிடம் எத்தனை அடிமைகளிருந்தால் எனக்கென்ன?" என்று வினவினான்.

"உங்களுக்குத் தெரிந்து கொள்ள ஆவலிருந்ததால் சொன்னேன். ஆவலில்லாவிட்டால் பக்கப் பலகையில் குனிந்து கீழ்த்தளத் துடுப்புகளை எண்ணுவானேன்?" என்று நாகதேவி வினவியதல்லாமல் அவன் பக்கத்தில் வந்தும்

நின்று கொண்டாள். தளத்திலிருந்த எல்லா மாலுமிகளும் பார்க்கும்படியாக அவன் தோள்மீது கையையும் போட்டுக் கொண்டாள்.

அந்தக் கையை அவன் அகற்றவில்லை. மரம்போல் நின்றிருந்தான். அவள் அவன் தோளைச் சிறிது அழுத்தி, "வாருங்கள், இந்த மரக்கலம் முழுவதையும் சரியாகப் பாருங்கள். உங்களிடம் எதையும் ரகசியமாக வைத்திருக்க எனக்கு இஷ்டமில்லை" என்று கூறி அவனை லேசாக இழுத்தாள். உபேந்திரன் அவளுடன் மெல்ல நடந்தான். நாகதேவி அவனை அழைத்துக் கொண்டு தளத்திலிருந்து கீழே செல்லும் படிகளில் இறங்கினாள். அங்கிருந்து அந்தத் தளத்துக்கும் அடியில் ஓடிய படிகளில் இறங்கியதும் துடுப்புகள் துழாவப்படும் இடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

அவளுக்குப் பின்னால் இறங்கிய உபேந்திரன் அந்த நீண்ட அடித்தளத்தைக் கண்டு பெரு வியப்படைந்தான். சுமார் முன்னூறு துடுப்புத் துழாவுவோர் வேகமாகத் தங்கள் கடமைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். சில துடுப்புகளை இருவர் இயக்கினர். சிலவற்றை ஒவ்வொருவரே இயக்கினர். பலதரப்பட்ட கனமும் நீளமுமுள்ள துடுப்புகளைப் பார்த்த உபேந்திரன் அந்த மரக்கலத்தின் வேகத்தைப் பிடிப்பது சாதாரண கப்பல்களால் முடியாதென்பதை உணர்ந்து கொண்டான். தவிர வேறொன்றையும் உணர்ந்தான். அவன் சித்தத்தில் நாகதேவியைப் பற்றிய மதிப்பு மிக அதிகமாயிற்று. தான் நின்றிருந்த முகப்புப் படியிலிருந்து கீழே இறங்கி துடுப்பு தள்ளுவோரின் இடையே நாகதேவியும் நடந்து சென்றாள். ஒவ்வொரு துடுப்பு தள்ளும் மாலுமியும் அவளை அன்புடன் நோக்கினார்கள். அவள் தங்களிடை நடக்க முற்பட்டதும் அத்தனை மாலுமிகளும் மகிழ்ச்சி கோஷம் கிளப்பினார்கள். சிலர் கையைப் பிடித்து



முத்தமிட்டார்கள். சிலர் தலைகளில் அவள் கையை வைத்து அழுத்தியபோது அவர்கள் பெரிதாக நகைத்தார்கள். அந்த நகைப்பில் நன்றி உணர்ச்சி பெரிதாக இருந்ததை உபேந்திரன் கவனித்தான்.

இந்த ஒவ்வொரு மாலுமியும் அவளுக்காக உயிர் விடச் சித்தமாய் இருக்கிறான் என்பதை உபேந்திரன் உணர்ந்து கொண்டான். அவர்கள் உண்மையில் அடிமைகள் அல்ல என்பதும் புரிந்தது சோழர் படைத்தலைவனுக்கு. அதனால் சோகமடைந்த முகத்துடன் நின்றிருந்த உபேந்திரனை சுட்டிக் காட்டிய நாகதேவி அவர்களை நோக்கிக் கேட்டாள், "இவரை உங்களுக்குத் தலைவராக நியமிக்கட்டுமா?" என்று.

மாலுமிகள் துடுப்புகளைத் துழாவுவதைச் சட்டென்று நிறுத்தி 'வேண்டாம்' என்பதற்கு அறிகுறியாக தலையை வேகமாக அசைத்தார்கள். அதனால் புன்முறுவல் கொண்ட நாகதேவி, உபேந்திரனை அழைத்துக்கொண்டு இடைத் தளத்திலிருந்த தனது அறைக்கு வந்து பழையபடி தனது மஞ்சத்தில் ஒருக்களித்துச் சாய்ந்து கொண்டாள். அந்த நிலையில் புன்முறுவல் செய்து வினவினாள். "படைத் தலைவரே! இந்த மரக்கலத்தின் மாலுமிகள் யாரையும் நீங்கள் உங்கள் வசப்படுத்த முடியாது. நான் நினைத்தால் இந்த மரக்கலத்தை உங்களுக்கு இரும்புக் கிராதிகளுள்ள சிறைச்சாலையாக்கவும் முடியும். சொர்க்கமாகவும் ஆக்க முடியும். உங்களுக்குத் தேவை எது?" என்று வினவினாள். "அதைத் தீர்மானிக்க உங்களுக்கு மூன்று நாள் அவகாசம் தருகிறேன். அதற்குள் நீங்கள் சரியான முடிவுக்கு வரா விட்டால் மருதி இப்பொழுதுள்ள நிலையில் இருக்க மாட்டாள்" என்றும் சொன்னாள் நாகதேவி.

அவள் சொற்கள் விஷமென உதிர்ந்தன. அவற்றை அடுத்து அவள் மும்முறை நகைத்தாள். மருதி பேராபத்தில்

www.cleanindians.com

சிக்கிக்கொண்டிருக்கிறாள் என்பதை சந்தேகமறப் புரிந்து கொண்டான் உபேந்திரன்.

## 17. அடைத்த கதவு! அணைத்த கைகள்!

**நா**கதேவி அளித்த மூன்று நாள்களுக்குள் தான் ஏதாவது திட்டமான முடிவுக்கு வராவிட்டால் மருதியின் நிலை பேராபத்தில் வந்து முடியுமென்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றிப் புரிந்துகொண்ட உபேந்திரன் அன்று முழுவதும் தீர்க்காலோசனையில் இருந்தான். எந்தவிதமாக நோக்கினாலும் தானோ மருதியோ நாகதேவியின் விஷப்பிடியிலிருந்து தப்புவது குதிரைக் கொம்புதான் என்பது தெளிவாகப் புலப்பட்டது சோழர் படைத்தலைவன் சித்தத்துக்கு. நாகதேவி தனது அறையில் பஞ்சணையில் சயனித்தவண்ணம் கொடுத்த மூன்று நாள் தவணையை எண்ணிப் பார்த்தபோது சினம் முதலில் அவன் சித்தத்தை ஆட்கொண்டாலும், சினத்தால் எதையும் சாதிக்க முடியாதென்ற உணர்வால் மெள்ள தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அன்றைய தினத்தை சிந்தனையிலேயே கழித்தான். அதிகப்படியான சிந்தனையால் ஏற்பட்ட குழப்பத்தை மாற்றிக்கொள்ள அடிக்கடி மேல்தளத்துக்குச் சென்று தமிழகத்தின் கரை இருந்த திசையை நோக்கிக்கொண்டு காலத்தைக் கழித்தான்.

அன்று சூரியன் இருந்த நிலையைக் கண்டு நாகர்களின் மரக்கலம் நேராக வடக்கு நோக்கிச் செல்வதைக் கண்டு 'இவர்கள் சாவகத்திற்குச் செல்லவில்லை. ஏதோ எனக்கு ஜாடை காட்டுவதற்காகப் பாய் விரித்து ஓடுகிறார்கள்'



என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அன்று காற்றும் அனுகூலமாயிருந்ததால் பாய்கள் விரித்துவிடப்பட்டு துடுப்புகளைத் துழாவுவதும் நிறுத்தப்பட்டதன் விளைவாகக் கீழ்த்தரை மாலுமிகளும் மேல்தளத்துக்கு வந்து உலாவ முற்பட்டார்கள். அவர்கள் உலாவிய முறையிலிருந்தும் அவர்கள் தன்னை ஒரு பொருட்டாக மதிக்காமல் கூச்சல் போட்டுக் கொம்மாளமடித்ததையும் கண்ட உபேந்திரன் நாகதேவி அவர்களை அடிமைகள்போல் நடத்தவில்லையென்பதையும் எல்லா உரிமைகளையும் அவர்களுக்கு அளித்திருக்கிறாள் என்பதையும் புரிந்துகொண்டான். பகலில் அந்த மரக்கலத்தில் காணப்பட்ட கோலாகலம் மாலையில் அதிகமாகி இரவில் உச்சஸ்தாயிக்குச் சென்றது.

அன்று மாலைக் காட்சி மிக அற்புதமாயிருந்தது. செவ்விய கிரணங்களுடன் மறைய முற்பட்ட சூரியன் அந்த மரக்கலத்துக்குச் செஞ்சாந்து பூசினான். மேலே விரிக்கப்பட்ட பாய்களும் சாவகத்தின் கொடியுங்கூட அந்தச் செந்நிறக் கிரணங்களில் மூழ்கிப் பிரமிக்கும்படியான அழகைப் பெற்றிருந்தன. எங்கிருந்தோ பறந்து வந்த கடல் பறவைகள் பல பாய்மரங்களின் குறுக்குக் கயிறுகளின் மீது உட்கார்ந்து கூவிய இன்பமற்ற கூச்சலும் காதுக்கு இனிமையாகவே தோன்றியது.

இந்தக் காட்சியைக் கண்டுகொண்டே தளத்தில் நடந்த உபேந்திரன் மெள்ள அந்த நாவாயின் பக்கப் பலகையில் சாய்ந்தவண்ணம் சூரியாஸ்தமனத்தை நோக்கினான். பிறகு மேலே இருந்த ஆகாயத்தையும் தூரத்தே கண்ணுக்குப் புலப்படாத கரையையும் இணைத்து கரை சுமார் எத்தனை தூரத்திலிருக்கும் என்பதை நிர்ணயிக்க முயன்றான். அப்படி அவன் எண்ணங்களைப் பலபடி ஓடவிட்டுக் கொண்டு

நின்ற சமயத்தில் அவன் பக்கத்தில் ஒரு பூவுடல் நின்றது, அவன் உடலுடன் உராய்ந்தது.

அது நாகதேவியாகத்தான் இருக்க முடியும் என்ற சிந்தனையால் அவன் திரும்பிப் பார்க்காதிருந்த தருணத்தில் பக்கத்தில் நின்றவள் சோகப் பெருமூச்சும் விட்டாள். அதனால் சட்டென்று திரும்பிய உபேந்திரன் தனது பக்கத்தில் நின்ற பெண்ணைத் திரும்பிப் பார்த்து, "யார்? மருதியா?" என்று வியக்கும் குரலில் வினவினான்.

பதிலுக்கு மீண்டுமொரு பெருமூச்சு வந்தது அவளிடமிருந்து. "ஏன்? அதற்குள் மறந்துவிட்டீர்களா?" என்ற சொற்களும் சோக நிலையிலேயே உதிர்ந்தன.

அவள் மருதிதான், கிரீடத்தைக் கழற்றிவிட்ட நாகதேவி அல்லவென்பதைத் தீர்மானித்துக் கொள்ள அவளை நன்றாக மீண்டும் உற்று நோக்கிய உபேந்திரன், "ஆம். நீ மருதிதான்" என்று சொன்னான்.

"அதிலும் சந்தேகமா?" என்று அவள் மீண்டும் கேட்டாள்.

"சந்தேகத்துக்குக் காரணங்கள் இல்லையா மருதி?" என்று வினவினான் சோழர் படைத்தலைவன்.

"இருக்கின்றன. நானும் அவளும் ஒரே அச்சில் வார்த்தவர்கள்போல் இருக்கிறோம்" என்ற மருதி மீண்டும் பெருமூச்சு விட்டாள்.

உபேந்திரனுக்கு அப்பொழுதும் அவள்தான் மருதியென்ற நிச்சயமில்லாததால், 'இதுவும் நாகதேவியின் நாடகங்களில் ஒன்றாயிருந்தால் என்ன செய்வது' என்று எண்ணி, "மருதி! என்னை உன் கண்களால் உற்றுப் பார்" என்று கூறி அவளைத் திரும்பி நோக்கினான்.

www.learnindians.com



மருதி தனது இரு விழிகளையும் அவன் விழிகளுடன் கலந்தாள். நீண்ட நேரம் அந்த விழிகளைத் தன் விழிகளால் கவ்வி நின்ற உபேந்திரன், "நீ மருதிதான். சந்தேகமில்லை. உன் கண்களில் அவள் விஷப்பார்வை இல்லை" என்று கூறிவிட்டு, "உன்னைத் தளத்துக்கு வர நாகதேவி அனுமதித்தாளா?" என்று வினவினான்.

"எனக்கு எந்தவிதத் தடையும் அவள் விதிக்கவில்லை; நான் சுதந்திரமாக உலாவலாம். இருப்பினும் என் மனத்தில் ஏதோ ஒரு பயம் இருக்கிறது. அவள் கண்கள் சதா என்னுடைய ஒவ்வோர் அசைவையும் கவனிப்பதாக ஒரு பிரமை இருக்கிறது எனக்கு" என்று கூறினாள் மருதி.

மாலைக் கதிரவன் மெள்ள மெள்ள கடல்நீருக்குள் மூழ்கிடவே, வெண்மதியும் மெள்ள வானத்தில் தோன்றினான். பிறைகள் ஒன்பதே ஓடியிருந்ததால் அரையே அரைக்கால்வாசி மட்டும் தோன்றிய வெண்மதியின் நிலவு சுமாராகத்தானிருந்தது. சுமாராக இருந்த காரணத்தினாலேயே அதன் பந்தமும் மயக்கத்தைத் தந்தது.

மந்த மதியின் கிரணங்களில் குளித்து நின்ற மருதி மிக அழகாகக் காணப்பட்டாள் அன்றிரவு. அவள் முகங்கூட அந்த மந்த மதியின் கிரணங்களுக்கு அசாத்திய மெருகு கூட்டியது. காற்றில் அலைந்த அவள் தலைக்குழலின் முன்னுச்சி மயிர்கள்கூட வெள்ளிக்கிரணங்களின் ஒளி பெற்று பளபளத்தன. அவள் கண்கள் முன்னைவிட அதிகமாக ஜொலித்தன. அவளின் செவ்விய இதழ்களுக்கு வெள்ளிக் கிரணங்கள் பூசிய சாந்து அவற்றை மாணிக்கக் கட்டிகளாக அடித்திருந்தன. அவள் அழகையெல்லாம் அள்ளிப் பருகிய உபேந்திரன் அவளைத் தன்னுடன் குனியும் படியும் கூறிப் பக்கப் பலகையில் சாய்ந்தான். அவளும் சாயவே அக்கம் பக்கத்தில் நின்று உராய்ந்துகொண்டு

கீழ்க்கடல் நீரை நோக்கியவண்ணம் இருவரும் உரையாடத் தொடங்கினார்கள்.

"மருதி! நாகதேவியை அற்பமாக நினைக்காதே! நம்மை சுதந்திரமாக அவள் உலாவவிட்டிருப்பதிலும் ஏதோ மர்மமிருக்கிறது; நமக்குப் புரியாத திட்டமிருக்கிறது" என்று எச்சரித்தான் உபேந்திரன்.

"ஆம். அது எனக்குத் தெரிகிறது" என்றாள் மருதி.

"ஆகவே அவள் அளிக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ளாதே. உன் அறையிலேயே இரு. தேவையானால் நானே உன்னை வந்து சந்திக்கிறேன்" என்று யோசனை சொன்னான் படைத்தலைவன்.

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையசைத்த மருதி, "ஆமாம், அவள் அறியாமல் நீங்கள் எப்படிச் சந்திக்க முடியும்?" என்று கேட்டாள்.

"எப்படியென்று சொல்ல முடியாது மருதி. ஆனால் உன்னைப் பார்க்காதிருக்கவும் என்னால் முடியாதே" என்று கூறிய படைத்தலைவன் தனது முழங்கையை மெள்ளப் பக்கவாட்டில் நகர்த்தினான்.

அவளுடைய எழுச்சி அது பட்டதாலேயே உணர்ச்சி வசப்பட்டதால் மருதி நாசியிலிருந்து உணர்ச்சிப் பெருமூச்சொன்றை வெளியிட்டாள். தவிர சிறிது நகர்ந்து அவன் முழங்கை தன் மீது அழுந்தவும் உதவினாள்.

லேசாகப்பட்ட அழகுதான். இருப்பினும் அதனால் ஏற்பட்ட தனது மன நெகிழ்ச்சி அபரிமிதமாயிருந்ததை எண்ணிய உபேந்திரன் பெண் சிருஷ்டியின் சக்தியை எண்ணி வியந்தான். "இதனால்தான் உலகத்தில் பல நிகழ்ச்சிகள், நல்லவை, பொல்லாதவை எல்லாமே ஏற்படு



கின்றன" என்று தன்க்குள் சொல்லிக்கொண்டிருக்கையில் அவள் மலர்ப்பாதமொன்று அவன் பாதத்தின் மீது மெதுவாக ஏறி மிதிக்கவே உணர்ச்சிகள் நிலைகுலைய நின்ற உபேந்திரன் எதற்கும் துணிந்த உணர்ச்சியுடன் அவள் உடலுடன் தனது உடலை நன்றாகவே இழையவிட்டான்.

இத்தனைக்கும் அவர்கள் இருவரும் சாதாரணமாகவே நின்றிருந்ததாகத் தோன்றியதால் தளத்தில் அங்குமிங்கும் நடமாடிய மாலுமிகள் அவர்களைக் கவனித்தார்களில்லை. கீழே துடுப்புத் துழாவிய முன்னூறு மாலுமிகளும் மேல் தளத்து மாலுமிகளும் கூட்டமாக நின்றும் நடந்து கொண்டுமிருந்ததால் அந்தக் கும்பலில் இந்த இருவரையும் கவனிப்பாருமில்லை. தவிர நடமாடிய மாலுமிகள் ஓரிருவர் மருதியின் மீதும் படைத்தலைவன் மீதும் இடித்துக்கொண்டு சென்றதை இருவருமே கவனிக்கவில்லையாதலால் மற்றவர்களும் அவர்களைக் கவனிக்காமல் நடமாடிக் கொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் குருநாதரோ நாகதேவியோ தளத்துக்கு வராதது உபேந்திரன் சந்தேகத்தைக் கிளறவே அவன் கேட்டான், "மருதி! இத்தனை அமர்க்களத்திலும் நாகதேவி இங்கு தலை காட்டாதது உனக்கு விசித்திரமாயில்லையா?" என்று.

"ஆம். விசித்திரமாகத்தானிருக்கிறது. ஆனால் அவள் போக்கே விசித்திரந்தானே?" என்றாள் மருதி.

"இரவு ஏறிக்கொண்டிருக்கிறது மருதி" என்று சுட்டிக் காட்டினான் உபேந்திரன்.

"ஆம்."

"நீ உன் அறைக்குப் போ."

"நீங்கள்?"

"நாகதேவியைப் பார்க்கப் போகிறேன்."

www.cleanindians.com

மருதி உடனே தன் பெண்மைக் குணத்தைக் காட்டினாள். சட்டென்று திரும்பி, "எதற்கோ?" என்று வினவினாள்.

"அவளைச் சந்தேகப்படும்படி விடக்கூடாது" என்றான் உபேந்திரன்.

"எப்படி அவள் சந்தேகத்தைத் தீர்க்கப்போகிறீர்கள்?" மருதியின் குரலில் பொறாமை தெரிந்தது.

"வழி இருக்கிறது."

"வழியை என்னிடம் சொல்லலாமா?"

"சொல்லலாம். ஆனால் இப்பொழுதல்ல."

"வேறு எப்பொழுது?"

உபேந்திரன் சொன்னான்: "பக்கப் பலகையில் சாய்ந்து நன்றாகக் குனி" என்று.

அவள் அப்படியே குனிய "மருதி!" என்று மெள்ள அழைத்தான் உபேந்திரன்.

"உம்."

"இன்றிரவு நள்ளிரவுக்குப் பிறகு மூன்றாம் ஜாமத்தில்..."

"ஊம்..."

"உன் அறைக்கு வருகிறேன்."

"எப்படி முடியும்?"

"எப்படியோ வருகிறேன். நீ கதவைத் தாளிடாமல் வைத்திரு."

மருதியின் கண்களில் ஆசை தெரிந்தது. "வந்து...?" என்று துஷ்டத்தனமாக வினவினாள்.

"வந்து உனக்குத் தகுந்த புத்தி கற்பிக்கிறேன்" என்ற உபேந்திரன் அவளை விட்டுச் சிறிது நகர்ந்தான்.



அவளும் ஆகாயத்தை நோக்கிவிட்டு, "படைத்தலைவரே, நான் வருகிறேன்" என்று இரைந்து கூறிவிட்டுச் சென்றாள்.

அன்றிரவு எட்டு நாழிகைக்குப் பிறகு மாலுமிகள் தவிர மற்ற எல்லோருக்கும் நாகதேவியின் அறையிலேயே உணவு படைக்கப்பட்டது. நாகதேவி என்ன காரணத்தினாலோ அன்று மிகுந்த உற்சாகத்தோடு இருந்தாள். மிகவும் கலகலப் பாகப் பேசினாள். பிறகு அவரவர் அறைக்குச் சென்றதும் தானும் பஞ்சணையில் படுத்தாள். அவள் படுத்ததை கதவிடுக்கின் மூலம் கவனித்த உபேந்திரனும் தனது அறைக்குச் சென்று சயனித்தான். உறக்கம் வராமல் நாழிகை களை எண்ணிக்கொண்டிருந்தான். தனது வேட்கைக்குத் தகுந்தபடி நாழிகைகள் நகராததால் அவற்றைச் சபித்தான்.

www.cleanindians.com

இரண்டொரு தடவை சாளரத்தின் மூலமாக விண் மீன்களைப் பார்த்து நாழிகைகளைக் கணக்குப் போட்டான். மூன்றாம் ஜாமம் புகுந்ததும் மெதுவாக அறையை விட்டுக் கிளம்பி மருதியின் அறையை நோக்கிச் சென்று கதவைத் திறக்க முயன்றான். கதவு அடைத்திருந்தது. இருமுறை மெதுவாகத் தட்டினான். மருதி எழுந்து வந்து ஓசைப் படாமல் கதவைத் திறந்தாள். அவளையும் தள்ளிக்கொண்டு அறைக்குள் புகுந்தான்.

"உன்னை யார் கதவைத் தாளிடச் சொன்னது?" என்று எரிந்து விழுந்தான். அந்தக் கோபத்தை அவள் கைகளின் அணைப்பு அணைத்துவிட்டது.

## 18. வலையில் சிக்குண்ட விலங்கு

கதவை அவன் உத்தரவுக்கு மாறாக அடைத்ததால் ஏற்பட்ட அவன் சீற்றத்தைத் தனது மலர்க்கைகளைக் கொண்டு அவள் அணைத்துத் தீர்த்துவிட்டாலுங்கூட

அவன் அதைப்பற்றியே பேச்சுக் கொடுத்தான். அவள் கைகள் அவன் இடுப்பைச் சுற்றி வளைத்ததை நீக்கி அவற்றைத் தன் மார்புக்காக ஏற்றிவைத்துக் கொண்டு அவள் இடையில் தனது இரு கைகளையும் கொடுத்து அவள் பூவுடலை வளைத்து இறுக்கினான். அந்த நிலையில் "மருதி...!" என்று மெல்ல அழைக்கவும் செய்தான்.

"உம்...!" இந்த ஒரு சத்தந்தான் அவளிடமிருந்து வந்தது. "கதவை ஏன் அடைத்தாய்?" என்று அவன் வினவினான். அவன் கைகள் அவளை மேலும் இறுக்கின.

"பயமாயிருந்தது." அவள் அவன் பிடிப்பில் துவண்டாள்.

"என்ன பயம் நானிருக்கும்போது?" அவன் ஒரு கை எழுந்த அவள் முதுகை அணைத்த நிலையிலேயே தடவியது.

"வேறு யாராவது கதவைத் திறந்து..." வாசகத்தை அவள் முடிக்கவில்லை. ஆனால் அவள் தலை அவன் மார்பு மீது படுத்தது. கால்கள் அவனை நோக்கி அழுந்தின.

"யார் அப்படிக் கதவை திறப்பார்கள்? என்னதான் செய்வார்கள்?" என்று அவன் கேட்டான். பயத்தால் எழுந்து தன்மீது அழுந்திக்கொண்டிருந்த மார்பின் மீது தனது கையை வைத்து அவளுக்கு அமைதியளிக்க முயன்றான். அவன் கைப்பட்டது, அந்த மார்புக்கு அமைதியளிக்க வில்லை! சீற்றத்தையே அளித்ததால் அவை மேலும் அதிகமாக எழுந்து தாழ்ந்தன. அந்த எழுச்சியும் தாழ்ச்சியும் அழுத்தமும் பிரிவும் அவன் உணர்ச்சிகளைக் கட்டுக் கடங்காமல் செய்யவே அவன் கதவைத் தாழிட்டுவிட்டு அவளை அப்படியே நகர்த்திக் கொண்டு சென்று கட்டிலில் படுக்க வைத்துத் தானும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

www.cleanindians.com



பஞ்சணையில் அவள் லேசாகப் புரண்டாள். அவன் கைகளிலொன்றை எடுத்துத் தனது மார்பின் மீது வைத்துக் கொண்டாள். "தலைவரே! என்று மெதுவாக அழைத்தாள்.

அவன் அவள் மார்பிலிருந்த கையை எடுக்காமலே "தலைவரா! இம்... என்ன புதுப்பட்டம்?" என்று கேட்டான்.

"காதல் பட்டம்!" என்று அவள் பதில் சொன்னாள்.

"காதல் பட்டமா?" வியப்புடன் வினவினான் அவன்.

"நமது தமிழ்க் கவிஞர்கள் அளித்த பட்டப் பெயர். காதலைப் பற்றிப் பேசும்போதெல்லாம் தலைவன் தலைவி என்று பேசுவார்கள்."

"அதைச் சொல்கிறாயா?" என்று விசாரித்த அவன் கட்டிலின் முகப்பிலிருந்து சிறிது நகர்ந்து அவளை நோக்கிச் சாய்ந்து, "அடுத்து தலைவன் என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினான்.

அவள் ஒரு கணம் மௌனம் சாதித்தாள். பிறகு "அதை யாரும் இதுவரை யாருக்கும் சொல்லிக் கொடுத்ததில்லை" என்று சொல்லிவிட்டு அவன் கழுத்தில் தனது இரு கைகளையும் போட்டுப் பின்னினாள்.

அவன் மெல்ல நகைத்தான். "சொல்லிக் கொடுப்ப தில்லையென்று சொல்லிவிட்டுச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்துவிட்டாயே" என்று கூறினான் நகைப்பின் ஊடே.

அவள் அவனைப் பார்க்க மறுத்தாள். தனது தலையை ஒருபுறம் திருப்பிக்கொண்டாள். வளைத்த அவன் கழுத்தை இழுத்து அவன் தலையைத் தனது மார்பின்மீது புதைத்துக் கொண்டாள். அதன் விளைவாக அவன் கைகள் அவள்

முதுகில் ஊர்ந்தன. அவள் பூவுடலை அப்படியே தூக்கிக் கொண்டன. அவன் முகம் மார்பில் அழுந்திப் புரண்டது. அந்த நிலையில் அவன் மெல்ல "மருதி..." என்று அழைத்தான்.

"உம்..."

"தலையைத் திருப்பு."

"எதற்கு?"

"திருப்புச் சொல்கிறேன்."

"பேசிக் காலத்தைக் கழிக்காதீர்கள்."

இதைச் சொன்னதும் அவள் முகத்தை அவனே திருப்பினான் தனது கையொன்றை விடுவித்துக் கொண்டு. கமலக் கண்கள் மூடிக் கிடந்தன. அவன் மீண்டும் சொன்னான் அவள் காதுக்கருகில் தனது முகத்தைக் கொண்டுபோய், "மருதி... கண்களைத் திற" என்று.

"மாட்டேன்" என்றாள் மருதி.

"ஏன் மருதி?"

"எனக்கு வெட்கமாய் இருக்கிறது."

"வெட்கமென்ன இதில்?"

"நல்ல கேள்வி!"

"மருதி...!"

"ஏன்?"

"இப்பொழுது வெட்கத்தை மீறும் காலம் வந்துவிட்டது."

அவளிடமிருந்து பதில் இல்லை. "மருதி!" என்று மீண்டும் அழைத்தான் அவன். அதற்கும் பதிலில்லை. "ஏன்

www.oceanindians.com



பேசமாட்டாயா?" என்று அவன் அதட்டினான். அதட்டியதோடு நில்லாமல் கையை அவள் இடைக்கும் கீழே கொண்டு போனான். "உம்?" அவளிடமிருந்து எச்சரிக்கைக் குரல் வந்தது. அதனால் புன்முறுவல் கொண்ட உபேந்திரன், "என்ன இருந்தாலும் சமயம் வரும்போது எந்தப் பெண்ணும் தனது பண்பாட்டைக் காட்டுகிறாள்" என்று சிலாகித்தான்.

"பேசியது போதுமா?" அவள் எரிச்சலைக் காட்டினாள்.

"இதில் போதும் என்பதில்லை மருதி" என்றான் உபேந்திரன்.

"பேச்சு அவசியமில்லாத சமயமும் உண்டு" என்றாள் அவள்.

"ஆம் ஆம்" என்ற உபேந்திரன் பஞ்சணையில் அவள் பக்கத்தில் படுத்துக்கொண்டு கப்பலின் தளத்துப் பலகையை நோக்கினான். நோக்கியவன் கண்கள் மலைத்து நின்றன. அந்தப் பலகையில் நாகதேவியின் உருவம் தீட்டப்பட்டிருந்தது. மோகனாகரமான உருவம். 'அழகில் மருதிக்கு அவள் எந்தவிதத்திலும் குறைந்தவள் இல்லை' என்று தீர்மானித்தான். இந்த எண்ணங்களில் ஈடுபட்டிருந்த உபேந்திரன் மீது தனது கையொன்றைப் போட்டாள் மருதி! அத்துடன் வினவினாள் "ஏன் உயரப் பார்க்கிறீர்கள்?" என்று!

"நீயும் பார் தெரியும்" என்றான் உபேந்திரன்.

அவள் பார்க்கவில்லை. "அவளையே தினம் பார்க்கிறேன், அவள் சித்திரத்தைப் பார்ப்பானேன்?" என்று அவள் கேட்டாள்.

"அவளைப் பார்த்தாலும் அவள் சித்திரத்தைப் பார்த்தாலும் என் உணர்ச்சிகள் தடுமாறுகின்றன மருதி"

என்று உபேந்திரன் சொன்னான். ஒருக்களித்து அவள் உடலை அணைக்கவும் செய்தான்.

"அவளைப் பார்த்தால் உங்களுக்கு நிலை கொள்ள வில்லை?" என்று கேட்டு சற்று அதிகமாக நெருங்கினாள் மருதி. அவள் கேள்வியில் வெறுப்புக்குப் பதில் ஆனந்தம் இருந்தது.

அதைக் கவனித்த உபேந்திரன் சிந்தனையில் இறங்கினான். "மருதி! அவளிடம் உனக்குப் பொறாமை யில்லையா?" என்று வினவினான். அவன் குரலில் சந்தேகம் ஒலித்தது.

"இல்லை" என்றாள் அவள் திட்டமாக.

"பெண் குணத்துக்கு மாறுபட்டது நீ சொல்லுவது."

"நீங்கள் எனக்குச் சொந்தமாயிருக்கும் வரையில் அவளிடம் பொறாமை எதற்கு எனக்கு?"

இந்தக் கேள்வி உபேந்திரனுக்கு நியாயமாகவே பட்டாலும் அவன் மனத்தில் சந்தேகம் அடியோடு நீங்காத தால் அவன் எந்தச் செயலிலும் இறங்காமல் மரக்கட்டை போல் அவள் பக்கத்தில் கிடந்தான். அவள் அவனைத் திருப்பி இழுக்க முயன்றது பலிக்கவில்லை. மோட்டு வளையில் தீட்டப்பட்டிருந்த சித்திரத்தை மேலும் ஆராய்ந்தான். அதன் வசீகர சக்தி அதிகமாயிருந்தாலும் அந்தக் கண்கள் மட்டும் மருதியின் கண்களிலிருந்து சிறிது மாறுபட்டிருந்ததைக் கவனித்தான். திடீரென எதையோ நினைத்துக்கொண்டு திரும்பிப் படுத்து மூடிக்கிடந்த அவள் கண்களைத் தனது கை விரல்களால் திறக்க முயன்றான். திறக்க அவள் விடவில்லை. ஓர் இரப்பையைத் திறந்ததும் மற்றொன்றை மூடிக்கொண்டாள். "கண்களைத் திற மருதி" என்று அவளை மிரட்டினான் உபேந்திரன்.



"என்னை யாராலும் பலவந்தப்படுத்த முடியாது" என்று கண்களை மூடியவண்ணமே சொன்ன அவள் "பரீட்சைக்கோ சந்தேகத்துக்கோ சமயமல்ல" என்றும் கூறினாள்.

"பரீட்சை வேண்டாமோ?" உக்கிரத்துடன் கேட்டான் அவன்.

"வேண்டாம்."

"உண்மைதானே!"

"முற்றும் உண்மை!"

"அப்படியானால் நான் வருகிறேன்" என்று கூறிய அவன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.

"போகாதீர்கள். இதைவிட்டால் இன்னொரு சமயம் வராது!" என்றாள் மருதி.

"வராவிட்டால் போகிறது. முதலில் நான் நாகதேவி யைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிக் கட்டிலி லிருந்து இறங்கவும் முற்பட்டான்.

"வேண்டாம். போகாதீர்கள்" என்று கெஞ்சிப் படுத்த வண்ணம் அவனை நோக்கித் தனது கைகளை உயர்த்தினாள் அவள்.

பிடிவாதம் வந்துவிட்டால் யார் சொல்வதையும் கேட்டுப் பழக்கமில்லாத உபேந்திரன் கட்டிலிலிருந்து இறங்கி நின்று தனது ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றான். சென்றவன் நேராக நாகதேவியின் அறைக்குச் சென்று அந்தக் கதவைத் தட்டினான். தட்டியதும் கதவு திறந்தது. தாழிடாத காரணத் தால். ஆனால் பஞ்சணையில் நாகதேவியைக் காணவில்லை. இரவில் அவள் அதில் படுத்ததற்கான அறிகுறிகள் ஏதுமே

www.cleanindians.com

யில்லை. விரிப்புகள் சிறிதும் கலையாமல் விரித்தபடி இருந்தன. அதனால் சிந்தனை வசப்பட்ட உபேந்திரன் மனத்தில் ஏதோ சந்தேகம் விளையவே அவன் வேகமாகத் தளத்துக்கு ஓடினான். தளத்தில் இரண்டு மூன்று மாலுமிகளே இருந்தனர். பாய்விரித்து நன்றாக மரக்கலம் ஓடிக் கொண்டிருந்ததால் சுக்கான் பிடிப்பவன் மட்டும் தனது இடத்தில் அமர்ந்து ஏதோ மெதுவாகப் பாடிக்கொண்டிருந்தான். இன்னொரு மாலுமி கரையிருந்த திசையை நோக்கிக் கொண்டிருந்தான். அவனை நோக்கிய உபேந்திரன், "மாலுமி! நாகதேவி இங்கு வந்தார்களா?" என்று கேட்டான்.

"சற்று முன்பு வந்தார்கள்."

"இப்பொழுது எங்கிருப்பார்கள்!"

"கீழே துடுப்புத் துழாவும் இடத்துக்குச் சென்றார்கள்."

"தனியாகவா!"

"ஆம். ஆனால் பின்னால் வந்த குருதேவரும் தலைவியைத் தேடிக்கொண்டு சென்றார்," என்று மாலுமி சொன்ன பதிலைக் கேட்டு மீண்டும் சிந்தனை வசப்பட்ட உபேந்திரன் சட்டென்று திரும்பி தளத்தின் கோடியில் இருந்த படிகளில் இறங்கி அடித்தளத்துக்குச் சென்றான். அடித்தளத்தின் நுழைவுக் கதவு அடைக்கப்பட்டிருந்தது. உள்ளே மாலுமிகள் துடுப்புகளைத் துழாவும் சத்தம் கேட்கவில்லை. சாதாரணமாக அவர்கள் இசைக்கும் பாட்டும் காதில் விழவில்லை. எல்லாம் சர்வ மௌனமாயிருக்கவே மெல்ல கதவைத் தட்டினான் உபேந்திரன்.

கதவைத் திறந்த மாலுமி மீண்டும் அவசரமாகக் கதவை மூட முற்பட்டபோது அவனைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த உபேந்திரன் அங்கு கண்ட காட்சியினால் பேரதிர்ச்சிக்கு உள்ளானான்.



அதுவரை விளங்காத பல விஷயங்கள் அப்பொழுது விளங்கின அவனுக்கு. உள்ளே நாகதேவி முத்தலை நாக மகுடமணிந்து நின்றிருந்தாள். அவள் கைகளை இரு மாலுமிகள் பற்றி நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கெதிரே நின்ற குருநாதர், "அடி கள்ளி! உன் சாயம் வெளுத்துவிட்டது. எடு மகுடத்தை" என்று கூறிக்கொண்டே அவள் தலையிலிருந்த மகுடத்தை எடுத்தார். "இவளை அவள் அறையில் வைத்துப் பூட்டுங்கள். நான் அந்தப் பைத்தியக்கார உபேந்திரனைக் கவனித்துவிட்டு வருகிறேன்" என்று பேசிக்கொண்டிருந்தவர் சட்டென்று பின்னால் திரும்பிக் கதவைத் திறந்ததும் வாயடைத்து நின்றார்.

உபேந்திரன் இதழ்களில் கடுமையான புன்னகை விரிந்தது. "குருநாதரே! உமது மூளை பிசகிவிட்டது. மருதியின் அறையிலிருந்து இப்பொழுதுதான் நான் வருகிறேன். உமது முட்டாள்தனத்தால் நாகதேவி மீது மாலுமிகள் கை வைக்கும் அளவுக்கு அவர்களைத் தூண்டிவிட்டிருக்கிறீர்கள். அவர்கள் நாளைக்குக் கடலில் எறியப்படுவார்கள்" என்று கூறிவிட்டு நாகதேவியை அணுகி தலை வணங்கினான். தனது கண்களால் ஏதோ சமிக்ஞையும் செய்தான்.

மாலுமிகள் அவள் கைகளை விட்டு விலகி நின்றார்கள். நாகதேவி உபேந்திரனை நோக்கி "சோழர் படைத்தலைவரே! இந்த இரு மாலுமிகளுடன் குருநாதரையும் தூக்கிக் கடலில் எறிந்துவிடுங்கள்" என்று உத்தரவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு படிகளில் ஏறிச் சென்றாள். படைத்தலைவன் சைகைக்கு இணங்க இரு மாலுமிகள் அவர் கைகளைப் பிடித்தனர். "முட்டாள்களா? இவன் உங்களை ஏமாற்றுகிறான்? வந்தவள் நாகதேவியல்ல, மருதி" என்று கூவினார். மாலுமிகள் அவர் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ள

www.cleanindians.com

வில்லை. தரதரவென்று இழுத்துக்கொண்டு சென்றார்கள். காட்டு வலையில் சிக்குண்ட விலங்குபோல் துள்ளிக் கொண்டும் திமிறிக்கொண்டும் உறுமிக்கொண்டும் சென்றார் குருநாதர்.

## 19. சிறையில் தலைவன்

குருதேவரான சுத்ததத்தரை சிறிதும் மரியாதையின்றி இரு மாலுமிகள் இழுத்துச் சென்றதைக் கண்ட உபேந்திரன் முதலில் அவரைத் தொடர்ந்து சென்றான். மாலுமிகள் மத்திய தளத்திலிருந்த அவரது அறைக்கு இழுத்துச் சென்று அதற்குள் அவரைத் தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டு, "குருநாதரே! தங்களைக் கடலில் சேர்ப்பதற்கு நாளைக் காலையில் வருகிறோம். சுறாக்களுக்கு உமது புஷ்டியான தேகம் நல்ல விருந்தாயிருக்கும்" என்று சொல்லிவிட்டும் சென்றார்கள். அதைக் கண்டுங்கூட அவரை விடுவிக்க எந்தச் செயலிலும் இறங்காமல் சில விநாடிகள் நின்ற உபேந்திரன் அங்கிருந்து நாகதேவியின் அறைக்குச் சென்றான்.

அப்பொழுது நாகதேவியின் அறை காலியாயில்லை. பஞ்சணை மீது அவன் முதல்நாள் சந்தித்தபோது இருந்த நிலையில் அவள் சாய்ந்தவண்ணம், தலைக்கு இடது கையை முட்டுக் கொடுத்து அரைப்படுக்கையாகப் படுத்திருந்தாள். அவனைக் கண்டதும் அவள் பழையபடி மும்முறை லேசாக நகைக்கவும் செய்தாள். அவளை அணுக முயன்ற உபேந்திரன் அந்த நகைப்பைக் கேட்டதும் கால்கள் தளப் பலகையில் உறைந்துபோய் அசைவற்று நின்றான்.

நாகதேவியின் கூரிய விழிகள் அவனைக் கூர்ந்து நோக்கின. "படைத்தலைவரே! அருகில் வரலாம். சற்று



முன்பு மருதியின் அறையில் நீர் அணைத்த அதே நாகதேவி தான் நான்" என்று கூறி மீண்டும் அவள் நகைத்தாள்.

அதனால் அதுவரை மனத்திலிருந்த குழப்பம் நீங்கவே கண்களில் சீற்றத்தைத் தோற்றுவித்துக்கொண்ட உபேந்திரன், "இப்பொழுது புரிகிறது" என்று முணுமுணுத்தான் சீற்றம் குரலிலும் ஒலிக்க.

நாகதேவியின் இதழ்களில் குரூரமான புன்முறுவ லொன்று தவழ்ந்தது. "என்ன புரிந்து கொண்டீர் படைத் தலைவரே?" என்று வினவினாள்.

உபேந்திரன் சீற்றம் முன்னைவிட அதிகமாகவே அவன் கண்கள் உருண்டன பயங்கரமாக. "மருதியாக நீ நடித்திருக் கிறாய், மருதியின் அறையில் இருந்தவள் மருதியல்ல; நீதான் என்பது நன்றாகத் தெரிகிறது" என்று சொன்னான் குரூரமான சொற்களில்.

நாகதேவி சாய்ந்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள். "உங்களுக்கு அசல் பொருளில் திருப்தி யில்லை என்பது தெரிகிறது படைத்தலைவரே. ஒரு புருஷன் ஆழ்ந்த காதலில் இருந்தால், ஆள் மாறாட்டம் சட்டென்று தெரியும். அப்படித் தெரியாததிலிருந்து உமது காதல் முழுமையானதல்ல. என்னிடம் பாதி, மருதியிடம் பாதியாக இருக்கிறது" என்று சுட்டிக்காட்டினாள்.

"இல்லை. கண்டிப்பாக இல்லை. உன்னை நான் வெறுக்கிறேன்" என்று சீறினான் படைத்தலைவன்.

"முடியாது. ஒருக்காலும் முடியாது. என்னை வெறுக்கும் சக்தி உங்களுக்குக் கிடையாது. நம்மிருவருக்கும் விதி ஏற்கெனவே முடி போட்டுவிட்டது. அதற்கு நாகர் சமுதாயமும் முத்திரை வைத்துவிட்டது. எந்தப் புருஷனும் பெண்ணும் தானாக இயங்குவதில்லை. விதியின் வலுவான

கரத்தால் இயக்கப்படுகிறார்கள்" என்று சுட்டிக்காட்டிய நாகதேவி தலையிலிருந்த தனது கிரீடத்தை எடுத்துத் தலையணை மீது வைத்தாள். "இப்பொழுது பாருங்கள், நான் மருதியாகி விட்டேன். இந்தக் கிரீடந்தான் அவளுக்கும் எனக்கும் குறுக்கே நிற்கிறது. நீங்கள் மட்டும் உங்கள் மனத்தைச் சிறிது மாற்றிக் கொண்டால் மருதியின் தலையில் இந்தக் கிரீடம் அணிவிக்கப்படும். அவளையே நாகதேவியாக்கி விடுகிறேன்" என்றாள் அவள்.

உபேந்திரன் அவளைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தான். "நாகர்களுக்கு அவளைத் தலைவியாக்குகிறாயா?"

"ஆம், நான் சொன்ன நிபந்தனையின் மேல்" என்ற நாகதேவி பஞ்சணையில் தொங்கவிட்டிருந்த கால்களை ஆட்டினாள் இருபுறமும்.

அந்தக் கால்களின் ஆட்டத்திலேயே வேட்கை மிகுந்திருப்பதை உணர்ந்த உபேந்திரன் துன்பப் பெருமூச்சு விட்டான். பிறகு கேட்டான், "எவ்வளவு பெரிய பதவியை இழக்க முற்படுகிறாய் என்பதைப் புரிந்து கொண்டாயா தேவி?" என்று வினவினான் படைத்தலைவன் துன்பத்தைச் சொற்களிலும் கொட்டி.

அவள் பஞ்சணையில் உட்கார்ந்தபடியே அவனை அருகில் வரும்படி சைகை செய்தாள். அவனும் மெள்ள அவளை அணுகினான். பக்கத்தில் உட்கார இடம் அளித்தாள். தடை ஏதும் சொல்லாமல் உட்கார்ந்த உபேந்திரனைப் பாராமலே பேசினாள் நாகதேவி. "அன்பரே! பெண்கள் இதயத்தை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. எப்பேர்ப்பட்ட பதவியும் தனது புருஷன் என்ற அந்தஸ்தை விடப் பெரிதல்ல பெண்களுக்கு. மனைவியென்ற உரிமையைவிடப் பெரிய உரிமையும் வாழ்க்கையில்



கிடையாது. அது மட்டுமல்ல, விரும்பியவனைப் புருஷனாக அடைய முடியுமானால் அதுவே அவர்கள் சாம்ராஜ்யம். படைத்தலைவரே! உங்களுடைய இதயத்தில் ஒரு சிறு இடம் கிடைக்குமானாலும் போதும். மற்ற இடத்தை மருதி ஆட்கொள்ளட்டும்" என்றாள் நாகதேவி. அவள் குரல் வழக்கத்துக்கு மாறாகத் தழுதழுத்துக் கிடந்தது. சிறிது பலவீனம்கூட அதில் தெரிந்தது.

இந்த நிலையில் இருந்த நாகதேவியைச் சிறிது நகர்ந்து பஞ்சணையில் நெருங்கி உட்கார்ந்த சோழர் படைத்தலைவன் அவள் தோள்மீது தனது கையைப் போட்டுக் கொண்டான். அந்த நிலையில் அவன் பேசிய போது அவன் குரல் பரிதாபத்தினால் மிக மென்மையாக ஒலித்தது. "நாகதேவி! உனக்கு அழகில் குறை சிறிதுமில்லை. உன் பதவியோ அபரிமிதமானது. இதையெல்லாம் அற்ப சுகத்துக்காகப் பலி கொடுக்காதே. தவிர நீ வந்த காரியம் ஒன்றிருக்கிறது. நாகப்பட்டினத்தை சாவக நாகர்கள் வசப்படுத்த உறுதி கூறி வந்திருக்கிறாய். அந்த உறுதியிலிருந்து சிறிது தளர்ந்தாலும் நாகர்கள் உன்னைக் கொன்றுவிடுவார்கள்" என்று மெதுவாகப் பேசினான் படைத்தலைவன்.

நாகதேவி அவன் தோள்மீது தலையைச் சாய்த்துக் கொண்டாள். "படைத்தலைவரே! நான் தங்களைப் பிரிந்திருக்கும்போது படும் நரக வேதனையைவிட உயிரிழப்பது கஷ்டமாகத் தோன்றவில்லை. அது தவிர உங்களை மணந்த பின்பு நாகர்களிடம் எனக்கென்ன தொடர்பு? புருஷன் வசப்பட்ட பெண்ணுக்கு அவன் நாடுதான் சொந்த நாடு. அவன் குலந்தான் அவள் குலம். அவனுக்கு வேண்டிய எல்லாமே அவளுக்கும் வேண்டியவைதான். உங்கள் மனைவி எப்படி சாவகத்தின் தூதுப் பதவியை வகிப்பாள்? சோழநாடு அவளுக்குச் சொந்தமாகி விடாதா?" என்று சொன்னாள் தலையை அவன் தோள்மீது இழைத்தவாறே.

www.cleanindians.com

உபேந்திரன் வதனத்தில் அச்சத்தின் சாயை படர்ந்தது. தனக்காக உயிரையும் விட சித்தமாயிருக்கும் நாகதேவியிடம் சிறிது அனுதாபங்கூட அவன் இதயத்தில் உற்பத்தியாயிற்று. உயிரை விடுவதைக்கூட அவன் பிரமாதமாக நினைக்க வில்லை. சாவக அரசுக்குத் துரோகம் செய்யும் அளவுக்கு அவள் உள்ளம் இடங்கொடுத்து விட்டதைப்பற்றி அவன் வியந்தான். அவளை அவன் கையொன்று அணைக்கவும் செய்தது. அவள் உடலும் மருதியின் உடலைப் போலவே மென்மையாக இருந்தது. இதன் விளைவாகத்தான் சூடாமணி விஹாரத்தின் சார்புத் திண்ணையிலும் சற்று முன்பு மருதியின் அறையிலும் அவளைத் தான் அணைக்க முடிந்தது. ஏன்? அணைப்பின் சிகரத்தையும் எட்ட முடிந்தது என்பதைப் புரிந்துகொண்ட உபேந்திரன் மெதுவாகக் கேட்டான், "நான் மருதியிடம் வருவதாகச் சொன்னது உனக்கெப்படித் தெரிந்தது?" என்று.

அவள் சிறிது சிந்தித்தாள். பிறகு பஞ்சணையை விட்டு எழுந்து, "இப்படி வாருங்கள்" என்று கூறிக் கொண்டு சற்று எட்ட இருந்த சாளரத்தை நோக்கி நடந்தாள். மூடியிருந்த சாளரத்தை திறந்து முதலில் தன் தலையை வெளியே நீட்டினாள். உபேந்திரனும் அவள் பக்கத்தில் நின்று தலையை வெளியே நீட்டினான். மந்தமான நிலவில் கடல் கனவு நிலையை எங்கும் விரவியிருந்தது. தளத்திலிருந்த மாலுமிகள் பேசிய போது அவர்கள் பேச்சு அவன் காது களில் தெளிவாக விழுந்தது. "சற்று இப்படியே இருங்கள், நான் உங்களுடன் மேல்தளத்திலிருந்து பேசுகிறேன்" என்று கூறிவிட்டு நாகதேவி மேல்தளத்துக்குத் துரிதமாகச் சென்றாள். இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் அவள் "அன்பரே!" என்று அழைத்தது அவள் காதில் தெளிவாக விழுந்தது. அவள் மேல்தளத்தின் பக்கப்பலகைக்கு வெளியே குனிந்தவண்ணம் மெதுவாகத்தான் பேசினாள். அவள்

www.cleanindians.com



பேசிய ஒவ்வொரு சொல்லும் படைத்தலைவன் காதுகளில் தெளிவாக விழுந்தது. "அன்பரே! மருதியிடம் நீர் பேசிய அன்புச் சொற்களில் பாதியை என்னிடம் பேசியிருந்தால் கூட நான் உங்கள் கைப்பாவையாக மாறி இருப்பேன். நீங்கள் அதைச் செய்யவில்லை. என்னை வெறுத்தீர். அது மட்டுமல்ல; அவளிடம் என்னென்ன ஆசை வார்த்தை களைப் பேசினீர்கள்? நள்ளிரவில் அவள் அறைக்குப் போக என்ன சாமர்த்தியமாகத் திட்டமிட்டீர்கள். அதைக் கேட்டுத் தான் அவள் அறையில் நான் இருந்தேன். நீங்கள் கதவை தாழிட வேண்டாமென்று சொன்னது மட்டும் என் காதில் விழவில்லை. விழுந்திருந்தால் கதவைத் தாழிட்டிருக்க மாட்டேன்" என்று சொன்ன நாகதேவியின் குரல் அதற்குப் பிறகு ஒலிக்கவில்லை.

மீண்டும் இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அறையில் அவள் தோற்றமளித்தாள். "படைத்தலைவரே இப்பொழுது புரிகிறதா உங்கள் திட்டம் எனக்கு எப்படித் தெரிந்த தென்று?" என்றும் கேட்டுப் புன்முறுவல் கொண்டாள். அடுத்து ஒய்யார நடை நடந்து அவனை நோக்கி வந்தாள். கட்டிலை அணுகியதும் அவன் இருதோள்மீதும் தனது கைகளை வைத்தாள்.

அவள் விம்மிய மார்பு அவன் முகத்துக்கு எதிரில் இருந்தது. இரட்டை அழகுகள் உணர்ச்சியால் லேசாகத் துடித்தன. அவள் மார்பிலிருந்து எழுந்த வாசனைத் திரவியத் தின் சுகந்தம் அவனை மயக்கியது. அந்த மயக்கத்திலும் அவன் மருதியைப் பற்றி நினைத்தான். 'ஆமாம் இவள் இத்தனையும் சொன்னாள். மருதியைப் பற்றி ஏதும் சொல்லவில்லையே?' என்று தன்னைத்தானே வினவிக் கொண்டான். அந்தக் கேள்வியை வெளிப்படையாக அவளையே கேட்டான்.

அவன் வினாவைக் கேட்ட அவள் முகம் சிறிது சிவந்தது. "மருதியைப்பற்றிக் கவலை வேண்டாம். அவளுக்கு இதுவரை எந்தக் கெடுதலுமில்லை" என்று சொன்னாள்.

"அவளை நான் பார்க்க வேண்டும்" என்றான் படைத் தலைவன் சிறிது சந்தேகத்துடன்.

"தாராளமாகப் பார்க்கலாம்" என்று சொன்ன நாக தேவி பஞ்சணையிலிருந்த தலையணையைத் தூக்கி அதற்குக் கீழிருந்த ஒரு திறவுகோலை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"குருநாதரை அடைத்திருக்கும் அடுத்த அறையில் மருதியும் இருக்கிறாள். போய்ப் பார்த்து வாருங்கள்" என்று சர்வ சாதாரணமாகக் கூறினாள் நாகதேவி.

சாவியைக் கையில் வாங்கி நாகதேவியையும் பார்த்து சாவியையும் நோக்கினான் ஒருமுறை. பிறகு திரும்பி அறைக் கதவை நோக்கி நடந்தான். "படைத்தலைவரே!" என்ற நாக தேவியின் குரல் அவன் வேகத்தைச் சிறிது தடுத்தது. அவன் திரும்பி நோக்கினான். நாகதேவி பழைய நாகதேவியா யில்லை, ராணிபோல் அரச தோரணையில் உட்கார்ந் திருந்தாள். "படைத்தலைவரே! சென்று மருதியைப் பாருங்கள். அவளுக்கு ஒரு குறையும் நான் வைக்கவில்லை. ஆனால் நான் கொடுத்த மூன்று நாள் கெடு நாளையுடன் முடிவடைகிறது. நாளை மாலையில் நாம் பூம்புகாரை அடைவோம். அதற்கு முன்பு நீர் எடுக்கும் முடிவு அவள் கதியை நிர்ணயிக்கும்" என்று கூறிவிட்டு மறுபடியும் பஞ்சணையில் சாய்ந்து கொண்டாள்.

சாவியுடன் சென்ற உபேந்திரன் நாகதேவியின் பஞ்சணையைப் போலவே இருந்த மற்றொரு பஞ்சணையில் மருதி படுத்திருந்ததைக் கண்டான். அவன் காலடிச் சத்தத்தைக் கேட்டதும் அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

www.cleanindians.com



அவனை சுமுகத்துடன் வரவேற்பதற்குப் பதில், "செல்லுங்கள், சென்றுவிடுங்கள்" என்று ஆத்திரத்துடன் கூவினாள் மருதி. அவள் கண்கள் நிர்மலமாயில்லை; பித்தம் பிடித்தவள் போலிருந்தாள். அதிர்ச்சியடைந்து நின்றான் உபேந்திரன். நடந்திருப்பது என்னவென்பது அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. மாற்று மருந்து அவனுக்குத் தெரியும். ஆனால் அது அவன் கையில் இல்லை. மருதியை சுயநிலைக்குக் கொண்டு வருவது முடியாத காரிய மென்பதைச் சந்தேகமற உணர்ந்த உபேந்திரன், "ஏனில்லை, ஒரு மருந்து இருக்கிறது. முதலில் நாகதேவியைக் கொன்று விடுகிறேன்" என்று கூறிக்கொண்டு அறைக் கதவைத் தடாலென மூடிக்கொண்டு வெளியே வேகமாக நடந்தான். இடையில் இருந்த சிறு வழியில் சென்றபோது இரு முரடர்கள் அவனைப் பலமாகப் பிடித்தார்கள். அவன் வாயும் பலமான ஒரு கையால் மூடப்பட்டது. அடுத்த சில நிமிடங்களில் அவனும் ஓர் அறையில் தள்ளப்பட்டான். அந்த அறைக்கதவும் பலமாக இழுக்கப்பட்டு பூட்டப்பட்டது.

## 20. பித்தன்

சிறையில் பலவந்தமாகத் தள்ளப்பட்ட உபேந்திரன், சீற்றத்துக்கு அது சமயமல்லவென்பதையும் சிந்தனைக்குத் தான் சமயமென்பதையும் உணர்ந்து கொண்டதால் அறையில் அங்குமிங்குமாக நடமாடத் தொடங்கினான். அவன் சிந்தையும் நடமாடத் தொடங்கியது. நாகதேவி கண்ணில்பட்ட நாளாய் ஏற்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துப் பார்த்து, "இவளுக்கு நிச்சயமாக சித்தப்பிரமை தான்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். "இல்லா விட்டால் என்னை பலவந்தமாகக் கப்பலுக்கு இழுத்துச்

சிறை செய்து இந்த வங்கக்கடலில் மரக்கலத்தைச் செலுத்துவாளா? இவள்தான் கிடக்கட்டும். இந்த குருநாதரையும் சேர்த்து இழுத்துக்கொண்டு வந்துவிட்டாளே. எங்களிருவரையும் நாகப்பட்டினத்தில் ஒருநாள் காணா விட்டால் ஊர் மக்கள் வாளாயிருக்கமாட்டார்களென்ற யோசனை கூடவா இவளுக்கில்லை? குருநாதர் மேற் பார்வையில்லாமல் சூடாமணி விஹாரத்தை முடிக்க ஸ்தபதி முயலமாட்டாரே. அதுகூடவா இவளுக்குத் தெரியவில்லை? நான் ஒருநாள் இல்லாதிருந்த விஷயம் மன்னர் காதுக்கு எட்டியிருக்குமே. எட்டியிருந்தால் உடனடியாகக் கடற்கரை யையும் நாகையையும் வலை போட்டும் சல்லடை கொண்டும் துருவிப் பார்த்துவிடுவார் மன்னர் என்பதைக்கூட உணராத முட்டாளா இவள்? சரி, என்னைக் கவர்ந்து வந்துவிட்டாள். நாளைக்கே புகார் கண்ணில் பட்டுவிடும். அங்குள்ள மரக்கலங்களுக்கும் பரதவருக்கும் இவள் என்ன பதில் சொல்லுவாள்?" என்றும் வினாக்களை எழுப்பிக் கொண்டான்.

ஆனால் நாகதேவி தந்திரத்தின் எல்லையை அவன் உணரவில்லை. மறுநாள் காலையில் அவன் அறையைத் திறந்துகொண்டு சாவகத்தின் நாலைந்து மாலுமிகள் உள்ளே நுழைந்து மாலுமி உடையொன்றை உபேந்திரனிடம் கொடுத்து, "இதைத் தாங்கள் அணிந்துகொள்ள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள் வினயத்துடன்.

"ஏன், என் உடைக்கு என்ன?" என்று உபேந்திரன் வினவினான்.

"நீங்கள் பயணத்துக்கு சித்தமாக வராததால் வேறு உடை கொண்டு வரவில்லை" என்றான் ஒரு மாலுமி.

"உனக்கெப்படித் தெரியும் அது?" என்று உபேந்திரன் வினவினான்.

www.cleanindians.com



"நீங்கள் பயண மூட்டை எதையும் கொண்டு வராததை நாங்கள் பார்த்தோம்" என்று சொன்னான் இன்னொரு மாலுமி.

உபேந்திரன் அந்த மாலுமியை உற்று நோக்கி, "பார்த்தாயா? கேட்டாயா?" என்று வினவினான்.

மாலுமி தனது இதழ்களில் புன்முறுவலை வர வழைத்துக் கொண்டான். "பார்த்தேன், கேட்டேன்" என்று பதில் சொன்னான்.

"இரண்டும் செய்தாயா?" உபேந்திரன் கேள்வியில் சற்றுக் கடுமை தெரிந்தது.

"ஆம். பார்த்தது நான். கேட்டது தலைவியிடம்."

"நாகதேவியிடமா?"

அந்த மாலுமி அடக்கத்தைக் காட்டி, "வேறு தலைவி ஏது?" என்று கேட்டான்.

"உங்கள் யாருக்கும் சுயபுத்தி கிடையாதா?" என்று சீறினான் உபேந்திரன்.

"கிடையாது." மாலுமியிடமிருந்து திட்டமாக வந்தது பதில்.

"இதைச் சொல்லிக்கொள்ள உனக்கு வெட்கமா யில்லை?"

"இல்லை."

"இல்லையா!"

"ஆம். இல்லை சுயபுத்தியால் வரும் கஷ்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்."

"சுயபுத்தியால் கஷ்டமா?"

"சந்தேகமில்லை. தங்கள் நிலைமையே அதற்கு உதாரணம்" என்று அத்துடன் பேச்சை முடித்த அந்த

மாலுமி மற்ற மூன்ற மாலுமிகளைப் பார்த்து, "வாருங்கள் போவோம். நாகை தலைவர் இந்த ஆடையைப் புனையட்டும், அரை நாழி கழித்தும் அணியவில்லையானால் அணிவிப் போம்" என்று கூறிவிட்டு அர்த்தபுஷ்டியுடன் நாகை நாகர்கள் தலைவனை நோக்கிவிட்டு வெளியே நடந்தான். அறைக்கதவு மீண்டும் மூடப்பட்டது.

அவர்கள் சென்ற பின்பு அவர்கள் கொணர்ந்த ஆடையை நோக்கினான் உபேந்திரன் சில விநாடிகள். பிறகு அங்கியையும் சராயையும் எடுத்துப் பார்த்தான். இரண்டும் சுத்த வெள்ளையாயிருந்தன. இரண்டும் சுத்தமான பட்டு என்பதையும் உணர்ந்த உபேந்திரன் வியப்பின் எல்லையை எய்தினான். அந்த வெண்பட்டு ஆடைகளிலிருந்து வந்த சுகந்தமும் அவனைப் பெரிதும் கவர்ந்தது. அந்த ஆடைகளை ஒவ்வொன்றாகப் பார்த்து முடித்ததும் கையை இருமுறை தட்ட ஒரு மாலுமி உள்ளே தலையை நீட்டினான்.

"நான் நீராட வேண்டும்" என்று உபேந்திரன் கூறினான்.

வந்த மாலுமி தலை வணங்கி தன்னுடன் வரும்படி சைகை செய்து நீராட்ட அறைக்கு அழைத்துச் சென்றான். நீராட்டத்துக்கான சகல வசதிகளும் அந்த அறையில் இருந்த படியால் சுகஸ்நானம் செய்த உபேந்திரன் திரும்பவும் தனது அறைக்கு வந்து புதிய ஆடைகளை அணிந்துகொண்டான். அந்த ஆடைகளை அவன் அணிந்துகொண்டதும் அவன் பழைய உடுப்புகள் அந்த அறையிலிருந்து அகற்றப்பட்டன.

நன்றாக நீராடி முடித்த உபேந்திரன் அந்த அறைக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு கால்களை ஆட்டிய வண்ணம் தனது உடையைக் கவனித்தான். அது சாவகத்து மாலுமிகள் அணியும் உடையானாலும் விலை உயர்ந்ததா யிருந்தது. இடைக்கச்சைகூட வழவழப்பாகவும் நல்ல பட்டிலும் நெய்யப்பட்டிருந்தது. அது தவிர அங்கியின் பல



இடங்களில் சாவகத்தின் அரசமுத்திரை பட்டால் நெய்யப் பட்டிருந்தது. இப்படி சுமார் ஆறு முத்திரைகள் சிவப்பு சிவப்பாக அந்த வெள்ளைப்பட்டு அங்கியில் இருந்ததை உபேந்திரன் கவனித்தான். அவற்றைக் கவனித்த பிறகுதான் சட்டென்று அவனுக்கு உண்மை புத்தியில் பளிச்சிட்டது.

உடையைக் கழற்ற சரேலென்று அங்கிக்குக் கொண்டு போன கை அப்படியே நின்றுவிட்டது. வேறு உடை ஏதும் அந்த அறையில் இல்லை. அவன் பழைய உடைகள் துரிதமாக அகற்றப்பட்டதன் காரணமும் அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. பொழுதும் புலர்ந்தது. திடீரெனக் கேட்ட பேரிரைச்சலிலிருந்து தாங்கள் துறைமுகத்திற்கு அருகில் வந்துவிட்டதையும் அந்தத் துறைமுகம் புகாரைத் தவிர வேறெதுவும் இருக்க முடியாதென்ற எண்ணமும் உண்டாகவே அவன் தனது அறை சாளரத்தின் மூலம் வெளியே நோக்கினான்.

பழைய புகாரல்ல அது. வெளிநாட்டு மரக்கலங்கள் சரக்கேற்றி வந்ததாலும் யவனர் அதன் கோட்டைகளைக் காத்ததாலும் வெகு துணிவுள்ள மாலுமிகள் கடற்கரை யெங்கும் பரவிக் கிடந்ததாலும் சிறப்புற்ற புகாரல்ல அது. கடியலூர் உருத்திரங் கண்ணனார் கண்ணால் கண்டு மகிழ்ந்த அந்தப் பெரும் பூம்புகார் அல்ல அது. திரும்பத் திரும்ப ஏற்பட்ட கடல் கோளாறுகளால் சிதைந்துவிட்ட காவிரிப்பட்டினத்தைக் கண்டான் உபேந்திரன். அதன் பெரும் கோட்டை இடிந்து ஒரே ஒரு சுவர் குத்துக்கல் மாதிரி நின்றுகொண்டு இருந்தது.

கடற்கரையைக் காத்த கடலோடும் வீர பரதவர் கண் களில் தென்பட்டார்களில்லை. அதே வம்சத்தில் வந்து சீரழிந்து மீன்பிடித்து வாணிபம் நடத்தும் பரதவர்களைக் கண்ட உபேந்திரன் 'காலம் எதையெல்லாம் சீரழித்து

www.cleanindians.com

விடுகிறது' என்று காலத்தை நொந்தான். அப்படி அழிந்த அழிவுற்ற புகாரைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இரண்டு படகுகள் நங்கூரம் பாய்ச்சிவிட்ட சாவகத்தின் மரக் கலத்தை நோக்கி வந்துகொண்டிருந்தன. அதற்கப்புறம் அவன் எதையும் காணப்பிரியப்படாததால் சாளரத்தை மூடி விட்டுக் கட்டிலில் கண்களை மூடினான்.

நாழிகைகள் ஓடிக்கொண்டிருந்தன. அடிக்கடி யார் யாரோ வந்து அந்த அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். அதனால் சினங் கொண்ட உபேந்திரன், அடுத்து எட்டிப் பார்த்தவனை "போ வெளியே" என்று சீறினான்.

அவன் சட்டென்று மறையவே சிறிது நிதானப்பட்ட உபேந்திரன் இதற்கெல்லாம் காரணம் என்னவாயிருக்கு மென்று எண்ணிப் பார்த்தும் அவனுக்கு ஏதும் விளங்க வில்லை. சூரியன் சிறிது கிளம்பியதும் தளத்திலிருந்த ஒரு சிறு துவாரம் வழியாக உள்ளே விழுந்த வெள்ளை ஒளி வட்டத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்த உபேந்திரன் தனது அறைக் கதவு மெள்ளத் திறக்கும் ஓசை கேட்டுத் திரும்பினான். முற்றும் புதுவிதமான திருக்கோலத்தில் நாகதேவி காட்சியளித்தாள். உபேந்திரனை நோக்கிப் புன்முறுவலும் செய்தாள்.

"கொஞ்சம் இப்படி வருகிறீர்களா?" என்று கொஞ்சும் குரலில் வினவினாள்.

"வருவதானால் உன்னைக் கொல்லத்தான் வருவேன்" என்று கூவினான் உபேந்திரன்.

அவன் இப்படிச் சொன்னதும் நாகதேவி சற்று நகர்ந்தாள். புகாரின் பரதவர் பத்துப் பேர் நின்றிருந்தார்கள் வாயிற்படிக்கருகில். அவர்களில் ஒருவன், "தேவி! நீங்கள் சொன்னது சரிதான்" என்றான்.



"இவர் இந்த மரக்கலத்தின் தலைவர், சாவகத்திலிருந்து இதைச் செலுத்தி வந்தவரே இவர்தான்" என்றாள் தேவி.

அந்தப் பெரும் பொய்யைக் கேட்ட உபேந்திரன், "அடி கள்ளி! என்ன வித்தை இது?" என்று அதட்டினான். பரதவர் நாகதேவியை நோக்கிப் புரிந்துகொண்டதற்கு அறிகுறியாக தலையை அசைத்தார்கள். உபேந்திரனுக்கு மெல்ல மெல்ல உண்மை புலனாயிற்று. நாகதேவி மீது பாய எழுந்தான். நாகதேவி சட்டென்று பின்னடைந்தாள். புகாரின் பரதவர் பத்துப் பேர் அவன் மீது பாய்ந்து அவனை அழுத்திப் பிடித்தனர். இருவர் அவன் கால்களையும் கைகளையும் கட்டினார்கள் கயிறுகளால். "தேவி! பைத்தியத்திடம் இப்படி நீங்கள் சாதாரணமாக நடப்பது ஆபத்து; எச்சரிக்கையா யிருங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்றதும் நாகதேவி மட்டும் அறையில் நின்றிருந்தாள். அவள் உதடுகளில் கொடூரப் புன்னகையொன்று அரும்பி நின்றது.

## 21. புகாரிலிருந்து சிறு படகு

நாகதேவி தந்திரத்தால் பைத்தியப் பட்டம் உறுதி செய்யப்பட்டு, புகாரின் பரதவரால் கை கால்கள் கட்டப் பட்டு சாவக மரக்கலத்தின் தரையில் உருண்டு கிடந்த உபேந்திரன் தன்னெதிரே கொடூரப் புன்னகையுடன் நின்றிருந்த நாகதேவியைச் சுடும் கண்களால் ஏறெடுத்து நோக்கினான். அவன் விழிகளில் கண்ட சினத்தைப் பார்த்த நாகதேவி அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், "சோழ மன்னன் படைத்தலைவரே! புகார் வந்ததும் உமக்கு விடி மோட்சம் கிடைக்குமென்று இறுமாந்திருந்தீர். அதனால்

முன்னேற்பாடாக சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மன்னித்துவிடுங்கள்" என்று ஏளனம் ஒலித்த குரலில் பேசினாள். திடீரென்று அவள் முகபாவம் மாறி அதில் ஒரு வேதனையும் தெரிந்தது. "நாகர் தலைவரே! உமக்கு மட்டும் குலப்பற்று இருந்தால் இப்பொழுது நீங்கள் இருக்க வேண்டிய நிலை வேறு. உலக நாகர்களுக் கெல்லாம் தலைவியான என்னை உங்கள் அடிமையாக ஆண்டிருக்கலாம். மருதியெனும் பெண்ணை நம்பி மகுடத்தை அலட்சியம் செய்தீர். அதன் விளைவு இது. ஆனால் உண்மையாக இந்த நிலைக்கு உங்களைக் கொண்டு வரவோ, தரையில் நீங்கள் கிடப்பதைப் பார்க்கவோ என் மனம் இடந்தரவில்லை. ஆனால் நாகர் சமுதாயத்தின் நலனை நினைத்து என் உள்ளத்தைப் புண்ணாக்கும் அலுவல்களில் ஈடுபடுகிறேன்" என்று வேதனை நிறைந்த குரலில் பேசினாள்.

இப்படி ஏளனமும் வேதனையும் மாறி மாறி ஏற்பட்ட உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்பட்ட நாகதேவியை அனுதாபம் மிக்க கண்களால் நோக்கிய உபேந்திரன், "தேவி! உன் மனநிலை எனக்குப் புரிகிறது. உன்னிடம் எனக்கு அனுதாபமே உண்டாகிறது. உன் அழகுக்கும் உன் அறிவுக்கும் நீ இருக்க வேண்டிய நிலை வேறு. நீ அடைய முடியாத அந்தஸ்து உலகில் இருக்க முடியாது. ஆனால் கேவலம் சபலத்திற்காக, காம வேட்கைக்காக, சகலத்தையும் அழித்துக் கொள்கிறாய். தற்சமயம் நீ வெற்றி கண்டிருக் கிறாய். மருதியை மருந்தைக் கொடுத்து மயக்க நிலையில் வைத்துவிட்டாய். எனக்கும் பைத்தியப் பட்டம் கட்டி புகார் பரதவரும் நம்பும்படி செய்துவிட்டாய். ஆனால் ஒன்று சொல்கிறேன் கேள். உன் வெற்றிகள் நிரந்தரமானவையல்ல. உலகம் முழுவதையும் நீ ஏமாற்ற முடியாது. யாரை ஏமாற்றி



னாலும் இருவரை ஏமாற்ற முடியாது" என்று சொன்னான் உபேந்திரன் மிக உறுதியான குரலில்.

"யாரந்த அந்த இருவர்?" நாகதேவி சர்வசாதாரண மாகக் கேட்டாள்.

"ஒருவர் ராஜேந்திர சோழதேவர்..." என்று படைத் தலைவன் சற்று நிதானித்தான்.

நாகதேவி கேட்டாள். "இன்னொருவர் யாரென்று சொல்லிவிடுங்கள்" என்று.

"எல்லன்."

"யார் உங்கள் பணியாளா?"

"ஆம்."

"என் ஆக்ஞைக்கு முன்னால் ஒரு பணியாள் என்ன செய்ய முடியும்?"

"பொறுத்திருந்து பார், புரியும்" என்ற உபேந்திரன் அதற்குமேல் ஏதும் பேச மறுத்தான்.

அத்துடன் நாகதேவி அந்த அறையிலிருந்து அகன்றாள். அன்று முழுவதும் மரக்கல அறையின் தரையிலேயே கிடந்தான் உபேந்திரன். அவனுக்கு உணவு முதலியன எல்லாமே தரையிலேயே படைக்கப்பட்டன. அவனைக் காக்க நியமிக்கப்பட்ட சாவகத்தின் இரு மாலுமிகள் அவனுக்கு வேண்டிய சகலத்தையும் செய்தார்கள். படுத்த இடத்திலேயே ஒருவன் உணவைப் புகட்டினான் வாயில். நீர் அருந்துவதும் படுத்த நிலையிலேயே நடந்தது. இரவு வந்த பின்பு அதே இரு மாலுமிகள் அவனைத் தரையிலிருந்து படுக்கையில் எடுத்துக் கிடத்தினார்கள்.

அந்த அறையிலிருந்தது சாதாரணக் கயிற்றுக் கட்டிலா னாலும் அதில் போடப்பட்ட மெத்தை மட்டும் மிக சொகுசா யிருந்தது. இந்த சுகத்துக்குக் காரணம் நாகதேவியின் அன்பே

www.cleanindians.com

என்பதையும் புரிந்துகொண்ட உபேந்திரன் சிந்தனையைத் தீவிரமாகச் செலுத்தலானான். பிறகு சுற்று முற்றும் அறையை நோக்கினான். கட்டில், அறையின் சாளரத்துக்கு அருகில் போடப்பட்டிருந்ததைக் கவனித்துச் சிறிது ஆறுதலும் அடைந்தான். ஆனால் அவன் கைகால்கள் கட்டப் பட்டிருந்ததாலும் சாளரக்கதவு நன்றாக அடைக்கப்பட்டிருந்த தாலும் தான் எந்த நடவடிக்கை எடுப்பதும் சாத்தியமல்ல வென்பதை உணர்ந்துகொண்ட உபேந்திரன், சீற்றத்துக்கு இலக்காகி கட்டிலில் புரண்டான். அப்பொழுது கையில் தட்டுப்பட்ட கட்டிலின் ஆணியொன்றைக் கவனித்து சிறிது நிதானித்தான். அதில், மெல்ல கையின் கயிற்று முடிப்பைக் கொடுத்துக் கழற்றப் பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. கயிற்றின் பிணைப்பு எந்தவிதத்திலும் நீக்க முடியாதிருந்தது.

பல்லிருக்கும்போது ஆணி எதற்கு என்று பற்களாலும் முடிப்பை அவிழ்க்க எத்தனித்தும் பயனில்லை. அப்படி அவன் கயிற்றைக் கவ்விக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு கை விளக்குடன் உள்ளே நழைந்த நாகதேவி, "படைத் தலைவரே! அந்தப் பற்கள் கயிற்றைக் கடிக்க ஏற்பட்டதல்ல" என்று கூறி நகைத்தாள். பிறகு விளக்கை ஒரு மூலையில் வைத்துவிட்டு அவனருகில் வந்து உட்கார்ந்து கொண்டு அவன் உதடுகளைத் தனது உதடுகளால் இணைத்தாள். ஆனால் அன்று வரை அவளைக் கண்டபோதெல்லாம் இன்ப வசப்பட்ட உபேந்திரன், அன்று வெறும் மரக் கட்டையாயிருந்தான். அவள் இதழ்களை இழைத்தாளே தவிர அவன் உதடுகள் ஏதோ தண்டனையைப் பெறும் நிலையில் உணர்ச்சியற்று இருந்தது.

அதை கவனிக்கவே செய்த நாகதேவி, "படைத் தலைவரே! உமது பிடிவாதம் இன்னும் போகவில்லை. ஒரு பெண் வலுவில் வரும்போது உதறி எறிகிறாய். இதன் விளைவு..." என்றாள்.

www.cleanindians.com



உபேந்திரன் கண்களில் மிதமிஞ்சிய வெறுப்பு தெரிந்தது. "அடி விஷப்பாம்பே நீ பெண் என்று யார் சொன்னது? நீ ஒரு காமப் பிசாசு. உனக்குக் காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம்கூட சரியாகத் தெரியாது. கட்டாயத் தினால், உத்தரவால், தண்டனை விதிப்பதால் காதலைப் பெற முடியாது. அதன் நியதியே தனி. அன்பு, தியாகம் இவற்றின் மீது கட்டப்படுகிறது" என்று வெறுப்புடன் சொன்ன உபேந்திரன், "போய்விடு. இங்கு என் அருகில் உட்காராதே. உன் அழகில் சில சமயங்களில் மயங்கி இருக்கிறேன். இந்த மயக்கங்கூட இப்பொழுதில்லை. இந்த விடுதலை அளித்ததற்காக உனக்கு நன்றி செலுத்துகிறேன். போய்விடு" என்று வெறுப்பு குரலில் பூர்ணமாக ஒலிக்கப் பேசிய உபேந்திரன் மரக்கட்டை போல் படுத்துக் கிடந்தான்.

நாகதேவி எழுந்தாள் கட்டிலை விட்டு. அவனை உற்று நோக்கினாள் பல விநாடிகள். பிறகு தன் கையாலேயே அவன் கட்டுகளை அவிழ்த்தாள். அடுத்து சரசரவென்று அந்த அறையைவிட்டு அகன்றாள். கதவு மீண்டும் காவலரால் மூடப்பட்டது.

மூடப்பட்ட கதவைப் பார்த்துக்கொண்டே கட்டிலில் உட்கார்ந்திருந்தான் உபேந்திரன் நீண்ட நேரம். பிறகு நாள் பூராவும் கட்டுப்பட்டுக் கிடந்ததால் மரத்துப் போயிருந்த கைகால்களுக்கு சுரணை வரவழைத்துக் கொள்ள கட்டிய இடங்களைத் தனது கைகளால் மாறி மாறி உருவிவிட்டுக் கொண்டான். பிறகு எழுந்து தரையில் நின்று அறையில் நடமாடினான். அடுத்து நாகதேவியால் அவிழ்க்கப்பட்டுத் தரையில் கிடந்த கயிறுகளைக் கையில் எடுத்துப் பார்த்தான். "நல்ல வலுவான நூல் கயிறுகள் இவை. இவற்றைப் பிணைத்து சாளரத்தில் கட்டிக் கடலில் இறங்கி நான் தப்பலாம். அதற்கு வழி கொடுத்திருக்கிறாள் நாகதேவி. ஏன்?

காதலனைக் கட்டி வைக்க இஷ்டமில்லாததாலா? அல்லது தப்ப இடங்கொடுத்து, தப்பும் சமயத்தில் பிடித்து அதை சாக்காக வைத்து ஒருவழியாக என்னை ஒழித்துக் கட்டவா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். எந்த தந்திரத்துக்கும் தான் இடங்கொடுக்கக் கூடாதென்ற முடிவுக்கு வந்து கட்டிலில் படுத்து உறங்க முற்பட்டான். இரவு ஓடிக் கொண்டிருந்தது. திடீரென ஒரு யோசனை தோன்றவே கட்டிலைவிட்டு எழுந்திருந்து அடிமேல் அடி வைத்து மெல்ல நடந்தான் வெளியே. கதவுக்கு வெளியே காவல் நின்ற இரு மாலுமிகள் அவனைத் தடை செய்யவில்லை. அவன் சென்றபோது அவனைத் தொடரவும் இல்லை. இந்த மாற்றத்துக்குக் காரணம் புரியாத படைத்தலைவன் தளத்தை நோக்கிச் சென்றான். தளத்தில் இரண்டொரு மாலுமிகளைத் தவிர யாருமில்லை. அங்கிருந்தபடியே தூரத்தில் பாழடைந்த புகாரை நோக்கினான். பரதவரின் கடற்கரையில் வழக்கம் போல் இல்லங்களில் சின்னஞ்சிறு விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன. பாழடைந்த கோட்டைச் சுவர்மீது அலைகள் மோதிக்கொண்டிருந்தன. அவற்றை நோக்கிய படைத்தலைவன் பெருமூச்சு விட்டான். பகைவர் யாரும் புகமுடியாத வலுப்படைத்த காரணமாக புகார் எனும் பெயர் படைத்த, அந்த மாநகரின் வீழ்ச்சியைப் பார்த்த படைத்தலைவன், "சீரழிவு எதற்கும் உண்டு" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு "நானும் இப்பொழுது புகாரைப் போலத்தான்" என்று நொந்து கொண்டான். இப்படி நினைத்தவன் மரக்கலத்தின் பக்கப்பலகைக்கு அருகில் சென்று சாய்ந்து கடலை நோக்கினான். அந்த இருட்டிலும் சின்னஞ்சிறு படகு ஒன்றில் பரதவன் ஒருவன் வலை வீசி மீன்பிடித்துக்கொண்டிருந்ததைக் கண்டான். "இந்த நேரத்தில் இவன் எதற்காக மீன் பிடிக்கிறான்?" என்று கேட்டுக்கொண்டிருக்கையிலேயே அந்தப் படகு மரக்கலத்தை

www.deaniindians.com



நோக்கி நகருவதைக் கண்டான். அதனால் சந்தேகம் கொண்ட படைத்தலைவன் எதையோ நினைத்துக்கொண்டு மரக்கலப் பலகையில் சாய்ந்து, "தேவி! நாகதேவி!" என்று அழைத்தான். கீழிருந்து நாகதேவியின் குரல் ஒலித்தது. "யார் படைத்தலைவரா?" என்று.

"ஆம்" என்றான் படைத்தலைவன்.

"தளத்தில் என்ன செய்கிறீர்?"

"புகாரைப் பார்க்கிறேன்."

"புகாரில் என்ன இருக்கிறது?"

"பழைய புகார் தெரிகிறது."

"கனவு காண்கிறீர்களா?"

"ஆம். கனவில், இன்று இல்லாததை ஒரு காலத்தில் இருந்ததை, பார்க்கிறேன்."

"நானும் கனவுதான் காண்கிறேன் அன்பரே!"

"நீயுமா?"

"ஆம். இன்றே இல்லாததை, கிடைக்காததைப் பற்றிக் கனவு காண்கிறேன். அது தவறா?" இதைத் தொடர்ந்து ஒரு பெருமூச்சு வந்தது.

"இரு தேவி உன் அறைக்கு வருகிறேன்" என்று கூறிய உபேந்திரன் கடலை ஒருமுறை உற்று நோக்கினான். அந்தச் சிறு படகு மரக்கலத் திசையை விட்டுச் சிறிது தெற்கே நகர்ந்து மீண்டும் மரக்கலத்தை நோக்கித் திரும்பியது. அதற்குப் பிறகு அங்கு நிற்காத உபேந்திரன் தடதடவென்று வேகமாக நடந்து கீழ்த்தளம் வந்து நாகதேவியின் அறைக்குள் புகுந்தான்.

நாகதேவி புன்முறுவலுடன் அவனை வரவேற்றாள். "திடீர் திடீரென்று உங்கள் மனம் மாறுகிறது படைத்

தலைவரே" என்று கூறவும் செய்தாள். தனது பஞ்சணையில் நகர்ந்து அவன் அமர இடமும் கொடுத்தாள். அதே சமயத்தில் உபேந்திரன் கவனித்த சிறு படகு மரக்கலத்தின் இன்னொரு பகுதியை அணுகிக் கொண்டிருந்தது.

## 22. இருவர் நடிக்கலாம்

**நா**கதேவியின் விருப்பப்படி பஞ்சணையில் அவள் பக்கத்தில் அமர்ந்த நாகப்பட்டினத்தின் நாகர்கள் தலைவனும் ராஜேந்திர சோழ தேவரின் படைத்தலைவனுமான உபேந்திரன் அவள் தலையை இழுத்துத் தனது தோளின் மீது சாய்த்துக்கொண்டான். அவன் தோள் மீது சாய்ந்த தனது தலையைப் புரட்டி அவன் கன்னத்தின் மீது இழைத்த நாகதேவி, "இந்தப் பாசாங்கு எதற்கு படைத் தலைவரே?" என்று வினவினாள்.

படைத்தலைவன் அவள் தலையைத் தனது வலது கையால் நன்றாகத் தோளில் அழுத்திக்கொண்டு சற்று திரும்பி தனது முகவாய்க்கட்டையை அந்தத் தலை மீது வைத்துக் கொண்டபடி சொன்னான், "நாகதேவி! பாசாங்குக்கும் படைத்தலைவனுக்கும் வெகுதூரம் என்பதை இத்தனை நாள் நீ புரிந்துகொண்டிருக்க வேண்டும்" என்று.

அவன் முகவாய்க்கட்டை தனது தலைக்குழலில் பதிந்தது மிக இன்பமாக இருந்தது நாகதேவிக்கு. அவள் பஞ்சணையில் நகர்ந்து அவன் உடலின் பக்கப் பகுதியில் தனது உடலை இணைத்தாள். கீழே தொங்கிய அவள் காலொன்று தொங்கலாடிய அவன் கால் ஒன்றைத் தடவியது. அந்தக் காலின் கட்டை விரலும் அதற்கடுத்த



விரலும் அவன் காலின் கட்டை விரலுடன் சேர முயன்றன. அந்த நிலையில் கேட்டாள் நாகதேவி. "படைத்தலைவரே, உங்களைப் பற்றி எதை நம்புவது எதை நம்பக் கூடாது என்பதே எனக்குப் புரியவில்லை. என்னை மருதியாக நினைத்த சமயங்களில் என்னை நீங்கள் அணைத்த வேகத்தை நினைத்தால் இப்பொழுதுகூட என் மெய் சிலிர்க்கிறது. என்னை நாகதேவியாக எண்ணிய சமயங்களில் நீங்கள் என்னைப் புறக்கணித்த முறையை நினைத்துப் பார்த்தால் என் தேகமும் என் மனமும் பதறுகின்றன. இதற்காக ஆயுள் முழுவதும் இந்த வேதனையைச் சகிக்க வேண்டுமா? நான் மருதியாகத்தான் உங்களிடம் வாழ முடியுமா? எனக்கென்று தனி வாழ்க்கை சாத்தியமில்லையா?" என்று. இப்படிக் கேட்ட நாகதேவியின் நாசியிலிருந்து ஏக்கப் பெருமூச்சொன்று வெளிவந்தது.

உபேந்திரன் அவள் துன்பத்தைக் கவனிக்கவே செய்தான். அதன் விளைவாக உள்ளத்தே எழுந்த அனுதாபத்தால் தனது இடது கையால் அவள் இடையை வளைத்து அவள் பூவுடலைத் தன்னை நோக்கி இழுத்தான். அவன் கால் விரல்கள் இரண்டு அவள் கால்விரல்களைக் கவ்வின. அவன் மேற்கொண்டு பேசவில்லை நீண்ட நேரம். ஏதோ நினைத்துக்கொண்டு அவளை விட்டு நீங்கிப் பஞ்சணையில் நகர்ந்து அவளுக்குப் பின்னால் படுத்துக் கொண்டான். "நாகதேவி! அந்தக் கதவை மூடிவிட்டு வா" என்றும் சொன்னான்.

நாகதேவியின் கண்கள் வியப்பினால் மலர்ந்தன. "உண்மையாகவா படைத்தலைவரே? கதவை மூடிவிட்டு வரட்டுமா?" என்று முணுமுணுத்தாள் அவள்.

"சொல்வது காதில் விழவில்லை?" சீறி வந்தன அவன் சொற்கள்.

நாகதேவி மெல்ல நகைத்தாள் ஒருமுறை. பிறகு கட்டிலை விட்டிறங்கி, கதவைத் தாழிட்டு வந்தாள். கட்டிலின் முகப்பில் அமர்ந்தவண்ணம் படுத்துக் கிடந்த படைத் தலைவனை மௌனமாக நோக்கினாள் பல விநாடிகள். "படைத்தலைவரே!" என்று மெதுவாக அழைக்கவும் செய்தாள்.

"என்ன?" படைத்தலைவன் பதில் கேள்வி முரட்டுத் தனமாயிருந்தது.

"நீங்கள்."

"உம்?"

"நல்ல நடிகர்."

"நடிகரா!"

"ஆம். வேஷம் போடுகிறீர்."

"என்ன வேஷமோ?"

"காதல் வேஷம்."

அடுத்து நாகதேவி படைத்தலைவரின் முரட்டுப் பிடியி லிருந்தாள். அவளை இழுத்துத் தன்மீது தள்ளிக் கொண்டு இரு கைகளாலும் இறுக்கிய உபேந்திரன் அவள் இம்சைப் பட்டுத் தன்மீது நெளிவதைக் கண்டு, "இப்பொழுது எப்படி யிருக்கிறது எனது நடிப்பு?" என்று கேட்டான் மெதுவாக.

அவன் மீது நெளிந்துகொண்டே நெளிந்த நிலையில் தனது அங்க லாவண்யங்களை அவன் மீது இழைத்தவாறே ஆயாசப் பெருமூச்சு விட்டுக்கொண்டவண்ணம், "இது மட்டும் சொப்பனமாயில்லாதிருந்தால், உண்மையாயிருந் தால்..." என்று முணுமுணுத்தாள் நாகதேவி.



உபேந்திரன் கைகள் அவளை இறுக்குவதை நிறுத்தி முகத்துக்கருகில் உள்ளங்கைகள் வந்து அவளுடைய வழவழத்த இரு கன்னங்களையும் லேசாகப் பிடித்து அவள் முகத்தைத் தன் முகம் நோக்கிச் சாய்க்கத் தொடங்கின. அடுத்த விநாடி அவன் உதடுகள் அவள் கன்னமொன்றிலும் கழுத்திலும் புதைந்தன. கழுத்தில் புதைந்த உதடுகள் அங்கேயே அழுந்திப் புரண்டன. அடுத்து சற்றுக் கீழேயும் இறங்க முற்பட்டன.

நாகதேவி காமத்தின் பூரணமான பிடியில் இருந்தாள். அவள் அவனைத் தடை ஏதும் செய்யவில்லை. அவள் கமலக் கண்கள் மூடிக்கிடந்தன. ஏதோ பெரும் சொப்பனத் தில் இருப்பது போன்ற பிரமையின் சாயை வதனத்தில் விரவிக் கிடந்தது. அப்படியே அவள் நெளிந்தாள் அவன் உடல் மீது, சர்ப்பம் நெளிவதுபோல. அப்படி அவள் ஊர்ந்து, நெளிந்தது, அவ்வப்பொழுது விட்டு விட்டு இழைந்தது, எல்லாமே இன்பமாயிருந்ததால் உபேந்திரனும் பெருமூச்சு விட்டான். அதுவரை நடித்த நாடகம் ஊட்டிய உணர்ச்சிகள் நாடகத்தை உண்மையாகச் செய்துவிட்டதால் உபேந்திரன் உணர்ச்சிவசமானான். அவன் மனக்கண்ணி லிருந்து புகார் மறைந்தது. தனித்து வந்த படகு மறைந்தது. உலகமே மறைந்தது. தெரிந்தது நாகதேவியின் மலர் உடல் ஒன்றுதான்.

அந்த எண்ணங்களால் தன்மீது கிடந்த நாகதேவியைத் தனது இரு கைகளாலும் சிறிது தூக்கிப் பிடித்தான். அவன் கண்களுக்கெதிரே எழுந்தது அவள் அழகிய மார்பகம். சேலை நழுவிவிட்டதால் கச்சையைத் திமிற முயன்ற இருமொட்டுகள் அவனை நோக்கின. 'தண்டில் துளிரில், மொட்டுகள் விடுவதுண்டு. ஆனால் மலரில் மொட்டுகள் விளைவதைக் கேட்டதில்லை' என்று நினைத்த உபேந்திரன்

நாகதேவி ஓர் அற்புதம் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான். பிறகு அவன் நினைக்கும் சக்தியை இழந்தான். அவன் முகம் அவள் மார்பின் நடுவில் புதைந்து மொட்டு களில் மறைந்தது.

மறைந்த முகத்தின் காரணமாக நிறைந்த மோகம் அவன் உணர்ச்சிகளை உச்சிக்குக் கொண்டு சென்றது. அவள் மலர் மொட்டுகள் அவன் கன்னங்களின் இருபுறமும் அழுந்திக் கிடந்தன. இடைவெளி விட்டு விட்டு இழையவும் செய்தன. வேறு ஏதோ உலகத்தில் இருந்தான் உபேந்திரன். சொர்க்கம் என்றால் இதுவாகத்தானிருக்க வேண்டும் என்று நினைத்தான். அந்த சமயத்தில் அவன் கண்கள் மூடிக் கிடந்தன. நாகதேவி அவன் உடல் மீதிருந்து அகன்று பக்கத்தில் படுத்துக்கொண்டாள். ஆனால் சரசம் எதிலும் ஈடுபடவில்லை அவள். அவன் கையொன்றை மட்டும் எடுத்து மார்பில் வைத்துக்கொண்டாள். உபேந்திரன் அவளை நோக்கித் திரும்பிப் படுத்து "தேவி!" என்று மெதுவாக அழைத்தான்.

"என்ன?" என்று அவளும் மெதுவாகக் கேட்டாள்.

"இப்படித் திரும்பு" என்ற அவன் மல்லாந்து கிடந்த அவளை தன்னை நோக்கிப் புரட்ட முயன்றான்.

திரும்பவில்லை அவள். "என்ன தேவி!" என்று குரலில் சிறிது சீற்றத்தைக் காட்டினான் உபேந்திரன்.

"என்ன தலைவரே!"

"ஏன் திரும்ப மறுக்கிறாய்?"

"எதற்காகத் திரும்ப வேண்டும்?"

"என்ன பைத்தியக்காரக் கேள்வி இது?"

"இந்த நிலையே பைத்திய நிலைதான்."

"அதன் பூர்த்தி?"

www.cleanindians.com



"உங்கள் கைகளில் இருக்கிறது" என்ற நாகதேவி தனது அறையின் கூரையை நோக்கினாள். அங்கிருந்த ஒரு சிறிய கண்ணாடியில் உபேந்திரன் முகத்தை ஆராய்ந்தாள். அவன் முகத்தில் பூர்ண திருப்தி மண்டிக் கிடந்தது. அதில் தெரிந்த அவள் தலையின் நாகாபரணத்தின் முகப்பும் அவள் தலையின் அசைப்பால் சிறிது அசைந்தது அந்த மூன்று தலைகளின் பார்வையில் ஏதோ செய்தி இருப்பதாக அவளுக்குத் தோன்றியதால், "அன்பரே," என்று அவள் அழைத்தாள்.

"என்ன தேவி!" என்று வினவினான் உபேந்திரன்.

"கதவை சிறிது திறவுங்கள்" என்றாள் நாகதேவி.

உபேந்திரன் கட்டிலிலிருந்து எழுந்தான் சந்தேகத்துடன். பிறகு சென்று கதவைத் திறந்தான். அங்கு யாருமில்லாததால் திரும்பி வந்து, "எதற்காகக் கதவைத் திறக்கச் சொன்னாய்?" என்று வினவினான்.

"உங்கள் அறைக்குப் போகலாம்." படுத்தபடி உத்தர விட்டாள் நாகதேவி.

"ஏன் இந்த மாற்றம்?"

"நமது நாகர் குல முறைப்படி திருமணமாகுமட்டும் இப்படி நாம் சேருவது தவறு. உங்களுக்கே தெரியும்!"

அவள் சொன்னதில் தவறில்லையென்பது உபேந்திர னுக்குத் தெரிந்தேயிருந்தாலும், "இத்தனை நாழி என் சரசத்தை அவள் ஏன் ஏற்றுக்கொண்டாள்?" என்று தனக்குள் கேட்டுக்கொண்டான். அறையை விட்டு அவன் செல்லுமுன்பு கட்டிலில் கிடந்த அவளை நோக்கினான். அவள் கண்கள் அவனை நோக்கி நகைத்தன. அதற்குக் காரணம் புரியாததால் குழப்பத்துடன் தனது அறையை

நோக்கி நடக்க முற்பட்டான். அவன் மறைந்ததும் நாகதேவி மும்முறை நகைத்தாள். "நடிக்க இருவராலும் முடியும்" என்று சொல்லிக்கொண்டாள் மெதுவாக.

அதன் உண்மையை உபேந்திரன் தனது அறைக்குச் சென்றதும் புரிந்துகொண்டான். அவன் அறையில் எல்லன் நின்றுகொண்டிருந்தான். அவன் முகத்தில் கவலை மண்டிக் கிடந்தது. "என்ன எல்லா?" என்று வினவினான் உபேந்திரன்.

"நான் வந்த படகு அகற்றப்பட்டு விட்டது" என்று அறிவித்தான் எல்லன்.

## 23. சங்க காலத்துக்கு அழைப்பு

எல்லன் சொன்ன திகைக்கத்தக்க செய்தியால் உபேந்திரன் சிறிதும் மனம் கலங்கினான் இல்லை. சிந்தனையிலும் இறங்கினான் இல்லை. "நான் காணாமற் போனது பற்றி நாகப்பட்டினத்தில் ஏதாவது விசாரணை உண்டா?" என்று முதல் கேள்வியைத் தொடுத்தான்.

"இல்லை" என்றான் எல்லன்.

படகு மறைந்ததால் ஏற்படாத திகைப்பு எல்லனின் இந்தப் பதிலால் ஏற்பட்டது படைத்தலைவனுக்கு. ஆகவே வினவினான் மறுபடியும், "என்ன! என் மறைவைப்பற்றி அடியோடு கேள்விமுறை இல்லையா? என்று.

"நீங்கள் மறைந்திருந்தாலல்லவா கேள்வி. நீங்கள் அவசர வேலையாக உறையூர் போவதாகவும் வர நான்கு நாள்கள் ஆகுமென்றும் நகரத்தலைவரிடம் ஓலை கொடுக்கப் பட்டது" என்று விளக்கிய எல்லன் மேலும் தொடர்ந்தான்.



"மறுநாள் நீங்கள் எங்கும் தென்படாது போகவே சிறிது கவலை ஏற்பட்டது எனக்கு. அத்துடன் நாகதேவியின் மரக் கலமும் மறைந்து விடவே தங்களுக்கு ஏதோ ஆபத்து நேர்ந் திருக்கிறதென்று முடிவு கட்டினேன். அதைப்பற்றி நகரத் தலைவரிடம் முறையிட்டபோது அவர் என்னைப் பார்த்து நகைத்தார். 'நீ எத்தனை நாளாக படைத்தலைவரிடம் பணி புரிகிறாய்?' என்று ஏளனமான குரலில் வினவினார். சிறு வயது முதல் பணி செய்வதாகக் கூறினேன். 'இவ்வளவு ஆண்டு பணிசெய்தும் நீ உன் எசமானரைப் புரிந்துகொள்ள வில்லை' என்று கூறி தம்மிடமிருந்த ஓலையை எடுத்துக் காட்டினார். அதில் நான் சொன்ன செய்தி திட்டமாக எழுதப்பட்டிருந்தது" என்று எல்லன் விளக்கினான்.

"ஓலையில் என் கையொப்பமிருந்ததா?" என்று உபேந்திரன் வினவினான்.

"இல்லை."

"வேறு யார் எழுதியிருந்தது ஓலையை?"

"சுத்ததத்தர். நமது குருநாதர்" என்றான் எல்லன். "ஓலையில் தாமும் தங்களுடன் போவதாகவும், ஆகவே கவலை வேண்டாமென்றும் எழுதியிருந்தார்.

"உபேந்திரன் திரும்பும் வரை துறைமுகப் பணியை கவனிக்கும்படி தாங்கள் நகரத் தலைவருக்கு உத்தரவிட்ட தாகவும் குறிப்பிட்டிருந்தார்" என்றான் எல்லன்.

நாகதேவியின் திறமையை நினைத்து வியந்தான் நாகையின் நாகர் தலைவன். எல்லாம் முன்கூட்டியே யோசனை செய்திருக்கிறாள் தேவி என்று முணுமுணுக்கவும் செய்தான். பிறகு வினவினான், "சாவகத்தின் மரக்கலத் தின் திடீர் புறப்பாட்டுக்கு சுங்க அதிகாரிகளோ நகரத் தலைவரோ காரணம் கேட்கவில்லையா?" என்று.

"இல்லை." எல்லன் பதில் திட்டமாயிருந்தது.

"காரணம்?"

"சாவக மரக்கலத்தில் இருந்த வணிகப் பொருள்களுக்கு தாங்கள் அதிக வரி விதித்ததால் இங்கு வர்த்தகம் தேவை யில்லை என்று பொருள்களை இறக்காமலே மரக்கலம் நங்கூரம் எடுத்துவிட்டதாம். இதைப் பற்றி நாகதேவியே ஓர் ஓலை எழுதியிருந்தாள் நகரத் தலைவருக்கு."

"திட்டமிட்டுத்தான் வேலை செய்திருக்கிறாள் நாக தேவி."

"அதுமட்டுமல்ல எஜமான். தங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக இன்று மாலையில் புகார் பரதவர் பேசிக் கொண்டார்கள்" என்றும் உணர்த்தினான் எல்லன்.

உபேந்திரன் நகைத்தான் மெதுவாக. "எல்லா! அவர்களில் பத்துப்பேர் இங்கு வந்து என் கைகால்களைக் கட்டிப் போட்டார்கள்" என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

எல்லன் சினம் கரை கடந்ததால் அவன் உதடுகள் மடிந்தன ஒருமுறை பயங்கரமாக. "எஜமான்! இந்தப் பிசாசை ஒரு வழியாக ஒழித்துவிடட்டுமா?" என்று கேட்டான் சீற்றம் மிகுந்த குரலில்.

"அது முடியாது, பலனும் தராது எல்லா" என்ற உபேந்திரன், "எல்லா! நாம் எல்லாருமே இந்த மாயக்காரி யிடம் சிக்கியிருக்கிறோம். மருதிக்கு மயக்க மருந்து கொடுத்து புத்தியைச் சிறிது பேதலிக்கச் செய்திருக்கிறாள். என்னைப் பைத்தியமென்று பிரசாரம் செய்திருக்கிறாள். இந்த மரக் கலத்திலிருக்கும் வரை நாம் அவளை எதுவும் செய்ய முடியாது" என்றான் உபேந்திரன்.



"ஏன் முடியாது? உத்தரவு கொடுங்கள் எசமான்! புகாரில் என்னுடன் வந்த நான்கு பேர் இருக்கிறார்கள்! அவர்களை இங்கு வரவழைக்கிறேன்" என்று எல்லன் பதற்றப்பட்டான்.

உபேந்திரன் வேண்டாமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். "நாம் எது செய்தாலும் நாகதேவி மருதியை அழித்துவிடுவாள். ஆகவே பொறு" என்று சொன்ன படைத்தலைவன், "நீ இங்கேயே இரு. நான் தளத்துக்குப் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியே வந்தான். வெளியே ஒருமுறை இருபுறமும் பார்த்துவிட்டுத் தளத்துக்குச் சென்றான். தளத்தின் ஓரத்துக்குச் சென்று கரையைச் சிறிது நேரம் நோக்கினான். பிறகு அங்கு உலாவிக் கொண்டிருந்த மாலுமி களில் ஒருவனை அழைத்து, "கரை எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று கேட்டான்.

"உங்களுக்கென்ன அதைப் பற்றி! உங்களை இந்த மரக்கலத்திலிருந்து விடப்போவதில்லை. தேவி திட்டமாக உத்தரவிட்டிருக்கிறார்" என்றான் சாவகத்தின் மாலுமி.

"என் கேள்விக்குப் பதில் சொல்லக் கூடாதென்றும் உத்தரவிருக்கிறதா?" என்று போலி சினத்தைக் குரலில் காட்டினான் படைத்தலைவன்.

"அப்படி ஏதுமில்லை. நீங்கள் எதைக் கேட்டாலும் சொல்லும்படி கட்டளை" என்றான் மாலுமி.

"அப்பொழுது பதில் சொல். கரை எத்தனை தூரம் இருக்கும்?"

"அதிக தூரமில்லை. அரைக்கால் காதம் இருக்கலாம்."

"எளிதில் நீந்திப் போக முடியுமா?"

www.chennaiindians.com

"ஏன் முடியாது! இதைவிட நான்கு மடங்கு தூரமிருந்தாலும் நானே நீந்துவேன்."

"அப்படியானால் உன் நீச்சல் வலு அதிகந்தான்."

இதைக் கேட்ட மாலுமி சிறிது பெருமையைக் காட்டினான் முகத்தில். "சாவகத்தின் மாலுமிகள் எல்லோருக்குமே நீச்சல் பழக்கமுண்டு. ஆகையால் நான் நீந்த முடியும் என்று சொன்னதை ஒரு பெரிய விஷயமாக நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டாம்" என்று பெருமையைக் குரலிலும் காட்டினான் மாலுமி.

"மாலுமி!" உபேந்திரன் குரல், கட்டளையென உதிர்ந்தது.

"எசமான்."

"என் அறைக்குப் போ."

"போய்!"

"அங்கிருக்கும் எனது பணியாளனை அழைத்து வா."

"பணியாளா?" மாலுமி வியப்பையும் திகிலையும் ஒருங்கே அடைந்தான்.

"ஆம். எல்லன் என்று பெயர்."

"இங்கு எப்படி வந்தான்? எப்பொழுது வந்தான்?"

"அநாவசியக் கேள்வி. போய் அவனை அழைத்து வா" என்று உபேந்திரன் உத்தரவிடக் கீழே ஓடினான் மாலுமி.

கீழ்த்தளத்தை அடைந்ததும் இன்னும் ஒரு மாலுமியையும் அழைத்துக்கொண்டு உபேந்திரன் அறையை அடைந்து கதவைத் தட்டினான் இருமுறை. கதவு திறக்கப்படவில்லை. பிறகு கதவை அழுத்த அது தானாகவே திறந்தது.

www.cleanindians.com



உள்ளே இரு மாலுமிகளும் வேகமாக நுழைந்ததும் இருவர் தலைகளிலும் பலமான குறுவாளின் பிடியொன்று தாக்கவே இருவரும் தரையில் சாய்ந்தனர்.

அடுத்து வெகு துரிதமாக இயங்கினான் கதவு மறைவில் நின்றிருந்த எல்லன். இருவர் கைகால்களை அறையிலிருந்த கயிறொன்றால் பிணைத்தான். பிறகு அறையைச் சாத்திக் கொண்டு தளத்துக்கு ஓடினான். அங்கு நின்றிருந்த படைத் தலைவனைக் கண்டதும், "எசமான்! தாங்களனுப்பிய இருவரும் இன்னும் சில நாழிகைகளுக்குத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்" என்றான்.

புரிந்துகொண்டதற்கு அடையாளமாகத் தலையசைத்த உபேந்திரன், "எல்லா! நீ கரைக்குப் போய் அங்குள்ள துறைமுகத் தலைவனை நான்கு படகுகளுடன் அழைத்து வா. நான் இங்கிருந்து சைகை செய்த பிறகு கிளம்பு" என்றான்.

எல்லன் பதிலேதும் சொல்லவில்லை. எசமான் இறக்கி விட்ட நூலேணியின் வழியாக மெதுவாக இறங்கினான். கடைசிப் படிக்கு இறங்கியவன் பெரு வியப்படைந்து, "எசமான்! விசித்திரம்! அற்புதம்!" என்று மகிழ்ச்சியுடன் பேசினான் மெதுவாக.

"என்ன எல்லா? என்ன விசித்திரம்?" என்று வினவினான் உபேந்திரன்.

"என் படகு."

"அதற்கென்ன?"

"இங்கு இருக்கிறது. மரக்கலத்தின் பக்கம் பலகையின் இரும்பு வளையத்தில் பிணைக்கப்பட்டிருக்கிறது."

"சரி, மேலே ஏறி வா!" என்று உத்தரவிட்டான் உபேந்திரன்.

"என்ன எசமான்?" என்று பெருவியப்பைக் காட்டினான் எல்லன் குரலில்.

பதிலுக்கு நகைத்தான் உபேந்திரன். "எல்லா! உன்னை உண்மையாகவே கரைக்குப் போகச் சொன்னதாக நினைத்தாயா?" என்று கேட்டான்.

திடீரென உபேந்திரன் மாறிவிட்டதைக் கண்ட எல்லன் பிரமையுடன் உபேந்திரனை நோக்கினான் கீழிருந்த வண்ணம். "என்ன சொல்கிறீர்கள் எசமான்?" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

"எல்லா! உன்னை இந்த இரவில் நீந்தச் சொல்ல எனக்கென்ன பைத்தியமா?" என்று ஒரு கேள்வியை வீசினான் படைத்தலைவன்.

'முன்பின் முரணாக உத்தரவிடுகிறாரே எசமான்? ஒருவேளை நிஜமாகவே பைத்தியம் பிடித்திருக்குமோ?' என்று எண்ணிய எல்லன் அடுத்து செய்வது தெரியாமல் நின்றான்.

அந்த சமயத்தில் ஒலித்தது நாகதேவியின் குரல், "எல்லா, மேலே ஏறி வா. நாளை மாலையில் போவோம் புகாருக்குள். அதற்கு ஏற்பாடும் செய்திருக்கிறேன்" என்று.

எல்லன் மேலே நோக்கினான். நாகதேவி தனது தலையை உபேந்திரன் தோள் மீது சாய்த்துக்கொண்டு இருந்தாள்.

எல்லன் பிரமிப்பால் விழித்தான். "ஏன் எல்லா! நான் சொன்னால் கேட்கமாட்டாயா? சரி உன் தலைவரிடமே கேட்டுக்கொள்" என்றாள்.

"எல்லா! மேலே ஏறிவா" என்று ஆக்ஞைக் குரல் எழுந்தது உபேந்திரனிடமிருந்து.



எல்லன் மீண்டும் நூலேணியில் ஏறித் தளத்தை அடைந்தான். "நாளைக்குப் பார் எல்லா! புகாரின் கடற்கரை சங்க காலத்துக்குச் செல்லும்" என்று நாகதேவி அவனுக்கு உற்சாகமூட்டினாள்.

எல்லன் அவள் சொல்லியதை அப்பொழுது நம்ப வில்லை. மறுநாள் சங்க காலத்தை வரவழைத்தாள் நாக தேவி. அந்த வரவழைப்பில் அனர்த்தங்களும் கலந்திருந்தன. அது மருதியின் நிலையை அடியோடு பாதித்துவிட்டது.

## 24. குருநாதர் சரசம்

உபேந்திரன் உத்தரவுப்படி நீர்மட்டத்திலிருந்து தளத் துக்கு ஏறிவந்த எல்லன் நாகதேவி உல்லாசமாக எசமான் தோள்மீது தலை வைத்துப் படுத்திருந்ததை ரசிக்கவில்லை யென்பதைத் தனது பார்வையாலேயே காட்டினாலும் நாகதேவி அதைப் பொருட்படுத்தினாளில்லை. "நாளை புகார் சங்ககாலத்துக்குச் செல்லும்" என்று அவள் ஊட்டிய உற்சாகத்தை எல்லனும் லட்சியம் செய்தானில்லை. எசமான், நாகதேவி, இருவரையுமே கோபத்துடன் பார்த்துவிட்டுத் தடதடவென்று கீழ்த்தளத்துக்குச் செல்லும் படிகளில் இறங்கிச் சென்றான். எசமான் அறையை அடைந்ததும் தன்னால் தாக்கப்பட்டு சுரணையற்றுக் கிடந்த இரு சாவக மாலுமிகளையும் இரு கைகளாலும் தூக்கிப் பிடித்து நிறுத்தி ஓர் உலுக்கு உலுக்கினான். அதனால் சிறிது கண்விழித்த மாலுமிகளை நோக்கி, "உங்கள் அறைக்கோ, நீங்கள் பணி புரியும் இடத்திற்கோ செல்லுங்கள்" என்று உத்தரவிட, மாலுமிகளில் ஒருவன் கேட்டான், "நாங்கள் எங்கிருக் கிறோம்?" என்று. "ஆம் ஆம் சொல்லுங்கள். எங்கிருக் கிறோம்?" என்று இன்னொருவனும் கலந்துகொண்டான்.

www.cleanindians.com

"சொர்க்கத்துக்காவது நரகத்துக்காவது அனுப்பி விடத்தான் இருந்தேன். எசமான் கோபித்துக் கொள்வாரென்று விட்டுவிட்டேன்" என்று கூறிய எல்லன், "அட சனியன்களா! போய் வாருங்கள்" என்றான்.

அவர்கள் நகரவில்லை. "சனியன்கள் என்று எங்களை அழைக்கக் கூடாது" என்றான் ஒரு மாலுமி.

"எங்கள் மதத்தில் சனி கிடையாது" என்றான் இன்னொருவன்.

அவர்கள் காட்டிய மதபக்தியால் எரிச்சலுண்டாகவே "சரி! சரி! மூதேவிகளா! போங்கள் வெளியே. என் கண் முன்னால் நிற்காதீர்கள்" என்றான் எல்லன்.

"மூதேவி என்று புராணங்களில் உண்டு. அதை நாங்கள் நம்பவில்லை" என்றான் முதல் மாலுமி.

"ஆகவே அதையும் நாங்கள் நம்ப முடியாது" என்றான் இரண்டாவது மாலுமி.

எல்லன் பொறுமையிழந்தான். ஆகையால் மேற்கொண்டு பேசுவதை நிறுத்தி முதலில் அவர்களை அடித்த மரக்கட்டையை அறை மூலையிலிருந்து கையில் எடுத்துக் கொண்டு, "இதை நம்புகிறீர்களா இல்லையா?" என்று வினவவே இரு மாலுமிகளும் அந்த இடத்தில் நிற்கவில்லை.

அவர்கள் சென்றதும் தீவிர சிந்தனையில் இறங்கினான் எல்லன். இந்த மரக்கலத்திலிருந்து எசமானோ தானோ எப்படித் தப்புவது என்று யோசிக்கலானான். இரவு நன்றாக முற்றியதால் அலைகள் பெரிதாக எழுந்து மரக்கலத்தைத் தூக்கிக்கொண்டிருந்தன. அவற்றின் பேய் இரைச்சல் பயங்கரமான சூழ்நிலையை சிருஷ்டித்துக்கொண்டிருந்தது. இந்த அலையில் அவனால் நீந்த முடியும். நீந்த கடலில்

www.chennaiindians.com



இறங்க வேண்டும். தன்னை அந்த மரக்கலத்தின் ஒவ்வொரு மாலுமியும் கவனிக்கிறானென்பதை அவன் உணர்ந்திருந்ததால் அது முடியாதென்பதைப் புரிந்துகொண்டான். படகும் நாகதேவியின் வசத்திலிருப்பதால் அதுவும் பயன்படாது கரையை அடைய என்பதும் வெட்ட வெளிச்சமாயிருந்தது. "ஒரே ஒரு வழி உண்டு. நாகதேவியைக் கொன்று போடலாம். அதற்கு எசமானர் ஒப்பமாட்டார். அவரே அவள் மையலில் கட்டுண்டிருக்கிறார்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். எதற்கும் கப்பலில் அரவம் அடங்கட்டும் என்று காத்திருந்தான்.

அரவம் அடுத்த இரண்டு நாழிகைகளில் அடங்கி விட்டது. தளத்தில் காவல் புரிந்த ஒரே ஒரு மாலுமியின் நடையைத் தவிர வேறெந்த ஒலியும் கேட்கவில்லை மரக்கலத்தில். சற்று நிதானித்துவிட்டு எசமான் அறையைவிட்டுக் கிளம்பினான் எல்லன். கதவைத் திறந்து தலையை வெளியே நீட்டியதும் நேர் எதிர் அறைக்குள் நாகதேவியைத் தூக்கிக் கொண்டு எசமான் நுழைவதைக் கண்டான். அடுத்த நிமிடம் அந்த அறைக்குள்ளிருந்து வெளியே வந்த படைத் தலைவன், தான் இருந்த அறையிலிருந்து இரண்டு அறைகள் தள்ளியிருந்த ஓர் அறைக்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டதைக் கண்டான். அந்த அறையில் யார் இருக்கிறார்களென்பதை அறிய அந்த அறையை நோக்கி பூனைபோல் நடந்து அறைக்கதவை மெதுவாகத் திறந்தான்.

மிக மந்தமான வெளிச்சம் அறைக்கோடியின் சிறு விளக்கிலிருந்து வீசிக்கொண்டிருந்தாலும், இருட்டுக்கு பழக்கப்பட்டுவிட்ட எல்லன் கண்களுக்கு உள்ளே இருந்த காட்சி விவரமாகத் தெரிந்தது. எசமான் அங்கிருந்த பஞ்சணையில் படுத்திருந்த மருதியின் கன்னத்தில் இதழ்களை இழைத்துக்கொண்டிருப்பதைக் கண்ட எல்லன்

திரும்பிச் செல்ல முயன்ற சமயத்தில் எசமான் எழுந்து விட்டதையும் மருதியைக் கைகளில் தூக்கிக்கொண்டு விட்டதையும் கவனித்தான். 'இப்பொழுதுதான் அவளைத் தூக்கிச் சென்றார். இப்பொழுது இவளைத் தூக்குகிறார். இரவு முழுவதும் பெண்களைத் தூக்கும் வேலையே இவருக்குச் சரியாயிருக்கும் போலிருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட எல்லன், திரும்பிச் செல்லும் முன்பாக "எல்லா..." என்று மிக மெதுவாக அழைத்தான் படைத் தலைவன்.

எந்த அரவமும் செய்யாமல் தான் வந்தும் தனது வரவை எசமான் புரிந்துகொண்டதை உணர்ந்த எல்லன் பிரமைபிடித்து, "எசமான்! தங்களைத் தொடரும் உத்தேசம் எனக்கில்லை" என்றான்.

"தொடர்ந்தால் பாதகமில்லை, நாளை இரவுக்குள் நாம் மருதியை நாகதேவியின் பிடியிலிருந்து அகற்றா விட்டால் மருதி பிழைப்பது கஷ்டம்" என்று சொன்ன படைத்தலைவன், "எல்லா! அவளை நமது அறைக்கு எடுத்துச் செல்கிறேன். இவள் இடத்தில் நீ படுத்திரு. நடக்கும் விஷயத்தை காலையில் சொல்" என்று உத்தர விட்டான்.

எல்லன் தனது பெரிய மீசையைத் தடவிவிட்டுக் கொண்டு புன்முறுவல் செய்தான். "அதனால் பாதகமில்லை. உன் முகத்தை யாரும் திறந்து பார்க்கப் போவதில்லை" என்று சுட்டிக் காட்டிய படைத்தலைவன் "படுக்கையில் படுத்து உடல் முழுவதையும் போர்த்திக்கொள். யார் எது சொன்னாலும் செய்தாலும் அசங்காதே. நிலைமை மீறினால் உசிதப்படி நட. சகலத்தையும் அரைக்கண்ணால் கவனித்துக் கொண்டிரு" என்று கூறிவிட்டு மருதியைத் தூக்கிக்கொண்டு வெளியே சென்றுவிட்டான்.



எசமான் சொற்படி எல்லன் பஞ்சணையில் படுத்துக் கொண்டு நன்றாகக் கால்களை நீட்டிக்கொண்டான். பிறகு போர்வையை எடுத்து தலை முதல் கால் வரை போர்த்திக்கொண்டான். போர்த்திய நிலையில் கண்களுக்கு மட்டும் சிறிது இடம் விட்டுக்கொண்டான். பிறகு ஏதோ யோசித்து "என்ன மடத்தனம்! பெண்கள் இப்படி காலை நீட்டிக்கொண்டு படுக்கமாட்டார்கள்" என்று தன்னைக் கடிந்துகொண்டு கால்களை முடக்கி அடக்கமாகப் படுத்தான்.

நாழிகைகள் ஓடின. எதுவுமே நடக்கவில்லை. 'எசமானுக்கு வீண் பிரமை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு நித்திரை கண்ணைச் சுழற்றவே சிறிது கண் அயர முற்பட்ட சமயத்தில் வெளியே மெல்ல மெல்ல யாரோ நடக்கும் காலடி ஓசை கேட்டது. அதனால் தலையை நன்றாகப் போர்த்தி உறங்குவதுபோல் பாசாங்கு செய்து கண்களிருந்த இடத்தில் மட்டும் போர்வையைச் சிறிது விலக்கி வருவது யாரென்பதைக் கவனித்தான்.

மெல்ல மெல்ல பூனைபோல் நடந்து வந்து அறைக் கதவை திறந்தவர் சற்று அறை வாயிற்படியிலேயே நின்றார். அப்படி நின்றவர் குருநாதர் என்பதை அறிந்ததும் திகிலின் வசப்பட்ட எல்லன் பேசாமல் கட்டைபோல் கிடந்தான் கட்டிலில். உள்ளே வந்ததும் குருநாதர் அறைக்கதவை மெதுவாகச் சாத்தினார். பிறகு அடிமேலடி எடுத்து வைத்து நடந்து கட்டிலின் அருகில் வந்ததும் கட்டிலை சில விநாடிகள் உற்று நோக்கிக்கொண்டு நின்றார். "மருதி! நீ மிகவும் நல்ல பெண். ஆனால் தகாத இடத்தில் உன் மனத்தை அடகு வைத்தாய். படைத்தலைவனை நீ மறந்து விட்டால் இந்த மயக்க நிலையும் மாறும். நல்ல வாழ்வும் கிடைக்கும்" என்றார்.

கட்டிலில் படுத்திருந்த உருவத்திடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. பதிலை அவர் எதிர்பார்க்கவும் இல்லை. ஒருமுறை எல்லன் மீது கையை வைத்து அசக்கிப் பார்த்து விட்டு, "பாவம் கட்டைபோல் கிடக்கிறாள். எழுந்தாலும் என்ன பயன், சுயபுத்தி முழுதும் வராது மாற்று மருந்து கொடுத்தாலொழிய. மாற்று மருந்து கொடுக்கக் கூடியவர் மொத்தம் மூன்று பேர். நான் ஒருவன். நாகதேவி இன்னொருத்தி. மூன்றாமவன் புகாரில் இருக்கிறவன். பரதவர்களின் மருத்துவன். ஆனால் அவனை எப்படி அண்ட முடியும்?" என்று கூறிய சுத்ததத்தர் பெருமூச் செறிந்தார். "எல்லாம் போதிசத்வர் நியமனம்" என்று கூறினார்.

சுத்ததத்தர் தமது அயோக்கியத்தனத்துக்குப் பழியை போதிசத்வர் மீது சுமத்துவதை உணர்ந்த எல்லன் சிறிது எரிச்சல் கொண்டான். "புத்த மதமும் வேத மதந்தானே! மற்ற பக்தர்கள் முருகன் நாராயணன் என்று சில தெய்வங் களைத் தங்கள் ஊழல்களுக்குத் துணைக்கழைப்பது போல் இவரும் போதிசத்வரை அழைக்கிறார்" என்று உள்ளூர எல்லன் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில் குருநாதர் அறையின் ஒரு மூலைக்குச் சென்று அங்கிருந்த பெரிய மரப்பெட்டியொன்றைத் திறந்தார். அதிலிருந்து மண்ணால் செய்த குப்பியொன்றை எடுத்தார். அதைச் சிறிது முகர்ந்து சட்டென்று தமது பெரிய மூக்கை அகற்றி தலையை இருபுறமும் ஆட்டிக்கொண்டார். பிறகு தமது குடமிளகாய் மூக்கை இருமுறை ஊதினார் பலமாக. அடுத்து அந்தக் குப்பியை கட்டிலுக்காக நீட்டி, "மருதி! இதோ இருக்கிறது உன் மாற்று மருந்து. அருகில் இருக்கும் ரசாயனம் உனக்கோ உபேந்திரனுக்கோ எப்படித் தெரியப் போகிறது?" என்று சொல்லிப் புன்முறுவல் கொண்ட சுத்ததத்தர், "எதற்கும்

www.cleanindians.com



உன் தாது எப்படியிருக்கிறது பார்க்கிறேன்" என்று கூறிக் கொண்டு குப்பியை மரப்பெட்டியில் பத்திரப்படுத்திவிட்டுக் கட்டிலை நோக்கி வந்தார்.

கட்டிலுக்கு அருகே சிறிது நேரம் நின்றதும் மெள்ள போர்வையை அகற்ற முயன்றார். அதை இழுத்து எல்லன் மூடிக்கொள்ளவே "மருதி பண்புள்ள தமிழ் மகள். மயக்கத்திலும் நாணத்தை விட்டாளில்லை. இயற்கை யிலேயே அது இருக்கிறது இவளிடம்" என்று பாராட்டி விட்டு மெதுவாகப் போர்வையைச் சிறிது அகற்றி அதற்குள் கையை விட்டார். எல்லனும் அவர் கையை நாடி தன் கையை நீட்டினான். சுத்ததத்தர் அந்த கையின் நாடியை சோதித்தார் தமது விரல்களால். "தாது பலமாயிருக்கிறது! மயக்கமாயிருப்பவளுக்கு இத்தனை உரமான தாது ஏது?" என்று வினவிக் கொண்டார் சற்று இரைந்து. பிறகு சுடுகையைப் பரிசோதிக்க கன்னமிருந்த இடத்தை நாடி கையை வைத்தார். எல்லன் பெருமீசை கையைத் தடவவே, "கன்னத்தில் என்ன தேங்காய் நாரை வைத்துக் கொண்டிருக் கிறாள்? ஏதாவது பத்து போடும்போது தானே பஞ்சையோ நாரையோ வைப்பது வழக்கம்? இவளுக்கு வேறு யாராவது சிகிச்சை செய்திருக்கிறார்களா" என்று கேட்டார் சற்று பலமாக.

அந்த சமயத்தில் அவர் முற்றும் எதிர்பாராதது நடந்தது. மெல்ல போர்வைக்குள்ளிருந்த கையொன்று அவரை போர்வையோடு இழுத்தது. "சே மருதி! இதென்ன விளையாட்டு? நான் படைத்தலைவனில்லை" என்று வெட்கத்துடன் சொல்லிக்கொண்டு விலக முயன்றார். பிடித்த கை அவரை விடவில்லை. "அடி பைத்தியமே! விடு என்னை, நான் துறவி" என்று தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றார்.

போர்வைக்குள்ளிருந்த ஆண் மருதி விடவில்லை அவரை. நன்றாக இழுத்துப் போர்வை மீது கிடத்திக் கொண்டது. அடுத்த விநாடி இரும்புப் பிடியில் இருந்தார் சுத்ததத்தர். "சரசத்துக்குத் துறவி வாயக்கில்லை. என் துறவறம் என்ன ஆவது?" என்று மனம் வெதும்பிய குருநாதரை போர்வைக்குள்ளிருந்த கைகள் வளைத்தன. இரும்பு வளையத்துக்குள் சிக்கிய சுத்ததத்தர், "காமம் வந்தால் பெண்களுக்குப் பிசாசு பலம் வரும் போலிருக்கிறது" என்று கூறிக்கொண்டு தப்ப முயன்றார். முடியவில்லை. அவரைச் சுற்றியிருந்த கைகள் இறுக்கின அவரை மேலும். சுத்ததத்தருக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. அந்த சமயத்தில் அறைவாசலிலிருந்து உபேந்திரன் குரல் ஒலித்தது. "குருநாதரே இதென்ன?" என்று.

## 25. சுத்ததத்தர் வைத்தியம்

உபேந்திரன் குரலைக் கேட்டதும் கிலியின் விளைவாக சப்தநாடியும் அடங்கிவிட்டதால் பதில் சொல்லும் நிலையில் இல்லை குருநாதர். தன்னைப் பற்றியிருந்த கைகளின் வலுவால் நகரவும் முடியாமலிருந்த குருநாதர் பின்னால் இழுக்கப்பட்டு சாய்ந்தபோது, உள்ளே நுழைந்து கதவை முக்கால்வாசி மட்டுமே மூடிய படைத்தலைவன் கட்டிலை நோக்கி நிதானமாக நடந்து வந்தான். குருநாதருக்கு எதிரில் நின்றுகொண்டு அவரை சினம் கொட்டிய கண்களுடன் நோக்கி, "சுத்ததத்தரே, உம்மை இன்றுவரை அரசியல் அயோக்கியர் என்றுதான் நினைத்தேன். காமப்பித்துப் பிடித்தவரென்று தெரியாது. அதுவும் மயக்க நிலையில் இருக்கும் மருதியிடம் இப்படி நடந்துகொள்வீரென்று நான்



சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை?" என்று சொன்னான் வெறுப்பும் சினமும் கலந்தொலித்த குரலில்.

அந்த நிலையிலும் சுத்ததத்தர் எரிச்சலைக் காட்டினார். "உபேந்திரா, நானிருக்கும் நிலைக்கு நீ வருவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை?" என்று கூறினார்.

"அப்படியானால் எழுந்திருப்பதுதானே? என்னைப் பார்த்ததும் அவள் மீது அதிகமாக ஏன் சாய்ந்துகொண்டீர்?" என வினவினான் உபேந்திரன்.

"சாய்ந்தது நானில்லை" என்றார் குருநாதர் எரிச்சல் அதிகமாகத் தெரிந்த குரலில்.

உபேந்திரன் முகத்தில் கடுமையின் சாயை அதிகமாக விரிந்தது. "அப்புறம் இந்த உடல் உம்முடையதல்லவென்று சொல்வீர்?" என்று கேட்டான், கடுமை பூர்ணமாக தொனித்த குரலில்.

"தவறாக நினைக்கிறாய் உபேந்திரா! சாய்ந்தது நானல்ல; சாய வைக்கப்பட்டேன்" என்று குருநாதர் மன்றாடினார்.

"யாரால்?" உபேந்திரன் கேள்வி உஷ்ணமாகப் பிறந்தது.

"இந்தப் போர்வைக்குள்ளிருப்பவரால்."

"மருதியே உம்மை தன்மீது சாய்த்துக்கொண்டாளா?"

"ஆம் என்று சொன்னால் நீ நம்பமாட்டாய்."

"கண்ணெதிரே பார்ப்பதை எப்படி நம்பாதிருக்க முடியும்? மருதியின் மீது நீர் சாய்ந்திருக்கிறீர். நான் வந்த பின்பும் எழுந்திருக்க மறுக்கிறீர். என்ன துணிவு உமக்கு?"

"துணிவுக்கும் நான் இருக்கும் நிலைக்கும் வெகு தூரம்?"

www.cleanindians.com

உபேந்திரன் தனது இதழ்களில் கொடூரமான புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டான். "சுத்ததத்தரே!" என்று அழைத்தான் படைத்தலைவன் புன்முறுவலின் ஊடே.

"என்ன உபேந்திரா! என்று வினவிய குருநாதரை எல்லன் சற்று அதிகமாக இறுக்கிப் பிடிக்கவே 'ஆ' என்று அலற முற்பட்ட குருநாதர் வாயை சட்டென்று பொத்திய உபேந்திரன், "குருநாதரே! இன்னும் ஒருமுறை கூவி துணைக்கு உங்கள் நாட்டு மாலுமிகளை அழைக்க முற்பட்டீர், உம் கழுத்தை நெரித்து இந்தக் கட்டிலிலேயே போட்டுவிடுவேன்" என்று எச்சரித்தான்.

"அந்தச் சிரமம் உமக்கு வேண்டாம். இன்னும் சற்று நேரம் நீ வெளியிலிருந்தால் அந்தப் பணியை இந்தப் பிசாசே செய்து முடித்துவிடும்" என்று கூறினார் சுத்ததத்தர்.

"சுத்ததத்தரே!" படைத்தலைவன் எச்சரிக்கைக் குரல் மீண்டும் ஒலித்தது.

"உபேந்திரா!" குருநாதர் பரிதாபமாக பதில் சொன்னார்.

"மருதியைப் பிசாசென்று இன்னொரு முறை அழைத்தீர் உம்மைக் கொல்லமாட்டேன்."

"வேறு என்ன செய்வாயோ?"

"முதலில் இந்தக் குறுவாளால் உமது நாவைத் துண்டிப்பேன். அடுத்து உமது கண்களைத் தோண்டி யெடுப்பேன்! அடுத்து..."

"ஏன் இந்த இரண்டே போதாதா?"

"போதாது. பெண்கள் உறங்கும்போது சரசம் செய்ய முயலும் உமது கைகளை முழங்கை வரையில் வெட்டுவேன்.

www.cleanindians.com



இத்தனையும் செய்வேன். ஆனால் உமது உயிரை எடுக்க மாட்டேன்."

"ஏன் உயிரிடம் அத்தனை கருணை உனக்கு?"

"ஆம்! என்ன இருந்தாலும் நீர் எனது குருநாதர்! உம்மைக் கொல்வது பாவம்" என்ற உபேந்திரன் தனது குரலில் சிறிது கருணையைக் காட்டினான்.

குருநாதருக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. "உபேந்திரா! உன் கருணையே கருணை! குருநாதர் நாவை அறுத்து கண்களைத் தோண்டி கைகளை மட்டும் வெட்டுவாய், இந்த மாதிரி சீடன் கிடைப்பதற்கு நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்" என்று சொன்னார் வெறுப்பும் நகைப்பும் இணைந்த குரலில்.

இதற்கு பதில் சொல்லவில்லை படைத்தலைவன். சிறிது சிந்தித்தான். "குருநாதரே! சற்று இப்படி இரும். நான் போய் நாகதேவியை அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

"உபேந்திரா! பொறு. ஒரு பிசாசிடம் நான் அகப்பட்டுத் திண்டாடுவது போதும். அந்தப் பிசாசும் வந்தால் குருநாதன் யமலோகத்துக்கு உடனடியாகப் பயணப்படும்படியாயிருக்கும்" என்று கிலி மிகுந்த குரலில் கூறினார்.

"நாகர்குலத் தலைவியையும் பிசாசு என்கிறீரா?" என்று சற்று இரைந்து கேட்டான் படைத்தலைவன்.

"உபேந்திரா! மெதுவாகப் பேசு. அவள் காதில் எது விழுந்தாலும் அனர்த்தத்தில் முடியும். ஓர் உதவி எனக்குச் செய். நான் உனக்கு ஓர் உதவி செய்கிறேன்" என்று கூறிய தன்றி "மெல்ல என்னை இந்தப் பிசா... இல்லை மருதியிடமிருந்து விடுவித்துவிடு" என்று கெஞ்சினார்.

"என்ன உதவியை நீர் செய்ய முடியும்?" என்று படைத் தலைவன் வினவினான்.

"மருதியின் மயக்கம் தீர அவள் சுயசிந்தனைக்கு வர மாற்று மருந்து இருக்கும் இடம் எனக்குத் தெரியும்" என்று ரகசியமாகச் சொன்னார் சுத்தத்தர்.

"உண்மையாகவா!" உபேந்திரன் கேள்வியில் ஆவல் இருந்தது.

"போதிசத்வர் சாட்சியாக" என்று ஆணையிட்டார் குருநாதர்.

"சரி, சொல்லும் மருந்து இருக்கும் இடத்தை" என்றான் படைத்தலைவன்.

"முதலில் என்னை இந்த உம்... மருதியிடமிருந்து விடுவித்துவிடு" என்று குருநாதர் கெஞ்சினார்.

"முதலில் மருந்து இருக்குமிடத்தைக் காட்டும்" உபேந்திரன் உத்தரவு கண்டிப்பாய் இருந்தது.

குருநாதர் கைகளை எடுக்க முடியாததால் தலை யாலேயே அடையாளம் காட்டி, "அதோ ஒரு பெட்டி யிருக்கிறதல்லவா?" என்று அறை மூலையிலிருந்த பெட்டியைக் காட்டினார்.

"ஆம்" படைத்தலைவன் குரலில் ஆவல் தெரிந்தது.

"அதில் பத்து மணகுப்பிகள் இருக்கின்றன."

"உம்."

"அவற்றில் மூடிக்கு பச்சை சாயம் தடவப்பட்ட மண் குப்பியிருக்கும்."

"உம்."

"அதில்தானிருக்கிறது மாற்று மருந்து."

www.cleanindians.com



இதைக் கேட்டதும் அறை மூலையில் கண்ணைச் செலுத்திய உபேந்திரன், "சரி; அதை எப்படி உபயோ கிப்பது?" என்று வினவினான்.

"இரண்டு துளி நாக்கில் ஒவ்வொரு கண்ணில் ஒவ்வொரு துளி விட்டு சற்று காத்திருந்து பார். தூங்கி விழித்த மாதிரி மருதி கண்ணை விழிப்பாள். இப்பொழு துள்ள இந்தப் பிசாசுத் தன்மையும் போய்விடும்" என்று விளக்கினார்.

அதைக் கேட்டுக்கொண்ட உபேந்திரன் நேராக அந்தப் பெட்டியிடம் சென்று அந்த மண்குப்பியை எடுத்துப் பார்த்தான். "குருநாதரே! நீர் இங்கேயே இரும். நான் போய் மருதியை எடுத்து வருகிறேன்" என்றான்.

சுத்தத்தர் பிரமிப்பின் எல்லையை எய்தினார். உண்மை மெதுவாக அவர் புத்தியிலும் உதயமாகத் துவங்கவே "நீ போய்..." என்று இழுத்தார்.

"மருதியை எடுத்து வருகிறேன். நீரே அவளுக்கு மருந்தைப் புகட்டலாம்" என்ற உபேந்திரன் வெளியே நடக்கத் துவங்கினான்.

தான் மாற்று மருந்தைக் காட்டிக் கொடுத்தது நாக தேவிக்குத் தெரிந்தால் தனது உயிர் அரைக்காசு பெறா தென்பதை உணர்ந்துகொண்டதால் குருநாதர் உடல் நடுக்கம் கண்டது.

ஆனால் அவர் வாய் பலமாகப் பொத்தப்பட்டது. போர்வையை விலக்கிக்கொண்டு எழுந்த எல்லன் குருநாதரை இழுத்துப் படுக்கையில் தள்ளிவிட்டுக் கட்டிலிலிருந்து இறங்கி நின்று தனது ஆடையைச் சரி செய்துகொண்டான். "குருநாதரே! என்னை சரசத்துக்கா இழுத்தீர்?" என்று கறுவினான் அவர் எதிரில் நின்று.

"அடப்பாவி! நான் எங்கே இழுத்தேன்? நீயல்லவா இழுத்தாய் என்னை?" என்று சீற்றத்தைக் காட்டினார் குருநாதர்.

"முதலில் போர்வைக்குள் கைவிட்டது யார்?" எல்லன் கேள்வி கடுமையாயிருந்தது.

"நான்தான்" சுத்ததத்தர் வெறுப்புடன் பதில் சொன்னார்.

"போர்வையை மூடிப் படுத்திருக்கும் பெண்ணைத் தொட முயலலாமா நீர்?" எல்லன் கேள்வி உஷ்ணமாயிருந்தது. பார்வை கொலைப் பார்வையாயிருந்தது.

"தாதுவைப் பார்க்க முயன்றேன்?"

"நீ எதற்காக என் தாதுவைப் பார்க்க வேண்டும்?"

"உன் தாதுவைப் பார்க்கவா வந்தேன்?"

"இல்லை. மருதியின் தாதுவைப் பார்க்கத்தான் வந்தீர். எதற்காக?"

"அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விஷம் கடுமையானது. இன்றிரவுக்குள் மாற்று மருந்து கொடுக்காவிட்டால் இறந்து விடுவாள்."

"அதைப் படைத்தலைவரிடம் சொல்வதுதானே?"

எல்லனின் இந்தச் சொல்லைக் கேட்ட குருநாதர் எரிமலையானார். "எல்லா! நீ சர்வ முட்டாள். இந்த மரக் கலத்தில் நாம் அனைவரும் பலமாகக் கண்காணிக்கப் படுகிறோம். நம்மை சதா பல கண்கள் நாமறியாமலே பார்த்துக்கொண்டிருக்கின்றன. நான் ரகசியத்தை வெளியிடுவது பற்றி நாகதேவிக்கு சந்தேகம் கடுகளவு ஏற்பட்டாலும் நாம் கொல்லப்படுவோம். இப்பொழுது கூட நாம் அவள் கண்காணிப்பில்தான் இருக்கிறோம்" என்று சினத்தின் கடுமையால் உந்தப்பட்டுப் பேசிய சுத்ததத்தருக்கு

www.cleanindians.com



எல்லன் பதில் சொல்லு முன்பு படைத்தலைவன் மருதியைக் கையில் ஏந்திக்கொண்டு உள்ளே நுழைந்தான். நுழைந்ததும் தனது இடது காலால் கதவை மெல்ல உதைத்து சாத்தினான். மிக மெதுவாக நடந்து வந்து கட்டிலில் மருதியைப் படுக்க விட்டான். "சுத்ததத்தரே! போய் மாற்று மருந்தை எடுத்து வாரும்" என்று ஆணையிட்டான் படைத்தலைவன்.

அந்த ஆணைக்குப் பணிந்து அறை மூலைக்குச் சென்று பெட்டியைத் திறந்து மாற்று மருந்தை எடுத்து வந்த குருநாதர், எல்லனையும் படைத்தலைவனையும் நோக்கி, "உபேந்திரா! எல்லா! இருவரும் சற்றுத் தள்ளி இருங்கள். நான் அழைக்கும்போது வாருங்கள்" என்று சொன்னார்.

அவர் உத்தரவுப்படி இருவரும் விலகியதும் மருதியைப் புரட்டி மல்லாந்த நிலையில் படுக்கவிட்ட சுத்ததத்தர் குப்பியைக் கட்டிலின் மீது எச்சரிக்கையுடன் வைத்தார். பிறகு குனிந்து மருதியின் இரப்பைகளைத் திறந்து கண்களைப் பரிசோதிக்க முற்பட்டார்.

அதிக சிரமமெதையும் வைக்கவில்லை. கட்டிலில் கிடந்தவள் இரைப்பையில் அவர் கைவைக்கு முன்பு கண்கள் தாமாகவே திறந்தன. சுத்ததத்தரை நோக்கி நகைக்கவும் செய்தன.

"சுத்ததத்தர் பிரமைபிடித்து நின்றார், ஒரு விநாடி. அடுத்த விநாடி அந்த அறையை விட்டு ஓட முயன்றார்.

## 26. இருவர் கனவு

கட்டிலில் படுத்திருந்த மருதி தமது உதவி இல்லாமலேயே கண்களைத் திறந்ததையும் அந்தக் கண்கள் தம்மைப் பார்த்து நகைத்ததையும் கண்டவுடன், கட்டிலில் கிடந்தது

மருதியல்லவென்பதை உணர்ந்துகொண்டதால் குருநாதர் அந்த அறையை விட்டு ஓட எண்ணினாலும் அவர் முயற்சி பலன் தரவில்லை. அவர் கால்கள் நகரவும் மறுத்தன. எந்த நிலையிலும் தன்னைச் சமாளித்துக் கொள்ளும் திறன் வாய்ந்த சுத்ததத்தர் சட்டென்று மருந்துக் குப்பியைக் கையில் எடுத்துக்கொண்டு போலி மருதியை நோக்கிக் குனிந்து அதிலிருந்த மருந்துத் துளிகளில் சிலவற்றைப் படுத்திருந்தவள் கன்னங்களில் கொட்டிவிட்டார். நான்கைந்து துளிகளை பஞ்சணை விரிப்பிலும் விழும்படி செய்தார். பிறகு மருந்து குப்பியுடன் எழுந்து நின்று, "உபேந்திரா! நீ மட்டும் இப்படி வா" என்று அழைத்தார்.

ஆவலுடன் கட்டிலை அணுகிய உபேந்திரனை நோக்கி, "இன்னும் சில விநாடிகளில் மருதி கண்விழிப்பாள். அவள் விழித்ததும் அதிர்ச்சியாக ஏதாவது பேசிவிடாதே. அவளுக்குச் சுரணை பூர்த்தியாக வர அவகாசம் கொடு" என்றார். புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் உபேந்திரன்.

"நான் மருந்தை உட்புகட்டும் போது சில துளிகள் இவள் கன்னத்திலும் படுக்கை விரிப்பிலும் பட்டுவிட்டன! அவற்றைத் துடைத்துவிடு" என்றும் சொல்லிவிட்டுக் குப்பியைப் பழையபடி பெட்டியில் வைத்துவிட்டு அந்த அறையை விட்டு நகர முற்பட்டார்.

"எல்லா! குருநாதருடன் நீயும் போ. அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்" என்று எல்லனையும் குருநாதருடன் அனுப்பிவிட்ட உபேந்திரன் அவர்கள் சென்றதும் அறைக்கதவை தாளிட்டுத் திரும்பினான் கட்டிலுக்கு. போலி மருதியைத் தன்னை நோக்கிப் புரட்டி அவள் அழகிய உடலைத் தன் மார்பு மீது சாத்திக்கொண்டு

www.cleanindians.com



மருந்துத் துளிகள் பட்டிருந்த பஞ்சணை விரிப்பை எடுத்து கட்டிலின் ஒரு மூலைக்குத் தள்ளினான். மீண்டும் கட்டிலில் உட்கார்ந்து போலி மருதியின் முகத்தை நீண்ட நேரம் உற்று நோக்கினான். வறண்ட ஒரு புன்முறுவலைத் தனது இதழ்களில் படரவிட்டுக் கொண்டு அவள் அழகிய கன்னத்தில் வழிந்திருந்த மருந்துத் துளிகளை அவள் சேலை முந்தானையால் துடைத்தான். மறுபடியும் அவளைப் பஞ்சணையில் கிடத்தி தானும் பக்கத்தில் உட்கார்ந்து அவள் முகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். மெல்ல மெல்ல அவள் தனது விழிகளை அகலத் திறந்தாள். "உம்..." என்ற ஆயாச ஒலி எழுப்பிப் பெருமூச்சும் விட்டாள்.

"அசைய வேண்டாம். அப்படியே படுத்திரு" என்று கூறி அவளுடைய கைகளிலொன்றை எடுத்துத் தனது கையில் வைத்துக்கொண்டு இன்னொரு கையை அவள் அழகிய மார்புமீது போட்டான். அவள் மெல்ல நெகிழ்ந்தாள் பஞ்சணையில். பிறகு அவனை நோக்கித் திரும்பி தனது கையால் அவன் இடுப்பை வளைத்தாள். அப்படி அவள் திரும்பியதன் விளைவாக அவள் மார்பு மீதிருந்த கை அவன் உடலுக்கும் அவள் உடலுக்கும் இடையே அகப்பட்டுக் கொண்டதால் மார்மீது கை சற்று அதிகமாகவே அழுந்தத் தொடங்கியது.

இந்த நிலையில் அவன் இருந்தது சாதாரண சமயமாயிருந்தால் உபேந்திரன் உணர்ச்சிகளுக்குப் பெரிதும் இடம் கொடுத்திருப்பான். கையில் அழுந்திய கடினமான இளம் மார்பு ஒன்றே அவனை நிலைகுலையச் செய்திருக்கும். ஆனால் அன்று உபேந்திரன் உணர்ச்சிகளை இழந்த வெறும் கட்டையாக இருந்தான். மீண்டும் அவள் உணர்ச்சிப் பெருமூச்சு விட்டாள். "நான் எங்கிருக்கிறேன்?" என்றும் கேட்டாள் சொப்பனத்தில் பேசுபவள்போல்.

"கவலைப்படாதே. இருக்க வேண்டிய இடத்தில்தான் இருக்கிறாய். அதிகமாக அலட்டிக்கொள்ளாதே. இன்னும் பூர்ண தெம்பு வரவில்லை உனக்கு" என்று எச்சரித்த உபேந்திரன் அவள் உடலைப் புரட்டி பஞ்சணையில் சரியாகப் படுக்க வைத்தான்.

அவள் மலர்க்கண்கள் மலர்ந்து கிடந்தன. இதழ்களில் புன்முறுவலொன்று அரும்பிக் கிடந்தது. கண்களை நாற் புறமும் சுழலவிட்டாள் ஒரு விநாடி. பிறகு சொன்னாள், "அன்பரே! நான் இத்தனை நேரம் ஏதோ சொப்பன உலகத்தில் இருந்தேன்" என்றாள்.

"நானும் அப்படித்தான் இருந்தேன்" என்றான் படைத் தலைவனும்.

"நீங்களா!" என்று கேட்டாள் அவள் வியப்புடன்.

"ஆம்."

"உங்களுக்கென்ன சொப்பனம்?"

"உன் சொப்பனத்தை முதலில் சொல். பிறகு என் சொப்பனத்தைச் சொல்கிறேன்."

அவள் துவங்கினாள் "நான்... நான்" என்று.

"தைரியமாகச் சொல்" அவன் ஊக்கினான்.

"நான் படுத்திருந்தபோது அந்த மாயக்காரி இருக் கிறாளே அவள் என் கட்டிலுக்கு அருகில் வந்தாள்..."

"உம்."

"என் வாயில் ஏதோ சில துளிகளைப் புகட்டினாள்."

"உம்."

"பிறகு நான் வேறு உலகத்தில் இருந்தேன்."

"அந்த உலகம் எப்படி இருந்தது?"

www.cleanindians.com



"எங்கும் ஒரே பரதவர். பெரிய வரவேற்பு ஏற்பாடு செய்திருந்தார்கள் நாகதேவிக்கு. விருந்து நடந்தது நாள் முழுதும். இரவில் அந்தப் பழைய பரதவர் நடனம். அவளும் அதில் சேர்ந்து ஆடினாள். எத்தனை அழகாக ஆடினாள் தெரியுமா?" இங்கு சிறிது நிறுத்தினாள் அவள்.

"மேலே சொல்" என்றான் அவன்.

"அதற்குப்பின் அவள் களைத்து சாய்ந்தாள். அவளுடன் நீங்களும் ஆடிக்கொண்டிருந்தீர்கள்..." என்று தொடர்ந்தாள் அவள்.

"நானா?"

"ஆம் நீங்களேதான். பெரும் மயக்கத்திலிருந்தீர்கள் அவளிடம். களைத்துச் சாய்ந்த அவளை நீங்கள் தாங்கிப் பிடித்தீர்கள்..."

"சொப்பனம் நன்றாயிருக்கிறது."

"ஆம் தாங்கிப் பிடித்தீர்கள். பிறகு அவளைத் தூக்கிக்கொண்டு அந்தக் கூட்டத்திலிருந்து அகன்றீர்கள்... அங்கிருந்த கடல்நீர் தரையில் மோதிய இடத்துக்கு வந்து அலை நீரை எடுத்து அவள் முகத்தில் அடித்தீர்கள், அவளைக் கைகளில் தாங்கியபடி." இந்த இடத்தில் அவள் சிறிது நிதானித்தாள்.

"சொல் மேலே" அவன் குரல் கடுமையாக ஒலித்தது.

"அவள் கண்விழித்தாள். அவளை வெறியுடன் நோக்கினீர்கள். அவள் இதழ்களுடன் உங்கள் இதழ்களை இழைத்தீர்கள். பிறகு அவள் மார்புச் சேலையை நீக்கி..." இதற்கு மேல் பேசவில்லை அவள்.

உபேந்திரன் பேச முற்பட்டு, "இதற்கு மேல் நீ சொல்ல வேண்டியது ஏதுமில்லை. பேச வேண்டியது

நான். இங்குதான் என் சொப்பனம் தொடர்கிறது" என்றான்.

"உங்கள் சொப்பனமா?"

"ஆம். அதையும் கேள்."

"சொல்லுங்கள்." ஆவல் இருந்தது அவள் குரலில்.

"முகத்தில் நீரடித்து மார்பில் கையை வைத்தேன். நீ நினைக்கிறபடி சரசத்துக்காக அல்ல. இதயத்துடிப்பைப் பார்ப்பதற்காக" என்று அவன் புன்முறுவல் செய்தான்.

"புரிகிறது" என்றாள் அவள். புன்முறுவலும் செய்தாள்.

"உண்மையாக இதயத்துடிப்பைப் பார்க்கத்தான் கையை வைத்தேன். அவள் மயக்கமாய் சாய்ந்து விட்டாளல்லவா? இருதயம் பழைய பலத்தை அடைந்து விட்டதா என்பதைப் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டான் படைத் தலைவன்.

"ஆம் ஆம். பார்க்க வேண்டும். மறந்துவிட்டேன் அந்த நிலையை."

"மறதி சகஜம்தான் மயக்க நிலையில்" என்ற உபேந்திரன் மேலும் சொல்லத் தொடங்கி, "மார்பைப் பார்த்தேனா?" என்று கேள்வியைத் தொடுத்தான்.

இதைக் கேட்ட அவள் நகைத்தாள். "எனக்கெப்படித் தெரியும்!" என்றும் குழைந்தாள்.

"பச்சைக் குழந்தை உனக்கெப்படித் தெரியும்?" என்று நகைத்தான் அவன். மேலும் சொன்னான், "இதயத் துடிப்பைப் பார்த்தேன். அதில் சிறிது படபடப்பு இருக்கத்தான் செய்தது. மெல்ல வருடினேன் அவள் மார்பை" என்று.

www.cleanindians.com



படுக்கையிலிருந்தவள் இதைக் கேட்டதும் சற்று புரண்டாள். அவள் மார்பு படபடத்தது. "சரி; சொல்லுங்கள்" என்றாள் படபடப்புடன்.

"அவளைச் சொற்களால் ஆசுவாசப்படுத்தினேன். முதலில் அவள் கேட்கவில்லை. பிறகு அவள் அழகிய தொடையில் கையை வைத்தேன்."

"என்ன!"

"தொடையில் கையை வைத்தேன்."

"எதற்கு?"

"கால்களை வருடிக் கொடுக்க."

"ஓகோ!"

"வேறு எதற்கென்று நினைத்தாய்?"

"ஒன்றுமில்லை, சொல்லுங்கள்."

"கால்களை வருடிக் கொடுத்தேன்..."

"உம். அதைத்தான் சொல்லிவிட்டீர்களே!"

"பிறகு முதுகை வருடினேன்."

"அவள் சுயநிலைக்கு வந்துவிட்டாள் அவ்வளவு தானே?"

"இன்னும் முடியவில்லை" என்றான் அவன்.

"கதையா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"என் சொப்பனத்தைத்தானே சொல்கிறேன். அது கதையில்லாமல் வேறு எப்படியிருக்க முடியும்?"

"வேறு எப்படியும் இருக்க முடியாது."

"முதுகைத் தடவிக் கொடுத்தேன். பிறகு அவள் உதடுகளில் இப்படிக் கையை வைத்தேன்" என்று கூறிய

உபேந்திரன் அவள் உதடுகள் இரண்டையும் இறுக்கிப் பிடித்தான்.

"வலிக்கிறது விடுங்கள்" என்றாள் படுக்கையில் கிடந்த பைங்கிளி.

உபேந்திரன் நகைத்தான். "ஏன் நகைக்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

உபேந்திரன் புன்முறுவல் கொண்டான். "அவளும் இப்படித்தான் சொன்னாள். ஆனால் நான் விடவில்லை. அந்த உதடுகளை உற்று நோக்கினேன். உன்மத்தம் தரும் உதடுகள் இப்படி நோக்கினேன்" என்று உதடுகளை ஊன்றிப் பார்த்தான்.

அவள் கண்களில் காமவெறி மண்டியது. அவன் கையில் இறுக்கிப் பிடித்திருந்த உதடுகள் அசைய முயன்றன. மெதுவாக அவற்றுக்கு விடுதலை அளித்த உபேந்திரன் மேலும் சொன்னான். "வலிக்கிறது விடுங்கள் என்று சொன்னாளே தவிர நான் விடுவதில் அவளுக்கு இஷ்டமில்லை. வலியும் அவளுக்கு வேண்டித்தானிருந்தது" என்று.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது அது?" என்று வினவினாள் கட்டிலில் கிடந்தவள்.

"அவள் நெளிந்தாள் என்மீது. பிறகு..."

"பிறகு!"

"நெகிழ்ந்தாள்." உணர்ச்சியை அதிகமாகக் காட்டினான் உபேந்திரன்.

"இப்படியா படைத்தலைவரே?" என்று கேட்டு கட்டிலில் படுத்திருந்தவளும் நெளிந்தாள். அவனை நோக்கி எழுந்தாள். அவன் மார்பில் இழைந்தாள். நெகிழ்ந்தாள்.

www.cleanindians.com



"இப்படியேதான்" என்ற படைத்தலைவன் உணர்ச்சியை அதிகமாகக் காட்டினான்.

போலி மருதி நகைத்தாள். "படைத்தலைவரே! உம்மை உறுதி உள்ளவர் என்று நினைத்திருந்தேன்..." என்றும் சொன்னாள்.

"இப்பொழுது?"

"நீர் ஒரு கோழை."

"அப்படியா?"

"இல்லாவிட்டால் ஒரு பெண் இத்தனை தூரம் வலிய வந்த பிறகு அவளைச் சும்மா விடலாமா?"

"எதுவும் பெண்ணைப் பொறுத்தது."

"ஏன் நாகதேவி அழகில்லையா?"

"அவளுக்கு இணையான அழகிகள் உலகத்தில் கிடையாது."

"பின் ஏன்?"

"சமயம் வரவில்லை. எதற்கும் மனம் இடந்தர வேண்டும்" என்று உபேந்திரன் கட்டிலிலிருந்து எழுந்து அறைக் கோடிக்குச் சென்று மருந்துப் பெட்டியைத் திறந்து அதில் சுத்தத்தர் வைத்துப் போன மருந்துக் குப்பியைக் கையில் எடுத்துக்கொண்டான்.

"அது எதற்கு!" என்று கேட்டாள் கட்டிலில் கிடந்தவள்.

கையில் குப்பியை பிடித்தவண்ணம் கதவுக்கருகிலிருந்து திரும்பிக் கட்டிலை நோக்கினான் உபேந்திரன். "மருதியை எழுப்ப" என்றும் கூறினான்.

"என்ன?" அதிர்ச்சியுடன் கேட்டாள் அவள்.

"ஆம் நாகதேவி. மருதியை எழுப்பத்தான். காலையில் நம்முடன் அவளும் வருவாள் புகாருக்கு" என்று சொல்லி விட்டு வெளியே நடந்தான் உபேந்திரன்.

கட்டிலில் சரேலென உட்கார்ந்த நாகதேவி அதிர்ச்சியால் சிலையானாள்.

## 27. அதிர்ச்சியின் அசைவுகள்

உபேந்திரன் தன்னை மருதி என்றே நம்பிவிட்டான் என்ற மதப்பினாலும் மஞ்சத்தில் கொஞ்ச நேரம் கிடைத்த அவனுடைய நெருக்கத்தினாலும் இன்பக் கிளுகிளுப்பில் கிறங்கிப் போயிருந்த நாகர் தலைவி, அடுத்த கணம் உபேந்திரனின் செய்கையால் குழப்பத்திற்குள்ளானாள்.

சரேலென உபேந்திரன் மஞ்சத்தைவிட்டு எழுந்ததையும், அங்கே ஒரு மூலையில் சுத்ததத்தர் வைத்துச் சென்ற மருந்துக் குப்பியைக் கையிலெடுத்ததையும் கவனித்த நாகதேவி அடுத்து படைத்தலைவன் சொன்ன வார்த்தையால் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டாள்.

"நான் போய் மருதியைப் பார்த்து வருகிறேன்" என்றல்லவா உபேந்திரன் சொன்னான். அப்படியென்றால்— இதுவரை தன்னை மருதியாகப் பாவித்துத் தன்னுடைய மென்மை கொஞ்சும் பெண்மைத் திரட்சியில் அந்த வலுவான கரங்கள் அடிக்கடி உரச அரவணைத்ததெல்லாம் பாசாங்குதானா? புகார்க்கரையில் நாகதேவியின் பூந் தொடையை தன்னுடைய கையால் மயிர்க்கூச்செரிய வருடிக் காட்டியதும் நடிப்புத்தானா?



சுத்ததத்தர் தன்னை இன்னார் என்று தெரிந்து கொண்டதும், அதை வெளிகாட்டிக் கொள்ளாமல் கையில் வைத்திருந்த மருந்துக் குப்பியிலிருந்து சில சொட்டுகளைத் தன் கன்னங்களிலும் பஞ்சணை விரிப்பு மீதும் தெளித்து உபேந்திரனை நம்பும்படியாகச் செய்துவிட்டு, "உபேந்திரா! இன்னும் சற்று நேரத்தில் மருதி கண்விழிப்பாள். மயக்கம் தெளியும் வரை காத்திரு" என்று கூறிச் சென்ற பிறகு ஆர்வம் பொங்க ஓடிவந்த உபேந்திரன், தன் தலையை ஆதூரத்துடன் அள்ளிக் கொண்டதோடு, தன் கன்னங்களில் சிந்தியிருந்த மருந்துத் துளிகளைத் துடைத்துவிட்டது மட்டுமல்லாமல் பஞ்சணை விரிப்பின் மீது சிந்திய சொட்டு களைத் துடைப்பதற்காகத் தன் முகத்தை— இன்னும் சொல்லப் போனால் இடுப்புக்கு மேலுள்ள உடலின் பாதிப் பகுதியையும் ஒருவகையான இன்ப அழுத்தத்தோடு அணைத்துக்கொண்டானே அதுவும்கூடப் போலி வேஷம் தானோ?

இவ்வாறு ஒவ்வொன்றாக நினைத்து அதிர்ச்சிக் கடலில் இருந்து தன்னை மீட்டுக்கொள்ளும் பெரு முயற்சியில் நாகதேவி ஈடுபட்டிருந்தாலும் உபேந்திரனிட மிருந்து அவ்வப்போது தனக்குக் கிடைக்கும் கணநேர சுகானுபவங்களையும் கூடவே சேர்த்து நினைத்ததால் அவள் விழிகளில் ஒருவகையான மயக்கம் கரைகட்டி நின்றது.

ஏமாற்றத்தால் உண்டான கோபமும் ஏக்கத்தால் உண்டான போதையும் மாறிமாறி நாகதேவியின் முகத்தைச் சிவக்கச் செய்துகொண்டிருந்த அந்த நேரத்தில் அந்த அறையின் மூலையில் பஞ்சணையின் இடது பக்கப் பலகைச் சுவரில் பொருத்தப்பட்டிருந்த சிறு விளக்கின் சுடர் காற்றில்

www.cleanindians.com

குதித்தும் இப்படியும் அப்படியும் ஆடியும் நாகதேவியின் முகச்சிவப்பை மேலும் சிவப்பாக்க முயன்று கொண் டிருந்தது.

வலது கையைப் பஞ்சணையில் ஊன்றியபடி சற்றே ஒருக்களித்த நிலையில் உட்கார்ந்திருந்த நாகதேவியின் தோற்றம் பெருங்கடலில் வாழும் மீன் கன்னி ஒருத்தி பாறையில் அமர்ந்திருப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது.

உபேந்திரன் மார்போடு இறுக்கமாக அணைத்ததால் அவளுடைய அளகபாரம் சற்றே இடப்புறம் நோக்கிச் சரிந்திருந்தது. முன் கதையைக் கூறுவது போல் உபேந்திரன் அவளுடைய பூந்தொடையை வருடியபோது விலகிய ஆடை இன்னும் விலகியே இருந்தது. இவள் முகத்திலே மாறிமாறித் தெரிந்த செம்மை, ஒரு திரவப் பொருளைப் போலக் கசிந்து, ஆடைக்குள் அடைபட்டுக் கிடக்கும் அவள் பொன்னிற அங்கமெல்லாம் பரவி, அந்தத் தொடை வழியே இறங்கிக் கொண்டிருக்கிறதோ என வியக்கும் வண்ணம் அந்தப் பூந்தொடையிலும் விளக்கின் சுடர் மோக வெறியுடன் பாய்ந்து மாயாஜாலம் புரிந்துகொண் டிருந்தது.

வலது கையைப் பஞ்சணையில் ஊன்றியவாறு நிமிர்ந்தே உட்கார்ந்ததாலும், உள் வாங்கும் மூச்சை அதிக நேரம் உள்ளே வைத்திருந்து மெதுமெதுவாக வெளி யேற்றியதாலும், விம்மிப் புடைத்த இளமை இரண்டும், போர்க்களம் நோக்கி முன்னேறும் வீரர்களின் கைவேல் போன்று அடிக்கடி மேல்நோக்கி எகிறிக்கொண் டிருந்தன.

அந்த நிலையில், அந்தக் கோலத்தில் அவளைப் பார்க்க நேரும் எந்த மனிதனும், அவன் ஒரு மாமுனியாக

www.chennaiindians.com



இருந்தால்கூட, ஒருகணம் நிலை தடுமாறிப் போவான் என்பது மட்டுமல்ல, அந்தக் கணத்தில் நாகதேவிக்காக எதையும் செய்துவிடச் சித்தமாய்விடுவான். இந்த உலகத்தையே தன் காலடியில் வைக்க வேண்டும் என்று நாகதேவி விரும்பினால் அதைக்கூடச் செய்து பார்த்து விடப் போட்டி போடுவான்.

அது நாகதேவிக்கும் தெரியும்! தன்னுடைய இந்த இளமை எழிலுக்கும் அரசியலில் தனக்கிருக்கும் மதிநுட்பத் திற்கும் ஆயிரமாயிரம் படைத்தலைவர்களும் ஏன் பாராளும் மன்னர்களும்கூடத் தனக்கு மண்டியிடக் காத்திருக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

ஆனால், இந்த உபேந்திரன் மட்டும் ஏன் தன்னை வெறுத்து ஒதுக்க வேண்டும்? இந்தக் கேள்வியை அவள் தனக்குத்தானே கேட்டுக் கொண்டபோது அதற்கு உடனடி யாக விடை அவளுக்குக் கிடைக்கவில்லை. உடனடியாக ஒரு விடையைச் சொல்லி, அந்தப் பிரச்சினையை அவ்வளவு விரைவாக முடித்துக்கொள்ள அவள் மனமும் இடந்தரவில்லை.

விரும்பி, நெருங்கி வருபவனைக் கண்டால் விரட்டு வதும், விருப்பம் இன்றி ஒதுங்கி ஒதுங்கிச் செல்பவனைக் கண்டால் அவனிடம் ஒட்டிக்கொள்ளத் தவிப்பதும்தான் பெண்மையின் குணங்களாக இருக்குமோ என்றுகூட அவள் சில வேளைகளில் யோசனை பண்ணியதுண்டு.

தன்னைப்போல் தோற்றத்தில் உருவ ஒற்றுமையோடு இருக்கும் மருதிதான் இதற்குக் காரணமாக இருக்கலாமோ? மருதியின்பால் உபேந்திரன் அழுத்தமான காதல் கொண் டிருக்கிறான் என்பதும் அந்தக் காதலை உறுதியாக்கிக் கொள்வதற்காகவே தன்னை அவன் ஒதுக்கித் தள்ள

முயல்கிறான் என்பதும் அவளுக்குத் தெரியும் என்றாலும் அதையே ஒரு காரணமாக ஏற்றுக்கொள்ளவும் நாகதேவி தயாராக இல்லை.

முதன் முதலாக நாகைத் துறைமுகத்துக்கு அப்பால் நின்றிருந்த தன்னுடைய கலத்திற்கு உபேந்திரனை வரவழைத்து அவனோடு உரையாடிய அந்தச் சில நாழிகை களை நாகதேவி மீண்டும் நினைவுத் திரையில் அசைய விட்டுப் பார்த்தாள்.

எத்தகைய பெருங்கடமைக்காகத் தான் அனுப்பி வைக்கப்பட்டோம் என்பதையும், இன்று எந்த ஒரு காரியத் துக்காகத் தன் மனம் அலைபாய்ந்துகொண்டிருக்கிறது என்பதையும் அந்தச் சமயத்திலும் அவள் நினைக்கத் தவறவில்லை. ஆனால் தன்னுடைய அன்பையும் காதலையும் ஏற்றுக்கொள்ள ஓர் ஆண் மகன் மறுக்கிறான் என்று தெரிந்தால் எந்தப் பெண்தான் அதைத் தாங்கிக் கொள்ள முடியும்? அழகும் இளமையும் சாதுர்யமும் ஒருங்கே அமைந்த நாகதேவி தான் மட்டும் விதிவிலக்காக அமைய எப்படி ஒப்புக்கொள்வாள்?

ஆள், அம்பு, அணிமணி சேனை தானை எல்லாம் அமைந்த நாகர்குலத் தலைவிக்கு இது சவாலாகவே ஆகிவிட்டது.

படை நடத்தும் திறமையும், பார்த்தோர் மயங்கும் பராக்கிரமமும், எத்தகைய நிலையிலும் தன் நிதானத்தை இழந்துவிடாத சாதுர்ய சிந்தனையும் ஒருங்கே அமைந்த உபேந்திரனைத் தான் அடைந்துவிடுவதன் மூலம், நாடி வந்த காரியமும் நாகர்களின் லட்சியமும் நூற்றுக்கு நூறு சாத்தியமாகிவிடும் என்று நாகதேவி முழுமையாக நம்பி விட்டாள்.



அந்த நம்பிக்கையின் பின்னணியில், அது நிறை வேறாமல் தடுப்பதற்கு யார் யாரெல்லாம் காரணமாக இருப்பார்கள் என்பதை அறிவதில் நாகதேவியின் வேல் விழிகள் சற்றே மேல்நோக்கிக் குத்திட்டன.

புத்த பிட்சுவான சுத்தத்தரும் மருதியும் எல்லனும் மாறிமாறி அவள் சிந்தனையில் மின்னல் வெட்டுக்களாகத் தோன்றித் தோன்றி மறைந்தனர்.

மருதிபோலத் தான் நடித்து ஆடிய நாடகத்தில் உபேந்திரன் ஏமாந்துவிடவில்லை என்பதையும், உண்மை யில் தான் யார் என்று தெரிந்துகொண்டே அவன் ஆடிய நாடகத்தில் தான் ஏமாந்துவிட்டதையும் உணர்ந்த நாகதேவி அதிர்ச்சி நிலையிலிருந்து இன்னும் விடுபடாமல் அரை மயக்க நிலையில் இருந்தாள்.

## 28. புகார்க் கரையில் புதியவன்

நாகையின் நாகர் தலைவனான உபேந்திரன் ஆடிய தெல்லாம் வெறும் நாடகமென்பதையும், அவன் சொப்பனப் பேச்செல்லாம் வெறும் கட்டுக்கதையென்பதையும், தான் யார் என்பதை அவன் முன்னமே ஊகித்து விட்டா னென்பதையும் புரிந்துகொண்டதால் சிலையென பல விநாடிகள் கட்டிலில் உட்கார்ந்து விட்ட நாகதேவி திடீரென கோபத்தின் வசப்பட்டாள். ஆகையால் கட்டிலிலிருந்து இறங்கி மரப்பெட்டியிடம் வந்து அதிலிருந்த குப்பிகளை வாரி இறைத்தாள் அறை முழுவதும். அந்த சந்தர்ப்பத்தில் அந்த அறைக்கதவு வெளியில் பூட்டப்பட்டதால் அவள் வெறி உச்சஸ்தாயியை அடைந்தது. கதவைத் தடதடவென்று

www.chennaiindians.com

தட்டினாள். வெளியே காவல் புரிந்துகொண்டிருந்த இரு காவலர் "படைத்தலைவர் சொன்னது சரியாகப் போய் விட்டது. இந்த நாகப்பட்டினத்துப் பெண்ணுக்கு வெறி தலைக்கு ஏறிவிட்டது" என்று சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக்கொண்டார் களே தவிர கதவைத் திறக்க எந்தவித முயற்சியையும் செய்ய வில்லை.

அறையை விட்டு வெளிப்போந்த படைத்தலைவன் மருதிக்கு வெறிபிடித்துவிட்டதாக சாவகக் காவலரிடம் சொல்லிவிட்டு மருந்து குப்பியுடன் நாகதேவியின் அறையை நோக்கி நடந்தான். அங்கு கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த உண்மை மருதியைப் பல விநாடிகள் நோக்கிக் கொண்டு நின்றான்.

"நாகதேவியின் கிரீடமும் இவளுக்கு மிக நன்றாக அமைந்திருக்கிறது" என்று சிலாகித்துவிட்டு அவள் அருகில் அமர்ந்தான். பிறகு அவள் அழகிய உதடுகளை நீக்கி, கிட்டி இருந்த பற்களையும் அகற்றி கையிலிருந்த மருந்து குப்பியிலிருந்து மூன்று துளிகளை உள்ளே புகட்டினான்.

சில விநாடிகள் சென்றதும் அவள் முகம் லேசாக வியர்த்தது. கண்கள் மெள்ளத் திறந்தன. அவள் ஏதோ பேச முயன்றும் முடியவில்லை. உதடுகள் அசைந்தனவேயொழிய சொற்கள் வெளியே வரவில்லை. அவளைப் பேச வேண்டா மென்று சைகை செய்த உபேந்திரன் இன்னும் இரு சொட்டு களைக் குப்பியிலிருந்து அவள் வாய்க்குள் சொட்டவிட்டான். அதை அருந்திய சில விநாடிகளில் பலம் உடலில் ஊறி முழு சுரணையும் வந்ததால் கண்களை அகலமாக விரித்தாள் மருதி.



"நான் ஏன் இந்த முத்தலை ஆபரணத்தை அணிந் திருக்கிறேன்? இங்கு ஏன் இருக்கிறேன்?" என்று மெதுவாகக் கேள்விகளைத் தொடுத்தாள்.

படைத்தலைவன் அவளை நோக்கிக் குனிந்து, "நீ இன்னும் ஒரு நாளைக்கு நாகதேவியாக நடிக்க வேண்டும். சிறிது தப்பினாலும் நாம் இந்த மரக்கலத்தை விட்டு நகர முடியாது" என்று ரகசியமாக அவள் காதில் ஓதிவிட்டு "எல்லா!" என்று குரல் கொடுக்க எல்லன் அறைக்குள் நுழைந்தான். "நாகதேவியை எச்சரிக்கையுடன் பாதுகாத்திரு. பொழுது விடிந்த சில நாழிகைகளில் நாம் புகார் போகப் போகிறோம்" என்று கூறிவிட்டு வெளியேறினான்.

www.cleanindians.com

அங்கிருந்து சுத்ததத்தர் இருந்த அறைக்கு வந்து அங்குள்ள சிறு கட்டிலில் கிடந்த குருநாதரை நோக்கிப் புன்முறுவல் செய்தான். குருநாதர் எரிச்சல் தாங்க முடியாமல் "ஏன் இளிக்கிறாய்?" என்று சீறினார்.

"தங்கள் நிலையை நினைத்தால் பரிதாபமாய் இருக்கிறது" என்றான் படைத்தலைவன் போலி துன்பத்துடன்.

"பரிதாபமாயிருந்தால் சிரிப்பார்களா?" என்று கேட்டார் சுத்ததத்தர்.

"சில சமயங்களில் அப்படியும் நேரிடுவது உண்டு" என்ற படைத்தலைவன், "குருநாதரே! உமக்கு சரியாக மருந்து புகட்டத் தெரியவில்லை" என்றும் சொல்லிப் புன்முறுவல் செய்தான்.

அவன் சொன்னதை நன்றாகவே புரிந்துகொண்ட குருநாதர், "தெரியவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினார்.

மெல்ல நகைத்தான் உபேந்திரன். "குருநாதரே! மருந்து புகட்டினாலும், புகட்டுவதுபோல் நடித்தாலும் அதை சரியாகச் செய்ய வேண்டும்" என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

"சரியாகப் புகட்டவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று எரிந்து விழுந்தார் குருநாதர்.

"நாகதேவியின் கன்னங்களில் நீர் மருந்தைச் சொட்ட விட்டபோது உமது விரலால் சிறிது எடுத்து உதடுகள் மேலும் தடவியிருக்க வேண்டும். அப்பொழுது நான் ஏமாந்திருப்பேன். நான் அவளருகில் இல்லை. நன்றாக உலர்ந்து கிடந்தன உதடுகள். நீர் சொட்டிய மருந்துத் துளிகள் கன்னங்களில் மாத்திரம் உருண்டு கிடந்தன. ஆகவே அவற்றைத் துடைத்தேன். மருதியென்று நினைத்தது போலவே அவளுடன் பேசினேன். அவளும் மருதியாக நடித்தாள். நானும் நடித்தேன். ஆனால் இம்முறை ஏமாந்தது நாகதேவி. அவள் அறையைப் பூட்டிவிட்டேன். மருதிக்கு வெறி பிடித்துவிட்டதாக அந்த அறையைக் காவல் செய்யும் சாவக மாலுமிகள் நினைக்கிறார்கள். நீங்களும் அப்படி நினைப்பது நல்லது" என்று உபதேசம் செய்தான் உபேந்திரன்.

பிரமை தட்டிய முகத்துடன் உட்கார்ந்திருந்தார் சுத்ததத்தர். பிறகு மெதுவாகச் சொன்னார்: "உபேந்திரா! நாகதேவியுடன் விளையாடுவது நெருப்புடன் விளையாடுவதற்குச் சமானம். வீணாக அவளை எதிர்க்காதே! மருதியும் நாகதேவியும் ஒரே மாதிரி இருந்தாலும், அந்த உருவ ஒற்றுமையை நீ உபயோகப்படுத்திக்கொண்டாலும் உண்மை மறையாது; தான் யார் என்பதை நாகதேவி எப்படியும் விளக்கிவிடுவாள். அப்பொழுது பெருத்த விபரீதம் ஏற்படும்" என்று.



உபேந்திரன் அவர் சொல்வதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். "உண்மைதான் குருநாதரே! நாகதேவி சாவக மன்னன் சார்பாக வந்திருக்கிறாள். தூது ஓலை அவளிடமிருக்கிறது. அது மட்டுமல்ல. நீரும் சோழர்களுக்குத் துரோகியாகி அவளுடன் சேர்ந்து சூடாமணி விஹாரத்தை சதிக் கூடமாக அமைக்கப் பார்க்கிறீர். இது இராஜேந்திர சோழ தேவருக்குத் தெரிந்தால் என்ன விளைவு ஏற்படும் தெரியுமா?" என்று கேட்டு சிறிது நிறுத்தினான் பேச்சை. மேலும் அவனே தொடர்ந்தான். "நாகதேவி மன்னிக்கப்படுவாள் பெண் என்ற காரணத்தால். ஆனால் நீர் தூக்கில் தொங்கலாடுவது நிச்சயம். உமது பருத்த உடலைத் தூக்கிலிட நல்ல கெட்டியான மணிக்கயிறு தேவைப்படும். அதைத் திரிப்பது நாகை நார்த்தொழிலாளர்க்கு ஒரு பிரமாதமில்லை" என்று சொல்லி குருநாதரின் கழுத்தை நோக்கினான். "நல்ல தடித்த கழுத்து. சந்நியாசிகள் கழுத்து எப்படித்தான் இத்தனை புஷ்டியாகிறதோ?" என்றும் இரைந்து சொன்னான்.

குருநாதர் கண்முன்பு நாகையின் தூக்குமேடை தெரிந்தது. அதில் குற்றவாளிகளைத் தூக்கில் போடும் வல்லாளனின் கல்முகமும் அவர் கண்முன்பு காட்சியளித்தது. தமது கழுத்தை ஒருமுறை தடவிப் பார்த்துக்கொண்டார் சுத்ததத்தர். அதில் கயிறு சுருங்கினால் மூச்சு எப்படித் திணறும், கண்கள் எப்படிப் பிதுங்கும் என்பதையெல்லாம் நினைத்துப் பார்த்ததும் பெரும் கிலி அவரது முகத்தில் படர்ந்தது. ஆகவே உபேந்திரனை நோக்கிக் கெஞ்சத் தொடங்கினார். "உபேந்திரா! அந்த மாயக்காரியை நான் அழைக்கவில்லை நாகைக்கு. வந்த பின்பு அவளை எதிர்க்கத் துணிவில்லை எனக்கு. சற்று அவளுக்கு சந்தேகம் வந்தால் என்னைத் தொலைத்துவிடுவாள்.

www.cleanindians.com

தொலைத்துவிட்டால் கூடப் பாதகமில்லை. சித்திரவதை செய்யும் வழிகள் பல இருக்கின்றன அவளிடம். என்னைப் பற்றி அவளுக்கு சந்தேகம் வந்தால் அவள் என்ன செய்வா ளென்று சொல்ல முடியாது" என்று கெஞ்சினார் குருநாதர்.

உபேந்திரன் புன்முறுவல் கொண்டான். "குருநாதரே! அதையெல்லாம் நினைத்துப் பார்க்கும் சமயம் போய் விட்டது. இனி இந்த நாடகத்தின் முடிவுக் கட்டம் வந்து விட்டது. அதில் நீர் இராஜேந்திர சோழ தேவரிடம் பக்தி யுள்ள பிரஜையாக நடந்துகொண்டால் உம்மை நாகதேவி கொன்றாலும் உமது மனச்சாட்சி உம்மை வருத்தாது. இல்லையேல் உமது பெயர் மண்ணில் சிதைந்து போகும். ராஜத் துரோகி என்று மக்கள் தூற்றுவார்கள். உமது இஷ்டப் படி நீர் நடந்துகொள்ளலாம். எதற்கும் புகார்த் துறைக்குச் செல்ல சித்தம் செய்து கொள்ளும்" என்று சொல்லிவிட்டு அந்த அறையைவிட்டு அகன்றான்.

அங்கிருந்து தளத்துக்கு வந்து சாவக மாலுமி ஒருவனை அழைத்து "நீ படகொன்றில் புகாருக்குப் போ. அங்கிருக்கும் பரதவர் தலைவனிடம் நம் தேவியார் இன்னும் சில நாழிகைகளில் புகாருக்கு வருவார் என்பதைச் சொல்லி அவர்கள் வரவேற்புக்குத் தகுந்த ஏற்பாடு செய்யச் சொல்" என்று உத்தரவிட்டான். பிறகு இன்னொரு மாலுமியை அழைத்து "கீழ்த்தளத்தில் துடுப்புத் தள்ளும் மாலுமிகளையும் கரைக்கு அழைத்துப் போவதாகச் சொல். நாகதேவியார் இன்று முழுவதும் புகாரில் தங்கி புகாரைப் பார்வை யிடுவார்கள் என்று தெரிவி" என்று உத்தரவிட்டான். பிறகு மருதியிடம் வந்து, "மருதி! இன்னும் இரண்டு நாழிகைகளில் இந்த மரக்கலத்திலிருந்து நாம் புறப்படுகிறோம். உன்னை சித்தம் செய்துகொள். யாருக்கும் நீ மருதியென்று தெரியக் கூடாது" என்று கூறினான். கடைசியாக எல்லனை

www.cleanindians.com



அழைத்துக்கொண்டு தனது அறைக்குச் சென்று நீண்ட நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்தான்.

பொழுது நன்றாகப் புலர்ந்தது. கதிரவனும் கீழ்த்திசை யில் தோன்றினான். சாவகத்தின் மரக்கலத்தில் மாலுமிகள் பரபரப்புடன் நடமாடினார்கள்.

எல்லோரும் சின்னஞ்சிறு மூட்டைகளைக் கட்டிக் கொண்டு படகுகளில் இறங்கி துறைமுகம் நோக்கிச் சென்றார்கள். கடைசிப் படகில் சுத்ததத்தர் மருதி இவர்களுடன் உபேந்திரன் பயணமானான். பயணப்படு முன்பு சாவக மாலுமிகள் இருவரை மட்டும் மரக்கலத்தில் நிறுத்தி, "அந்த வெறிபிடித்த பெண்ணை வெளியில் விடாதீர்கள். காலாகாலத்தில் உணவைக் கூட தட்டில் வைத்து கதவை கால்வாசி திறந்து உள்ளே தள்ளிவிடுங்கள். அவளுக்கு வைத்தியம் செய்ய மாலையில் நான் ஒரு மருத்துவரை அழைத்து வருகிறேன்" என்று எச்சரித்துக் கூறிவிட்டு படகில் இறங்கிச் சென்றான்.

அன்று காலை சூரிய வெளிச்சத்தில் புகாரின் கடல் மனத்தை அள்ளும் வண்ணம் பிரகாசித்தது. அது கடற் கோளால் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தாலும் பழைய கம்பீரம் மாறாமல், கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்ற மூதுரைக்கு அத்தாட்சியாக நின்றது. பழைய கோட்டைச் சுவரில் இடிபடாமலிருந்த இரண்டு சிறு பகுதிகளின் மீது அலைகள் மடிந்து சென்று வணக்கம் செய்துகொண் டிருந்தன. புகாரின் கரையை அடைந்த சாவக மாலுமிகள் தங்களை வரவேற்கக் காத்திருந்த பெரும் கூட்டத்தைக் கண்டு பிரமித்தனர்.

கடைசியாகப் படகில் வந்த புது நாகதேவிக்கும் படைத் தலைவனுக்கும் அவர்கள் அளித்த வரவேற்பு பிரமிப்பை அளித்தது. அரசரையே வரவேற்கும் தோரணையில்

வரவேற்பு நடந்தது. படகு கரையை அடைந்ததும் படைத் தலைவனை இரு பரதவர் கைலாகு கொடுத்துப் படகி லிருந்து இறக்கினார்கள். புது நாகதேவியைப் படைத் தலைவன் கையைப் பிடித்து இறக்கினான். கடைசியாக இறங்கினார் சுத்ததத்தர். இறங்கியதும் அவர் பார்வை நாலா பக்கமும் சுழன்றது. கடைசியில் அந்தக் கூட்டத்தின் நடுவே யிருந்த ஒரு புதிய மனிதன் மீது நிலைத்தது. அதனால் அவர் திரும்பி ஓடிவிட முயன்றார். படைத்தலைவன் அவர் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். தனது புராணம் அன்றுடன் பூர்த்தியாகிவிட்டது என்பதை சுத்ததத்தர் சந்தேகமறப் புரிந்துகொண்டார்.

## 29. பூனை கண்ணை மூடினால்...

கால வெள்ளத்தில் பழைய புகார் அழிந்துவிட்டாலும், கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்ற மூதுரைப்படி அதன் கம்பீரம் சிறிதும் குறைந்ததாகத் தெரியவில்லை, நாகைப் படைத்தலைவன் கண்களுக்கு. கரிகாலன் காலத்தில் யவனர்களால் பாதுகாக்கப்பட்ட பெரும் கோட்டையோ, கோட்டை வாசலோ, வாசலின் மணிக்கதவங்களோ அன்று இல்லைதான். ஆனால் கடற்கோள் கொண்டது போக இடிந்த கோட்டையின் மிகுதிப் பகுதிகளாக இரண்டு பெரும் சுவர்கள் அன்று காலையில் பழைய நாகரிக உயர்வின் சின்னமாக மிகக் கம்பீரமாக நின்றிருந்தன. அவற்றின் மீது பயங்கரமாக எழுந்து மோதிய கடல் அலைகள் அவற்றையும் இழுத்துத் தள்ள முயன்றாலும் முடியாததால் பின்வாங்கின.

அதைப் பார்த்துக்கொண்டு நின்ற உபேந்திரன், பரதவ மங்கையர் நெல் உலர்த்தும் முன் முற்றங்களும் அங்கு



உலர்த்தப்பட்ட உணவைக் கவர வரும் கோழிகளின் மீது புகாரின் பரதவ மங்கையர் பொற் குழைகளை வீசும் அற்புதக் காட்சிகளும் மறைந்தாலும், பரதவரின் வீரம் அங்கு கூடியிருந்தவர்களிடை அன்றும் தென்பட்டதைக் கண்டான். "இந்தக் காட்சியைப் படைக்க இன்னோர் உருத்திரங் கண்ணனார் ஏன் பிறக்கவில்லை" என்று தன்னை கேட்டுக் கொண்டு பழைய நகரை நினைத்துப் பெருமூச்சும் விட்டான்.

அதனால் நைந்த மனத்துடன் எதிரே நின்ற பெருங் கூட்டத்தைப் பார்த்து, "பட்டினப்பாக்கந்தான் போய் விட்டதே தவிர மருவூர்ப்பாக்கம் போகவில்லை. பரதவர் வீரமும் போகவில்லை" என்று தன்னைத் தேற்றிக் கொள்ளவும் செய்தான்.

அப்படி நின்ற படைத்தலைவனுக்கு பரதவர் சங்கு மாலை அணிவித்தனர். பரதவ மங்கையர் ஆரத்தி எடுத்தார்கள். "ராஜேந்திர சோழ தேவர் படைத்தலைவரே! சோழ நாட்டு அணிகலமே! வருக வருக!" என்று மங்கலக் கூச்சலும் இட்டார்கள்.

நாகதேவியாக நின்ற மருதிக்கும் வரவேற்பு பலமா யிருந்தது. அவள் அணிந்திருந்த முத்தலை நாகாபரணம் பரதவ மங்கையருக்குப் புதிதாக இருந்தாலும் வேறெந்த நாட்டு ராணியோ தங்கள் நாட்டுக்கு வந்திருக்கிறாள் என்ற நினைப்பில் அவள் மீது மலர் தூவினார்கள். இத்தனைக்கும் குருநாதரை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. அந்த சமயத்தில் கூட்டத்திலிருந்த புது மனிதனைப் பார்த்துத் திரும்பி ஓடிவிட முயன்ற குருநாதரைக் கையைப் பிடித்து நிறுத்திய உபேந்திரன், "புகார் பெருமக்களே! இவர்தான் எங்கள் குருநாதர். இப்பொழுது சாவக மன்னனுக்காக நாகையில் கட்டப்பட்டு வரும் சூடாமணி விஹாரத்துக்குத்

www.deanindians.com

தலைவராகப் போகிறவர்'' என்று அறிமுகப்படுத்த கூட்டம் அவருக்குத் தலை வணங்கியது ஒரு முறை.

ஆனால் அந்தப் புதிய மனிதன் மட்டும் தலை வணங்காததையும் அவன் இதழ்களில் ஒரு புன்சிரிப்பு விளையாடிக் கொண்டிருந்ததையும் கண்ட சுத்ததத்தர் தமக்கு முடிவு காலம் கிட்டிவிட்டதை உணர்ந்தார்.

அந்தப் புதுமனிதன் குருநாதரை ஒருமுறை கவனித்த பிறகு வேறு திக்கில் கண்களைத் திருப்பிக்கொண்டான். ஆனால் படைத்தலைவனும் குருநாதரும் நாகதேவியும் பரதவரால் ஊருக்குள் அழைத்துச் செல்லப்பட்டதும் கூட்டத்திலிருந்து விலகி நின்று குருநாதர் அருகில் வந்ததும் அவர் கையில் யாருமறியாமல் எதையோ திணித்துவிட்டுச் சென்றுவிட்டான். குருநாதர் திகில் அதிகமாயிற்று. அவர் கையில் திணிக்கப்பட்டது ஒரு நாணயமானாலும் அது என்னவென்பதையும் அது திணிக்கப்பட்டதன் காரணத் தையும் குருநாதர் புரிந்துகொண்டதால் பிரும்மஹத்தி பிடித்துக்கொண்டவர் போல் பதுமையென நடந்து சென்றார்.

பரதவரும் மற்றும் அவர்களுடனிருந்த சில வீரர்களும் மருவூர்ப்பாக்கத்தின் முகப்பிலிருந்த ஒரு மாளிகையில் படைத்தலைவனையும் மருதியையும் குருநாதரையும் தங்க வைத்தார்கள். அந்த மாளிகைக்கு எதிரில் நாளங்காடி சதுக்கபூதம் மட்டும் பிரும்மாண்டமாக உட்கார்ந்திருந்தது. அதைச் சுற்றி அலைகள் மோதிக்கொண்டிருந்தன. அத்தனையும் அழிந்தும் அந்த பூதமும் அதன் எதிரிலிருந்த பலிபீடமும் மட்டும் அழியாதிருந்ததை குருநாதர் கவனித்தார். தாங்கள் தங்கவேண்டிய மாளிகைப் படியில் காலடி வைத்த படைத்தலைவன், ''குருநாதரே! எல்லாம் அழிந்தும் பலிபீடம் அழியவில்லை'' என்று சுட்டிக்காட்டினான்.



''ஆம்'' பயத்துடன் மென்று விழுங்கினார் குருநாதர்.

''இந்தப் பீடத்தில் எள்ளுருண்டை வைப்பதுண்டு. நரபலியும் நடப்பதுண்டு'' என்று மேலும் சுட்டிக்காட்டினான் படைத்தலைவன்.

''ஆம். ஆம்.''

''கரிகாலன் காலத்தில் வீரர்கள் தங்களைத் தாங்களே பலிகொடுத்துக் கொண்டார்கள். இந்த பலிபீடத்தின் முன்பு நின்று தங்கள் தலைகளைத் தங்கள் வாட்களால் சீவிக் கொள்வார்கள்.''

''ஆம். ஆம். அதெல்லாம் இப்பொழுது எதற்கு?

''இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. அரசாங்கக் குற்றவாளிகள் இந்தப் பலிபீடத்தில் வெட்டப்படு கிறார்கள்...''

குருநாதர் உடல் நடுக்கம் கண்டது. படைத்தலைவன் பக்கத்தில் நின்றிருந்த மருதி கூட நடுங்கினாள். ''வீணாக குருநாதரைப் பயமுறுத்தாதீர்கள்'' என்ற மருதி உள்ளே சென்றாள். படைத்தலைவனும் குருநாதரும் அவளைத் தொடர்ந்தார்கள்.

மருவூர்ப்பாக்கத்தின் மாளிகைக்குள் சகல வசதி களும் இருந்தன. பரதவ மங்கையர் இரண்டு பேர் மருதியை அவள் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். பரதவர் இருவர் படைத்தலைவனுக்கு ஒரு பெரிய அறையைக் காட்டி னார்கள். ஏதோ அரசர்கள் தங்குவதற்காக ஏற்பட்ட அறை போலிருந்த அந்த அறையைக் கண்ட படைத்தலைவன் அங்கிருந்த கட்டிலில் நிம்மதியாகப் படுத்தான். பணி செய்ய நின்ற இரு பரதவரையும் அப்புறம் வரச்சொல்லி அனுப்பி விட்டான்.

குருநாதருக்கும் ஒரு பெரிய அறை கொடுக்கப் பட்டிருந்தாலும் அது படைத்தலைவன் அறைக்கு நேர் எதிரில் இருந்ததை குருநாதர் கவனித்தார். தான் படைத் தலைவன் கண்ணில் படாமல் எங்கும் நகர முடியா தென்பதைப் புரிந்துகொண்டார். படைத்தலைவன் அறைக் கதவுகள் திறந்து கிடந்ததையும், அங்கிருந்த பஞ்சணையில் படுத்தவண்ணம் படைத்தலைவன் தனது அறையை நோக்கிக்கொண்டிருந்ததையும் கண்ட குருநாதர் தமது அறைக்கதவைச் சாத்திவிட்டுத் தமது கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டார். உட்கார்ந்த நேரத்திலும் அந்தப் புது மனிதன் அவர் மனக்கண் முன்பு நின்றான். ஆஜானு பாகுவாய் இருந்த அந்த மனிதனின் ஆராய்ச்சிக் கண்கள் அப்பொழுதும் உள்ளிருந்து அவரைப் பார்ப்பது போன்ற பிரமை இருந்தது குருநாதருக்கு. அதனால் கண்களை மூடிக் கொண்ட குருநாதர் 'பூனை கண்ணை மூடினால் உலகம் அஸ்தமித்துவிடும்' என்ற பழமொழிக்கு உதாரணமாக விளங்கினார்.

புறக்கண் மூடியதே தவிர அகக்கண் மூடவில்லை. "நாசமாய்ப் போன இந்த நாகதேவி எதற்காக நாகைக்கு வந்தாள்?" என்று தன்னை கேட்டுக் கொண்டதன்றி "வேறெதற்கு? என் பிராணனை வாங்கத்தான்" என்று பதிலும் சொல்லிக்கொண்டார். "போயும் போயும் அவன் எப்படி இங்கே வந்தான்? அவனை புகாரில் ஒருவருக்குமே அடையாளம் புரியவில்லை. சோழ நாட்டுக்கே காவலா யிருந்த புகாரின் கண்ணுமா பொட்டையாகி விட்டது? பரதவர் அறிவும் மழுங்கி விட்டதா? அவன் என்ன காரணத்தால் இங்கு வந்திருக்கிறான்?" என்று தனக்குத் தானே கேள்விகளைக் கேட்டுக்கொண்டார். இன்னொரு முறை அவன் என் கண்ணில் பட்டும் அவனை அம்பலப் படுத்திவிடுகிறேன் என்று வீராப்பாகவும் இரைந்து

www.cleanindians.com



சொன்னார்., சில வினாடிகளுக்குப் பிறகு கண்ணைத் திறக்கவும் செய்தார். அதுவரை யாரைப் பற்றி அவர் எண்ணங்களைச் சுழலவிட்டுக் கொண்டிருந்தாரோ, அந்த மனிதன் அவருக்கு எதிரே நின்றுகொண்டிருந்தான். குருநாதருக்கு சப்த நாடியும் அடங்கிவிட்டது. எழுந்திருக்க முயன்றார்.

"அசைய வேண்டாம். அப்படியே இரும்" என்று ஆணையிட்டான் அந்த மனிதன்.

## 30. பலி ஆடு

குருநாதரை 'அசைய வேண்டாம்' என்று கட்டளை யிட்ட அந்த மனிதன் சற்று எட்ட இருந்த ஒரு மஞ்சத்தை இழுத்துப் போட்டுக்கொண்டு அவருக்கெதிரே உட்கார்ந்து கொண்டான். அப்படி உட்கார்ந்து கொண்டதால் அவன் தனக்கும் அறைக் கதவுக்கும் இருந்த இடைவெளியை அடைத்துக்கொண்டதையும், தான் எழுந்து ஓட முயன்றாலும் அது நடவாத காரியம் என்பதையும் புரிந்துகொண்ட சுத்ததத்தர், "நானே தங்களை உட்காரச் சொல்லியிருக்க வேண்டும். ஏதோ குழப்பத்தில் இருந்துவிட்டேன்" என்று உபசார வார்த்தை சொல்லி சமாளித்துக் கொள்ள முயன்றார்.

"யார் உபசாரம் செய்வதற்காகவும் நான் காத்திருக்கும் பழக்கமில்லை" என்று பதில் சொன்ன அந்த மனிதன் "ஏதோ தங்களுக்குக் குழப்பம் என்று சொன்னீர்களே, என்ன குழப்பம்? எதைப்பற்றி குழப்பம்?" என்று விசாரித்தான். "அதை நீக்க நான் ஏதாவது செய்ய முடியுமானால் சொல்லுங்கள்" என்று மிகுந்த மரியாதையுடன் கேட்கவும் செய்தான்.

அந்த மனிதனின் மரியாதைக் குரலுக்கு அர்த்தமே யில்லையென்பதையும் அவன் ஏதோ நாடகம் போடுகிறா னென்பதையும் உணர்ந்துகொண்ட குருநாதர் "அப்படி யொன்றும் குறிப்பிடக்கூடிய குழப்பமில்லை" என்றார்.

"சகிக்கக்கூடிய குழப்பமாக இருந்தால் சரிதான்" என்று அந்த மனிதன் குருநாதரைத் தனது விஷமக் கண்களால் ஊடுருவி நோக்கினான்.

தனது ஆத்மாவையே ஊடுருவுவது போலிருந்த அந்த மனிதனின் பார்வையைச் சகிக்க முடியாத சுத்ததத்தர், "தேவரே, இங்கு எதற்காக வந்தீர்?" என்று வினவினார்.

"ஏன் என் முழுப் பெயரையும் சொல்லி அழைக் கலாமே. நான் மறைக்க வேண்டியது ஏதுமில்லையே?" என்று அந்த மனிதன் இளநகை கொட்டினான்.

"முழுப் பெயரை நான் சொல்லி யார் காதிலாவது விழுந்தால்..." என்று இழுத்தார் சுத்ததத்தர்.

"விழுந்தாலென்ன? நான் என்ன கொலை செய்து மறைந்து வாழ்கிறேனா? அல்லது மன்னருக்கு எதிராகச் சதி செய்கிறேனா?" என்று கேட்ட அந்த மனிதர் பொதுப் படையாகப் பேசுவதுபோல தோன்றினாலும், உண்மையில் அவர் பல விஷயங்களை அறிந்திருக்கிறாரென்பது அவர் குரலிலிருந்தே தெரிந்தது.

அதை உணர்ந்துகொண்ட குருநாதர் சிறிது சிந்தித்து விட்டு, "இந்தளதேவரே!" என்று அவரது முழுப் பெயரையும் சொல்லி அழைத்தார்.

முழுப் பெயரையும் சொல்லி அழைத்ததும் முகத்தில் பெருமகிழ்ச்சியைக் காட்டி இந்தளதேவர் "சுத்ததத்தரே இது சரியாயிருக்கிறது. நமக்குள் ரகசியங்களும் சூழ்ச்சிகளும் எதற்கு?" என்று கேட்டார்.



"சூழ்ச்சிக்கு இங்கு என்ன இருக்கிறது?" என்று வினவினார் குருநாதர்.

"ஒன்றுமில்லையா?" தேவர் கேள்வி சர்வசாதாரணமா யிருந்தாலும் அதில் ஏதோ உட்பொருள் இருப்பதாக குருநாதருக்குத் தோன்றியது.

அதனால் சிறிது சங்கடப்பட்டு கட்டிலில் அசைந்த குருநாதர், "ஒன்றுமில்லை" என்று பதில் சொன்னார்.

"சந்தோஷம்" என்றார் தேவர்.

"எதற்கு சந்தோஷம்?" என்று கேட்டார் குருநாதர்.

"சூழ்ச்சி எதுவுமில்லாதிருப்பதற்கு" என்ற தேவர் "நான் கடற்கரையில் உமது கையில் ஒரு நாணயம் கொடுத்தேன். அது எங்கே?" என்று வினவினார்.

www.cleanindians.com

இந்தளதேவர் தமது அறைக்குள் வந்துவிட்டதால் அவர் தமது கையில் திணித்த நாணயத்தைப் பற்றி அறவே மறந்துவிட்ட குருநாதர், "இதோ இருக்கிறது" என்று அதைத் தமது மடியிலிருந்து எடுத்துக் கொடுத்தார்.

அதைத் தமது கையில் வாங்கிக்கொண்ட தேவர் அந்த நாணயத்தின் ஒருபுறத்திலிருந்த ராஜேந்திரசோழதேவன் உருவத்தைக் காட்டி "இந்த நாணயம் செலாவணியில் இல்லை. ஆனால், சோழதேவரின் கட்டளையால் அடிக்கப் பட்டது. முழுத்தங்கம்" என்று சொன்னார். "இதை ராஜேந்திர சோழதேவர் எதற்காக ஏற்படுத்தினார் என்பது தெரியுமா?" என்றும் வினவினார்.

சுத்ததத்தர் இந்தளதேவரின் உள்ளங்கையில் பளபளத்த அந்தப் பொன் நாணயத்தை நீண்ட நேரம் உற்று நோக்கி விட்டு, "தெரியும் தேவரே! அரசரின் அந்தரங்கத்துக்குப் பாத்திரமான சில அதிகாரிகளுக்கு மட்டும் இது கொடுக்கப்

படுகிறது. இதை யார் வைத்திருந்தாலும் அவர்கள் சொல்வதை ராஜ ஆக்ஞை போல் நினைத்து நடக்க வேண்டுமென்ற விதியும் இருக்கிறது" என்று சொன்னார். அதைச் சொன்னதும் குருநாதர் ஒரு பெருமூச்சும் விட்டார்.

அந்தப் பெருமூச்சைக் கவனிக்கவே செய்த தேவர் இளநகை கூட்டினார். குருநாதரை நோக்கி "குருநாதரே! நீர் பட்டிருக்கிற அவஸ்தைக்கு மன்னர் சார்பில் நீர் செய்திருக்கும் செய்கைகளுக்கு, இப்படி பெருமூச்சுக்களை விடலாம். ஆனால் இனி உமக்கு விடுதலை வேளை" என்றார் குரலில் சிறிது விஷமத்தையும் கலந்து.

"எனக்கு விடுதலையா?" வியப்புடன் வினவினார் குருநாதர்.

"ஆம்." இந்தளதேவர் உற்சாகத்துடன் பதில் கூறினார்.

"எதிலிருந்து விடுதலை?" குருநாதர் கேள்வியில் சந்தேகம் இருந்தது.

"சாவகக் கப்பலில் பணி செய்தீரல்லவா?"

"நானா! பணி செய்தேனா!"

"ஆம். மன்னர் சார்பில்!"

"ஆம் ஆம்! பணி செய்தேன்."

"அதை இன்றிலிருந்து நான் மேற்கொள்கிறேன்."

குருநாதர் வாயைப் பிளந்தார். "நீர்! மேற்கொள்கிறீரா?" என்று தட்டுத்தடுமாறிக் கேட்டார்.

இந்தளதேவர் தமது முகத்தில் போலித் துயரத்தைக் காட்டினார்.

"நான் சொல்வது விளங்கவில்லை போலிருக்கிறது?" என்றார் குரலிலும் துயரத்தைக் காட்டி.



"ஏன் விளங்கவில்லை? விளங்குகிறது" என்று தடுமாறினார் குருநாதர்.

"அப்படியானால் அந்த ராணியிடம் என்னை அறிமுகப் படுத்த வேண்டியதுதானே?" இதை சர்வசகஜமாகக் கேட்டார் தேவர்.

குருநாதருக்கு எரிச்சல் அதிகமாயிற்று. "தேவரே! அந்த ராணியை இல்லை தேவியை, இப்பொழுது பார்க்க முடியாது" என்றார் எரிச்சல் குரலிலும் ஒலிக்க.

"ஏன் முடியாது?"

"முடியாதென்றால் முடியாது."

www.cleanindians.com

"ஏன் முடியாது? நாணயத்தைப் பார்த்தீரல்லவா? நான் சொல்வதற்குக் கீழ்ப்படிய வேண்டியதுதானே உமது வேலை?"

"ஆம். ஆம். ஆனால் அத்தனை சுலபமல்ல."

"ஏன் சுலபமல்ல? ராணிதான், இல்லை தேவிதான் உம்முடன் வந்து இன்னொரு மாளிகையில் தங்கியிருக்கிறாளே."

குருநாதர் இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தார். "இந்தளதேவரோ எந்த மர்மத்தையும் அவிழ்ப்பதில் சூரனென்று ராஜேந்திரசோழ தேவராலேயே பாராட்டப் பெற்றவர். சோழ நாட்டில் அவர் பிரசித்தி அதிகம். ஆகையால் அவரிடம் உண்மையை மறைக்க முடியாது. உண்மையைச் சொன்னாலோ நாக தேவி என்னை எப்படியும் அழித்து விடுவாள். உண்மை முழுவதையும் அவிழ்த்தாலோ மற்றவர்கள் இங்கேயே இன்றே என்னை நாளங்காடி பூதத்துக்குப் பலி கொடுத்து விடுவார்கள்" என்று சிந்தித்த குருநாதர் இருதலைக்

கொள்ளியாகத் திகைத்தார். கடைசியாக எது வந்தாலும் வரட்டும் என்று துணிவு கொண்டு, "தேவரே! உம்மிடம் நான் எனது பணியை ஒப்படைக்கு முன்பு நீர் இங்கு வந்த காரணம் தெரியவேண்டும்" என்றார் திட்டவட்டமாக.

"காரணம் எதுவுமில்லை. திடீரென்று மன்னர் தஞ்சையிலிருந்து நாகை வந்தார். அப்பொழுது தஞ்சையிலிருந்து என்னையும் அழைத்துக்கொண்டு வந்தார்!" வாசகத்தை முடிக்கவில்லை இந்தளதேவர்.

சுத்ததத்தருக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. "ஊம்..." என்று ஊக்கினார் அந்த நடுக்கத்துடன்.

"நானும் போனேன். நாகை மாளிகையில் அவருடன் தங்கினேன். நேற்றுக் காலை மன்னர் என்னை அழைத்து 'புகாருக்குப் போய் வருகிறாயா?' என்று கேட்டார். சரியென்றேன். 'உன் அடையாளத்தையும் எடுத்துக்கொண்டு போ' என்றார். கச்சையிலிருந்து அதை எடுத்துக் காட்டினேன். 'சரி போய் வா. அங்கு உபேந்திரன் இருந்தால் புகாரைப் பழைய புகாரைப் போல் நல்ல துறைமுகமாக்க முடியுமா என்று பார்க்கச் சொல்' என்றார். நான் புறப்பட்டு வந்தேன்" என்று விளக்கினார் இந்தளதேவர்.

www.cleanindians.com

தேவர் தமது பேச்சில் பல விஷயங்களை மறைத்திருக்கிறார் என்பது குருநாதருக்குத் திட்டமாகத் தெரிந்ததால் "தேவரே! நீர் முழுவதையும் சொல்லவில்லை" என்று குற்றம் சாட்டினார்.

"உமக்குத் தெரிந்ததைத் திரும்பச் சொல்ல அவசியமில்லை என்று நினைத்தேன்" என்ற தேவர், "ஒரு விஷயம் குருநாதரே, மன்னர் சூடாமணி விஹார நிர்மாணத்தில் உமது இஷ்டப்படி செய்ய உத்தரவிட்டுவிட்டார்" என்றும் கூறினார்.



அந்த இன்னோர் இடி இறங்கவே நிலைகுலைந்த குருநாதர் "சூடாமணி விஹார நிர்மாணமா! அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்!" என்று விசாரித்தார் ஏதும் அறியாதவர் போல்.

"உமது யோசனைப்படி பாதாள அறை வைத்து விஹாரத்தைக் கட்ட ஒரு சித்திரம் தயாரித்திருப்பதாக நாகை ஸ்தபதி மன்னரிடம் சொன்னார். சித்திரத்தையும் காட்டினார். மன்னர் என்ன சொன்னார் தெரியுமா?" என்று விவரித்தார் தேவர்.

"என்ன சொன்னார்?" குருநாதர் கேட்டார் திகிலுடன்.

"குருநாதர் எப்படி இஷ்டப்படுகிறாரோ அப்படிக் கட்டிவிடுங்கள்; சித்திரத்தில் காட்டப்பட்டுள்ள கட்டட ஏற்பாடு மிகக் கச்சிதமாயிருக்கிறது. இது பல காரியங்களுக்கும் பயன்படும் என்று சொன்னார் மன்னர்" என்ற தேவர் "குருநாதரே! நீர் கிழித்த கோட்டை மன்னர் தாண்ட மறுக்கிறார்" என்று பாராட்டவும் செய்தார்.

இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைபவர் போல் குருநாதர் அசட்டுச் சிரிப்பாகச் சிரித்தார். "நமது மன்னர் மகானுபாவர். இந்த ஏழையிடம் அவருக்கு எத்தனை நம்பிக்கை" என்று குருநாதர் மன்னரைப் பாராட்டினார்.

"குருநாதரே!" தேவர் அழைத்தார் இகழ்ச்சிக் குரலில்.

"ஏன் தேவரே?" என்று கேட்டார் குருநாதர்.

"மன்னர் நம்பிக்கைக்கு நாமும் பாத்திரமாக வேண்டும்" என்று சொல்லிய தேவர் திடீரென ஆசனத்திலிருந்து எழுந்து, "குருநாதரே! வாரும் நீர் அழைத்து வந்திருக்கும் தேவியை சந்திப்போம்" என்று அதிகாரக் குரலில் அழைத்தார்.

## 31. வேஷப் பொருத்தம்

குருநாதர் அறைக்கு நேர் அறையில் இருந்த உபேந்திரன், குருநாதர் கதவு மூடப்பட்டதையும் திறந்தவுடன் இந்தளதேவரும் குருநாதரும் வெளியே வந்ததையும் கவனிக்கவே செய்தாலும், அதைக் கவனிக்காதவன் போலவே நடந்துகொண்டான். குருநாதர் வெளியே வந்ததும் தன்னைப் பார்த்த பரிதாபப் பார்வைக்கும் இந்தள தேவர் வீசிய லேசான புன்முறுவலுக்கும் ஒரே மாதிரி யாகப் புன்முறுவல் செய்துவிட்டுத் தான் உட்கார்ந்த ஆசனத்திலேயே ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து விட்டான்.

குருநாதர் தமது அறையை விட்டுக் கிளம்பியதும், நேராக மாளிகையை விட்டுச் செல்ல முயன்றதும் இந்தளதேவர், "குருநாதரே! வழி தவறிப் போகிறீர். நாம் போக வேண்டியது நாகதேவி இருக்குமிடம்" என்று குறிப்பிட்டார்.

குருநாதர் திகைத்து நின்றுவிட்டுக் கேட்டார்: "நாக தேவி பக்கத்து மாளிகையில் இருப்பதாக நீங்கள்தானே சொன்னீர்கள்?" என்று.

இந்தளதேவர் ஏதும் அறியாதவர்போல் "இங்கிருக்கும் மாளிகைகள் இரண்டு. ஒன்றில் கப்பல் மாலுமிகள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னொன்றில் நீங்கள் தங்கி யிருக்கிறீர்கள். வேறு மாளிகை ஏது?" என்று வினவினார். "ஒருவேளை புகாரின் கடற்கோளால் மறைந்துபோன மாளிகை எதையாவது நினைத்துக்கொண்டீர்களா?" என்றும் கேட்டார்.



இந்த இடக்குக் கேள்வியால் வெகுண்ட குருநாதர், "கடலுக்குள் இருக்கும் மாளிகையில் யாராவது தங்க முடியுமா?" என்று கேட்டார் குரலில் சிறிது கோபத்தையும் காட்டி.

இந்தளதேவர் புன்முறுவல் செய்தார். "எனக்கெப்படித் தெரியும்? கடலில் பல விநோதங்களைச் செய்யும் உமக்குத் தான் தெரியும்" என்றார் புன்முறுவலின் ஊடே.

"கடலில் அப்படி என்ன விந்தைகள் செய்து விட்டேன்?"

"நீங்கள்தான் சொல்லவேண்டும். சில நாள்களாக உங்களுக்குக் கடலில்தானே வாசம்."

"இந்தளதேவரே!"

"உம்."

"நீர் என்மீது ஏதோ சந்தேகப்படுவதாகத் தெரிகிறது."

"துளிக்கூட சந்தேகமில்லை. சரி, தேவிக்கு என்னை அறிமுகப்படுத்துங்கள்" என்ற இந்தளதேவர் அந்த மாளிகையின் வெளிப்புறப் படிகளுக்கு வந்ததும் "இப்பொழுது பாரும் இந்த மாளிகையை, இரண்டு மாளிகைகள் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்" என்று இரண்டு பகுதிகளாகக் கட்டி இணைக்கப் பட்ட அந்தப் பெரு மாளிகையைக் காட்டினார்.

புகாருக்கு அதிகமாக வந்திராத காரணத்தாலும், அப்படியே வந்தாலும் கடலரசனால் விழுங்கப்படாதிருந்த மருவூர்ப்பாக்கத்தை மட்டும் பார்த்துவிட்டுப் போகும் வழக்க மாதலாலும் குருநாதருக்குக் கடல் வாயிலிருந்த அந்த இரட்டை மாளிகையைப் பற்றி விவரம் தெரியாததால் சோழ நாட்டு வடக்கெல்லையிலிருந்து வந்த இந்தள

www.cleanindians.com

தேவருக்குத் தெரிந்த விவரங்களைப் பற்றிப் பெரிதும் வியந்தார். ஆனால் உள்ளே இருந்த கிலி அந்த வியப்பை மறைத்துவிடவே இணை மாளிகையை நோக்கித் திரும்பினார். அந்தத் தனி வாசலில் இருந்த பெரிய தாழ்வரையும், தாழ்வரை அடுத்த அறையும், அறையின் மணிக்கதவங்களையும் பார்த்த குருநாதர் ஒரு விநாடி பிரமித்தார்.

அவர் பிரமிப்பைக் கண்ட இந்தளதேவர், "குருநாதரே! இந்த முகப்பு மாளிகையில் பழைய புகார் மன்னர்கள் தங்குவது வழக்கம். இந்த இடம் அவர்கள் அந்தப்புரம். பரதவர் விஷயமறிந்துதான் நாகதேவியை இங்கு தங்க வைத்திருக்கிறார்கள்" என்று சிலாகித்தார்.

இதைக் கேட்டு மனமுடைந்த சுத்ததத்தர் 'அப்படியா! நன்று நன்று!' என்று கூறி மணிக்கதவைத் தட்ட உள்ளிருந்து ஒரு பரதவ மங்கை கதவைத் திறந்தாள். "என்ன வேண்டும்? ராணியார் இளைப்பாறுகிறார்கள்" என்று சொன்னாள்.

"ராணியாரைப் பார்க்கவேண்டும். நான் வந்திருப்பதாகச் சொல்" என்றார் குருநாதர்.

"நீங்கள் யார்?" அந்தப் பெண் வினவினாள்.

"குருநாதர்." குருநாதர் பதில் திடமாகவே இருந்தது.

"சரி இருங்கள்" என்று சொல்லி உள்ளே சென்று சிறிது நேரத்தில் திரும்பி வந்து அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று பக்கத்து அறை ஒன்றில் உட்கார வைத்தாள்.

சிறிது தாமதத்திற்குப் பிறகு அவ்விருவரையும் ராணி வேடம் போட்ட மருதியிடம் அழைத்துச் சென்றாள். அவ்விருவரும் உள்ளே நுழைந்ததும் குருநாதர் அவளை நோக்கித் தலைவணங்கினார். இந்தளதேவர் தலை

www.cleanindians.com



வணங்காமல் "தேவி! நான் இந்தளதேவன். சோழ மன்னரால் அனுப்பப்பட்டிருக்கிறேன்" என்று கூறி ஆசனத்தில் அமர்ந்தார்.

போலி நாகதேவி தலையை அசைத்தாள் புரிந்து கொண்டதற்கு அடையாளமாக. குருநாதர் இந்தளதேவரை அறிமுகப்படுத்தத் தொடங்கி, "இந்தளதேவர் சோழ தேவரின் அந்தரங்கமான தலைவர்களில் ஒருவர். படைகளை நடத்துவதில் வல்லவர். அத்துடன் வெளிநாட்டு வாணிபமும் நடத்துகிறார்" என்று கூறினார்.

"தாங்கள் வணிகரா!" என்று வியப்புடன் வினவினாள் மருதி.

"ஆமாம்."

"படைத்தலைவர் என்றும் குருநாதர் சொல்கிறாரே."

"இந்தக் காலத்தில் பல தொழில்களும் தெரிய வேண்டியிருக்கிறது."

"அப்படியா!"

"ஆம் தேவி. வாணிபத்தில் பயனுமிருக்கிறது. வெளிநாடுகளை அவற்றின் எண்ணங்களைப் புரிந்து கொள்ளலாம். நான் தங்கள் நாட்டுக்கு வந்திருக்கிறேன். அடுத்து உள்ள சொர்ண த்வீபத்துக்கும் வந்திருக்கிறேன். அக்ஷய முனையில் சில காலம் தங்கியிருக்கிறேன்" என்று அடுக்கிக்கொண்டே போன இந்தளதேவர் பேச்சை நிறுத்தி, "தாங்கள் அக்ஷயமுனை போயிருப்பீர்களல்லவா?" என்று கேட்டார்.

"அக்ஷய முனையா!" என்று வியப்புடன் கேட்டாள் மருதி.

"ஆம்."

"அது?"

"சொர்ணத்வீபத்தின் வடக்கு முனை."

"ஆமாம், ஆமாம். கேள்விப்பட்டிருக்கிறேன்."

"கேள்விதான் பட்டிருக்கிறீர்களா! போனது இல்லையா?"

"இல்லை, நாகர்குலத்தார் அவசியமில்லாமல் சாவகத்திலிருந்து போகமாட்டார்கள்."

"இங்கு அவசியத்தால் வந்திருக்கிறீர்கள்?"

இதற்கு மருதி பதில் சொல்லவில்லை. குருதேவரை நோக்கினாள். பரிதாபமாக குருதேவரும் திணறினார், இந்தளதேவரின் குறுக்குத்தனமான கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வதென்று அறியாமல். இந்தளதேவரே நிலைமையைச் சமாளித்து, "இதென்ன அனாவசியக் கேள்வி? அவசியமில்லாமல், அதுவும் அத்தியாவசிய மில்லாமல், சாவகத்திலிருந்து இத்தனை தூரம் யாராவது வருவார்களா?" என்று சொல்லிக்கொண்டார். பிறகு குருநாதரை நோக்கி, "குருநாதரே! நான் சில விஷயங்கள் ராணியாருடன் பேச வேண்டியிருக்கிறது. தாங்கள் சிறிது வெளியில் இருக்கலாமா?" என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

இந்தளதேவரின் இந்த விண்ணப்பத்தைக் கேட்டதும் மருண்டு போன சுத்ததத்தர், "முன்பின் அறிமுகமில்லாத இந்த ராணியிடம் உங்களுக்கு என்ன ரகசியமிருக்க முடியும்?" என்று கேட்டார்.

இந்தளதேவர் குருநாதரை விபரீதப் பார்வையாகப் பார்த்தார். "தங்களை வெளியில் இருக்கச் சொன்னேன்" என்று சற்று கடுமையாகச் சொன்னார்.



அந்தக் கடுமையைக் குருநாதர் கவனிக்கவே செய்தாலும் அறையை விட்டு உடனே அகலாமல் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்றார் சில விநாடிகள். பிறகு வேகமாக அறையை விட்டு அகன்றார் அவர். அகன்றதும் அந்த அறைக்கதவைத் தாமே சென்று சாத்திவிட்டு வந்த இந்தளதேவர் ஆசனத்தில் அமராமல் மருதியின் முன்பு நின்றுகொண்டு அவளை ஊடுருவி நோக்கினார். அந்த ஆராய்ச்சிக் கண்களுக்கு ஈடுகொடுக்க முடியாத மருதியின் கண்கள் நிலத்தில் தாமாகவே தாழ்ந்தன.

பல விநாடிகள் நின்றுகொண்டிருந்த இந்தளதேவர் "ராணி" என்று மெதுவாக அழைத்தார்.

அவர் அழைப்பை முதலில் காதில் வாங்காத மருதி அவர் இரண்டாம் முறை அழைத்த பிறகே, "என்ன தேவரே!" என்று வினவினாள்.

இந்தளதேவரின் இதழ்களில் இளநகை விரிந்தது. "மகுடத்தை தாங்கள் சரியாக வைத்துக்கொள்ளவில்லை. முத்தலை நாக முகப்பு பக்கவாட்டில் இருக்கிறது. நேராகத் திருப்பிக் கொள்ளுங்கள்" என்றார்.

மருதி திடுக்கிட்டாள். "அப்படியா!" என்று திகிலுடன் கேட்டாள். மெல்ல தலைக்கிரீடத்தைச் சரிப்படுத்திக் கொள்ளவும் செய்தாள்.

"இப்பொழுது சாட்சாத் ராணியைப் போலவே இருக்கிறாய்" என்ற இந்தளதேவர் மகிழ்ச்சிப் புன்முறுவல் காட்டினார்.

அவர் பேச்சில் சற்று மரியாதை குறைந்துவிட்டதை மருதி கவனித்தாலும் கவனிக்காதது போலவே நடந்து கொண்டாள். "ஏதோ தனிமையில் பேச வேண்டுமென்றீர்களே?" என்று கேட்டாள்.

"நாளைக்கு மன்னரை இங்கு எதிர்பார்க்கிறேன்" என்று சர்வசாதாரணமாகச் சொன்னார் தேவர்.

"மன்னரையா!" அதிர்ச்சியுடன் வினவினாள் மருதி.

"ஆம்" அசட்டையுடன் வந்தது இந்தளதேவரின் பதில்.

"எதற்கு?"

"சாவகத்தின் நாகர் தலைவியைச் சந்திக்க."

"என்னையா?"

"நீங்கள்தானே நாகதேவி?"

"ஆம். பார்த்தால் தெரியவில்லையா?"

"தெரியாமலென்ன?"

"பின் சந்தேகமாகக் கேட்கிறீர்களே."

"துளிக்கூட சந்தேகமில்லை. அது கிடக்கட்டும். நீ திரும்பவும் சாவகக் கப்பலுக்கு எப்பொழுது போவாய்? இன்று போகத் தேவையிருக்கிறதா?" என்று இந்தளதேவர் வினவினார்.

www.cleanindians.com

"படைத்தலைவரைக் கேளுங்கள்" என்றாள் மருதி.

"கேட்கிறேன்" என்ற இந்தளதேவர் வாயிற்படியை நோக்கி நடந்தார். வாயிற்படியை அடைந்ததும் சற்று திரும்பி, "வேஷம் பொருத்தமாகத்தானிருக்கிறது" என்றொரு வெடியை வீசிவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றார். மருதி சிலையென நின்றாள்.

# 32. தேவரின் ஆராய்ச்சி

மருதியிருந்த மாளிகையிலிருந்து வெளியே வந்த இந்தளதேவரை வாயிலிலேயே காத்திருந்த குருநாதர் எதிர்கொண்டு, "தேவரே! நாகதேவியைப் பார்த்துவிட்டீர்களல்லவா?" என்று மிகுந்த ஆவலுடன் வினவினார்.

அவர் ஆவலின் காரணத்தை உணர்ந்திருந்த இந்தளதேவர், "பார்த்தது மட்டுமா? பேசியும் விட்டேன்" என்று சொல்லி லேசாகப் புன்முறுவல் செய்தார். பிறகு நடக்கவும் தொடங்கினார்.

அவருடன் கூடவே நடந்த குருநாதர் மேற்கொண்டும் விஷயங்களை அறிய, "தேவியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஒரு கேள்வியைத் தொடுத்தார்.

"நினைப்பதற்கென்ன! மிக அழகாக இருக்கிறாள்" என்றார் இந்தளதேவர்.

"அழகி மட்டுமல்ல; அவள் மகா புத்திசாலி" என்று சிலாகித்தார் குருநாதர்.

"அப்படியொன்றும் பிரமாத புத்திசாலியல்ல குருநாதரே? ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளும். அழகும் அறிவும் சேருவது அபூர்வம்" என்று சுட்டிக் காட்டினார் தேவர்.

இதைக் கேட்டதும் சிறிது அச்சத்திற்குள்ளான குருநாதர் "நீங்கள் நினைப்பது தவறு. நாகதேவி அழகு, அறிவு இரண்டுமே நிரம்பியவள்" என்று விளக்க முயன்றார்.

இந்தளதேவர் பக்கத்தில் நடந்து வந்துகொண்டிருந்த குருநாதரைத் திரும்பி நோக்கி, "நாகதேவிக்கு இருக்கலாம்"

என்று அரையும் குறையுமாகச் சொல்லி விட்டுப் படிகளில் இறங்கலானார்.

தேவரின் அரைகுறைப் பேச்சால் இடிந்தேபோன குருநாதர், "என்ன சொல்கிறீர்கள் தேவரே?" என்று வினவினார் அச்சம் குரலில் ஓரளவு துலங்க.

"நாகதேவிக்குத் தனது கிரீடத்தைக்கூட சரியாக வைத்துக்கொள்ளத் தெரியவில்லை! முத்தலை நாகம் பக்கவாட்டில் இருந்தது. நான் சரியாக வைத்துக்கொள்ளச் சொன்னேன்!" என்று சொல்லிவிட்டுப் படிகளில் அசட்டையாக இறங்கிக்கொண்டு போனார்.

"அப்படியா?" என்று வியப்பைக் காட்டினார் குருதேவர்.

"ஆம்." சர்வ சாதாரணமாக வந்தது தேவரின் பதில்.

"அவசரத்தில் கிரீடத்தை வைத்துக்கொண்டிருக்கலாம்."

"இருக்கலாம்."

"அதனால் நாகதேவியை நாகதேவி அல்லவென்று சொல்ல முடியாது."

"இருக்கலாம்."

"என்ன இருக்கலாம்?" குருநாதர் எரிச்சலைக் காட்டினார்.

"நீங்கள் சொல்வது சரியாகவும் இருக்கலாம்" என்ற இந்தளதேவர் மாளிகைப் படிகளில் ஒரு விநாடி நின்று தூரத்தே கடலில் ஆடி நின்ற சாவகக் கப்பல் மீது தமது பார்வையை நிலைக்க விட்டார். பிறகு படிகளில் இறங்கி உபேந்திரன் தங்கியிருந்த முதல் மாளிகையில் நுழையாமல் வீதியை நோக்கிச் சென்றார்.



குருநாதரும் அவரைத் தொடர்ந்தார். அதை இந்தள தேவர் தடுக்கவுமில்லை. குருநாதரைக் கூட வரும்படி அழைக்கவுமில்லை. நேராகக் கடற்கரையை நோக்கிச் சென்று பரதவர்கள் குடியிருப்புகளை அடைந்தார். அங்கிருந்த பரதவன் ஒருவனை அழைத்து, "உன் பெயர் என்ன?" என்று வினவினார்.

"மாடன்" என்றான் பரதவன்.

"அதோ இருக்கிறதே ஒரு மரக்கலம்" என்று சாவக மரக்கலத்தைச் சுட்டிக்காட்டி, "அது எத்தனை நாளாக இங்கு இருக்கிறது?" என்று வினவினார்.

"இரண்டு நாள்களாக" என்றான் மாடன்.

"அதில் ஏதாவது விசேஷமுண்டா?" என்று மீண்டும் வினவினார் தேவர்.

"உண்டு. அங்கிருந்த ஒருவருக்குப் பைத்தியம் பிடித்ததாகப் பேசிக்கொண்டார்கள்" என்றான் மாடன்.

தேவர் குருநாதரைத் திரும்பி நோக்கினார். "யாருக்குப் பைத்தியம் பிடித்தது குருநாதரே?" என்று வினவினார்.

"எனக்குத் தெரிந்தவரை யாருக்கும் பைத்தியமில்லை. பிடித்திருந்தால் எனக்குத்தான் பிடித்திருக்க வேண்டும். அப்பொழுது பிடிக்காவிட்டாலும் இப்போது பிடிக்கும் போலிருக்கிறது" என்ற குருநாதர் துன்பத்தை முகத்திலும் காட்டினார், குரலிலும் காட்டினார்.

இந்தளதேவர் லேசாக நகைத்தார். "உமக்குப் பைத்தியம் பிடிப்பதால் யாருக்கும் அனுகூலமில்லை" என்று நகைப்பின் ஊடே சொன்னார்.

www.cleanindians.com

பிறகு கடற்கரையில் இருந்து திரும்பி நாளங்காடி பூதமிருந்த இடத்துக்கு வந்து அதை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டு நின்றார். அவர் பெரும் ஊகத்துடன் பூதத்தைப் பார்த்ததைக் கண்ட குருநாதர், "அதை எதற்காக உற்றுப் பார்க்கிறீர்கள்?" என்று விசாரித்தார்.

"நாளை மன்னர் வந்தால் விசாரணை இருக்கும். விசாரணை இருந்தால் குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கும்; அதை நிறைவேற்ற இந்தப் பூதத்தின் கால்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாமா என்று பார்க்கிறேன்" என்றார் தேவர்.

"மன்னர் இங்கு பலி கொடுக்கவா வருகிறார்?"

"இல்லை நீதி வழங்க வருகிறார். நீதி வழங்கும் போது யாருக்காவது மரணதண்டனை கொடுக்க வேண்டியிருந்தால் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டாமா?"

"அதுவும் உங்கள் அலுவல்தானா?"

"மன்னர் ஆணை எதுவும் என் அலுவல்தான்! வேறு எதற்காக குடிமக்கள் இருக்கிறார்கள்? மன்னரைப் பணியத் தானே! அவர் கட்டளைகளை நிறைவேற்றத்தானே?" என்று கேட்ட இந்தளதேவர் மீண்டும் திரும்பி மாளிகையை நோக்கி நடக்கலானார்.

மாளிகைக்கு வந்தவர் குருநாதரை அவரது அறைக்குள் போகச் சொல்லிவிட்டு தாம் மட்டும் உபேந்திரன் அறைக்குள் நுழைந்தார். நுழைந்ததும் அவரே கதவைச் சாத்திவிட்டுப் படைத்தலைவனுக்கு எதிரிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

உபேந்திரன் தலை நிமிர்ந்து இந்தளதேவரை நோக்கினான். "தேவரே! உமது வருகை மன்னர் வரப் போவதைக் குறிக்கிறது" என்றான்.

www.cleanindians.com



அதை ஒப்புக்கொள்ளுவதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் இந்தளதேவர்.

"எப்பொழுது வருகிறார்?" என்று வினவினான் படைத் தலைவன்.

"நாளை வருகிறார்" என்று இந்தளதேவர் பதில் சொன்னார்.

"எப்படி வருகிறார்? நில மார்க்கமா? கடல் வழியா?" என்று உபேந்திரன் வினவினான்.

"சொல்லவில்லை மன்னர்" என்றார் இந்தளதேவர்.

"கடல் வழியாகத்தான் இருக்கும்" என்ற படைத் தலைவன், "எனக்கு ஏதாவது உத்தரவு உண்டா?" என்று வினவினான்.

"ஏதுமில்லை. நிலைமையை உங்களால் சமாளிக்க முடியாவிட்டால் உதவுவதற்கு என்னை அனுப்பினார்" என்று தாம் வந்த காரணத்தை விளக்கினார், இந்தளதேவர்.

"இந்த நாகதேவியைப் பற்றி மன்னருக்கு என்ன தெரியும்?" என்று படைத்தலைவன் கேட்டான்.

"மன்னருக்குத் தெரியாதது சோழ மண்டலத்தில் என்ன இருக்க முடியும்?" என்று பதிலுக்கு வினவினார் தேவர்.

"எதுவுமிருக்க முடியாது. மன்னர் பார்வை சோழ மண்டலமெங்கும் பாய்கிறது. சோழதேவர் அறியாதது ஏதுமில்லை" என்ற படைத்தலைவன் மன்னரை எண்ணித் தலைவணங்கினான்.

இந்தளதேவரும் தலைவணங்கினார், மன்னர் எதிரிலிருப்பதாக நினைத்து. பிறகு படைத்தலைவனை நோக்கித்

கேட்டார்: "மன்னர் வருமுன்பு நாகதேவியை நான் சந்திக்க முடியுமா?" என்று.

படைத்தலைவன் புன்முறுவல் கொண்டு "இங்கு தேவியைச் சந்திக்கவில்லையா?" என்று வினவினான்.

"தேவி வேஷம் போட்டவரைச் சந்தித்தேன்" என்றார் இந்தளதேவர்.

இந்தளதேவரின் பார்வையிலிருந்து எதுவும் தப்பாது என்பதை அறிந்திருந்த உபேந்திரன், "வேண்டுமானால் நாகதேவியை இன்றிரவு சந்திப்போம்" என்றான்.

"எங்கிருக்கிறாள் அவள்?" இந்தளதேவர் வினவினார்.

"அவள் மரக்கலத்தில்தான்."

"காவலில் வைத்திருக்கிறீர்களா?"

"காவலென்று சொல்ல முடியாது. கூடியவரை தப்ப முடியாமல் வைத்திருக்கிறேன்."

"அப்படியா! அவளுக்குத் தீங்கு ஏதுமில்லையே!"

"இல்லை! நன்றாகவே இருக்கிறாள்!"

"பூட்டி வைத்திருக்கிறீர்களா?"

"ஆம்! வேறு வழியில்லை."

அதை ஆமோதித்த இந்தளதேவர், "எதற்கும் இன்றிரவு நாம் சாவக மரக்கலத்திற்குச் செல்வோம். இரவு நான் தங்களைக் கடற்கரையில் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு எழுந்தார்.

"எங்கு தங்குகிறீர்கள்?"

"பரதவர் தலைவன் விடுதியில்."



"இரவு..."

"இரண்டாம் ஜாம ஆரம்பத்தில் சந்திப்போம்" என்று கூறிய இந்தளதேவர் உபேந்திரனிடம் விடை பெற்றுச் சென்றார்.

அவர் படிகளில் இறங்கிச் சென்றதும் குருநாதர் உபேந்திரன் அறைக்குள் தலையை நீட்டினார். "குருநாதரே?" என்று வினவினான் படைத்தலைவன்.

"இந்தளதேவர்..." மென்று விழுங்கினார் குருநாதர்.

"உம்..."

"மருதி நாகதேவியல்லவென்பதைப் புரிந்து கொண்டு விட்டார்."

"அதனாலென்ன?"

"நாளை மன்னர் வருகிறார்."

"அதனாலென்ன?"

"நாம் செய்த துரோகச் செயல் தெரிந்தால் என்ன ஆகும்?"

"நான் என்ன துரோகச் செயல் புரிந்தேன்?" என்று கேட்ட உபேந்திரன் நகைத்துவிட்டு, "குருநாதரே! கலங்காதீர். மன்னர் நீதிக்குப் புறம்பாக எதையும் செய்யமாட்டார்" என்று ஆறுதல் சொல்லி அவருக்குப் போக விடையும் கொடுத்தான்.

அன்றிரவு இரண்டாவது ஜாம ஆரம்பத்தில் கடற்கரையில் இந்தளதேவர் சித்தமாகக் காத்திருந்தார். படைத்தலைவன் வந்ததும் இருவரும் ஒரு படவை எடுத்துக் கொண்டு சாவகத்தின் கப்பலை நோக்கி விரைந்தனர்.

www.cleanindians.com

கப்பலின் தளத்தில் ஏறி நாகதேவியை அடைத்துப் பூட்டியிருந்த அறைக்கு தேவரை அழைத்துச் சென்ற உபேந்திரன் அறைக்கதவண்டை வந்ததும் சிலையென நின்றான். அறைக் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. நாகதேவி அறையில் இல்லை.

## 33. தூதரும் மகளும்

**நா**கதேவி சிறையில் இல்லையென்பதை உணர்ந்ததும் ஒரு விநாடி சிலையென நின்றுவிட்ட உபேந்திரன், சிறிது சுரணையை வரவழைத்துக் கொண்டு துரிதமாக இயங்கலானான். "தேவரே! சற்று இங்கேயே இருங்கள். நாகதேவி தப்பிய மர்மத்தை அறிந்து வருகிறேன்" என்று கூறிவிட்டுப் பக்கத்திலும் எதிரிலும் இருந்த அறைகளின் கதவுகளைத் திறந்து பார்த்தான். பிறகு தளத்துக்கு ஓடினான். கப்பலைக் காத்து நிற்க, தான் விட்டுப்போன சாவகத்து மாலுமிகளில் ஒருவரை கூடக் காணாததால் வியப்பெய்தி அடித்தளத்துக்கு ஓடினான். அடித்தளத்தில் துடுப்புகள் துழாவும் அறை பூட்டி இருந்தது. அதன் முன்பு ஒரு மாலுமி மண்டையில் பலத்த காயத்துடன் மூர்ச்சையாகக் கிடந்தான். அவன் பக்கத்தில் பெரிய இரும்புச் சலாகை ஒன்று கிடந்தது. அந்த இரும்புச் சலாகையால்தான் அவன் காயப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணர்ந்த உபேந்திரன் அவன் காயத்தை எட்ட ஒரு பாத்திரத்திலிருந்த குளிர்நீரால் கழுவினான். அதனால் சற்று கண் விழித்த மாலுமியை நோக்கி, "என்ன நடந்தது?" என்று வினவினான்.

"நீங்கள் பூட்டி வைத்தீர்களே..." என்று முனகினான் மாலுமி.

www.cleanindians.com



"ஆம்... அவளுக்கென்ன?" என்று வினவினான் படைத் தலைவன்.

"நீங்கள் சென்றபின்பு கதவை பலமாக உடைத்து..."

"உம்..."

"அதை அடக்கிக் கட்டிப் போடக் கதவைத் திறந்தோம்..."

"உம்..."

"ஓர் இரும்புச் சலாகையைக் கொண்டு எங்களைத் துரத்தியது..."

"உம்..."

"அது பைத்தியமென்று தெரிந்ததால் நாங்கள் பின்னால் நகர்ந்தோம். உடனே கதவின் பூட்டையும் தாழ்களையும் வெறிகொண்டு இரும்புச் சலாகையால் உடைத்தெறிந்து எங்களைத் துரத்தியது. அடித்தளத்துக்கு ஓடினோம். துடுப்புத் துழாவும் அறைக்கு அருகில் வந்ததும் என் தலையில் பலத்த அடி விழுந்து சுரணை தப்பினேன்."

"மற்றவர்கள்?"

"அந்த அறைக்குள் இருக்கவேண்டும்" என்று கதையை முடித்தான் அந்த மாலுமி.

உபேந்திரன் சினம் உச்சஸ்தாயியை அடைந்தது. "முட்டாள்கள்! ஒரு பெண்ணைச் சமாளிக்க முடியாத நீங்கள் வீரர்களா?" என்று சீறிய படைத்தலைவன் அடுத்து அடித்தள அறைப் பூட்டை அந்த இரும்புச் சலாகையால் உடைக்கவே பூட்டு தெறித்து கதவு திறந்தது. உள்ளிருந்து நான்கு மாலுமிகள் வெளியே வந்தார்கள். அவர்களை இகழ்ச்சியுடன் நோக்கிய உபேந்திரன் படிகளில் ஏறி இந்தளதேவர் இருந்த இடத்திற்கு வந்து அவரிடம் நடந்த

விவரங்களைச் சொன்னான். இந்தளதேவர் ஒரு விநாடி தான் யோசித்தார். பிறகு சொன்னார், "நாம் உடனடியாகக் கரைக்குச் செல்ல வேண்டும்" என்று.

அவர் மனத்திலோடிய எண்ணத்தைப் புரிந்து கொண்ட உபேந்திரன், "ஆம்; மருதியின் உயிர் ஆபத்தில் இருக்கிறது. தேவரே, வாருங்கள்" என்று கூறிக்கொண்டே அவர் பின்தொடர மேல்தளத்தை நோக்கி ஓடினான். பிறகு இருவரும் நூலேணியில் இறங்கி, தாங்கள் வந்த படகில் புகாரின் கரையை நோக்கி விரைந்தனர்.

புகார்க் கடலில் அன்று அலைகள் பெரிதாக எழும்பிக் கொண்டிருந்தன. அவற்றை எழுப்பிய பெருங்காற்றும் ஊழிக் கூச்சல்போல் 'ஊ'வென்று கூச்சலிட்டு ஏதோ பெரும் அனர்த்தம் நடக்கவிருப்பதைத் தெரிவித்துக் கொண்டிருந்தது. அத்தனை பெரிய அலையிலும் காற்றிலும் அனாயாசமாகப் படகைச் செலுத்தினான் உபேந்திரன். சில வேளைகளில் எதிரலைகள் காரணமாகப் பின்னுக்கு நகர முற்பட்ட படகைத் தனது புயங்களின் வலிமையாலும் துடுப்புகளைத் துழாவும் திறமையாலும் முன்னுக்கு சிரமப்பட்டுச் செலுத்தினான். இத்தனைக்கும் இந்தளதேவர் எந்தவித உணர்ச்சியையோ பதற்றத்தையோ காட்டாமல் கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தார். அலைகளில் தாவித் தாவிப் படகு கரைக்கு வந்து அது உபேந்திரனால் தரைக்கு இழுக்கப்பட்ட பின்பே இந்தளதேவர் வாயைத் திறந்தார்.

"படைத்தலைவரே! நீர் நேராக மாளிகைக்குச் சென்று மருதியைக் காப்பாற்றப் பாரும். அத்துடன் நாகதேவியை மருதியாகவே வைத்திரும். மருதி, தேவியின் கிரீடங்களை அணிந்தே இருக்கட்டும். மன்னர் வந்த பின்பு மற்ற விஷயங்களைச் சரிசெய்துகொள்ளலாம்" என்றார்.

www.cleanindians.com



படைத்தலைவன் அவர் சொற்களின் காரணத்தை அறியாவிட்டாலும் தலையை அசைத்துவிட்டு மாளிகையை நோக்கி ஓடினான். விடுவிடுவென்று மாளிகைப் படிகளில் ஏறி மருதி இருந்த அறையை நோக்கி ஓடினான். மருதியின் அறை தாழிடப்பட்டிருந்ததால் அதன் மீது தனது உடலை பலமாக மோதி தாள் உடைந்து கதவு உள்ளே விழும்படிச் செய்யவே உள்ளிருந்த பயங்கர நிலை தெள்ளெனத் தெரிந்தது உபேந்திரன் கண்களுக்கு.

அப்பொழுதும் மருதி நாகதேவியின் உருவத்தில் உட்கார்ந்திருந்தாள். அப்பொழுதும் முத்தலை ஆபரணம் அவள் குழலை அழகு செய்திருந்தது. கையில் நாககங்கணம் பளீரென நாகரத்தினங்களுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவள் எதிரே சொட்டச் சொட்ட நனைந்த குழலுடனும் உடையுடனும் உண்மை நாகதேவி நின்றிருந்தாள். நனைந்த ஆடை அவள் பின்னழகுகளில் ஒட்டி அவற்றின் திண்மையையும் ஆங்காங்கு சதையின் வெண்மையையும் புலப்படுத்தியிருந்தது. கதவு உடைக்கப் பட்டதும் சரேலென்று திரும்பிய நாகதேவியின் அழகிய விழிகள் அழகாக இல்லை. வெறி பிடித்து சீறின. அவள் மார்பகம் ஈரச் சீலையால் வெளிப்படையாகத் தெரிந்தும் சீறியும் நின்றாலும் அந்த அழகை கண்களின் வெறி மறைக்கவே செய்தது. "படைத்தலைவரே! சிறிது நேரங் கழித்து வந்துவிட்டீர்கள். இதோ உங்கள் காதலி வானுலகம் சென்று கொண்டிருக்கிறாள்" என்று கூறிக்கொண்டே அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை படைத் தலைவன் உணருமுன்பு முத்தலை நாகாபரணத்தை மருதியின் தலையிலிருந்து சரேலெனப் பிடுங்கி அவள் மார்புச் சீலையைக் கிழித்து அதில் பதிய வைக்க முனைந்தாள். அந்த நாகாபரணம் பதிந்துவிட்டால் அதில்

உள்ள விஷத்திலிருந்து உலகத்திலுள்ள எந்த மருந்தும் மருதியைக் காப்பாற்ற முடியாதென்றும் அப்படியே முடிந்தாலும் மருத்துவன் வருவதற்குள் மருதியின் ஆவி பிரிந்துவிடுமென்பதையும் உணர்ந்து கொண்டதால் படைத் தலைவன் ஏது செய்வதென்று அறியாமல் அதிர்ச்சியுற்று நின்றான். ஒருமுறை மட்டும் கூவினான். "நாகதேவி! அவளைக் கொல்லாதே! நீ எதைக் கேட்டாலும் தருகிறேன். எங்கு அழைத்தாலும் வருகிறேன். உன்னையே மணக்கிறேன்" என்று.

நாகதேவி அவனை நோக்கித் திரும்பி நகைத்தாள் பலமாக. "உபேந்திரா! காதலியின் உயிருக்காகக் கதறுகிறாய்! அவள் பிணத்தைக் கண்டு பிறகு கதறப் போகிறாய்! என் உடல் பொருள் ஆவி மூன்றையும் உனக்கு அர்ப்பணித்தேன். அவற்றை உதாசீனம் செய்தாய்! என்னைத் தூசிபோல் நடத்தினாய்! அதன் பலனை அனுபவி!" என்று கூறிவிட்டு மருதியைக் கட்டிலில் தள்ளி அவள் கால்களைத் தனது ஒரு காலால் அழுத்தினாள். "மருதி! உன்மேல் எனக்குப் பொறாமையில்லை. நீ ஓர் அநாதை, நீ செய்த தவறு ஒன்றுதான். என்னைப் போலவே பிறந்தாய். அதனால் ஏற்பட்ட கலவரமும் குழப்பமும் அதிகம். நாகர் குலத்துக்கு நீ ஒரு சாபக்கேடு ஆனாய்! ஆகையால் நீ போய்ச் சேர். நாம் இருவரும் இந்த உலகத்தில் இருக்க முடியாது" என்று கூறிவிட்டு நாகாபரணத்தை மருதியின் வலது மார்பகத்தில் பொருத்தினாள். அதை அழுத்த கையையும் அசைத்தாள். அந்தக் கை அசைந்திருந்தால் மருதியின் கதை முடிந்திருக்கும்.

ஆனால் அதே சமயத்தில் "நாகதேவி!" என்று எழுந்த ஒரு குரல் அவள் கையைத் தேக்கியது. நாகதேவி தனது கொடிய செயலை நிறுத்தி திரும்பி நோக்கினாள். அவள்

www.cleanindians.com



கண்களிலிருந்து வெறி மறைந்து அதன் இடத்தை அச்சம் ஆட்கொண்டது.

அவள் பெயரை அழைத்தவர் வாயிற்படியில் நின்றிருந்தார். அவரது உடை நாகர்களின் உடையாயிருந்தது. அவர் தலையிலும் முத்தலை நாகாபரணமொன்று சுற்றிக் கிடந்தது. அவரைக் கண்டதும் வெலவெலத்துப் போன நாகதேவி, "நீங்கள்! நீங்கள்!" என்று குழறினாள்.

"ஆம் தேவி! நானேதான், எழுந்து வா" என்று அன்புடன் அழைத்தார் அந்த மனிதன்.

நாகதேவி, மருதியின் மீது அழுந்தியிருந்த தனது காலையும் எடுத்தாள். அவள் மார்பில் அழுத்த முயன்ற முத்தலை நாகாபரணத்தையும் எடுத்துக் கொண்டாள். தன்னை அழைத்த அந்த மனிதரை நோக்கிக் கனவில் நடப்பவள்போல் நடந்து சென்றாள். அவள் தன்னை அணுகியதும் அவளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்ட அந்த மனிதர், "தேவி! உன் உடலெல்லாம் நனைந்திருக்கிறதே. உடலைத் துடைத்துக்கொள். தலையையும் துவட்டிக்கொள்" என்று அன்புடன் சொன்ன அந்த மனிதர் படைத்தலைவனை நோக்கி, "நீங்களும் அந்தப் பெண்ணும் இந்த அறையைவிட்டுச் சென்றால் நாகதேவி இந்த அறையில் இருப்பாள்" என்று கூறினார். அவர் பேச்சில் சிறிது அதிகாரத்தின் ஒலியும் இருந்தது.

"நீங்கள் யார் எனக்கு உத்தரவிட? உங்களுக்கு அதிகாரமளித்தது யார்?" என்று படைத்தலைவன் சற்று உஷ்ணத்துடன் கேட்டான்.

பதிலுக்கு அந்த மனிதர் படைத்தலைவனை வியப்புடன் உற்று நோக்கினார். "என் உடையிலிருந்தே என்னை யாரென்று நீங்கள் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

புரியாவிட்டால் இந்தளதேவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்" என்றார் அந்த மனிதர்.

அந்த சமயத்தில் இந்தளதேவரும் அங்கு தலையை நீட்டினார். "படைத்தலைவரே! இவர்தான் சாவகத்தின் தூதர். மன்னர் அனுப்பித்தான் நாங்கள் இருவரும் இங்கு வந்தோம். அவர் சொல்கிறபடி இந்த அறையை நாக தேவிக்கும் அவருக்கும் ஒழித்துவிடுங்கள்" என்றும் சொன்னார்.

உபேந்திரன் அசந்து போனான். "சாவகத்தின் தூதரா!" என்று வினவவும் செய்தான்.

"ஆம்" என்றார் தேவர்.

"நாகதேவியை நாம் எதற்காக இவருடன் விட வேண்டும்?" என்று உபேந்திரன் வினவினான்.

"அவர் பாதுகாப்பு அவளுக்கு அவசியம்" என்றார் இந்தளதேவர். "அது நியாயமுங்கூட," என்றும் சொன்னார்.

"என்ன நியாயம்?" உபேந்திரன் கேள்வியில் ஆத்திர மிருந்தது.

"நாகதேவி அவர் பெண், விவாகமாகாத பெண், தந்தையுடன் இருப்பதுதான் நியாயம்" என்றார் இந்தள தேவர்.

உபேந்திரனுக்கு ஏதும் விளங்கவில்லை. அதை வாய் விட்டும் சொன்னான். "எனக்கு ஏதும் விளங்கவில்லை தேவரே" என்று.

"நாளை விளங்கும்" என்றார் தேவர்.

அடுத்த நாள் விளக்கம் கிடைத்தது. தமிழக வரலாற்றை உலுக்கும் விளக்கம் அது.

## 34. அலை அருகில்

இந்தளதேவர் சொன்ன புது விவரங்களால் பெரிதும் சலனமடைந்த இதயத்துடன் மருதியை அழைத்துக் கொண்டு அந்த அறையை விட்டுக் கிளம்பிய உபேந்திரன், நாகதேவி இருந்த மாளிகையிலிருந்து படிகளில் இறங்கி அதன் இரட்டை மாளிகையான தானிருந்த மாளிகைக்கு வந்து தனது அறைக்குள் நுழைந்தான். இந்தளதேவரும் அவனைத் தொடர்ந்து வந்து, "படைத்தலைவரே! நீங்கள் நிம்மதியாக இன்று உறங்கலாம். நாகதேவியின் நாடகக் கதையின் கடைசிக் காட்சி வந்துவிட்டது. இனி அவளால் உங்களுக்கு எவ்விதத் தீங்கும் வராது. நான் நாளை வருகிறேன்" என்றார் வாயிற்படியில் நின்றபடியே.

உபேந்திரன் குழம்பிய கண்களுடன் அவரை நோக்கி "தாங்களும் இங்கேயே தங்கலாமே" என்றான்.

இந்தளதேவர் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. சாவக மரக்கலத்திலிருந்து புகார்க்கரையில் சாவகத்தின் தூதர் தோன்றும்வரை அவரது முகத்தில் காணப்பட்ட கவலை மறைந்து முகத்தில் மகிழ்ச்சியின் சாயை படர்ந்து கிடந்தது. அவர் உபேந்திரனுக்குப் பதில் சொன்னபோது அதில் கவலை நீங்கி ஓரளவு உற்சாகமிருந்ததை உபேந்திரன் கவனித்தான். புன்முறுவல் தவழ்ந்த உதடுகளைத் திறந்த இந்தளதேவர் சொன்னார், "தங்கலாம், ஆனால் மருவூர்ப் பாக்கம் போக வேண்டும். அங்கு சிறிது வேலை இருக்கிறது" என்று.

"அப்படியானால் உங்களுக்கு உதவ நானும் வருகிறேனே" என்றான் உபேந்திரன்.

www.cleanindians.com

"வேண்டாம். இது நான் தனிப்பட செய்ய வேண்டிய அலுவல்; இதில் மூன்றாவது மனிதருடைய தலையீடு கூடாதென்பது மன்னர் உத்தரவு" என்றார் இந்தளதேவர்.

"நான் மூன்றாவது மனிதனா? மன்னருக்கு நான் பணியாளனல்லவா?" என்று வினவிய உபேந்திரன் குரலில் சிறிது வருத்தமும் இருந்தது.

இந்தளதேவர் ஒரு விநாடிதான் சிந்தனையில் இறங்கினார். "யார் யாருக்கு எந்தப் பணியை இட வேண்டுமென்பதை மன்னரைப்போல் அறிந்தவர் சோழ மண்டலத்தில் கிடையாது. அவர் இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டியது அவரது ஊழியர் கடமை" என்று பொதுப்படையாகப் பதில் சொல்லிவிட்டு, "படைத் தலைவரே! மருதியை சமாதானப்படுத்துங்கள். பாவம், ஏதுமறியாத பெண். சில நாளாகவே பேராபத்திலிருந் திருக்கிறாள். இன்று அவள் உயிர் மயிரிழையில் தப்பியிருக் கிறது!" என்றும் தமது அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு அந்த அறையைவிட்டு அகன்றார்.

அவர் அகன்றதும் அறைக்கதவு திறந்திருப்பதையும் லட்சியம் செய்யாது மருதியை மார்புடன் அணைத்துக் கொண்டு அவள் முதுகை ஆதரவுடன் தடவிக் கொடுத்த உபேந்திரன் "மருதி! இனி உனக்கு எந்தவிதக் கஷ்டமோ ஆபத்தோ கிடையாது. இன்றிரவைக் கழி. நாளைக் காலையில் வருகிறேன்!" என்று ஆதரவாகவும் அன்பாகவும் பேசவும் செய்தான்.

மருதி பேசும் சக்தியை அறவே இழந்திருந்ததால் அவனுக்குப் பதிலேதும் சொன்னாளில்லை. அவன் மார்பிலிருந்து முகத்தையும் நீக்கினாளில்லை. தன்னைக் கட்டிப் பிணைத்திருந்த அவன் கைகள் தனது உடலிலிருந்து

www.cleanindians.com



நீங்கியபோது தனது கைகளால் அவனைப் பிணைத்தாள், இறுக்கினாள். அப்படி இறுக்கியதால் அவன் மார்பில் அழுந்திக் கிடந்த அவளது திண்ணிய இள மார்பக மொட்டுகள் இரண்டும் அணைப்பின் இறுக்கலால் சிறிது மலர்ந்து படர்ந்தாலும் அதிகமாக விரியவில்லையாதலால், உபேந்திரன் உடலில் இன்ப அலைகள் பாய்ந்து சென்றன. அவன் பிரிந்து போய்விடப் போகிறானே என்ற பயத்தில் அவனுடைய இடைக்குக் கீழே இணைந்து அழுந்திய அவள் பூவுடல் அவன் உணர்ச்சிகளை உலுக்கலாயிற்று. இத்தனை யையும் சமாளித்துக்கொண்டு உபேந்திரன், "மருதி! இனி அச்சத்திற்கு ஏதுமில்லை. என்னை விடு. இரவு முடிய இன்னும் ஒரே ஜாமந்தானிருக்கிறது. விடிந்ததும் வருகிறேன்!" என்று கூறி அவள் கைகளைத் தன்னிட மிருந்து பிரிக்க முயன்றான்.

அவள் அவனை விடவில்லை. "படைத்தலைவரே! என் உறுதியெல்லாம் உடைந்துவிட்டது. எனக்கு இனிமேல் எதிலும் நம்பிக்கையில்லை. நீங்கள் சென்றுவிட்டால் அந்த ராட்சஸி வந்து என்னைக் கொன்றாலும் கொல்லுவாள். அவளிடம் இத்தனை நாள் நான் அனுபவித்த கஷ்டங்கள் போதும். இங்கேயே இருங்கள். அடுத்த ஒரு ஜாமத்தை விழித்தே கழிப்போம்" என்று கெஞ்சினாள்.

உபேந்திரன் அவள் தலையை நிமிர்த்தினான். குனிந்து அவள் வழவழத்த புஷ்டியான கன்னங்களைத் தனது உதடுகளால் தடவினான். பிறகு அவள் செம்பருத்தி இதழ் களையும் லேசாகத் தனது அதரங்களால் தொட்டான். அடுத்து அவள் முகத்தைவிட்டு மீண்டும், "மருதி! உனக்கு தீங்கு ஏற்படும் என்று நம்பினாலும் அந்த இடத்தை விட்டு நான் போகமாட்டேன். ஆனால் உனக்கு எந்தவித அபாயமும் கிடையாது. எதற்கும் எதிர் அறையிலிருக்கும்

குருநாதரை உனக்குத் துணையாக விட்டுப் போகிறேன். கீழே சென்று எல்லனையும் அனுப்புகிறேன்!" என்று சொன்ன உபேந்திரன் சற்று திரும்பி, "குருநாதரே!" என்று அழைத்தான்.

அதுவரை அந்த அறையின் பக்கச் சுவரில் சாய்ந்து மறைந்து நின்றிருந்த குருநாதர் சரேலெனத் தலையை நீட்டி "படைத்தலைவரே! இதோ இருக்கிறேன்" என்று அறை முகப்பில் தலையை நீட்டினார்.

உபேந்திரன் புருவங்கள் கேள்வி கேட்பனபோல் எழுந்தன. "இத்தனை நேரம்..." என்று சொற்களை முடிக்காமல் விட்டான்.

"இங்குதானிருந்தேன்..." குருநாதர் தயக்கத்துடன் பதில் சொன்னார்.

"நாங்கள் பேசுவதை ஒட்டுக் கேட்டீரா?" என்று வினவினான் படைத்தலைவன்.

"ஒட்டுக் கேட்க அவசியமில்லை. உமது குரல் பலமாகத் தானிருந்தது." குருநாதர் குரலில் வெறுப்பு இருந்தது.

"அப்படியானால் புதிதாக உமக்கு ஏதும் சொல்ல வேண்டிய அவசியமில்லை."

"இல்லை. நாகதேவி நாகைக்கு வந்த நாளாய் இந்தப் பேச்சை உம்மிடமிருந்து நாள் தவறாமல் கேட்டு வருகிறேன். காதல் பேச்சு எனக்கு அலுத்துவிட்டது."

"இதற்கு முன்பு தங்களுக்கு இதில் அதிகப் பரிச்சய முண்டோ?"

"நான் துறவி என்பது நினைவிருக்கட்டும்."

"அதைத் தாங்கள் நினைப்பில் வைத்துக்கொண்டால் போதும்."



"வைத்துக் கொள்ளாமல் என்ன செய்துவிட்டேனாம்?"

"ஒரு புருஷனும் பெண்ணும் பேசுவதை ஒட்டுக் கேட்கிறீர்?"

இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டதும் அதிக வெறுப்பை முகத்தில் காட்டினார் சுத்ததத்தர். "ஹூம்" என்று வெறுப்பு கலந்த மூச்சையும் வெளியிட்டார்.

"என்ன ஹூம்?" என்று கேட்டான் படைத்தலைவன்.

"ஒட்டுக் கேட்பதாவது மண்ணாங்கட்டியாவது? மருதியை நாகதேவியாகவும், நாகதேவியை மருதியாகவும் நினைத்து நீர் திரும்பத் திரும்பக் கொஞ்சி என் கழுத்தை அறுத்திருக்கிறீர். நாகையில் ஆரம்பித்த இந்தக் குலாவல் கப்பலிலும், இப்பொழுது புகாரிலும் தொடர்ந்திருக்கிறது. இதில் ஒளிவு மறைவும் அதிகமாகக் காணோம். எல்லாம் துறவியான என் கண்முன்னால் நடந்திருக்கிறது. கஷ்டம்! கஷ்டம்!" என்று அலுத்துக்கொண்டார் குருநாதர்.

இதைக் கேட்ட உபேந்திரன் மருதி இருவருமே நகைத்தார்கள். "இந்த அவதியிலிருந்து உமக்கு விடுதலையளிக்கின்றேன்" என்றான் உபேந்திரன் சிறிது நகைப்பை நிறுத்தி.

"எப்படியோ?" என்று வினவினார் குருநாதர்.

"மருதியை உமது பாதுகாப்பில் விட்டுப் போகிறேன்" என்றான் படைத்தலைவன்.

"வேண்டாம் வேண்டாம்" குருநாதர் குரலில் நடுக்கம் இருந்தது.

"ஏன்?"

"யாரையும் பாதுகாக்கும் சக்தி எனக்கில்லை."

"உம்மை யார் என்ன செய்ய முடியும்?"

"நாகதேவி..."

www.cleanindians.com

"அவளால் உமக்கு எந்தக் கெடுதியும் ஏற்படாது."

"சொல்வது சுலபம்."

"இப்பொழுது அவள் தகுந்த பாதுகாப்பில் இருக்கிறாள்."

"அவளைத் தடுக்கக்கூடிய பாதுகாப்பு உலகில் இல்லை. கப்பலில்கூட பூட்டித்தான் வைத்துவிட்டு வந்தீர். நடந்தது என்ன?"

"குருநாதரே!"

"உம்?"

"நீர் இத்தனை பயங்கொள்ளியென்பது எனக்குத் தெரியாது."

"இப்பொழுது தெரிந்துகொள்ளும், நான் சோழ மண்டலத்தைவிட்டே ஓடப் போகிறேன்."

"சூடாமணி விஹாரம்?"

"எக்கேடும் கெட்டுத் தொலையட்டும்."

சுத்ததத்தரின் இந்தத் தியாக உணர்ச்சி உபேந்திரனுக்கு நகைப்பை உண்டாக்கியதால் சிறிது நகைக்கவும் செய்தான்.

"குருநாதரே! உமக்காக சைலேந்திர மன்னர்களால் கட்டப்படும் விஹாரத்தை விட்டு ஓடுவது பெரும் தவறு. புத்தபிரானையும் புத்த மதத்தையும் கைவிட்ட குற்றம் உம்மைச் சேரும்" என்று கூறினான் உபேந்திரன் நகைப்பின் ஊடே. "சரி குருநாதரே! நேரமாகிறது. மருதியைக் கவனித்துக் கொள்ளும். உமக்குத் துணையாக எல்லனையும் அனுப்புகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்ற உபேந்திரனை மாளிகை வாயிலிலேயே எல்லன் சந்தித்தான்.

"எல்லா!" என்றழைத்த படைத்தலைவன் "இன்று மருதியையும் சுத்ததத்தரையும் கவனித்துக்கொள். நாளைக்



காலையில் நான் வருகிறேன்" என்று உத்தரவிட்டு பரதவர் குடியிருப்புகளை நாடிச் சென்றான்.

நான்காம் ஜாமம் துவங்கிவிட்டதால் பரதவர் குடியிருப்புகளில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஓரிரு இல்லங்களில் மட்டும் சின்னஞ்சிறு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அந்த இல்லங்களின் ஓரமாகவே நடந்து சென்ற உபேந்திரன் அந்தக் குடியிருப்புகளில் சிறிது பெரிதாயிருந்த ஒன்றை அணுகியதும், "சின்னப்பா! சின்னப்பா!" என்று அழைத்தான்.

பெரிய மீசையும் பூதாகரமான உடலையும் பெற்ற பூதம் போன்ற சின்னப்பன் குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்து, "யாரது?" என்று முரட்டுத்தனமான குரலில் வினவினான்.

www.cleanindians.com

"நான்தான் உபேந்திரன்" என்றான் படைத்தலைவன்.

"அடடா! தாங்களா!" என்று உபேந்திரனைக் கண்டதும் மரியாதைக் குரல் காட்டிய பரதவர் தலைவன், "என்ன எசமான்? ஏது இத்தனை நாழிகைக்கு..." என்று வினவினான்.

"காரணமாகத்தான் வந்தேன். நாளைக் காலையில் இராஜேந்திர சோழ தேவர் இங்கு வருகிறார். என் ஊகம் சரியானால் கடல் வழியாகத்தான் வருவார். அவரை எதிர்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்" என்றான் உபேந்திரன்.

"மன்னரா!" அதிர்ச்சியைக் காட்டினான் சின்னப்பன்.

"ஆம்" உபேந்திரன் குரல் திட்டமாயிருந்தது.

"எதற்காக? எங்களுக்கு இதுவரை யாரும் சொல்லவில்லையே?" என்ற சின்னப்பன் சரேலென்று பேச்சை நிறுத்தி விறைத்து நின்றான்.

"என்ன சின்னப்பா?" என்ற உபேந்திரன் பரதவர் தலைவன் முகத்திலிருந்த அதிர்ச்சிக்குக் காரணம் தெரியாமல் திகைத்தான்.

சின்னப்பன் பேசும் சக்தியை இழந்து கிடந்தான். "அதோ பாருங்கள்" என்று அலை தரையைத் தொட்டுக் கொண்டிருந்த இடத்தைச் சுட்டிக்காட்டினான்.

அலை ஓரத்தில் கடை இரவின் நிலவு அளித்த மங்கலான வெளிச்சத்தில் இருவர் நடந்துகொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் சின்னப்பனைவிட சிதறிய உள்ளத்தால் உடல் நடுங்கினான் உபேந்திரன். அவன் கால்கள் துவண்டு மண்ணில் இறங்கின. மணலில் மண்டியிட்டான் படைத்தலைவன். சின்னப்பனும் அவன் காட்டிய வழியைப் பின்பற்றினான்.

கரைப்பக்கம் தலையைத் திருப்பாமலே இந்தள தேவருடன் ஏதோ பேசிக்கொண்டே இந்தியாவின் பெரிய சாம்ராஜ்யாதிபதியும் மகாவீரனென்று உலகப் பிரசித்தி பெற்றவனுமான ராஜேந்திரசோழ தேவன் நடந்துகொண்டிருந்தார்.

## 35. விசாரணை

நீலத்திரைக் கடல் ஓரத்திலே அலைகள் அடிபணிய சோழ சாம்ராஜ்யாதிபதியான ராஜேந்திரசோழ தேவன் இந்தளதேவருடன் பேசிக்கொண்டே சிந்தனை வசப்பட்டு நடந்ததைக் கவனித்த உபேந்திரனும் பரதவத் தலைவனும் மணலில் மண்டியிட்டுத் தலைகுனிந்து வணங்கினார்களென்றாலும், அவ்விருவரையும் மாமன்னரோ தேவரோ



கவனிக்கவில்லையாகையால் சிறிது நேரம் கழித்து இருவருமே எழுந்து நின்றனர். சோழ மாமன்னனும் இந்தள தேவரும் அலை ஓரமே நடந்து காவிரி கட்லுடன் சங்கமமாகும் இடத்தில் நின்று மறுபடியும் உரையாடலில் இறங்கி விட்டதையும், சக்கரவர்த்தி இருமுறை சங்கமத்துறையைச் சுட்டிக்காட்டியதையும் பார்த்த நாகை நாகர்களின் படைத் தலைவன், சக்கரவர்த்தி ஒருமுறைகூட தூரத்தே ஆடி நின்ற சாவகக் கப்பலின் மீது கண்ணைச் செலுத்தாதையும் தேவர்கூட அதைச் சுட்டிக்காட்டி ஏதும் பேசாததையும் கண்டு அத்தகைய அசட்டைக்குக் காரணம் எதுவாயிருக்குமென்று சிந்தித்துப் பார்த்தான். ஏதும் தெரியாமற் போகவே "எப்படியும் காலையில் எல்லாம் விளங்கும்" என்று தன்னைத் தேற்றிக்கொண்டான். "சின்னப்பா! சக்கரவர்த்தி நான் எதிர்பார்த்தபடி கடல் வழியில் வரவில்லை. நில மார்க்கத்தில்தான் வந்திருக்கிறார். உனக்கு அதிக அலுவலில்லை" என்று சொன்னான்.

www.cleanindians.com

"பாக்கியமில்லையென்று சொல்லுங்கள் படைத் தலைவரே! மன்னரை வரவேற்கும் பாக்கியத்தைப் பரதவர் இழந்தார்கள்" என்று துன்பம் துலங்கிய குரலில் சொன்னான் சின்னப்பன்.

அவனுக்கு எந்தப் பதிலும் சொல்லும் நிலைமையில் படைத்தலைவன் இல்லாததால், "சின்னப்பா! நீ போய் வா! நான் பிறகு வருகிறேன்" என்று பரதவர் தலைவனுக்கு விடை கொடுத்தான். அவன் சென்றதும் புகார் கடற்கரை மணலில் படுத்து விண்ணை நோக்கினான். உதய காலம் நெருங்கிக்கொண்டிருந்த காரணத்தால் நட்சத்திரங்கள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. சந்திரனும் சோபை இழந்து வானத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அந்தச் சந்திரனையும் நினைத்துத் தன்னையும் நினைத்த உபேந்திரன்,

"சந்திரா! உன் நிலையும் எனது நிலையும் ஒன்று. நீ சோபையை இழக்கிறாய். என் சோபையும் நாளை சக்கர வர்த்தியின் விசாரணையில் மங்கிவிடும். கடமையைத் துறந்து நாகையிலிருந்து வந்ததற்குக் கடும்தண்டனை கிடைத்தாலும் கிடைக்கலாம். தலையே போனாலும் போகலாம்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அசதியால் சிறிது கண்களையும் மூடினான். உறக்கம் அவனை ஆட்கொண்டது. பல நாள்களின் வேதனை அவனுக்கு அசதியைத் தந்திருந்ததால் தூரத்தே சக்கர வர்த்தியின் அரண்மனையிலிருந்து எழுந்த உதயகால கீதங்களோ முரசங்களின் ஒலிகளோ அவன் காதில் விழவில்லை. காலைக் கதிரவன் தங்கப் பழமென கடலி லிருந்து எழுந்து அவன்மீது கிரணங்களை வீசிய பின்பே படைத்தலைவன் கண்விழித்தான்.

சூரியன் கிளம்பிவிட்டதைக் கண்டதால் துடிதுடித்து எழுந்து கடலோரம் சென்று அங்கிருந்த கறுத்த குழைவு மண்ணால் பல் துலக்கிக் கடலலைகளில் நீந்தி நீராட்டத் தையும் முடித்துக் கொண்டான். துரிதமாகத் தலை துவட்டி உடல் துடைத்து ஈர உடைகளுடன் தனது மாளிகை அறைக்கு வந்து சேர்ந்தான். அந்த இரட்டை மாளிகை அன்று புதுத் தோற்றம் அளித்தது. அதன் ஆரம்பப் படிகளில் சோழநாட்டு வீரர்களும், சாவகத்தின் தூதர் இருந்த இரண்டாவது வாயிலிலும் அதற்குச் செல்லும் படிகளிலும் சாவகத்து மாலுமிகளும் ஆயுதபாணிகளாய் காவல் காத்து நின்றனர். இந்த ஏற்பாடுகளைக் கண்டதால் வியந்து ஒரு விநாடி படிகளில் நின்றுவிட்ட படைத்தலைவனை எல்லன், "எசமான், உங்களைக் காலை முதல் தேடுகிறேன். எங்கு போயிருந்தீர்கள்? சீக்கிரம் வாருங்கள், புறப்பட வேண்டும்" என்று துரிதப்படுத்தினான்.

www.cleanindians.com



"எங்கு புறப்பட வேண்டும்?" என்ற கேள்வியை வீசினான் படைத்தலைவன்.

எல்லன் பதில் சொல்லு முன்பு இரட்டை மாளிகை யின் வாயிலில் சாவகத்தின் தூதர் ஆயுதம் அணிந்து தலைப்பாகை அணிந்து ராஜரீக உடையில் தோன்றினார். அவருடன் நாகதேவியும் சர்வாலங்கார பூஷிதையாய் வந்தாள். ஆனால் அவள் நாகாபரணம் எதையுமே அணிய வில்லை. இருவரும் படிகளில் இறங்கி வந்ததும் படைத் தலைவனைக் கவனியாது போலவே அவனைத் தாண்டிச் சென்றனர். ஆனால் படைத்தலைவனைத் தாண்டியதும் ஒருமுறை திரும்பிப் பார்த்த நாகதேவியின் கண்களில் மட்டும் அதிக சீற்றமிருந்ததைக் கவனித்தான் படைத் தலைவன். பிறகு சரசரவென்று படிகளில் ஏறித் தனது அறையை அடைந்தான். அங்குதான் முழு விவரங்களை எல்லன் சொன்னான். "சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு உடனடியாக வரும்படியாக இந்தளதேவர் உத்தரவிட்டிருக் கிறார்" என்று.

"மருதி?" என்று வினவினான் படைத்தலைவன்.

"இந்தளதேவரே அழைத்துச் சென்றுவிட்டார்" என்றான் எல்லன்.

இதனால் வியப்படைந்த உபேந்திரன், "இந்தளதேவர் இங்கு எப்பொழுது வந்தார்?" என்று கேட்டான்.

"விடிவதற்கு ஒரு நாழிகைக்கு முன்பு. பூர்ணமாக படைத்தலைவர் உடையை அணிந்திருந்தார். மருதியை உடனடியாக எழுப்பி நீராடச் சொல்லி ராஜதரிசனத் துக்கான உடைகளைப் புனையச் சொல்லி அழைத்துச் சென்றார். போகும்போதுதான் உங்களை வரச்சொல்லி உத்தரவிட்டுப் போனார்" என்றான் எல்லன்.

"வேறு ஏதாவது சொன்னாரா?" என்று சந்தேகத்துடன் கேட்டான் படைத்தலைவன்.

"சொன்னார்."

"என்ன சொன்னார்?"

"நாகர்களின் இயற்கை உடையில் வரச்சொன்னார்."

இதை எல்லன் சொன்னதும் தனது நாகையின் துறைமுகப் பதவி போய்விட்டதை உணர்ந்துகொண்டான். வேறு ஏதும் பேசாமல் தனது இயற்கை உடையணிந்து இடையில் வாளைக்கட்ட எல்லனை வாளைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டான்.

எல்லன் இன்னொரு வெடியை வீசினான், "வாளில்லை எசமான்" என்று.

"எங்கே?" திகைப்புடன் வினவினான் உபேந்திரன்.

"இந்தளதேவர் எடுத்துச் சென்றுவிட்டார்" என்று எல்லன் தலைகவிழ்ந்து நின்றான்.

நாகையின் நாகர் தலைவன் சில விநாடிகள்தான் சிந்தித்தான். "சரி; நான் அரண்மனை போய் வருகிறேன். எல்லா நான் திரும்பும் மட்டும் இங்கேயே இரு. திரும்பா விட்டால் ஊர் போய்ச் சேர்" என்று கூறி, "நீ இத்தனை நாள் என்னிடம் பணி செய்ததற்கு இதை வைத்துக்கொள் என் நினைவாக" என்று கூறி தனது கழுத்திலிருந்த சங்குடன் கூடிய பொன் சங்கிலியை எடுத்து அவன் கழுத்தில் போட்டான். பிறகு விடுவிடு என்று படிகளில் இறங்கிச் சென்றான்.

அங்கு நடையைத் தொடங்கியவன் மருவூர்ப்பாக்கத்தின் மத்தியிலிருந்த அரசர் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். அதன் வழியையும் வாயிலையும் ஈட்டிகளைத் தாங்கிய புரவி



வீரர் காத்து நின்றனர். அரண்மனை உப்பரிகையின் இரண்டு அடுக்குகளின் தாழ்வரைகளிலும் ஆயுதபாணி களான வீரர்கள் உலவிக்கொண்டிருந்தனர். அவர்கள் உலாவிக்கொண்டிருந்தும் அரச மாளிகை மாடத்தின் பொந்துகளிலிருந்து கிளம்பிய வெண்புறாக்கள் அவ்வப் பொழுது சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன. சில சமயங் களில் உப்பரிகை காவல் வீரர்களின் மகுடங்களிலும் உட்கார்ந்து இராஜேந்திரசோழ தேவர் ஆட்சியில் வீரத்தை விட சமாதானத்துக்கு மதிப்பு அதிகமென்பதை நிரூபித்தன.

சாதாரண சமயங்களில் இயற்கையின் இந்த அழகு களைப் பருகும் உபேந்திரன் அன்று எதையும் கவனியாமல் அரண்மனை வாயிலுக்குள் நுழைந்தான். அவனை யாரும் தடை செய்யவில்லை. ஆனால் எந்த வீரனும் அவனுக்குத் தலைவணங்கவும் இல்லை. இதையெல்லாம் கவனித்துக் கொதிக்கும் உள்ளத்துடன் உள்ளே நுழைந்த உபேந்திரனை இரு வீரர்கள் சபா மண்டபத்தின் முகப்பு அறைக்குள் செல்லும்படி சைகை செய்தனர். அங்கு உட்கார்ந்திருந்த ஒரு தர்மாதிகாரி, "உபேந்திரா! இங்கேயே உட்காருங்கள். சக்கரவர்த்தி சபா மண்டபம் வந்ததும் நீங்கள் உள்ளே செல்லலாம்" என்று ஓர் ஆசனத்தைச் சுட்டிக்காட்டினார். அங்கு சுமார் அரை நாழிகை நேரமே உட்கார்ந்திருந்தாலும் அது அரை வருஷமாகத் தெரிந்தது உபேந்திரனுக்கு.

அரை நாழிகைக்குப் பிறகு சபா மண்டபத்தில் சுகமான வீணையொலி ஒன்று கிளம்பியது. "இராஜேந்திரசோழ தேவர் வருகிறார்! உலகமாளும் சக்கரவர்த்தி வருகிறார்! ஜெய விஜயீ பவ" என்ற கட்டியக்காரன் குரல் எழுந்தது. பிறகு மாதர்கள் நடந்து வரும் சிலம்பொலிகள் கேட்டன. மன்னனின் பாதங்கள் நடக்க பாவாடை விரிக்கப்படுகிறது என்பதை உபேந்திரன் புரிந்துகொண்டான். சில விநாடி

களுக்கெல்லாம் சபா மண்டபத்தில் அமைதி குடிகொண்டது. உபேந்திரனுடன் இருந்த தர்மாதிகாரி, "இனி நீங்கள் உள்ளே போகலாம்" என்று அனுமதி கொடுக்க சபா மண்டபத் துக்குள் உபேந்திரன் நுழைந்தான். தூரத்திலிருந்தே சக்கர வர்த்திக்குத் தலைவணங்கிவிட்டுச் சற்று எட்ட இருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

சக்கரவர்த்தியின் சிம்மாசனத்திற்கு அடுத்த கீழ்ப்படி யில் ஒருபுறம் சாவகத் தூதரும் கிரீடமணிந்த நாகதேவியும், இன்னொரு புறம் இந்தளதேவரும் மருதியும் அமர்ந் திருந்தார்கள்.

அப்பொழுது கட்டு ஓலைகளுடனும் எழுத்துச் சீலை களுடனும் உள்ளே நுழைந்த தர்மாதிகாரி இராஜேந்திர சோழதேவருக்குப் பின்னால் வந்து அவர் காதில் ஏதோ ஓத, மன்னர் தலையை அசைத்தார். உடனே சற்று மேடைக்கு முன்பாக வந்த தர்மாதிகாரி மேடையிலிருந்தபடியே, "இராஜேந்திர சோழ தேவர் பல நாடுகளை ஒரு குடைக்கீழ் ஆளும் மகாவீரர், இன்று வழக்குகளை விசாரிப்பார். யாருக்காவது குறைகள் இருந்தால் எழுந்து முன்னே வரலாம்!" என்று அறிவித்தார் பலத்த குரலில். கட்டியக் காரனும் "மனுச் செய்து கொள்வோர் வரலாம்" என்று மும்முறை அறிவித்தான்.

ஆனால் யாரும் வரவில்லை. மன்னர் திரும்பி தர்மாதிகாரியை ஏதோ கேட்டார். தர்மாதிகாரி, "வழக்கு ஏதுமில்லாததால் அடுத்து தர்ம காரியங்களை மன்னர் கவனிப்பார்" என்று கூற இந்தளதேவர் மெல்ல எழுந்து, "மன்னிக்க வேண்டும் ஒரு வழக்கு இருக்கிறது" என்றார்.

"யார் மீது? இதை ஏன் முதலில் சொல்லவில்லை?" என்று தர்மாதிகாரி கேட்டார்.



"இதைக் கடைசியில் விசாரிப்பதாக மன்னர் உத்தரவு. அதனால் நானாக வழக்கை எழுப்பவில்லை" என்று கூறி இந்தளதேவர் தலைவணங்கினார் மன்னருக்கும் தர்மாதிகாரிக்கும். தர்மாதிகாரி மன்னரை நோக்கினார். மன்னர் தலையசைக்க "சரி! சொல்லுங்கள் வழக்கை" என்று உத்தரவிட்ட தர்மாதிகாரி மும்முறை நீதி தண்டத்தை மேடையில் தட்டினார். இந்தளதேவர் சர்வசாதாரணமாக சபையை நோக்கினார். "புகார் சோழ நாட்டின் சங்க கால பெருமையின் சின்னம். அதை ஒரு கருவியாக உபயோகப்படுத்த முயலும் யாருக்கும் கடும்தண்டனை சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நாளங்காடி சதுக்க பூதத்துக்குப் பலியாக்கப்படுவார்கள்" என்று சுட்டிக் காட்டினார்.

சபையில் பயங்கர அமைதி குடிகொண்டது. அப்பொழுது இந்தளதேவர் அந்த அமைதியின் பயங்கரத்தை அதிகப்படுத்துபவர் போல், "அந்தக் குற்றச்சாட்டு முதலில் சுத்ததத்தரைச் சேரும். சுத்ததத்தர் முன்னால் வரட்டும்" என்றார் மெதுவாக. ஆனால் அவருடைய மெதுவான ஒலி மண்டபம் முழுவதும் எதிரொலி செய்தது.

சபையின் முகப்பில் இரண்டு மூன்று துறவிகளோடு துறவியாக உட்கார்ந்திருந்த சுத்ததத்தர் எழுந்து நின்றார் தமது ஆசனத்திலிருந்து. பிறகு நடந்து மன்னர் முன்பாக அவை நடுவே நின்றார்.

இந்தளதேவரின் குரல் மீண்டும் ஒலித்தது. "சுத்ததத்தரே! நீர் இந்த நாட்டின் குடிமகனாயிருந்தும் வெளிநாட்டு விவகாரங்களில் தலையிட்டிருக்கிறீர். உமது வேஷத்துக்கும் தகுதியற்றவராக நாகதேவியுடன் சேர்ந்து நாகையைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்திருக்கிறீர். அதாவது சோழ நாட்டின்

www.cleanindians.com

நிலத்தை வேறு நாட்டுக்கு விலை பேசியிருக்கிறீர். இதற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்?" என்று வினவினார் இந்தள தேவர்.

## 36. ராஜேந்திர நீதி

சுத்ததத்தர் பெரும் கிலியால் பிரமித்து நின்றார் பல விநாடிகள்.

பிறகு, "இது பெரும் பொய். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை" என்று குழறினார். "அப்படியானால் நேற்று என்னைக் கடற்கரையில் கண்டதும் ஏன் ஓடப் பார்த்தீர்?" இரண்டாவது பாணத்தைப் பிரயோகித்தார் இந்தளதேவர்.

"பயத்தால்..." என்று குழறினார் குருநாதர்.

"என்ன பயம்? நாகதேவியுடன் சேர்ந்து நீர் செய்த சதியை நான் கண்டுபிடித்திருப்பேன் என்ற பயமா? சோழ தேவரின் படைத்தலைவனைக் கடத்திச் செல்ல நாகதேவிக்கு உடந்தையாக இருந்ததை நான் அறிந்திருப்பேன் என்ற அச்சமா? நாகதேவியும் மருதியும் உண்மையில் உமது குழந்தைகள் என்பதை நான் ஊகித்திருப்பேன் என்ற பயமா? எந்த பயத்தைக் குறிப்பிடுகிறீர்கள்?" என்று இந்தள தேவர் வினவினார்.

சபையில் எள்ளு விழுந்தால் ஓசை கேட்கும் பயங்கர நிலை! "இருவரும் என் மக்களா? ஒருக்காலும் இல்லை. சுத்த கட்டுக்கதை" என்று கூவினார் சுத்ததத்தர்.

சுத்ததத்தரின் கூவலை இந்தளதேவர் சிறிதளவும் லட்சியம் செய்யவில்லை. "ஆம் சுத்ததத்தரே! நீர் சாவகத்தில் பெற்றுவிட்டு வந்த இரட்டைக் குழந்தைகள்! ஒருத்தியை



சாவகத்தில் விட்டு ஓடினீர்! இங்கு ஒரு குழந்தையைக் கொண்டு வந்து நாகலிங்கக் காட்டில் விட்டுப் போனீர்! பிறகு துறவி உடையணிந்து நாகைக் கடற்கரையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டீர்! இல்லையென்று சொல்கிறீரா?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டார் இந்தளதேவர்.

"இல்லை இல்லை, முழுப்பொய். கட்டுக்கதை" என்று கூவினார் குருநாதர்.

"அப்படியானால் சாட்சிகளை அழைக்கட்டுமா தர்மாதிகாரி? இவன் குற்றத்தை ஒப்புக்கொள்வதாகக் காணோம்" என்றார் இந்தளதேவர்.

"சாட்சியை அழையுங்கள்" என்றார் தர்மாதிகாரி.

"முதல் சாட்சி சாவகத்திலிருந்து வந்திருக்கும் தூதர்" என்றதும் முதல் வரிசையில் நாகதேவியுடன் உட்கார்ந்திருந்த தூதர் எழுந்திருந்தார். சக்கரவர்த்தியை நோக்கித் தலை தாழ்த்தினார். "தேவர் சொன்னது முற்றிலும் உண்மை. இவருக்கு இந்த இரு மாணிக்கங்களையும் பெற்றுக் கொடுத்தவள் எனது சகோதரி. அவள் மக்களை ஈன்ற போது நான் சாவகத்தில் இல்லை. அரசாங்க அலுவலாக வெளிநாடு போயிருந்தேன். திரும்பி வந்ததும் விஷய மறிந்தேன். இவனைத் தேடினேன். கிடைக்கவில்லை. இவன் தமிழ்நாட்டில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே நாக தேவியை விட்டு ஓலைகள் எழுதச் செய்தேன். நாகையை வளைக்க வேண்டுமானால் உபேந்திரன் என்ற படைத் தலைவனையும் வளைக்க வேண்டும் என்று இவன் ஓலை அனுப்பினான். அப்படியே ஓலையும் அனுப்பப்பட்டது. நாகதேவியை நாகர்களின் தலைவியாக நானே மகுடம் சூட்டி இங்கு அனுப்பி வைத்தேன். இதோ இவன் எழுதிய ஓலை" என்று விளக்கி தமது மடியிலிருந்த ஓர் ஓலையையும் எடுத்து இந்தளதேவரிடம் கொடுத்தார்.

சுத்ததத்தர் முகத்தில் மிதமிஞ்சிய கிலி படர்ந்தது. "எல்லாம் பொய்! நான் சாவகத்திற்குப் போனதே இல்லை! அங்கு யாரையும் பார்த்ததும் இல்லை" என்று கூவினார். "மகாராஜா! இதெல்லாம் என்னை ஒழிக்கச் செய்யப்படும் சதி" என்று கூறி மண்டியிட முயன்றார். அவரை அணுகி இருபுறங்களிலும் நின்ற இரு வீரர் அவர் கைகளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினார்கள்.

"அப்படியானால் அடுத்த சாட்சி வரட்டும்" என்றார் இந்தளதேவர்.

அடுத்து ஒரு மூதாட்டி வந்தாள். அவள் அழகு அந்தச் சபையை பிரமிக்க வைத்தது. அவள் கேட்டாள் குருநாதரை நோக்கி "என்னை அடையாளம் புரிகிறதா?" என்று.

குருநாதரின் விழிகள் பிதுங்கின. "இது ஏதோ பிசாசு; நீதான் செத்துவிட்டாயே" என்று உளறினார் குருநாதர்.

"சாகவில்லை துறவியாரே! செத்ததாக நினைத்து நீர் ஓடிவிட்டீர்! உம்மைப்போல் தமிழகத்திலிருந்து ஓடிவந்து எங்கள் நாட்டுப் பெண்களைக் கெடுத்து ஓடுபவர்கள் தமிழகத்தின் சிறப்பைக் கெடுக்கிறார்கள். அவர்களில் முதல் பரிசு உங்களுக்கு. பெற்ற பெண்களை இல்லையென்கிறீர்! கட்டிய பெண்டாட்டியைப் பிசாசு என்கிறீர்! என்ன மனிதன் நீ? இந்தத் துறவி வேஷம் உனக்கு அடுக்குமா? புத்தர் பெருமான் உன்னை மன்னிப்பாரென்று நினைக்கிறாயா? அந்தக் கருணாமூர்த்தியின் சினம் உன்னைப் பூதத்திடம் கொண்டு போகப் போகிறது" என்றாள். அவள் குரல் தழுதழுத்தது. பிறகு நீர் மல்கிய கண்களுடன் சக்கரவர்த்தியை நோக்கி, "பிரபு! நான் என் சகோதரருடன் சாவகம் போகிறேன். நான் மங்களத்துடன்

www.cleanindians.com



வாழ அருள் புரியுங்கள்" என்று விம்மினாள். பிறகு அன்ன நடை நடந்து மகளிர் பகுதிக்குச் சென்று மறைந்தாள்.

அடுத்து இந்தளதேவர் "உபேந்திரன்" என்றழைத்தார். உபேந்திரன் அவை நடுவுக்கு வந்தான். தலைதாழ்த்தி மன்னனை வணங்கினான். "நீ ஏதாவது சொல்ல வேண்டுமா?" என்று தேவர் வினவினார்.

"ஏதுமில்லை. இந்தளதேவர் வருமிடங்களில் யாரும் எதையும் மறைக்க முடியாது என்பதைச் சோழ மண்டலம் அறியும்" என்றான்.

"கடமையைத் துறந்து கடலில் நாகதேவியுடன் சென்றது?" இந்தளதேவர் வினவினார்.

"என் தவறு."

"நாகதேவி உன்னை ஏமாற்றி அழைத்துச் சென்றிருக்கிறாள்."

"இல்லை. அவள் ஏமாற்றினாலும் கர்ம வீரனான நான் ஏமாந்திருக்கக் கூடாது."

"மருதியைக் காப்பாற்ற எண்ணியிருக்கலாம். மருதி இந்த நாட்டுப் பிரஜை" என்று இடம் கொடுத்தார் இந்தளதேவர்.

"நன்றி தேவரே! என் குற்றங்களைத் தளர்த்தப் பார்க்கிறீர்கள். ஆனால் கடமை தவறிய வீரனுக்கு எந்தவிதக் காரணமும் உதவாது" என்று திட்டமாகச் சொன்னான் படைத்தலைவன்.

இந்தளதேவர் மேற்கொண்டு ஏதும் பேசாமல் தமது ஆசனத்தில் அமர்ந்தார். ராஜேந்திர சோழதேவன் பக்கத்திலிருந்த தர்மாதிகாரியிடம் ஏதோ சொல்ல தர்மாதிகாரி

உரத்த குரலில் சொன்னார். பக்கத்தில் நின்ற ஓலை தீட்டுபவன் அரசர் உத்தரவை ஓலையில் தீட்டினான். "இராஜேந்திர சோழதேவர் சூடாமணி விஹாரத்தைப் பூர்த்தி செய்து சாவக மன்னனிடம் ஒப்படைக்க ஒப்புக் கொள்கிறார். அதற்கான செலவுத் தொகையையும் நிர்வாகச் செலவையும் சோழநாடு ஒப்புக்கொள்ளும். அதற்கான தர்மசீட்டு சாவகத் தூதரிடம் ஒப்படைக்கப்படும். அவர் இன்றே தமது மகளுடனும் சுத்ததத்தருடனும் சாவகத்துக்குக் கிளம்புவார். துறவியென்ற காரணத்தால் சுத்ததத்தர் மன்னிக்கப்படுகிறார். நாகையின் படைத்தலைவனான உபேந்திரன் புகாரின் தலைவனாக நியமிக்கப்படுகிறான். இந்த விவகாரத்தின் சிக்கலை அவிழ்த்த இந்தளதேவருக்கு மன்னர் நன்றி தெரிவிக்கிறார்" என்று இராஜேந்திரன் நீதியைச் சொன்னார் தர்மாதிகாரி.

அத்துடன் மன்னன் எழுந்தான். சபையும் எழுந்தது. மன்னன் மேடையில் பின்புறப் படிகளில் இறங்கிச் சென்றான். சபை முழுதும் கலைந்தது. சபா மண்டபத்தில் இந்தளதேவர், மருதி, உபேந்திரன் மூவர் மட்டுமே நின்றனர். படைத்தலைவன் வினவினான், "தேவரே! இத்தனை விஷயங்களை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று.

"உபேந்திரா! சோழநாடு விரிவடைந்து வருகிறது. அதைக் கண்களை இமை காப்பதுபோல் காப்பது அவசிய மாகிறது. அதற்காகத்தான் மன்னர் என்னை நியமித்திருக் கிறார். மன்னர் அறியாமல் இந்த நாட்டில் எதுவும் நடவாது" என்றார் தேவர்.

"இன்று யாருக்கும் மன்னர் தண்டனை ஏதும் கொடுக்க வில்லையே? தவிர சாவகத்துக்கு சூடாமணி விஹாரத்தை நிர்மாணிக்க ஒப்புக்கொண்டு விட்டாரே?" என்று கேட்டான் உபேந்திரன்.



"இராஜேந்திர நீதி எப்பொழுதும் கருணை கலந்தது. அதை நீ புரிந்துகொண்டால் மற்றதைப் புரிந்து கொள்வது கஷ்டமல்ல. சுத்ததத்தர்தான் இதில் குற்றவாளி. அவரை நாடு கடத்திவிட்டார். வேறு தண்டனைக்கு அவசியமில்லை. ஆனால் ஒன்று புரியவில்லை எனக்கு. உன்னை ஏன் புகாரின் தலைவனாக நியமித்தார்?" என்றார் இந்தளதேவர்.

அந்த சமயத்தில் அவர்கள் மூவருக்கும் மன்னரிட மிருந்து அழைப்பு வந்தது. மன்னர் தமது அறையில் மஞ்சத்தில் சாய்ந்த வண்ணம் இந்தளதேவரை தமது அருகில் உட்காரச் சொல்லிவிட்டு உபேந்திரனையும் மருதி யையும் நோக்கினார். அவர் செவ்விய ராஜ இதழ்களில் கம்பீரப் புன்னகை விரிந்து கிடந்தது. "உபேந்திரா! இந்த மாற்றம் உனக்குத் திருப்திதானே" என்று கேட்ட சக்கரவர்த்தி, "நாகையைவிட புகார் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. இதன் கடல் பெரும் சரித்திர நிகழ்ச்சிகளைக் கண்டது. கடற்கரை மாளிகையும் உல்லாசத்துக்குத் தகுந்தது" என்றார்.

உபேந்திரன் மண்டியிட்டான் மன்னர் முன்பாக. மருதியும் மண்டியிட்டாள். மன்னர் தமது கழுத்திலிருந்த ஒரு நாகாபரணத்தை எடுத்து உபேந்திரனிடம் கொடுத்தார். "இது நம்மூர் நாகாபரணம். இதில் விஷம் கிடையாது, இதை மருதியின் கழுத்தில் போடு" என்றார்.

மன்னர் முன்பாக அந்த மாலையை மருதியின் கழுத்தில் போட்டான் உபேந்திரன். அவர்களிருவரையும் மன்னரும் தேவரும் ஆசீர்வதித்தார்கள். பிறகு மன்னர் ஆசனத்தை விட்டு எழுந்தார். இந்தளதேவரும் எழுந்தார். மன்னர் உபேந்திரன் அருகில் வந்து, "உபேந்திரா! உன்னை புகாருக்கு ஏன் தலைவனாக நியமித்தேன் தெரியுமா?" என்று கேட்டார் ரகசியமாக.

"தெரியாது மன்னவா?" என்றான் உபேந்திரன்.

www.cleanindians.com

"இந்தப் புகார் அழிந்துவிட்டதாக எல்லோரும் நினைக்கிறார்கள். அழியவில்லை. முன் கோட்டையும் சில இடங்களுந்தான் கடலால் மூடப்பட்டிருக்கின்றன. இங்குள்ள பரதவர் பழைய பரம்பரையினர். கப்பல் கட்டுவதில் நிகரற்றவர்கள். அவர்களைக் கொண்டு இன்னும் ஓராண்டுக்குள் நூறு கப்பல்களை நிர்மாணிக்கலாம்..."

"ஆம்."

"நிர்மாணித்து விடு."

"உத்தரவு மன்னவா."

"தாமதம் செய்யாதே. அடுத்த ஆண்டு அனேகமாக நாம் கடாரத்தைத் தாக்குவோம்?" என்ற மன்னன், புன்முறுவல் செய்தான். "சாவகர் நாகையைக் கைப்பற்ற முயன்றார்கள். சூடாமணி விஹாரம் அதற்கு ஒரு சாக்கு. ஆகையால் அதை நாம் அறியாததுபோல் நடந்துகொள்வோம். புலி கடாரத்தின் மீது பாயும்போது உண்மை புரியும் சைலேந்திர மன்னர்களுக்கு," என்று கூறிவிட்டு இந்தளதேவருடன் நடந்து சென்றுவிட்டான் இராஜேந்திரன்.

மன்னனுடன் தனித்து நடந்தபோது இந்தளதேவர் கேட்டார், "சுத்ததத்தருக்குத் தண்டனையில்லை. சதிகாரி நாகதேவியையும் மரியாதைகளுடன் அனுப்பி விட்டீர்கள். கடமை தவறிய உபேந்திரனுக்கு இன்னும் பெரிய பதவி. இதென்ன நீதி?" என்று.

"இராஜேந்திர நீதி என்று வைத்துக்கொள்ளும். இந்த நீதி கடாரத்தை நம் வசப்படுத்தும்" என்றார் சோழ தேவர்.

மறுநாள் காலையில் சாவகத்தின் தூதர், நாகதேவியுடனும், அவள் தாயுடனும் சுத்ததத்தருடனும் புகாரின் துறைமுகத்தை அடைந்தார். சாவகக் கப்பலுக்கு அவரை

www.cleanindians.com



அழைத்துச் செல்ல ஒரு பெரிய படகு தயாராக இருந்தது. புகாரின் படைத்தலைவன் என்ற முறையில் உபேந்திரனும் பூர்ண ஆயுத உடை அணிந்து ஒரு வெளிநாட்டுத் தூதரை அனுப்ப வேண்டிய கோலத்தில் இரு வீரர்களுடன் நின்றிருந்தான். சாவகத்தின் தூதர் வந்ததும் படகைக் கரைக்கு இழுக்கச் சொல்லி அவருக்குக் கைலாகு கொடுத்து ஏற்றி விட்டான். அப்படியே நாகதேவியையும் தூக்கிவிட கையைப் பற்றப் போனான். அவள் அவனை கம்பீரமாகவும் அலட்சியமாகவும் நோக்கிக் கையை இழுத்துக் கொண்டாள். "நீங்கள் கைப்பிடிக்க வேண்டியவள் அதோ இருக்கிறாள்" என்று தூரத்திலிருந்த மருதியை சுட்டிக் காட்டினாள். பிறகு அவள் உதடுகள் லேசாகத் துடித்தன. கண்களில் நீர் ததும்பிற்று. அந்த நிலையில் படகில் ஏறிக்கொண்டாள். சுத்ததத்தரும் அவரது பூர்வாசிரம மனைவியும் படகில் ஏற, படகு மாலுமிகளால் உந்தப்பட்டு நகர்ந்து, அலைகளில் பாய்ந்து சென்றது.

அந்தப் படகைப் பார்த்துக்கொண்டே நின்றான் படைத்தலைவன். படகிலிருந்தவர்கள் சாவகக் கப்பலில் ஏறிய பின்னும் அங்கேயே நின்றிருந்தான். நாகதேவி முதல் நாள் நாகையில் தோன்றிய அதே நேரம். அன்றும் பாய்மரத்தின் உச்சிக் கோட்டையில் நாகதேவி நின்றிருந்தாள். அன்று அவள் அழகிய குழலும் ஆடையும் காற்றில் பறந்துகொண்டிருந்தன. ஒரே ஒரு வித்தியாசம்... இன்று அவள் அந்தப் பாய்மரத் தட்டிலேயே நின்றாள், புகாரின் கரையில் நின்ற படைத்தலைவனையும் பார்த்த வண்ணம். அவள் கண்களில் நீர் சுரந்து வழிந்து ஓடியது. கரை சரியாகத் தெரியவில்லை. அந்தத் தட்டிலேயே உட்கார்ந்துவிட்டாள் நாகதேவி. சுருண்டு தட்டில் விழவும் செய்தாள்.

உபேந்திரன் இதயம் சுக்கு நூறாக உடைந்துகொண்டிருந்தது. அவளிடமும் தனது இதயம் பறிபோயிருந்ததை

உணர்ந்தான். திரும்பியபோது மருதி நின்றிருந்தாள். "போகலாம்" என்று ஒரு சொல்லை மட்டும் சொன்னாள். அவள் கையைப் பற்றி அழைத்துச் சென்றான் படைத் தலைவன் தனது மாளிகைக்கு.

அன்று முழுவதும் நாகதேவியின் நினைப்பு அவனை ஆட்கொண்டிருந்தது. ஆகவே அன்று இரவு ஏறிய பின்பு "மருதி! கடற்கரைக்குப் போவோம்" என்றான்.

"எதற்கு?"

"அரசர் கப்பல் கட்டச் சொல்லியிருக்கிறார். அதற்குத் தகுந்த இடம் பார்க்க வேண்டும்."

மருதி பதில் சொல்லவில்லை. அவனுடன் கடற்கரை சென்றாள். வெண்மதி புகாரை வெள்ளி மயமாக அடித்திருந்தது. அதன் அலைகளுக்குத் தனி மெருகையும் ஊட்டியிருந்தது. அந்த இயற்கையின் அழகைப் பருகி நடந்து கொண்டிருந்த மருதி முதல் நாள் மன்னரை இந்தளதேவர் கேட்ட கேள்வியையே கேட்டாள், "மன்னர் யாரையுமே தண்டிக்கவில்லையே, இதென்ன நீதி?" என்று.

"உட்கார் சொல்கிறேன்" என்று அவளைத் தரையில் உட்கார வைத்துத் தானும் அருகில் உட்கார்ந்த உபேந்திரன் "இராஜேந்திர நீதி கருணையை அஸ்திவாரமாகக் கொண்டது. ஆனால் அவர் நீதியின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடியாது. பெண்களின் மனத்தைப் போன்றது" என்ற உபேந்திரன் அவளை மணலில் படுக்க வைத்துத் தானும் படுத்து அவளை இறுகக் கட்டினான்.

"உங்களைப் புகாரில் கட்டச் சொன்னது கப்பலை" என்று கூறி நகைத்தாள் மருதி.

"அதற்காகத்தான் இந்தக் கப்பலைக் கட்டுகிறேன்" என்று கூறி அவளைத் திருப்பி பலமாக இறுக்கினான்.



"நான் என்ன கப்பலா?"

"ஆம் ஆம். என் எண்ண அலைகளில் எப்பொழுதும் மிதக்கிறாய்."

"நல்ல அழகு" என்றாள் மருதி உணர்ச்சி மிகுதியால் பெருமூச்சு விட்டு.

நான் கட்டும் கப்பலை நானே செலுத்துவேன் ஏன் தெரியுமா?"

"ஏன்?"

"அதன் முகப்பு உன் முகத்தைப் போலிருக்கும்" என்று கப்பலின் அமைப்பைக் கூறினான். பிறகு பகுதிகளைப் பிரித்து விவரிக்கலானான்.

அந்த விவரங்களை, விவகாரங்களை, அறிய இஷ்டப் படாத வெண்மதி ஆகாயத்தில் தவழ்ந்த ஒரு கருமேகத்தில் மறைந்துகொண்டான்.

❖

www.cleanindians.com